தமிழ் வானின் விடிவெள்ளி தந்தை பெரியார்



பேராசிரியர்
டாக்டர் க. அன்பழகன், M.A.,

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

நூலக நூல்கள்

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

தமிழ்வானின் விடிவெள்ளி

– தந்தை பெரியார் –

பேராசிரியர்

டாக்டர் க. அன்பழகன், எம்.ஏ.

விலை ரூ. **27-50**

பூம்புகார் வெளியீட்டு எண் : 300
முதற் பதிப்பு : மே, 1991
உரிமை : ஆசிரியருக்கே

அச்சிட்டவர்கள் : பூம்புகார் பதிப்பகம் (பிரஸ்), சென்னை - 600 108

முன்னுரை

தன்மானப் போர்முரசாய்,
பகுத்தறிவுப் பெருஞ்சுடராய்,
தமிழ்மொழிக் காவலராய்,
தாழ்த்தப்பட்டோரின் மீட்பராய்
பெண்ணடிமைத் தளை அறுப்பவராய்த்
தமிழகத்தின் ஊர்கள் தோறும்
சுழன்றடிக்கும் சூறாவளியாய்,
தமிழ்மக்களை எண்ணத்தில், வாழ்வில்
முன்னேற்றும் வழிகண்ட வித்தகராய்,
சிந்தனைச்சிற்பி சாக்ரடீசாய்,
தமிழகத்தின் வரலாற்றில் தந்தை பெரியார்
ஒரு நூற்றாண்டாக (சகாப்தமாக) ஒளிர்ந்தவர்
என்பது — நாடறியும், உலகறியும்.
தமிழினத் தனித்தலைவர் பெரியாரின்
வாழ்வும் — சிந்தனையும்
கொள்கையும் குறிக்கோளும்
தொண்டும் தியாகமும் —
தமிழ்மக்கள் உள்ளத்தில்
எந்நாளும் நிலைத்திட வேண்டும்!
தாழ்வுற்ற தமிழினத்தைத் தலை நிமிர்த்திட,
வீழ்ச்சியுற்ற தமிழகம் எழுச்சி கண்டிட,
வருங்காலத் தலைமுறையினர்
பெரியாரின் அறிவுப் பாதையில்
விழிவைத்து வழிநடக்க வேண்டும்!
இந்நாள் இளைஞர் கூட்டம்
அந்தப் பாதையைத் தெளிந்திட
பகுத்தறிவுச் சிந்தனையை வளர்த்திட

இனமான உணர்வுடன் செயற்பட,
உறுதியும் ஊக்கமும் கொண்டிடத்
தந்தை பெரியாரின் இயக்கத்தை
விளக்கி உரைத்திடும் ஆர்வத்தில்,
அவ்வப்போது நான் எழுதியும் — பேசியும்
வெளிவந்த கட்டுரைகள் சிலவற்றை
நூல் வடிவில் கொண்டுவர விரும்பினேன்.
எனது விழைவினை ஏற்றுக்கொண்டு

''தமிழ்வானின் விடிவெள்ளி
தந்தை பெரியார்''

என்னும் இந்நூலை வெளியிட முன்வந்து
அழகிய முறையில் நூலைப் படைத்த
பூம்புகார் பதிப்பகத்தாருக்கும்
இக்கட்டுரைகளை நூல்வடிவில் வெளியிட,
சீர்ப்படுத்திச் செம்மையுறச் செய்து தந்த
எனது அன்புக்குரிய பேராசிரியர்
டாக்டர் ப. ஆறுமுகம் அவர்கட்கும்
உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.
இளைஞர் தம்கைகளில் அறிவுக்கேடயமாக,
அவர்தம் உள்ளத்தின் சுடரொளியாக
இந்நூல் பயன்படவேண்டும் என்பதே
எனது வேணவாவாகும்.

நன்றி

க. அன்பழகன்

பொருளடக்கம்

வெண்தாடி வேந்தர் தொடுத்த அறப்போர்	7
பகுத்தறிவு	11
பெரியாரின் எண்ணங்கள் ஒரு புரட்சிக்கனல்	25
இன உணர்வுத்தீ வளர்த்த பெரியார்	31
விழிப்படையச் செய்த வித்தகர்	63
இணையற்ற சுய சிந்தனையாளர்	86
மனிதம் வளர்த்த மாமனிதர்	95
தமிழ்வானின் விடிவெள்ளி	102
மனிதனின் அடிமை எண்ணம் மாற்றிய ஏந்தல்	117
இனவுணர்வைக் காப்போம்	127
விடிவெள்ளியும் எழுஞாயிறும்	145
நேர்காணல்	153

தமிழ்வானின் விடிவெள்ளி
— தந்தை பெரியார் —

1 வெண்தாடி வேந்தர் தொடுத்த அறப்போர்

ஏடா தமிழா! ஏனடா பிறந்தாய்!
வாடா, போடா, எனினும் ஏற்கலாம்.
மூடா, எனினும் தவறிலை பொறுத்தல்;
ஆடா? மாடா? பிறவியில் இழிந்திட!

இழிந்த பிறப்பெனில் வாழ்வும் இழியும்,
உயர்ந்த பிறப்பெனில் வாழ்வும் உயருமால்,
அயர்ந்த தமிழரிடை ஆரியர் திரித்தனர்.
இழிந்த பிறவியோ, தமிழினப் பிறவி?

பிறப்பினில் பேதம் கற்பனை செய்தோன்,
இறப்பினில் பேதம் எதனைக் கண்டான்?
பிறப்பினில் நால்வகை வருணம் பிரித்தே
சிறப்பினில் தமிழரைத் தாழ்த்தின ரன்றோ?

உறுப்பினில், அறிவினில், குறையிலை எனினும்,
பிறப்பினில் இழிவை ஏற்றிடல் ஏனோ?
நால்வகை வருணம் நான்முகன் படைப்பெனில்
நான்முகன் பிறப்பும் நால்வருணக் கலப்போ?

மேல்வருணம் கீழ்வருணம் வகுத்த ஆரியர்
எவ்வருணம் என்பார், பஞ்சமர் தம்மை?
பஞ்சமர் தோற்றம் வெஞ்சமர்தனி லன்றோ?
அஞ்சாதவரைத் தீண்டவும் அஞ்சினர் அன்றோ!

நாவலந் தீவினில் நால்வருணம் படைத்தோன்,
மேனாடு தன்னில் எவ்வருணம் படைத்தான்?
கருப்பர் மண்ணில் நால்வருண முண்டோ?
வருணக் குலமுறை வெள்ளையர்க் குளதோ?

கற்பனைக் காரணம் காட்டுவார் தாம்காணார்;
முற்பிறவி, தலைவிதி, கருமமெனப் பேசியே
கடவுள் படைப்பினை ஏற்பார் அறிவினை
மடமை இருளினில் மயக்கியே சாய்த்தனர்.

தெளிவிலாத் தமிழர் தேரும் வழியறியார்,
எளியவ ராகியே 'சூத்திரர்' ஆனார்;
எதிர்த்து நின்றவர் 'பஞ்சமர்' ஆனார்;
ஏறியே அமர்ந்தவர் 'பூதேவர்' ஆனார்.

இந்நிலை எதனால்? இழிவும் எதனால்?
என்னும் சிந்தனை எழுப்பிய பெரியார்,
நன்னிலை எய்திடும் வழிதனை நாடுவார்,
தன்மான உணர்வே மருந்தெனக் கண்டார்.

உணர்த்துவேன் உண்மை நாட்டவர் உணர்ந்திட,
ஊட்டுவேன் தமிழர்க்குத் தன்மான உணர்வினைக்
காட்டுவேன் எவர்க்கும் பகுத்தறிவுப் பாதை,
நாட்டுவேன் மானிட உரிமை என்றார், நாளும்!

எம்மவர்க்கு 'மானம்' இருந்ததும் இலையோ?
நம்மவர்க்கு அறிவும் அழிந்தே போனதோ?
தன்மான இனமானத் தேவையை உணரார்,
தம்மினமென எதைத்தான் காத்திட வல்லார்?

வந்தேறி வாழ்ந்திட, வாழ்ந்தவர் வீழ்வதோ?
தந்திரம் வென்றிடத் தருமமும் தோற்பதோ?
வேற்றினம் தழைத்திடத் தமிழினம் தாழ்வதோ?
மாற்றார் ஆண்டிட மடமையில் நிலைப்பதோ?

உழைப்போர் பசித்திட உலுத்தர் கொழுப்பதோ?
உழவினைப் போற்றுவோர் வறுமையில் உழல்வதோ?
புல்லுருவி ஆணைக்குப் புலவரும் அடிமையோ?
வெல்போர் வீரரினம் வேருடன் மாய்ந்ததோ?

சாதிகுலப் பிறப்பும் ஆரியச் சதியே!
சனாதன தருமமும் சதிகாரர் நெறியே!
வேதாகம சாத்திர இதிகாச புராணங்கள்,
வைதீகர் விரித்த வஞ்சக வலைகளே!

உழைக்கப் பிறந்தார்க்குக் கைகளும் நான்கோ?
உண்ணப் பிறந்தார்க்கு இரைப்பையும் இரண்டோ?
பிறப்பினில் மாந்தர் உறுப்பால் ஒப்பெனில்,
இயற்கையில் அமையா வேற்றுமை எதற்கோ?

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குமென'
அறம் உரைத்த சொல்லும் பொய்த்ததோ?
'குலம் ஒன்றே மனிதர் எல்லா' மெனும்
மூலர் மொழியும் வாய்மை இழந்ததோ?

அன்பும் அறிவும் ஆற்றலும் உழைப்பும்
அறமும் பண்பும் நட்பும் மதிப்போர்,
ஒழுக்கம் போற்றி விழுப்பங் காண்போர்
இழுக்குண்டச் சாதி ஏற்றலும் முறையோ?

தமிழன் பிறப்பினில் எவர்க்குந் தாழான்,
தமிழன் எவரையும் தாழ்த்தான் என்பது
தமிழன் வாழ்வினில் பழங்கதை ஆனதோ?
தமிழன் வாழ்வும் பழங்கதை தானோ?

சாதிப் பிரிவினில் கனல் மூட்டுவோம்!
சமய வேற்றுமை மாய்ந்திடச் செய்வோம்!
தீண்டாமைக் கேட்டினைக் களைந்து எறிவோம்!
வேண்டாத ஆரிய மாயையை எரிப்போம்!

மனிதனை மனிதன் மதித்து நடந்திட
மாண்புறு அறிவினைப் போற்றி ஒழுகிடப்
பகுத்தறிவு நெறிதனைத் தெளிந்த பெரியார்
பரப்பினர் நாளும் தன்மான உணர்வினை!

செந்நாய் குரைப்பின் சிங்கமும் நடுங்குமோ?
சிறுநரி ஊளையும் சிறுத்தையின் குகையிலோ?
வெஞ்சமர் அஞ்சிடா மரபினில் வந்தோர்
வஞ்சகர் மொழியினில் மயங்கி வீழ்வதோ?

அறிவில் வயதில் தொண்டில் முதியர்
வாய்மைப் போருக்கு என்றும் இளைஞர்
பொய்மைப் புரட்டினைப் புட்டுக் காட்டியே
மெய்மை இதுவென விளக்கினா ரன்றோ?

ஈரோடு ஈன்றத் தமிழினத் தந்தை!
போராடும் இயல்பினில் பூரித்த வேங்கை!
அறிவன அறிந்த அஞ்சா நெஞ்சினார்!
விழி, எழு, நடவென! முழங்கின ரன்றோ!

விழித்தனம் நாமே! எழுந்தனர் நம்மவர்!
எழுந்தது தமிழகம்! நிமிர்ந்தனர் தமிழர்!
தழைத்தது தன்மானம்! கிளைத்தது மொழிப்பற்று!
செழித்தது பகுத்தறிவு, தொடர்ந்தது அறிவுப்போர்!

தொடித்தண் டூன்றியத் தொண்டுப் பழமாம்
வெண்தாடி வேந்தன் தொடுத்த அறப்போர்
தொடரட்டும் தொடரட்டும் தமிழ்த்திருநாட்டில்
படரட்டும், பரவட்டும் பகுத்தறிவுப் பேரொளி!

2. பகுத்தறிவு

மனிதனை அடிமைத்தனத்தினின்றும் விடுதலை செய்வது பகுத்தறிவு; அதுவே — அவனது சூழ்நிலையில் இயற்கையாக இடம்பெறும் அறிவின் அடிமைத்தனத்தை அகற்றுகிறது! அதுவே — அவனுக்கு ஆசிரியனாகவும் வழிகாட்டியாகவும் இருக்கிறது! அதுவே — அவனது உயர்வுக்குக் காரணமாவதால், அவன், பகுத்தறிவைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.

''மூட நம்பிக்கை, பல தலைமுறையாக வருவதால் நம்முடைய பிறவிபோடு ஒட்டி இருப்பதாகும்; அதை, 'ஒட்டிவிட்டோம்' என்று நாம் தீர்மானிக்கும் போதும், அது நம் மனதில் ஓர் மூலையில் பதுங்கி இருக்கும்; அதற்குக் கேடு இல்லை என்ற நிலையில் திடீரென்று வெளிப்பட்டு நிற்கும்'' என்று, 'கதே' என்ற அறிஞன் கூறுவது முற்றும் உண்மையாகும்.

எனவே, மனிதன், தனது நிலைத்த தோழனான பகுத்தறிவை எப்பொழுதும் சிந்தையில் கொள்வதோடு, பகுத்தறிவுக்குத் தனி உரிமை தந்து — அதன் வழி, அவன் ஒழுக வேண்டும்.

''உரிமை இன்றேல், மூளை ஒரு குகையாகிவிடும்; அங்கே கட்டுண்ட கருத்துக்கள், திறக்க முடியாத வாயிலில் மோதி மோதி மடிந்து போகும்'' — இது, இங்கர்சால் தரும் தெளிவாகும்!

'காலம்' சுழல்கிறது! 'அறிவு ஒளி' பரவுகிறது! இடைக்கால இருள் நீங்கி, மறுபடியும் மக்கள் பகுத்தறிவுப் பாதையில் நடக்க முனைகிறார்கள்!

''வருங்காலம் பழைமை நம்பிக்கைகளுக்கல்ல — புதுமைப் பகுத்தறிவு வாழ்விற்கே'' என்று உறுதியாகக் கூறலாம்.

அறிவும் பகுத்தறிவும்

'அறிவு' எனப்படுவதே சிறப்பாகப் பகுத்தறிவைத்தான் குறிக்கும். பகுத்தறியும் பண்பே அறிவின் சிறப்பிற்கும் — அதன் நன்மைகட்கும் காரணமாகும். பகுத்தறியும் ஆற்றல் இல்லையானால், 'அறிவினால் பயனில்லை' என்றே கூறிவிடலாம்.

பொது அறிவும் பகுத்தறிவும்:

'பகுத்தறிவு' ஆங்கில மொழியில் 'காமன் சென்ஸ்' (Common Sense) என்று வழங்கப்படுகிறது. அந்த ஆங்கிலச் சொல்லுக்கு நேரான சொற்பொருள் கொண்டால், 'பொது அறிவு' என்றே காணப்படும்; ஆனால், பொது அறிவு என்பதை ஆங்கிலத்தில், 'ஜெனரல் நாலட்ஜ்' (General Knowledge) என்றே வழங்குவர்; எனவே, பொது அறிவும்-பகுத்தறிவும் வெவ்வேறு பொருளைத் தருவன என்பது தெளிவாகும்.

'பொது அறிவு' — உலகின்கண் வாழ்வோன் அறியத்தக்க பல பொருள்களையும் அறிந்துள்ள அறிவின் பரப்பைக் குறித்தால், 'பகுத்தறிவு' ஒரு பொருளின் வகையையும் தரத்தினையும் தனித் தன்மையினையும் அறிந்து கொள்ளும் அறிவுத் திறத்தினைக் குறிக்கின்றது.

அறிவின் விரிவையும் — பெருக்கத்தையும் — அளவையும் 'பொது அறிவு' குறிப்பிட்டால், ஒன்றன் நன்மை தீமையைப் பாகுப்படுத்தித் தேர்ந்து தெளியும் அறிவின் கூர்மையையும், ஆற்றலையும் பகுத்தறிவு குறிப்பிடுகின்றது.

பொது அறிவின் அளவு — உலகின் — பொருள்களின் அளவு!

பகுத்தறிவின் அளவு — அறிவை ஒருவன் பயன்படுத்துவதின் அளவே!

'பொது அறிவு — பொறிகள் செயற்படுவதின் விளைவை — அதனால் தொகுக்கப்பட்ட பொருளறிவை'க் (விஷயஞானம்) குறிப்பிட்டால், 'பகுத்தறிவு' — அறிவின் முயற்சியை- சிந்தனை செயற்படும் வகையையே குறிப்பிடுகின்றது.

'பொது அறிவை'ப் பால் என்று சொன்னால் அதைப் பருகுபவன் சுவைத்தலையும் — உட்கொண்டு அதன் பயனை நுகர்தலையும், 'பகுத்தறிவு' என்று கூறலாம்.

ஒருவனைக் காணும்போதே அவன் நடை-நொடி-தோற்றம் உரையாடல்களினின்றும், 'இவன் அறிவுடையான்-என்றோ அறிவில்லான்' என்றோ கூறுகிறோம்.

அப்படி ஒரு முடிவுக்கு வர, கூறுபவன் — கூறப்படுபவன் ஆகிய இருவருமே அம் முடிவுக்கு ஆளாகக் காரணமாக இருப்பது 'பகுத்தறிவே' ஆகும்.

ஒவ்வொரு மனிதனும் பெற்றுள்ள 'பகுத்தறிவு' ஆற்றலைப் பொருத்ததே அவனது தோற்றமும் — நடை நொடியும் — எண்ணங்களும் — முடிவுகளுமாகும்.

அத்தகு பகுத்தறிவைப் பெற்றிருப்பதனாலேயே மனிதன், மற்ற உயிரினங்கள் எல்லாவற்றையும்விட உயர்ந்தவனாக — சிறந்த உயிர்த்தன்மை உடையவனாக இருக்கின்றான்.

அறிவியல் துறை முடிவுப்படியும் — தமிழ் மரபுப்படியும், உயிர்கள் யாவும் ஓரறிவு முதல் ஆறறிவுகளும் உடையனவாகப் பகுக்கப்பட்டுள்ளன.

உயிர்களிடம் ஊறு, ஓசை, காட்சி, நாற்றம், சுவை அறியும் பொறிகள் படிப்படியே வளர்ந்து — ஆறாவது அறிவாகிய பகுத்தறிவையும் உடையவனாக மனிதன் ஆகின்றான்.

உலகம் முழுவதுமே மிகப் பழங்காலத்தில் பகுத்தறிவைப் பயன்படுத்தியதுபோல் இடைக்காலத்தில் பயன்படுத்தவில்லை.

இடைக்காலத்தின் தொடக்கத்தில் — சாக்ரடீஸ் — கௌதம புத்தர் - திருவள்ளுவர் போன்றோர் பகுத்தறிவைப் பயன்படுத்திப் பல உண்மைகளைக் கண்டு உலகிற்கு உணர்த்தியுள்ளனர்; எனினும், அக்காலச் சூழ்நிலைக்கேற்ப, 'சமயவெறி' என்னும் படுகுழியிலும், 'முன்னோர் ஏற்பாடு' என்ற முழு இருட்டிலும் உழன்ற மக்கள் தெளிவதற்காகத் தாம் கண்ட உண்மைகளையும் ஓரளவு சமயக் கருத்துக்களுடன் - மத நம்பிக்கைகளுடன் கலந்தே பரப்பலாயினர்!

எனவே, அவர்கள் காட்டிய ஒளியை, இருள் பின்னரும் சூழலாயிற்று! இருட்காலமாகவே இருந்த நிலை நீடித்தது!

கடந்த இரண்டு - மூன்று நூற்றாண்டுகளாகத்தான், இருட்காலம் முடிவு எய்தும்படி ஒளிபரவத் தொடங்கிற்று - விஞ்ஞானக் காலம் ஆதலால்.

விஞ்ஞானக் கருத்துக்களும் கண்டிபிடிப்புக்களும், மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றி - வாழ்க்கையில் இரண்டறக் கலந்தமையினாலேயே மக்கள் பலர் மறுபடியும் பகுத்தறியத் தொடங்குகின்றனர்; எனினும், பலர் இன்னும் அவ்வழி நடக்க முனையவில்லை!

தொல்லுலகில் தனி மனிதன், தன் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளவே, 'பகுத்தறிவு' இன்றியமையாததாக இருந்தது; இடைக்காலத்தில் கூட்டு வாழ்க்கை நிலைபெற்று — தனி மனிதனின் தேவைகள் பலவும் எளிதில் நிறைவேறி — சமுக வாழ்க்கை ஓரளவு பாதுகாப்பினையும் நல்கியதால் பகுத்தறிவைப் பயன்படுத்தும் வாய்ப்பும், தேவையும் குறைந்து பகுத்தறிவுத் திறன் மங்கிற்று!

'பொது அறிவு' வளர்ச்சியும் — கற்பனைகளும் — நம்பிக்கைகளுமாகச் சேர்ந்து, 'பகுத்தறிவு'க்கு இடமில்லாது தடை செய்துவிட்டது!

விஞ்ஞானம் சிறந்து — சமுக அமைப்பைக் குறித்த கருத்துக்களில் மாற்றம் ஏற்பட்டு — சமத்துவத்தைக் கருதும் போராட்டங்கள் நிறைந்து, பழைமைக் கருத்துக்களும் — மத நம்பிக்கைகளும் நிலைகுலையத் தொடங்கியவுடன்தான், 'பகுத்தறிவு' மறுமலர்ச்சி பெறலாயிற்று!

மனிதன் தன் மனத்தில் வளர்த்துக் கொண்ட, இருளினின்றும் ஒளி காண்கின்றான்!

மனிதன் பகுத்தறிவோடு வாழ்வானேயானால், அவன் இயற்கையை ஆள்வது மட்டுமன்றி, மூட நம்பிக்கையாகிய விதியையும் வெல்ல முடியும்! சூழ்நிலையின் விளைவாக எந்நிலையிலும் தற்செயலாக வடிவெடுக்கும் இயற்கையின் விளைவாகிய ஊழையே வெல்லக் கூடுமானால், வேறு எதைத்தான் அவன் நிறைவேற்ற முடியாது?

எனவேதான், விடாமுயற்சியை வலியுறுத்த வந்த வள்ளுவப் பெருந்தகை, 'வருந்திச் சோர்வு கொள்ளாமல், தாம் எடுத்துக்கொண்ட கடமையில் மேன்மேலும் முயல்கின்றவர் — வலிமிக்க — ஊழையும் புறங்காண்பர்' என்று கூறினார்; **அவர்** தந்த அவ்வருங் குறள் இதுவாகும்;—

ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர். *(620)*

சமூகத்தைத் திருத்த — நாட்டை நல்வழிப்படுத்த — உரிமை பெற — உலகிற்கே வழிகாட்ட — மன்பதையின் நிலையை உயர்த்த பகுத்தறிவே அடிப்படையாகிறது.

எனவேதான், பகுத்தறிவுப் பண்பை நமது நாட்டில் வளர்க்க மறுமலர்ச்சி இயக்கங்கள் பாடுபடுகின்றன; நாட்டிலே உள்ள 'பகுத்தறிவுக் கழகங்'களும் அத்துறையில் உழைக்கின்றன.

என்றாலும், 'பகுத்தறிவுப் பணி புரிவோருக்குப் பெரும்பான்மையோர் ஆதரவு ஒருநாளும் கிடைப்பதில்லை'. என்று இப்சன் என்பார் கூறியதே இன்று இங்குள்ள நிலையாகும். அந்நிலையுங்கூட மாறும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. இந்நாளில்!

அறிவுச்செம்மை அளிப்பது:

உலகில் தோன்றும் உயிர்கள் அனைத்தும் அவை இயற்கையில் பெற்றுள்ள உணருந் திறனுக்கும் பொறி வளர்ச்சிக்கும் ஏற்ப உயருகின்றன. உறுதல் உணர்வு முதலாகக் காணல், கேட்டல், முகர்தல், சுவைத்தல் ஆகிய உணர்வுகளைப் பெற்றுள்ள அளவுக்கு அவற்றின் அறிதல்திறன் வளர்ந்துள்ளது. மற்ற உயிர்களைக் காட்டிலும் — மனிதன் பகுத்தறியும் திறன் பெற்றிருப்பதாலேயே மற்ற உயிர்களினும் மேம்பட்ட அறிவு உடையவனாகிறான்.

அறிந்தவற்றை நினைவில் கொண்டும் — அறிந்த பிறவற்றோடு ஒப்பிட்டு நோக்கியும் வேறுபடுத்தியும் — பகுத்துணரும் ஆற்றல் வளரும்போதே பகுத்தறிவு பிறக்கின்றது. மற்ற உயிரினங்களிலும் மூளை வளர்ச்சியால் சிறந்துள்ள மனிதனே — பகுத்தறியும் ஆற்றல் பெறுகிறான்.

பகுத்துணரும் பயிற்சி வளர வளர, காரண — காரிய விளக்கங் காணும் அறிவு முயற்சி சிறந்து பகுத்தறிவு ஒளிர்கின்றது.

பகுத்தறியும் திறன் பயன்படுத்தப்படாத விடத்துப் — பொறி களால் மட்டுமே பெறும் அறிவு, உண்மையைத் தெளிந்த தாவதில்லை.

''கண்ணால் கண்டதும் பொய் - காதால் கேட்டதும் பொய், தீர விசாரிப்பதே மெய்'' என்னும் பழமொழி இதனையே விளக்கும்.

இளைஞன் ஒருவனும் இளநங்கை ஒருத்தியும் உலா வருவதைக் கண்டதாலேயே அவர்களைக் 'காதலர்' என்று கொண்டிடலாகாது. அவர்கள் உடன்பிறப்பாகவோ — ஒரு சாலை மாணவர்களாகவோ இருக்கலாம்.

நாதசுர இன்னிசை ஒலிப்பதைக் கேட்ட அளவில் அதை ஒருவர் அண்மையில் இசைப்பதாகக் கருதிடவியலாது. அது வானொலி வாயிலாகவோ - இசைத்தட்டினாலோ எழும்புவதாக அமையலாம்.

'மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்னும் பழமொழியும், பொறி அறிவால் மட்டும் உணருவதைப் பகுத்தறியாத நிலையில், ஒருவரிடம் ஏற்படும் தடுமாற்றத்தையே புலப்படுத்தும்.

மனதில் பதிந்திருந்த தவறான எண்ணமும் — தடுமாற்றத்தால் குழம்புகின்ற அறிவும் தெளிவற்ற ஒரு காட்சியைக் காணும்போது ஏற்படுத்தும் விளைவே இது.

இரவுக் காலத்தில் காது மந்தமான ஒரு இளைஞனுக்கு தையற்கலை பயிற்றுவித்த ஒருவன் — ''கழுத்தை வெட்டு, கையை வெட்டு'' என்று கூறியதை, நேரில் காணமுடியாத நிலையில் — காதால் மட்டும் கேட்ட ஒருவன் கொலை முயற்சி நடப்பதாகக் கொண்ட தவறான எண்ணம், இதையே புலப் படுத்தும். எனவே பொறியினால் பெறும் அறிவு எல்லா வகையிலும் உண்மையை உணர்த்துவதாகவும் நிறைவுடைய தாகவும் அமையாததால் — பகுத்தறிவே அந்தக் குறையை நீக்கி நிறைவு செய்கிறது.

பிற உயிரினம் பெற்றிடாதது:

மற்ற உயிர் இனங்களில் சிலவற்றின் பொறி புலன் ஆற்றலும், இயல்பு உணர்வுத் தூண்டுதலும், சிலவகை செயலாற்றலும் வாழ்க்கை அமைப்பும், மனிதனின் பொறி புலன் ஆற்றலைவிட மேம்பட்டதாயும், தனிச்சிறப்புடைய தாயும் காணப்படினும் — அவை பகுத்தறியும் திறன் பெற் றிருப்பதாகக் கருதுவதற்கு இடமில்லை.

நாய் முதலான சில விலங்குகள் முகர்ந்து அறியும் (மோப்பம்) ஆற்றலிலும்;

பருந்து முதலான சில பறவைகள் நெடுந் தொலைவில் உள்ள சிறு பொருள்களையும் புழு-பூச்சிகளையும் கண்டு கொள்ளும் ஆற்றலிலும்;

பூனை — ஆந்தை முதலானவை நிறை இருளிலும் தனது இரையைக் கண்டுகொள்ளும் திறனிலும்;

தூக்கணாங் குருவி முதலான சில பறவைகள் வியப்பூட்டும் வண்ணம் கூடுகட்டுவதிலும்;

யானை முதலான சில விலங்குகள் இனந்தழுவிக் கூட்ட மாக வாழுந் திறனிலும்;

புறா - முதலானவை இறுதிவரை இணைமாறாது வாழும் திறனிலும் சிறந்து விளங்குகின்றன என்பது நாமறிந்ததே.

கூட்டு வாழ்க்கை அமைப்பு, பணிப்பங்கீடு, உழைக்குந் திறன் ஆகியவற்றால் வியப்பூட்டும் தேனீ, எறும்பு ஆகிய வற்றின் அறிவு-பகுத்தறியும் ஆற்றலுடையதுபோல் தோன்றச் செய்வதும் உண்மையே. சிலவகைக் கடலுயிர்களின் வாழ்க்கை யும், உலகின் ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்குப் பறந்து சென்று திரும்பும் சில பறவைகளின் செயலும், பெரும் படை எடுப்பு நடத்தும் வெட்டுக்கிளிகள் — சிலவகை எறும்புகள் ஆகியவற்றின் போக்கும் எண்ணுமிடத்து வியப்பாகின்றது.

மீன் முதலியவற்றின் நீந்தும் ஆற்றலும், பறவைகளின் பறக்கும் ஆற்றலும் மனிதனுக்கு இல்லாத ஆற்றலாக அமை யினும் — அதனால் அவை மனிதனின் பகுத்தறிவுக்கு ஈடான

ஆற்றலைப் பெற்றதாகா என்பதைப் போலத்தான் நாம் வியக்கும் மற்றைய ஆற்றல்களும் அவைகளிடம் அமைந்துள்ளன.

மற்ற உயிரினங்களிடம் காணப்படும் இவ்வகை ஆற்றல்கள், அவற்றின் பொறிகளின் திறன், இயற்கையாய் ஏற்பட்ட பயிற்சி, நாம் கணித்தறிய முடியாத காலத்திலிருந்து அவை வாழ்ந்த சூழ்நிலை, ஆகியவற்றால் உருவாகியனவே அன்றிப் — பகுத்தறியும் திறனால் இந்த ஆற்றலைப் பெற்றவையாகா.

மனிதனால் போற்றி உரைக்கப்படும் நாயின் நன்றி உணர்வும், இனத்தைக் கரைந்து அழைத்து உண்ணும் காகத்தின் இயல்பும், தோழமைகொள்ளும் நாய், பூனை, குதிரை முதலானவற்றின் இயல்பும், பழக்கத்தாலும், தத்தம் தேவை நிறைவுக்குத் துணையாவதில் அவை கொள்ளும் ஆர்வத்தாலும் உருவானவையே. அவ்வியல்புகளின் நன்மை அல்லது உயர்வு இது என்று தெளிந்த பகுத்தறிவால் உருவானவை ஆகா.

குழந்தை அறிவு:

தூக்கிவைத்துக் கொள்பவர் யாராயினும் அழுகையை நிறுத்தும் குழந்தை; அன்னையின் முகம்பார்த்த அளவில், உறவுநிலை அறியாவிடினும், பசியாறும்போது பார்த்துப் பழக்கப்பட்ட முகம் என்பதால், அந்த உணர்வு கொள்வதால் சிரிக்கும் குழந்தை; காரணம் தெரியாமலே பொம்மையைப் பார்த்து மகிழும் குழந்தை; கிலுகிலுப்பை ஆட்டுகிறவரிடம் தாய் மடியிலிருந்தும் தாவும் குழந்தை! — என்னும் வகையில் உள்ள குழந்தையின் அறிவு நிலையினை ஒத்ததுதான் அந்த விலங்குகளிடம் காணப்படும் அறிவும்.

நோயுற்ற காலத்து நாய் முதலான சில விலங்குகள் உணவை மறுத்து உண்ணாமலே இருக்கின்றன. சில விலங்குகள் சில நோய் ஏற்பட்டவிடத்துச் சில மருந்துச் செடிகளின் தழைகளைத் தின்று நோய் தணிப்பதாக மருத்துவ நூலோர் கண்டு கூறியுள்ளனர். கோழி-புறா முதலான பறவைகள் சில, உடலின் தேவையை நிறைவு செய்யச் சிலவகை சுண்ணாம்புக் கற்களைப் பொறுக்கி விழுங்குகின்றன. உடம்பின் உப்புத் தேவைக்காக ஒரு மாடு மற்றொரு மாட்டின் உடம்பினை நாவால் வருடிச் சுவைக்கிறது.

ஓரின விலங்கு மற்றொரு இன விலங்கின் குட்டிக்குப் பால் கொடுத்து வளரச் செய்வதும் ஓரிரு இடங்களில் நிகழ்கிறது. இவை எந்த அளவு வியப்பைத் தரினும், அந்தந்த விலங்குகளின் இயற்கை உணர்வினாலும், எதிர்பாராது ஏற்பட்ட பயன் நினைவாலும் பழக்கத்தின் விளைவாலும் நிகழ்வனவேயன்றி — அவை பகுத்தறியும் திறன் பெற்றதால் அல்ல.

பகைக்கு எடுத்துக்காட்டாகும் நாயும் பூனையும் நட்பாகவும் பழகிவிடுவதைச் சிலவிடங்களில் காண்கிறோம். புலியும் ஆடும் — சிங்கமும், நாயும் போன்ற விலங்குகள் ஒன்றாகச் செயல்படுத்தப்படுவதையும் சர்க்கசில் காண்கிறோம். இவையும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை — ஒருவகை அச்சம் இவைகட்கு ஆட்பட்டதன் பயனே அன்றி வேறல்ல.

அந்த விலங்குகளின் செயல் ஓரளவு பகுத்தறிவின் சாயல் உடையதுபோலத் தோன்றினும் — அச்செயலுக்கு ஒரு காரண காரியம் இருப்பது உண்மை என்றாலும் — அந்தக் காரண காரியம் எதுவென நாம்தான் எண்ணிப் பார்த்து அறிகிறோமே அன்றி, அந்த விலங்குகளுக்கு அவற்றை அறியும் ஆற்றல் இல்லை.

மனிதன் வளர்க்கும் நாயும், குரங்கும் பிறவும் அவன் தந்துள்ள பயிற்சிக்கேற்ப — ஆட்டுவித்தபடி ஆடுவதாய் — இயங்குமேயன்றி, அவை தாமே தம் அறிவாற்றலைக் கொண்டு — தீர்மானித்து அவ்வாறு இயங்க முற்படுவதில்லை.

மனிதகுல மேம்பாட்டிற்குத் துணை:

மனிதன் பழக்கினால் அதற்கேற்பப் பழகுவதேயன்றி — எந்த விலங்கும் மனிதனைப் பழக்குவதில்லை. எனவே அந்த உயிரினங்களின் பொறியாற்றலும், உடல் வலிமையும் எவ்வளவு தனிச்சிறப்பு உடையவையாயினும், மனிதனிடம் அமைந்துள்ள 'பகுத்தறிவு' ஆற்றலுக்கு அவை ஈடாவதில்லை. மனிதனிடம் மட்டுமே காணப்படும் அந்தப் பகுத்தறிவு, ஆற்றலே அவனது உயர்வுக்கு, மனித குல மேம்பாட்டுக்குத் துணை செய்வதாகிறது.

பகுத்தறியும் தனித் திறன் மனிதனிடம் மட்டுமே உண்டு எனினும் — மற்ற உயிரினங்களைப் போன்றே மனிதனும்

சூழ்நிலைகட்குப் பெரிதும் ஆட்பட்டவனே. சூழ்நிலை இது எனத் தெளியும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு. ஆயினும் சூழ் நிலைக்கே ஆட்படாது, தன்னை எஞ்ஞான்றும் விடுவித்துக் கொண்டவனாக அவனால் எண்ணவும் இயங்கவும் முடிவ தில்லை.

பாசி படர்ந்துள்ள குளத்தில் நீரை முகக்கும் ஒருவன் — கைகளால் பாசியை விலக்கி விலக்கி நீரை அள்ளினாலும் பின்னரும் பாசி படர்ந்து கொள்வதைப் போன்று, ஒவ்வொரு நிலையிலும் — நினைப்பிலும் மனிதன் பகுத்தறிவைப் பயன் படுத்திச் சூழ்நிலை உருவாக்கிய எண்ணத்தைக் கடந்தாலும், பின்னரும் சூழ்நிலை எண்ணம் சூழ்ந்துவிடுவது இயற்கை யாகும். அதனைக் கடந்து வெல்லும் முயற்சியில் மனிதன் தன் அறிவைத் தொடர்ந்து பயன்படுத்துவதே பகுத்தறிவின் பயனாகும்.

இந்த இருபதாம் நூற்றாண்டிலுங் கூட, முன்னேறிய மக்கள் பகுத்தறிவைப் பயன்படுத்தும் அளவு, பயன்படுத்த வழியற்ற மக்களும், அதற்கான அடிப்படை அறிவைத் தேடிக்கொள்ள முடியாத மக்களும் உலகில் பலராவர். அவர்தம் சிந்தனை ஆற்றல், பயிற்சி இன்மையால் மிகவும் குறைந்துள்ளதால் பகுத்தறிவு இல்லாத மக்களாகவே எண்ணப்படுகின்றனர். ஆனால் அவர்களிடமும் — அவர்தம் வாழ்க்கை நிலைமைக் கேற்ப பகுத்தறியுந் திறன் அமைந்துள்ளதை நுணுகிக் காண்போர் தெளியலாம்.

பகுத்தறியும் நிலைபெறல்:

நாகரிக வாழ்வு நடத்துபவர்கள் எனக் கருதப்படும் நிலை யினரிடையிலும் பகுத்தறிவுக்கொவ்வாத சில நம்பிக்கை களையும் பழக்க வழக்கங்களையும் காணலாம். இளமை முதல் அவரவரிடம் ஊறிய எண்ணமும், வளர்த்துக்கொண்ட சிந்தனைப்போக்கும் ஒவ்வொரு துறையில் பகுத்தறிய முற்படச் செய்யினும், வேறு சில துறைகளில் பகுத்தறியவே தலைப் படாத நிலைக்கு ஆளாக்கியுள்ளன. எனவே, அனைத்துத் துறையிலும் தோன்றும் கருத்துக்கள் ஒவ்வொன்றையும் எல்லா நிலையிலும் தாமே பகுத்தறியும் நிலையினர் என்று யாரையும் குறிப்பிடுவது கடினமேயாகும்.

சில துறையில் தேர்ந்த அறிவுடையார் பலர் — பலதுறையில் ஏதும் அறியாதாராய் இருப்பதைப் போன்றே, பகுத்தறிவைப் பயன்படுத்துவதிலும் இயல்பாகவே — ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் ஒவ்வோரளவே பயன்படுத்துகின்றனர். வாழ்க்கை நிலை, சமுதாய அமைப்பு, சமய உணர்வு, பழக்கவழக்கம், அரசியல், பொருளியல் முதலான பல்வேறு துறைகளிலும் பகுத்தறிவைப் பயன்படுத்துவோர் மிகச் சிலரே. அவருள்ளும் அனைத்துத் துறையிலும் ஒரே கருத்தை ஏற்போர் இல்லை என்றே கூறலாம்.

கணிதம், விஞ்ஞானம் முதலான துறைகளில் ஆராய்வோர் ஒருமித்த முடிவுக்கு வரமுடிகிறது என்றாலும், ஒரு புதிய உண்மை காணப்பட்டவிடத்து, அது பலருக்கும் உடன்பாடாகும் வரை மாறுபட்ட கருத்துக்கள் எழத்தான் செய்கின்றன. உடன்பாடு காணப்பட்ட பின்னரும் — பிறிதொரு காலத்தில் புதிய உண்மை காணப்பட்டவிடத்து, முன்னர் ஏற்கப்பட்டதொரு உண்மை — உண்மையற்றதாகவோ பயன் குறைந்ததாகவோ ஆகின்றது. ‘அறிவுக்கு எல்லை இல்லை’ என்பதற்கேற்ப விஞ்ஞான ஆய்வுகள் பல, முடிவு செய்யப்படாமலே மேலும் மேலும் உண்மை நாடி ஆராயப்படும் நிலையிலேயே இன்றும் உள்ளன.

எனவே, பகுத்தறிவு இல்லாத — பகுத்தறிவையே பயன் படுத்தாத மனிதனும் இல்லை; அனைத்துத் துறையிலும் பகுத்தறிந்து தெளிந்த மனிதனுமில்லை என்பது உண்மை யாகும்.

மனிதன் எந்தெந்த அளவு, எவ்வெத் துறையில் தனது எண்ணங்களை, ஏற்றுக்கொண்டுள்ள கருத்துக்களை, உலகிய லைப் பகுத்தறிய முற்படுகின்றானோ அந்தந்த அளவே அவ்வத்துறையில் அவன் பகுத்தறிவுடையவனாகின்றான். அவரவர் அறிவுநிலை — பகுத்தறியும் திறன் — பகுத்தறியும் வாய்ப்பு, சூழ்நிலை — சமுதாய ஏற்புடைமை, இப்படிப்பட்ட எத்தனையோ ஏதுக்களுக்கேற்ப ஒவ்வொருவரும் பகுத்தறிந்து காணும் முடிவும், வகையும் பயனும் வேறுபடுகின்றன.

வயது, கல்வி, பொருள்நிலை, மொழி, நாடு இவற்றால் ஒத்த நிலையினரான இருவர்கூட அனைத்திலும் ஒரே வகை யான கருத்தினைக் கொள்வதும் இல்லை. ஒரே குடும்பத்தில்

பிறந்த இரட்டைக் குழந்தைகளுங்கூட ஒரே முடிவு காணும் வண்ணம் — ஒரே நிலையில் பகுத்தறியும் திறன் பெறுவதில்லை.

இரண்டு மனிதர்கள் அனைத்து வகையிலும் ஒத்த உருவம் பெறாததைப் போன்றே, உள்ளங்கையில் காணும் கோடுகள் மனிதனுக்கு மனிதன் வேறுபடுவதைப் போன்றே — அனைத்திலும் ஒரே எண்ணம் பெறுவதும் இயல்வதல்ல.

மனிதனின் மூளை — உடம்பின் உறுப்புக்களிலேயே வியத்தகு ஆற்றலையும், எண்ணற்கரிய கூறுகளையும் கொண்ட ஓர் மண்டலம் எனலாம். மனிதனின் விஞ்ஞான அறிவு உருவாக்கியுள்ள நுட்பங்கள் மிகுந்த கம்ப்யூட்டர்கள் பல இணைந்தாலும் — ஒரு மூளையின் ஆற்றலுக்கு ஈடாகாது. அந்த மூளையின் திறனும் ஆற்றலும் மனிதனுக்கு மனிதன் வேறுபடும் வகை நாம் கணக்கிடவியலாத ஒன்று. எனவே மனிதனுக்கு மனிதன் வேறுபட்ட எண்ணமும் கருத்து ஓட்டமும் பெற்றிருப்பது இயற்கை.

இந்த வேற்றுமை இயல்பானது என்பதைக் கண்டுகொள்ளும் அறிவுதான் — பகுத்தறிவைப் பயன் உடையதாக்குகிறது.

பகுத்தறிவும் பொதுநோக்கும்:

ஒரு கை விரல்கள் ஐந்தும் ஒன்றைப் போல் ஒன்று அமையாததாலேயே — அவை பயன் உடையதாகின்றன. அதைப் போன்றே வேறுபட்ட கருத்துக்கள் உருவாகும் இயற்கை உண்மையாலேயே உயர்ந்த பொது நோக்கம் ஆகிய நடுவுநிலை நோக்கம் உருவாகும் வாய்ப்பு உளதாகிறது.

கருத்து வேற்றுமை — முரண்பாடாய், மோதுதலாய் அரும்பி, உண்மை காணும் வாய்ப்பை உருவாக்கி, உடன்பாடு காண வழிகோலுகிறது. இல்லாதவிடத்தும் கருத்து வேற்றுமையைப் பொறுத்துக்கொள்ள, அதற்கும் இடம் உண்டு என்று தெளியும் ஒரு பொது நோக்கம் கொள்ளத் துணையாகிறது.

ஒவ்வொருவரிடமும் பொது அறிவும், பகுத்தறியும் முயற்சியும் வளர வளரத்தான் பகுத்தறிவு ஆற்றல் உடையதாகிறது.

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு" — திருவள்ளுவர்

மணற்கேணி தோண்டும் அளவுக்கு ஏற்ப நீர் ஊறுவதைப் போன்று, கல்வி கேள்விகளின் அளவுக்கு ஏற்ப அறிவு சுரக்கும் என்பது பொருள். கற்றதையும் கேட்டதையும் பகுத்தறியும் போதுதான் அது தன்னறிவாகிறது.

பொதுவாக நோக்கின் நன்மையும் தீமையும் நாடி அறியும் அறிவே பகுத்தறிவு. நன்மை என்பதும் தீமை என்பதும் பலகாலமாக மனிதனிடம் படிந்த எண்ணத்தின் விளைவாகத் தோன்றுவதாலும், அவை காலத்தாலும் — சூழ்நிலையாலும் மாறுவதாலும், அவ்வாறு படிந்த எண்ணங்களையும் மறு ஆய்வு செய்வதிலேயே பகுத்தறிவு பயன் உடையதாகின்றது.

அகத்தூய்மை செய்வது:

புறத்தில் காண்பவற்றை எளிதில் பகுத்தறிய முற்படுவதைப் போன்று — அகத்தில் படிந்துவிட்ட கருத்தைப் பகுத்தறியப் பலரும் முற்படுவதில்லை. முற்படினும் அகத்தில் படிந்து வேரூன்றிய கருத்துக்களைப் பகுத்தறியும் ஆற்றலும் உரமும் எளிதில் வாய்ப்பதில்லை.

அவ்வாறு பழமையாய்ப் படிந்த எண்ணங்களே — நம்பிக்கைகளாய் — சிலபல தெளிவற்ற பழக்க வழக்கங்களாய் — அவைகளின் பிறப்பிடமாய் அமைந்து விடுகின்றன. மனிதனின் தன்னலம் — அதனால் பிறக்கும் குறுகிய நோக்கம் — அதற்குத் துணையாகும் சாதி-குல வேற்றுமை முதலான தவறான கொள்கைகள் — மனிதரிடையே ஏற்றத் தாழ்வினைக் காத்துக்கொள்ளும் விருப்பம் ஆகியவை நிலைக்கவும் காரணமாகின்றன.

சமுதாயப் பணியாற்றச் செய்வது:

இவற்றைக் கடந்து மனித சமுதாய நலன் காணும் நோக்கம் கொள்ளவும், எல்லோரும் வாழ நாம் வாழ்வோம் என்று உணரவும், சமத்துவம் தெளியவும், பிறர் நலம் பேணவும் பகுத்தறியும் ஆற்றல் ஏதுவாகிறது.

மனிதன் தன் வாழ்வு — சமுதாய வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ளது என்பதையும் அந்தச் சமுதாய முன்னேற்றமும் நல்வாழ்வுமே தனக்கும் நன்மை பயப்பது என்பதையும், அந்தச் சமுதாய நலனுக்காகத் தன் நலனை இழப்பதும் விரும்பத்தக்கது என்பதையும் பகுத்தறிவால்தான் தெளிகிறான்; தெளிந்து உரைக்கின்றான்.

தனக்காக வாழ்வதினின்றும் — தம்மவருக்காகவும் — நாட்டுக்காகவும், மன்பதைக்காகவும் வாழ எண்ணித் தலைப்படும் உணர்வை மனிதன் பெறுவது பகுத்தறிவு தந்த பரிசேயாகும்.

''சாதி இரண்டொழிய வேறில்லை''

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்''

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்''

''யாதும் ஊரே யாவருங் கேளிர்''

''அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி
அரும்பசி எவர்க்கும் ஆற்றி''

''வறியார்க்கொன் றீவதே ஈகை'

''பொய்யாமை பொய்யாமை யாற்றின் — அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று''

''நாடு வாழ வீடு வாழும்''

''ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்''

முதலான எத்தனையோ உயர் எண்ணங்களும் — பொது நோக்கங்களும் மனித சமுதாயத்தில் முகிழ்ப்பதற்கு வழி கோலியது மனிதனின் பகுத்தறிவே.

மனிதனாக உயர்த்துவது:

பிறப்பால் மனிதனாகப் பிறந்தவன், நினைப்பாலும், செயலாலும் மனிதனாக வாழவும், சமுதாயத்தின் வாழ்விலே தன் வாழ்வைக் கண்டு, தனக்கென வாழாப் பிறர்க்குரியா ளனாக உயரவும், பண்பில், சால்பில் சிறக்கவும் துணையாகும் பகுத்தறிவைப் பயன்படுத்தும் முயற்சி நாளும் ஓங்குக!

3. பெரியாரின் எண்ணங்கள் ஒரு புரட்சிக் கனல்

தமிழினத் தந்தை!

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஈரோடு நகரில் பிறந்து வளர்ந்த (பெரியார்) ஈ. வெ. ராமசாமி அவர்கள் இன்று தமிழ்நாட்டு மக்களின் வாழ்விலும், எண்ணத்திலும் ஒரு புதிய விழிப்புணர்வையும் மாற்றத்தையும் உருவாக்கி, அறிவுப் புரட்சிக்கு வழிவகுத்து, மக்கள் தன்னம்பிக்கை கொள்ளச் செய்தவராக விளங்குவதால் வரலாற்றில் போற்றிக் குறிப்பிட வேண்டிய ஒரு புதிய சகாப்தம் (புதிய நூற்றாண்டு) படைத்த வர் ஆவார். எனவே, பெரியார் அவர்களின் நூற்றாண்டு, தமிழர் வாழ்வு காண முற்பட்ட நூற்றாண்டாக, தன்மானமும், பகுத்தறிவும் முளைத்துத் தழைத்த நூற்றாண்டாக, அடிமை மனப்பான்மை அகலச் செய்த நூற்றாண்டாக, தமிழ் நாடெங் கும் கொண்டாடப்படுவது எல்லா வகையிலும் இன்றியமை யாத தொரு எழுச்சியூட்டும் கடமையாகும்.

புதிய எழுச்சிகொண்ட தன்மான உணர்வும், பகுத்தறியும் மனப்பான்மையும் கொண்ட தமிழினத்தை உருவாக்கிய தந்தை பெரியார், புதிய தமிழகத்தின் — தமிழ் இனத்தின் தந்தையாவார்.

இயற்கையிலேயே சுதந்திர உணர்வு:

செல்வச் சிறப்பு மிக்கக் குடும்பத்தில் பிறந்தவராதலால், பிறர் தயவில், ஆதரவில் வாழ வேண்டிய நிலைக்கு என்றும் ஆளாகாதவர் பெரியார். சிறு வயது முதலே எதையும் — தமது அறிவிற்குட்பட்ட வகையில் ஆராயும் மனப்பான்மை கொண்டவர். ஒருவகையில் இயற்கையிலேயே ‘சுதந்திர’ உணர்வு கொண்டவர். மற்றவர்கட்கு அஞ்சுவதும் அடங்குவதும், கட்டுதிட்டங்களை ஏற்பதும் அவருக்கு இயல்பல்ல.

உலகத்தார் நம்பிக்கைகளையும், செயல்களையும் தாம் கண்டறியும் போதெல்லாம் அவற்றைக் கூர்ந்து நோக்கி, அவை ஏன்? எப்படி? எதனால்? என்னும் முறையில் ஆராய்ச்சியில்

ஈடுபடுவார். தமக்குத் தோன்றும் உண்மையை மற்றவர்களிடம் உரைத்து அவர்தம் பதிலையும் ஆராய முற்படுவார்.

முறையான பள்ளிப் படிப்பு முக்கியத்துவம் பெறாத காலமாகையால், அவருக்குப் பள்ளிப் படிப்பில் ஆர்வ மில்லை. அதைக் கண்ட பெற்றோர்கள் அவரைத் தமது வணிகத் தொழிலிலேயே ஈடுபடுத்தினர். அதுவும் ஒருவகையில் நாட்டுக்கே நன்மையாயிற்று எனலாம். முறையான பள்ளிப் படிப்பும், ஆசிரியரிடம் பாடம் கேட்கும் முறையும் ஒருவரது உள்ளத்தில் ஆழமாகப் பதித்துவிடக் கூடிய ஒரு பழமைச் சுவடு அவருள்ளத்தில் பதியாமல் தப்பினார் எனலாம்.

அனுபவ அறிவு:

செந்தமிழும் நாப்பழக்கம் என்பது போன்று, எண்ணங் களும் மனப்பழக்கமாவதால், அந்த எண்ணங்களினின்றும் புதிய எண்ணங்களைச் சிந்திப்பது என்பது இயற்கையில் எளிதல்ல. பாடங்கேட்டுப் பழகாத அவரது மனம் புதிதாகத் தோன்றக் கூடிய எண்ணங்களைப் பழைய எண்ணங்கட்கு அடிமைப்படுத்த வேண்டிய நிலைக்கு ஆட்படவில்லை.

ஏட்டுக் கல்வியினை முறையாகப் பயில்வதில் நாட்டம் செலுத்தாவிடினும், அவரது இயல்பான அறிவுக் கூர்மையால், உலகம் என்னும் விரிந்த ஏட்டினைக் கண்டு, கேட்டு, உரையாடி, சிந்தித்து, தனிவழியில் தமது கருத்துக்களை — காரண காரிய விளக்க அடிப்படையிலான எண்ணங்களை உருவாக்கிக் கொள்ளலானார்.

பின்னர், மக்கள் ஏன், பல்வேறு மூட நம்பிக்கைகட்கு ஆளாகின்றனர்? சாதி, சமய வேற்றுமைகளை ஏற்கின்றனர்? என்றெல்லாம் சிந்திக்கத் தலைப்பட்டு, அவர்கள் அப்படிப் பட்ட நம்பிக்கைகொள்ள ஏதுவாக உள்ள இதிகாச புராண, சாத்திர ஏடுகளையும் அவராகவே படித்து அவற்றை ஆராய லானார். அவற்றில் அறிவுக்கு ஒவ்வாத, உண்மைக்கு மாறான கற்பனையும் பொய்யும் கலந்து மயக்க உணர்வு வளர்க்கும் பலப்பல செய்திகள் — கருத்துக்கள், இருப்பதைக் கண்டார். இந்தக் கற்பனைக் கதைகளும் — பொய்மைகளும் பாமர மக்களை மட்டுமன்றிப் படித்த மக்களையும் கூட உண்மையைத் தெளியவிடாமல் தடுக்கின்றன என்பதையும் உணர்ந்தார்.

தாம் உணர்ந்த உண்மையை உலகத்திற்கு உணர்த்துவதே தமது வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டார்.

மக்களைத் தேடிச் சென்ற முதல் தலைவர்!

பெரியார் அவர்களின் அறிவு கூர்மையானது, சுறுசுறுப்பானது, நினைவாற்றல் மிக்கது, ஓய்வை ஏற்காதது. எப்பொழுதும் எதையாவது படித்துக்கொண்டோ, எழுதிக்கொண்டோ, உரையாடிக்கொண்டோ, சிந்தித்துக் கொண்டோதான் இருப்பார். புதிது புதிதாக அறியக் கூடியவற்றை அறிந்து — தெளிவதிலே அவருக்குப் பேரார்வம்.

இயல்பிலேயே அவரிடம் காணப்பட்ட ஊக்கம், சுறுசுறுப்பு, விடா முயற்சி, மடியின்மை ஆகியவையே, முதிர்ந்த வயதில் உடல்நலக் குறைவு ஏற்பட்ட பின்னரும் தொண்ணூறு வயதுக்கு மேற்பட்ட நிலையிலும், பிறர் உதவியின்றி நடமாட முடியாத போதும், தமது குறிக்கோள் வெற்றிபெற, நாடு நகர் பட்டி தொட்டி எங்கும் மக்களைச் சந்தித்துத் தமது கொள்கைகளை எடுத்துக்கூறி விளக்கும் 'இலட்சியப் பயணம்' மேற்கொள்ளக் காரணமாயிற்று எனலாம். அந்தக் கடுமையான உழைப்புடன் நடத்தப்பட்ட சுற்றுப் பயணத்தில்தான் அவருக்கு எவ்வளவு மகிழ்ச்சி, மனநிறைவு! 'உடல்' வலிமை இழந்து தளர்ந்தபோதும் 'அறிவு' உரம் குன்றாமலும், கூர்மை இழக்காமலும், 'உள்ளம்' ஊக்கம் தளராமலும் தொண்டார்வம் தடைப்படாமலும் தந்தை பெரியார் அவர்கள் 'ஓய்வை' விரும்பாது இந்தச் சமுதாயத்துக்காகப் பாடுபட்டார். சுறுசுறுப்பு இயல்பு கொண்ட அவரது அறிவே அவரை இயங்க வைத்தது எனலாம். அப்படிப்பட்ட ஒருவரை 'உலகம்' இதுகாறும் கண்டதில்லை.

பெரியார் அவர்கள் பெற்றிருந்த செல்வத்துக்கும், செல்வாக்குக்கும், தொண்டினால் அவர் அடைந்திருந்த புகழுக்கும் அவர் இருக்குமிடந்தேடிப் பல்லாயிரக் கணக்கானவர் தேடி வருவர். உட்கார்ந்த இடத்தில் இருந்தே உலகோர்க்கு அறிவுரை வழங்கி இருக்க முடியும். எந்த ஒரு ஞானியும் மடாதிபதியும் அடையாத பெருமையோடு அவ்வாறு செய்திருக்க முடியும். ஆனால் — மக்களிடத்திலே அவர் கொண்டிருந்த தாயன்பும், தானும் மற்றவர்களைப் போன்று ஒரு சராசரி மனிதனே என்னும் எண்ணமும், தொண்டு செய்பவன் மக்களை நாடிச்

செல்வதே முறை என்னும் கருத்தும், தமது கொள்கையை எதிர்நீச்சல் முறையில் எடுத்துச் சொல்ல வேண்டியிருப்பதால் தாமே — அறியாமையில் மூழ்கியுள்ள மக்களைத் தேடிச் செல்வதே தமது கடமை என்னும் ஆர்வமும் அவரை அப்படிப் பட்ட சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள வைத்தன.

கருத்து வேற்றுமையை மதித்தவர்:

மக்கள் பலர் தமது கருத்தினைக் காது கொடுத்து கேட் கிறார்கள் என்பதே அவரது களைப்புக்கு மருந்து. அவர்கள் தமது கொள்கையைச் சிந்திக்கின்றார்கள் — ஏற்க முற்படு கிறார்கள் என்பதே அவருக்குத் தேன். அதுவே அவரது முதுமையில் அவர் பருகிய இளமையின் பால்.

பெரியார் அவர்களிடம் பழகியவர்கள் அறிந்தது இது. தம்முடன் உரையாடுவோரைக் கூர்ந்து கவனிப்பார். அவர்தம் உரையையும் காதுகொடுத்துக் கேட்பார். அவரது சிந்தனை தம்முடன் பேசுவோரையும் அவரது எண்ணத்தையும் ஆராயும். ஒருவர் ஏன் அப்படிப்பட்ட கருத்தைக் கூறுகிறார் என்பதை அவர் ஆழ்ந்து சிந்திப்பதை அவரது துருவிப்பார்க்கும் கண்கள் புலப்படுத்தும்.

தம்மிடம் உரையாடுவோர், ஏதேனும் ஒரு முடிவான கொள்கையில் தம்மை ஒப்படைத்துக் கொண்டவர் என்று தோன்றுமானால், அவருக்குள்ள இலட்சியம் அவருக்கு — நமக்குள்ள இலட்சியம் நமக்கு என்று உள்ளங்கொண்டு, அவர்களிடம் அதிகம் வாதாடத் தலைப்படமாட்டார். அவர்கள் மாறுபட்ட கொள்கையுடையவராயினும், ஏதேனும் ஒருவகையில் சமுதாயத்துக்குப் பயன்படுபவர்களானால், அவர்கட்கு உரிய மதிப்பினை வழங்கி, பாராட்டுதல் செய்து, தனிப்பட்ட முறையில் அவர்களுடன் மாறுபாடு இல்லை, கொள்கையிலேதான் மாறுபாடு என்பதை அவர்கள் உணருமாறு செய்திடுவது அவரது இயல்பு. அவர்களையெல்லாம் தம்முடைய பண்பாட்டினாலேயே பெரிதும் கவர்ந்தவர் தந்தை பெரியார்.

பெரியார் அவர்கள் எதையும் சாத்திரம் சம்பிரதாயம் என்றோ, முன்னோர் உரைத்தது என்றோ, மக்கள் நம்பிக்கை என்றோ ஏற்பதில்லை. உண்மை, நியாயம், தேவை, மக்களுக்குப்

பயன்தருவது என்று உறுதியாகத் தெரிந்தால்தான் ஏற்பார். அதுவே, அவரது தனித் தன்மை வாய்ந்த சிந்தனையாக வளர்ந்து, உரையாகி, எழுத்தாகி, அவரது குறிக்கோள் ஆகவே வடிவு கொண்டது

மக்கள் உள்ளத்தில் பதிந்துள்ள பழமையான எண்ணங்களை எல்லாம், பழைய பொன் நகையை உருக்கித் தூய பொன்னாக்கிப் புது அணி செய்யப்படுவது போன்று, ஆராய்ந்து புதிய மதிப்பீடு செய்யலானார்.

மனிதன் — மனிதத் தன்மைபெற, பகுத்தறியும் ஆற்றல் பெற, சமத்துவ சகோதரத்துவ சுதந்திரத் தகுதிபெற, தன்மானம் இழக்காது வாழ, எவை எவை எப்படி எப்படித் தடையாயினும் அவற்றைத் தகர்த்து எறிவதே அவருடைய குறிக்கோள்.

சாதி, குலம், உயர்வு, தாழ்வு, பார்ப்பனீயம், புரோகிதம், சடங்குகள், மத நம்பிக்கை, தலைவிதி தத்துவம், கோவில் — வழிபாடு — கடவுள் நம்பிக்கை, மறுபிறவி, மோட்சம் — நரகம் முதலான அனைத்தும் அவரது பகுத்தறிவுக் கேள்விக் கணைகளால் தூளாக்கப்பட்டன.

சமுதாய அடிப்படை மாற்றம்:

பெண்ணடிமை நிலை மாறவும், கலப்புத் திருமணமும் — விதவை மணமும் ஏற்கப்படவும் அவர் ஆற்றிய தொண்டு பெண்ணினத்தின் விடுதலைக்கு வழிகோலின.

உழைப்பவர்கள் உருக்குலையவும் வறுமையில் வாடவும், உழைக்காதவர்கள் உண்டு கொழுத்து ஆதிக்கம் செலுத்தவுமான நிலையை எதிர்ப்பதற்கான துணிவையும் மக்களிடம் தந்தை பெரியார் உருவாக்கினார்.

பொதுவாகக் கூறின் — இன்றையச் சமுதாய அமைப்பே ஒரு நீதி, நியாயமற்ற அடிப்படையில் அமைந்துள்ளதால், அதன் எண்ணத்தையும் நம்பிக்கைகளையும் மாற்றி அமைப்பதன் மூலமே, அறிவையும், உழைப்பையும் மதித்து வாழும் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று தெளிந்து அதற்குக் கால்கோள் நடத்தினார் பெரியார்.

எண்ணங்களில் புரட்சியும், செயலில், முயற்சியில் நம்பிக்கையும் ஏற்படச் செய்து அதன் மூலம் இந்தச் சமுதாய அமைப்பிலேயே ஒரு தலைகீழ் மாற்றத்தை ஏற்கவைத்திடப் பாடுபட்டார் பெரியார்.

ஆம், சமுதாயத்தின் எண்ணமெனும் நீரோட்டத்தை எதிர்த்து — தமது வல்லமை மிகுந்த அறிவுத் துணைகொண்டு எதிர்நீச்சல் போட்டவர் பெரியார், தமது ஒய்வற்ற உழைப்பாலும், உறங்காத அறிவாலும், தோல்வி அறியாத மனத்தாலும், ஒரு புதிய சமுதாயத்திற்கான சிந்தனை அடித்தளத்தை அமைப்பதில் வெற்றி கண்டவர் பெரியார்.

தந்தை பெரியாரின் எண்ணமும் — கருத்தும், ஏதேனும் ஒருவகையில் மாற்றம் செய்திடாத மனிதனே தமிழகத்தில் இல்லை. இன்று வாழ்பவர் எல்லோருமே — தமது எண்ணப் போக்கில் ஏற்றுள்ள கருத்துக்களில் சிறிய அளவிலேனும் அவருக்குக் கடமைப்பட்டவர்களாகவே இருப்பர் என்பதில் ஐயமில்லை.

வாழ்க பெரியார் வளர்த்த சிந்தனை!
வெல்க சுயமரியாதை!

4. இன உணர்வுத்தீ வளர்த்த பெரியார்

தந்தை பெரியார் அவர்கள் — தமிழினத்தின் அறிவுக் கண்ணைத் திறந்து வைத்தவர். பகுத்தறிவு ஒளி பரவும் வழி கண்டவர். தமிழனின் தன்மானத்தைத் தூண்டித் தலைநிமிரச் செய்தவர். நம்மையெல்லாம் 'மனிதன்' என்று உணரச் செய்தவர். 'தமிழர்' ஆக வாழச் செய்தவர். 'திராவிட' இனப்பற்றினை ஏற்கச் செய்தவர்.

தந்தை பெரியார் அவர்கள் படத்தைத் திறந்துவைத்து, அவரது கொள்கையை விளக்கிப் பேசுவதால், மேலும் பல்லாயிரக்கணக்கான மக்களின் 'அறிவுக்கண்' திறக்கும் என்னும் பெருமிதத்தோடு அவரது படத்தைத் திறந்து வைக்கிறேன்.

தன்மான உணர்வூட்டியவர்:

தந்தை பெரியார் தோன்றியிராவிட்டால் அவரது சுயமரியாதை முழக்கம் கேட்காமலிருந்தால், பேரறிஞர் அண்ணா அவர்கள் இல்லை. அவரது வழிகாட்டுதலும், அறிவுத் தொண்டும், அரசியல் பணியும் நமக்குக் கிடைத்திருக்காது.

அறிஞர் அண்ணாவே இல்லை - என்றால் அவரது தொண்டுக்கு வாய்ப்பு இல்லை என்றால், 'நான் ஏது? கலைஞர் கருணாநிதி ஏது? நண்பர் வீரமணிதான் ஏது?

பெரியார் தோன்றியில்லாமலிருந்தால் பெருந்தலைவர் காமராசரும், பச்சைத் தமிழர் என்னும் பாராட்டைப் பெற்றிருக்கமாட்டார். அவரது தலைமையும் நெடுநாள் நிலைத்திருக்க முடிந்திருக்காது.

பெரியாரின் பகுத்தறிவு எண்ணங்கள் தமிழகத்தில் பரப்பப்படாமலிருந்தால், சமயங்களிடையே சமரசம் கண்டு, சீர்திருத்தம் பேசிய. தமிழ்ப்பெரியார் திரு.வி.க. அவர்கட்கு உரிய மதிப்பு வழங்கப்படும் நிலை உருவாகி இருக்காது. காவியுடை அணிந்து, சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பும் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் வலம்வரும் நிலை இருக்காது.

மறைமலை அடிகளாரை — அவரது தனித்தமிழ் உணர்வைப் போற்றி மதிக்கவும், நாவலர் சோமசுந்தர பாரதியாரை — அவரது சிந்தனையை எண்ணிப் போற்றவும் — தமிழ் வவளர்த்த சான்றோரை ஏத்தவும் காரணமான தமிழ் உணர்வு மக்களிடம் வளர்ந்திருக்காது.

தேசியக்கவி பாரதியார் கவிதையில் இடம்பெற்ற சமுதாய மாற்றக் கொள்கைகளும் வெளிப்பட்டிருக்காது. பாரதி வழியில் தோன்றிய புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் — தமிழியக்கக் கவிஞராகவும், பகுத்தறிவுப் பாவலராகவும் புரட்சிப்பண் பாடும் நிலை வடிவு பெற்றிருக்காது. தமிழ் உணர்வே வளர்ந்திருக்காது. ஏன்? தமிழனே இல்லை; தமிழகமே இல்லை என்னும் இருண்ட நிலைதான் இன்றுங்கூடத் தொடர்ந்திருக்கும்.

சுயமரியாதைக் கொள்கையோ, பகுத்தறிவு விளக்கமோ உருவாகி இருக்காது. தெளிவும் துணிவும் பிறந்திருக்காது. திராவிடர் கழகமோ — திராவிட முன்னேற்றக் கழகமோ இல்லாத நிலைதான்.

பெரியார் பிறந்தார் — வாழ்ந்தார் — வழிகாட்டினார். இந்த மண்ணில் பிறந்த நாமெல்லாம் வாழ்வு பெற்றோம். தன்மான உணர்வுடையவர்களானோம், தமிழர்களாகத் தலை நிமிர்ந்தோம்.

பெரியாரும், இராசாசியும்:

தந்தை பெரியாரையும் அவரது கொள்கை பரப்புவோரையும் — பிராமண வகுப்பார் ஏன் பகையாகக் கருதுகிறார்கள் என்பதுதான் வியப்பாக உள்ளது.

பெரியாரும் மூதறிஞர் இராசாசியும் வாழ்நாள் முழுவதும் நண்பர்களாகத்தான் இருந்தார்கள். அவர்களுடைய கொள்கையிலேதான் மாறுபாடு இருந்ததே தவிர, அவர்கள் மனத்தில் பகை இல்லை. திராவிட இனத்தில் பிறந்த பெரியார் அவர்களுடைய உரிமைக்கும் நியாயத்துக்கும் வாதாடும்போது — அப்படித்தானே வாதாடுவார் என்பது மூதறிஞருக்குப் புரிந்தது. அதனால்தான் அவர் மூதறிஞர்.

பார்ப்பனீய எதிர்ப்பு:

பிராமணர்கள் என்றோ, பார்ப்பனர்கள் என்றோ நாங்கள் குறிப்பிட்டாலும்கூட அது தனிப்பட்ட பிராமணர்களை அல்ல. அவரது கொள்கைகளை — வைதீகத்தைக் குறிப்பிடத்தான் பயன்படுகிறது.

தெளிவாகச் சொன்னால் — பிராமணீயம் என்னும் பார்ப்பனீயத்தைத்தான் — ஆரிய வழி வந்த மதக் கொள்கை களைத்தான் நாம் எதிர்க்கிறோம் - கண்டிக்கிறோம். ஆரியம் எங்களுக்கு உடன்பாடல்ல, எங்கள் இனத்தின்மீது சுமத்தாதே என்கிறோம். எங்கள் இனத்தவருக்குத் தெளிவு ஏற்படுத்தவே முயற்சிக்கிறோம்.

'பிராமணர்கள்' என்று குறிப்பிடாமல் நாங்கள் எங்கள் சமுதாயத்தை வாழவைக்கும் வழி காணமுடியாது என்பது அல்ல. அந்த வழி அடைபடுவதற்கு — பார்ப்பனீயத்தால் வளர்க்கப்பட்ட மூடிநம்பிக்கைகட்கு ஆட்பட்டவர்கள் — காரணமாக இருப்பதால்தான் — இனவழி வந்த அச்சாதிப் பெயரைக் குறிப்பிடும் நிலை ஏற்படுகிறது.

பார்ப்பனீய உணர்வும், ஆதிக்கமும் ஒழிந்துபோய் இருக்குமானால் — பிராமணர்களைச் சாதி அடையாளம் காட்டிப் பேசும் நிலை இருக்காது.

'பிராமணர்' என்று குறிப்பிடாமலே எங்கள் கட்சிகளை நடத்துவது முடியாததல்ல. அரசியலும் நடத்தமுடியும். என்னதான் செல்வாக்குப் பெற்றிருந்தாலும் - பிராமணர்கள் நூற்றுக்கு மூன்று பேர். மற்றவர்கள் நூற்றுக்குத் தொண்ணூற்று ஏழு பேர். அவர்கள் மிகச் சிலர் — தமிழர்களோ மிகப் பலர். எனவே, அவர்களைப் பொருட்படுத்தி — வலிவான பகை யாகக் கருதி நாங்கள் செயற்படவில்லை.

கருத்துப் போர்:

நடைபெறுவது ஒரு கருத்துப் போராட்டம். கொள்கை வழிப் போராட்டம். அதனை எண்ணிப் பாராமல் — எங்கள் மீது பகை கக்குகிறார்கள்! ஆனால், எங்களை அழிக்கும் ஆற்றல் எவருக்கும் இல்லை! அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் 'காலத்தின் குறி' உணர்ந்து நடந்தாக வேண்டும்.

'சாதிகள் இல்லையடி பாப்பா!' என்று பாரதியார் பாடவில்லையா?

'பார்ப்பானை அய்யரென்ற காலமும் போச்சே!' என்று பாரதி எச்சரிக்கவில்லையா? 'சாதி மதங்களைப் பாரோம்' என்று குரல் கொடுக்கவில்லையா? அவையெல்லாம் உங்கள் காதில் விழவில்லையா? அதையே விளக்கிச் சொல்லி — இன உணர்வு, மொழி உணர்வுகொண்டு தெளிவுபடுத்தும் எங்கள் மீது பகை கொண்டு பாய்வது ஏன்?

பிராமண நண்பர்கள் உணரவேண்டும். நாங்கள் வன்முறையில் நம்பிக்கை இல்லாதவர்கள். அறிவையே ஆயுதமாக ஏந்தியவர்கள்! தந்தை பெரியார் — 'கத்தி வைத்துக்கொள்' என்று கூறியதுகூட - துணிவுடன் நிற்பதற்கும் — மானத்தை இழவாது காத்துக்கொள்ள — வீரம் பெறுவதற்குமே அன்றி, கத்தியைப் பயன்படுத்துவதற்கு அல்ல.

சிந்தனை சிறக்கும் நாளில்:

இந்த நூற்றாண்டு — பகுத்தறிவைப் பயன்படுத்தும் நூற்றாண்டு. சிந்தனை சிறக்கும் நூற்றாண்டு. இந்த நூற்றாண்டின், **திராவிடத்தின் விடிவெள்ளியாக** ஒளிர்ந்த பெரியார் வரலாறு ஒரு சகாப்தம். ஒரு நூற்றாண்டுப் பயனை நாட்டு மக்களுக்கு ஏற்படுத்திய சுய சிந்தனையாளர்.

அவருடைய சிந்தனையால்தான், அழுத்தப்பட்டு, ஒடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, தீண்டப்படாதவராக்கப்பட்டு ஊமையாகவும், ஆமையாகவும், எலியாகவும், முயலாகவும் அஞ்சிக் கிடந்த மக்கள் — விழிப்புற்றார்கள்; எழுச்சி பெற்றார்கள்; ஏறுநடை போட முயற்சிக்கிறார்கள். எனவேதான், பெரியார் தந்த கொள்கைகளை அண்ணா வழியில் வளர்ப்பதையே இலட்சியமாகக் கொண்டு அயராது பாடுபடும் உறுதியோடு இருக்கின்றோம் நாங்கள்.

பெரியார் அவர்கள் பிறந்தபொழுது நாத்திகராகவா பிறந்தார்? ஏன்? 'பிராமணீயத்தினுடைய' தன்மையைக் கண்டிப்பவராகவாப் பிறந்தார்?

அவருடைய அருமைத் தந்தையாரும் தாயாரும் நல்ல பொருளாதார வசதியுடையவர்கள்; இலாபம் வரக்கூடிய

தொழில் நடத்தியவர்கள். தந்தையாருடைய கடையிலே உட்காருகிற போது பணத்தை அள்ளிப்போடுகிற அளவுக்கு அந்தக் காலத்தில் செல்வச் செழிப்போடு இருந்தார் பெரியார்.

பெரியார் அவர்கள் வைதீகப் போக்கிலே வளர்ந்து, அதன் நடைமுறைகளைப் பார்த்து அய்யங்கொண்டு, கேள்விகள் எழுப்பியும், நியாயமான விளக்கம் கிடைக்காததால் அவற்றை நம்பமுடியாத நிலையில் இயற்கையான ஐயம் ஏற்பட்டு, இயற்கையான சிந்தனையிலே உந்தப்பட்டு, நாட்டு விடுதலை இயக்கத்திலேயும் அப்போது ஈடுபட்டு, காந்தியார் தீண்டாமையை ஒழிக்க முற்பட்ட காரணத்தினால் அந்த இயக்கத்திலே மிகுந்த ஆர்வம்கொண்டு தொண்டாற்றினார்.

குலமும் சாதியும்:

தேசீய இயக்கத்திலே பெரியார் அவர்கள் தொண்டாற்றிய போது தமிழகத்திலே மூன்று பேருடைய பெயரைத்தான் தலைவர்கள் வரிசையிலே சொல்வார்கள்.

நாயுடு, நாயக்கர், முதலியார் என்று அந்தக் காலத்திலே அந்த நாள் மரியாதை முறைப்படி வழங்கினார்கள்.

நாயுடு நாயுடுமல்ல; நாயக்கரும் நாயக்கருமல்ல, முதலியாரும் முதலியாருமல்ல. இது பெரியார் பகுத்தறிவு இயக்கம் கண்டபோது நாட்டுக்குச் சொன்ன உண்மை.

ஆனால், அந்தக் காலத்திலே தரப்பட்ட மரியாதையான பெயர்கள் — அவர்களின் சாதிப் பெயர்களாக இருந்தன.

அவை சாதிப் பெயர்கள் கூட அல்ல; அவை குலப் பெயர்கள் — சாதியின் பெயரைவிட குலப்பெயர்களால் ஏற்பட்ட பிரிவினைகளும், வேற்றுமைகளுந்தான் இன்று அதிகம்.

சோழநாட்டுப் படை வீரர்களுக்கெல்லாம் **கள்ளர்** என்ற பட்டம்.

பாண்டிய நாட்டுப் படை வீரர்களுக்கெல்லாம் **மறவர்** என்ற பட்டம்.

பல்லவ நாட்டுப் படை வீரர்களுக்கெல்லாம் **வன்னியர்** என்ற பட்டம்.

சேர நாட்டில் கொங்கு நாட்டில் அந்தப்படை வீரர்களுக்கெல்லாம் **கொங்கு வேளாளர்** என்ற பட்டம்.

இன்னும் வேறுசில பட்டங்களும் ஒவ்வொரு காலத்தில் வழங்கியுள்ளன.

குலம் என்பது கூட்டம்:

கூட்டந்தான் குலமாயிற்று. பிற்காலத்திலே சாதியின் பெயராக எண்ணப்படும் நிலை ஏற்பட்டுவிட்டது.

ஆனால் இப்படி வழங்கியபோது மூன்று தலைவர்கள் வரதராசலு அவர்கள், பெரியார் அவர்கள், திரு.வி.க. அவர்கள் பொதுப்பணி ஆற்றியவர்கள். அவர்கள்தான் நாடறிந்த தலைவர்கள்.

அதற்கு முன்னர் தமிழ்நாட்டில் புகழ்பெற்று விளங்கிய தலைவர் கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார்.

அதற்குப் பிறகு இந்தத் தலைவர்களோடு சேர்ந்து சேலம் நகரசபைத் தலைவராக இருந்த இராசாசி அவர்களும் அரசியலிலே மிகத் தீவிரமாக ஈடுபட்டார்கள்.

அதையொட்டி, சத்தியமூர்த்தி அவர்கள் ஈடுபட்டார்கள். அதற்கு முன்னாலே விஜயராகவாச்சாரியாரவர்கள் இருந்தார்கள். அந்தக் காலகட்டத்திலேயே தேசிய காங்கிரசு இயக்கத்தில் சமூக நலனைக் கருதுகிற உணர்வுகளில்லை என்று பெரியார் அவர்கள் உணர்ந்தார்கள். விடுதலை வேண்டும், ஆட்சி அதிகாரம் வேண்டும், சுயராஜ்யம் வேண்டும் என்னும் ஆர்வத்தோடு இருக்கிறார்கள். ஆட்சியைக் கைப்பற்றலாம் என்று போராடுகிறார்கள். ஆனால் இந்த நாட்டு மக்களிடத்திலே இருக்கின்ற வேற்றுமைகளை, மூடநம்பிக்கைகளை, சாதீய உணர்வுகளை அகற்ற யாரும் நினைக்கவில்லையே என்று பெரியாரவர்கள் உணர்ந்தார்கள்.

சமூக நீதி கேட்டார் பெரியார்:

அந்த நாள் காங்கிரசு கட்சியே பிராமண வகுப்பார் ஆதிக்கம் பெற்றதாக இருந்ததால், சமூக அடிப்படையில் ஒரு நீதி கிடைக்குமா என்று பெரியார் காங்கிரசு இயக்கத்திலே போராடினார்.

பிராமணீய ஒழிப்பு ஏன்?

காங்கிரசு கட்சியில் பார்ப்பனர்களுக்கு எவ்வளவு பதவி கிடைக்கிறதோ அந்த அளவு பார்ப்பனரல்லாதாருக்கும் பங்கு வேண்டும் என்று வகுப்புரிமை அடிப்படையில் திருவண்ணா மலையில் நடைபெற்ற மாநாட்டில் பெரியாரவர்கள் பேசினார் கள்; இராசாசி அவர்களும், திரு.வி.க. அவர்களும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

அதற்குப் பிறகு காஞ்சிபுரத்திலே நடைபெற்ற மாநாட்டில் அதையே பெரியார் வலியுறுத்தினார்கள். அதை யாரும் ஏற்க வில்லை. காங்கிரசு கட்சியில் சமூக நீதிக்கு இடமில்லை — என்பதைக் கூறிக் கண்டித்துவிட்டுக் காங்கிரஸ் இயக்கத்தை விட்டு வெளியேறினார்கள்.

வெளியேறுவதற்கு ஏதுவாக இன்னொரு கருத்து ஆழமாக அவர் மனதிலே வேரூன்றி இருந்தது.

காங்கிரசு இயக்கத்திலே இருந்தபோது திருநெல்வேலி மாவட்டத்திலே மிகச் சிறந்த கல்விமான் என்று போற்றப்பட்ட வ.வெ.சு. அய்யர் — கம்பரைப்பற்றி, திருவள்ளுவரைப் பற்றியெல்லாம் ஆங்கிலத்திலே நூல்கள் எழுதியவர் — சேரமாதேவியில் ஒரு குருகுலம் நடத்தி வந்தார்.

அந்தக் குருகுலத்திலே ஏழைப் பிள்ளைகளெல்லாம் சேர்க்கப்பட்டிருந்தார்கள்.

அந்தப் பிள்ளைகள் படிக்கின்ற குருகுலம் நடக்கும் முறையைப் பெரியாரவர்கள் போய்ப் பார்வையிட்டார். அப்போது உள்ளே ஒரு பந்தி, வெளியிலே பார்ப்பனரல்லாத பிள்ளைகளுக்கு ஒரு பந்தி நடப்பதைப் பார்த்தார். அதைப் பார்த்தவுடன் பெரியார் கேட்டார். ஏன் இரண்டு இடங்களிலே பந்தி? என்று. அதற்கு மறுமொழியாக, ''நாங்கள் அய்தீகப்படிதான் செய்கிறோம்; பிராமணர் — பிராமணரல்லாதார் இருவரும் சமமாக அமருவதில்லை. அது இந்த நாட்டின் நீண்டகாலப் பழக்கம். ஆகவே அதன்படித்தான் இங்கும் நடைபெறுகிறது'' என்று மேலை நாடுகளுக்கெல்லாம் போய்வந்த வ.வெ.சு. அய்யர் பதில் சொன்னார்.

ஆகவேதான் பெரியாரவர்களுடைய உள்ளத்திலே இந்த நாட்டுப் 'பிராமணன்' இங்கிலாந்துக்குப் போய்வந்தால் கூட திருந்தமாட்டான் என்ற எண்ணம் உறுதிபெற நேரிட்டது. இந்த நாட்டிலே சாதி வேற்றுமை ஒழிய வேண்டுமானால் 'பிராமணீயம்' ஒழிக்கப்பட வேண்டும் என்று தெளிந்தார். அதனால் அவருடைய உள்ளத்திலே சுயமரியாதை உணர்வு தழைத்தது. அதன் விளைவாக உருவான சிந்தனையினாலேயே சுயமரியாதை இயக்கத்தையும், 'குடி அரசு' பத்திரிகையையும் தோற்றுவித்தார்.

அந்தக் 'குடிஅரசுப்' பத்திரிகையைத் துவக்கி வைத்தவர் யாரென்றால், நாடறிந்த தமிழறிஞர் திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள்.

ஞானியார் சைவ சமயச்சீலர். தம் வாழ் நாளெல்லாம் சைவத்தின் பெருமை பேசுவதில் ஆர்வம் கொண்டிருந்தவர்; நாடு வாழவேண்டும் என்று எண்ணக் கூடியவர்.

அப்படிப்பட்ட பெரியவர் 'குடிஅரசு' இதழை முதன் முதலாகத் துவக்கி வைத்தார்.

அப்படித் துவக்கி வைக்கப்பட்ட 'குடிஅரசு' இதழின் ஒரு பக்கத்திலே காந்தி அடிகளுடைய படம். இன்னொரு பக்கம் கைராட்டினம். அந்தக் காலகட்டம் வரையில் காந்தியத் திட்டத்தில் பெரியார் நம்பிக்கை இழக்கவில்லை.

காந்தி அடிகள் சொன்ன கொள்கையின்படி தீண்டாமை ஒழியவேண்டுமானால் 'சாதி' அடிப்படையே ஒழிய வேண்டும் என்று கருதினார் பெரியார்.

காந்தி அடிகள் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையிலே தான் வைக்கம் போராட்டத்திலே ஈடுபட்டார்.

காந்தி சொன்ன கருத்துப்படிதான், நியாய அடிப்படையில் பெண்ணுரிமைக்கும் வாதாடினார்.

காந்தி அடிகள் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையை எண்ணிப் பார்த்தபோது — வருண சாதி முறை ஒழிய வேண்டும் என்ற எல்லைவரை, பகுத்தறிவு அடிப்படையில் காந்தி அடிகள் வராத காரணத்தினால், காந்தி அடிகளுடைய சமய உணர்வு அதைத் தடுத்த காரணத்தால், அதற்கு மேல் அடியெடுத்து வைக்க அவருக்குத் தோன்றாத காரணத்தால், மேலும் அவர் வாழ்ந்த வடமாநிலங்களில் அதற்கு மேல் சாதியை

எதிர்க்க இடமில்லாத காரணத்தாலும், திருக்குறள் பிறந்த நாட்டில் காந்தி அடிகள் பிறக்காத காரணத்தால் — சுயமரியாதை எண்ணங்கள் காந்தி அடிகளுடைய உள்ளத்திலே பிறக்காத காரணத்தால், பெரியாரவர்கள் தமது உள்ளத்திலே பிறந்த கொள்கைக்காகக் காங்கிரசை உதறிவிட்டு, சுயமரி யாதை இயக்கத்தை வடிவெடுக்கச் செய்தார்.

தன்மான உணர்வு வளர்த்தவர்கள்:

அப்படி அவர் வடிவெடுக்கச் செய்தபோது அறிஞர் எஸ். இராமநாதன் அவர்களும், கைவல்யம் சாமியார் அவர்களும், பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்களும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களும் அதேபோல அந்த இயக்கத்தின் முன்னோடிகளெல்லாம் உடன் இருந்து அந்த இயக்கத்தை வளர்த்தார்கள்.

அந்த இயக்கத்திற்கு எவ்வளவோ எதிர்ப்புக்கள்; அந்த எதிர்ப்புக்களுக்கிடையே துணிச்சலோடு அந்த இயக்கக் கொள்கையை வளர்த்தார்.

இன்னும் தெளிவாக, அந்தக் கொள்கைகளை எதற்காகச் சொன்னார் என்று எண்ணிப் பார்ப்போமேயானால் உண்மை விளங்கும். மனிதனுக்கு மனிதன் பிறவியில் ஏற்றத் தாழ்வு ஏன்? என்று அவர் ஆராய்ந்து பார்த்தார்.

செல்வத்தின் காரணமாக இருக்கின்ற ஏற்றத்தாழ்வைக் கூடத் தந்தை பெரியார் ஏற்றுக்கொள்ளவில்லை.

பணக்காரன், ஏழை; நிலப்பிரபு, உழவன்; முதலாளி, தொழிலாளி முதலான வேற்றுமைகளை ஏற்றுக்கொள்ளவும் அவர் விரும்பவில்லை.

எனவே, எந்த நிலையிலும் ஏற்றத்தாழ்வு கூடாது எனும் அவர் கொள்கையைப் பார்ப்பன நண்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிக்க வெறுப்பு:

பார்ப்பன ஆதிக்கத்தை மட்டுமே பெரியார் கண்டிக்க வில்லை. சைவ சமய ஆதிக்கத்தையோ, வைணவ சமய ஆதிக் கத்தையோ தமிழர்களான மடாதிபதிகளின் ஆதிக்கத்தையோ, பெரியாரவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

திருக்கோயில் பெயரால் உருவாக்கப்பட்டு நடைபெறும் ஆண்டவன் ஆதிக்கத்தைக் கூட கொள்கை நோக்கிப் பெரியார் ஏற்றுக்கொள்ளவில்லை.

தொழில், வாணிக, ஆலை முதலாளித்துவ முறையின் ஆதிக்கத்தையும் ஏற்றுக்கொள்ள வில்லை.

ஜமீன்தார், இனாம்தார், மிட்டா மிராசுகளின் பரம்பரை ஆதிக்கத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

தெளிவாகக் கூறுவதானால், எந்த ஒரு அரசாங்கத்தினுடைய ஆதிக்கத்தையுங்கூடப் பெரியார் ஏற்றுக் கொள்ளவில்லை.

கணவனுடைய ஆதிக்கம் மனைவிமீது ஏற்படுவதைக்கூட — பெண்ணைத் தாழ்த்தி அடிமைப்படுத்துவதால் பெரியார் ஏற்றுக்கொள்ளவில்லை.

பின் பிராமணர்களுக்கு மட்டும் பெரியாரவர்கள் எப்படிப் பட்ட நியாயம் வழங்க முடியும் என்று நினைக்கிறீர்கள்? எதிர்பார்க்கிறீர்கள்.

நியாயம் கேட்டவர் பெரியார்:

கணவன், மனைவியை அடிமையாக நடத்தக் கூடாது என்று கூறிய பெரியார், 'பிராமணர்' களுக்கு மற்றவர்கள் அடிமையாக இருக்க ஒத்துக்கொள்வார் என்று கருத இடமேது?

அதனால்தான் என்றைக்கும் பிராமணர்கள் மற்ற வகுப்பார் மீது குதிரை ஏறலாம்; அதற்குத் தமிழன் தோள் என்றைக்கும் தயாராக இருக்கும் என்று எண்ணிட வேண்டாம் என்றார்.

அப்படிப்பட்ட தந்தை பெரியாரவர்களைவிட நியாய புத்திப் படைத்தவர் வேறு யார் இருக்கின்றார்கள்? வேறு யார் இருந்தார்கள்?

கலப்பு மணம் செய்யலாம் என்று சக்ரவர்த்தி ராஜ கோபாலாச்சாரியார் அவர்களே எழுதவில்லையா? கலப்பு மணம்; காதல் மணத்தைப் பற்றி ஒரு கட்டுரையிலே அவர் சொல்கிறார்:—

கலப்பு மணம் என்பது ஒரு இளைஞனும், ஒரு இளம் பெண் மணியும் ஏதோ ஒரு இடத்தில் திடீர் என்று சந்தித்து, சந்தித்த

காரணத்தினாலே இயற்கை உணர்ச்சியால் காதல் தூண்டப் பட்டுக் காதலிலே அவர்கள் ஈடுபட்டு, பின்னர் ஒருவரை யொருவர் காப்பாற்ற முடியாமல் போய்விடுகிற நிலைமை ஏற்பட்டு மனஉறுதி இல்லாமல் ஒருவரை ஒருவர் கைவிட்டுப் போய்விடக் கூடாது. ஒருவரை ஒருவர் பார்த்துப் பழகிப் புரிந்துகொண்டு, வருகிற கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக் கொள்ள லாம் என்று நம்பிக்கை ஏற்பட்டால், எந்தச் சாதிப் பெண் எந்தச் சாதி ஆணைத் திருமணம் செய்து கொண்டாலும் வரவேற்கக் கூடியதுதான் என்று இராசாசி அவர்களே எழுதியுள்ளார்.

இராசாசி அவர்கள் குடும்பத்தில் கலப்பு மணமும் நடைபெற்று இருக்கிறது.

இராசாசி சொன்னதைப் பெரியார் சொன்னால் கசக் கிறதா? இராசாசி சொன்னதை நாங்கள் ஒப்புக்கொண்டோமா என்று பார்ப்பன நண்பர்கள் கேட்கக் கூடும்.

அவர்கள் ஒப்புக் கொண்டார்களோ, இல்லையோ — அவர்களுடைய சமுதாயத்திலே 100க்கு 5 சதவீதம் கலப்புத் திருமணம் நடைபெறாமலா இருக்கிறது?

நான் அளவிட்டுச் சொல்வது ஒப்புக்கொண்ட திருமணங் களைத்தான்; முடியாத திருமணங்களை அல்ல.

எனவே, காலத்தை உணர்ந்து முற்போக்காகத் தங்களுடைய சமுதாயத்தைப் பாதுகாத்துக்கொள்ள நினைக்கக்கூடிய 'பிராமண' நண்பர்கள் மற்றவர்கள் முன்னேறுவதற்கு வழிவிட வேண்டாமா? அவர்கள் வழிகூட விடவேண்டாம்; சிவன் கோயில் நந்தியாக இருக்கலாமா?

அவர் நந்தியாக இருந்தால் இந்த நந்தன்கள் என்றைக்குமே திருக்கோயிலுக்குள் போய்ச் சேரமாட்டார்கள் என்ற நினைப்பா? அந்தக் காலத்து நந்தன், 'நந்தியே வழிவிடு வழிவிடு' என்றான்.

இந்தக் காலத்து நந்தன் நந்திமீது ஏறிக் கொண்டு அதையே ஓட்டிக் கொண்டு போய்விடுவான்? நிலைமை மாறியுள்ளது!

காலம் மாறுகிறதல்லவா? மாறுகிற காலத்தை உணருகின்ற ஆற்றல் பெற்றிருந்த காரணத்தினால்தானே பிராமணர்களை எல்லாம் அறிவாளிகள் என்று பெரும்பாலோர் நினைத்துக்

கொண்டிருந்தனர். இன்றைக்கு அதை ஏற்பார் இல்லையெனினும் அந்தக் காலத்தின் மாற்றத்தை ஏற்க மறுப்பது பயன்தருமா?

பார்ப்பனர்களுக்குள்ளேயாவது முதலில் சாதி வித்தியாசம் தொலையட்டும். அவர்களுக்கிடையிலேயாவது அர்த்தமில்லாத மூடநம்பிக்கைகள் ஒழியட்டும். அவர்களாவது ஒன்றாக ஆகித் தொலையட்டும். அவர்களைப் பார்த்தாவது மற்றவர்களுக்குப் புத்தி வரட்டும் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது எனக்கு.

இங்கே முக்குலத்தோரில் முன்னூற்று முப்பத்து மூன்று சாதிகள் இருக்கின்றன.

முத்தரையர் என்று நாற்பத்தெட்டு முத்தரையர் இருக்கின்றனர்.

முதலியாரிலே எழுபத்தெட்டு முதலியார் இருக்கின்றனர். பிள்ளைமாரிலே அய்ம்பத்திரண்டு பிள்ளைமார் இருக்கின்றனர்.

பள்ளர், பறையர், அருந்ததியரிலே — அறுபத்தெட்டு வகை இருக்கிறார்கள்.

ஆக, இந்த நாடு நலம்பெற வேண்டுமானால் பார்ப்பனர்களாக இருக்கின்ற அவர்களாவது சாதிப்பெயர் வேற்றுமையின்றி ஒன்றுபடட்டும்.

உங்களிடையே உள்ள வேற்றுமையை முதலில் ஒழியுங்கள் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோள்.

சமய வெறுப்பு ஏன்?

இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், பத்திரிகை நிருபர்கள் ஆர்வத்துடன் அகோபில் மடாதிபதி ஜீயரைப் போய்ப் பார்த்திருக்கிறார்கள். அவரைப் பார்த்துப் பேசியுள்ளனர், ஸ்ரீரங்கம் கோயில் திருப்பணிக்காகப் பலதரப்பட்டவர்களிடத்திலேயிருந்து நன்கொடை பெற்றிருக்கின்றீர்கள். அதிலே சைவர்கள், சைவ மடாதிபதிகள், பெரிய லட்சாதிபதிகள் எல்லாம் கூட நிதி வழங்கியிருக்கின்றார்கள். நிதியைக்கொண்டு அரங்கநாதருடைய திருப்பணிக்கு, கோபுரப்பணிக்கு அந்தப் பணத்தை எல்லாம் செலவு செய்திருக்கின்றீர்கள் என்று கூறிய

பின்னர், சிவன் கோயிலுக்குக் கோபுரம் கட்டப்படுமானால் வைணவர்களாக இருக்கின்ற 'பிராமணர்கள்' அதற்கு நிதி உதவி கொடுக்கும்படி நீங்கள் சொல்வீர்களா? அதற்கெல்லாம் ஆதரவாகச் சொல்வீர்களா என்று கேட்டிருக்கின் றனர்.

அதற்கு ஜீயர், நான் சொல்லமாட்டேன் என்றிருக்கின்றார்.

மேலும் விடாமல் கேட்டார்கள்.

நீங்களாவது சிவன் கோயிலுக்கு நன்கொடை தருவீர்களா? என்று கேட்டிருக்கின்றார்கள். அவர் சொல்லி இருக்கின்றார் — சிவபெருமானை வழிபடுகின்ற அந்தக் கோயில்களுக்கு வைணவர்கள் பணம் தரக்கூடாது. நானும் தரமாட்டேன். ஏனென்றால் எங்களுடைய ஆண்டவர்களிலே வெங்கடா சலபதியோ. ஸ்ரீரங்கநாதரோதான் உயர்ந்தவர்கள். சிவன் இருக்கிறானே; சுடலையைக் காக்கும் பேர்வழி. அந்தச் சிவபெருமானுக்காகக் கட்டப்படும் கோயிலுக்காகப் பணம் கொடுப்பது என்பது ஸ்ரீமத்நாராயணமூர்த்தியிடம் நாங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பாதிப்பதாகும். அது பாவமான காரியம் என்றாராம். இங்கே 'பிராமணர்'களின் மாநாட்டிலே அய்யர் அய்யங்கார்களெல்லாம் ஒன்றாக வேண்டும் என்பது ஒரு கருத்து. வைணவர்கள் சிவன் கோயிலுக்குப் பணம் தரக்கூடாது என்பது இன்னொரு நிலை.

ஞானிகளும் ஒன்றுபடவில்லை:

இவை தவிர்த்து இன்னொரு பக்கம் நாம் எண்ணிப் பார்த்தால் 'பிராமணர்'களுக்கு வழிகாட்டிகளாக, மிகப் பெரிய ஞானிகள் எனப்படும் ஆதிசங்கரர், ராமானுசர், மத்வர் என்ற மூன்று பேருமாவது ஒரே கடவுள் தத்துவத்தைச் சொன்னார்களா?

சங்கரருக்கு விளக்கமான கடவுள் — தத்துவம் ஒருவகை.

ராமானுசருக்குப் புலனாகிய கடவுள் — ஆன்மா உறவு ஒருவகை.

மத்வருக்குத் தெரியவந்த கடவுள் தன்மை ஒருவகை.

ஒருவர் அத்வைதம், அடுத்தவர் விசிஷ்டாத்வைதம், இன்னொருவர் துவைதம்.

ஒருவர் கடவுளும், ஆன்மாவும் ஒன்றுதான் என்றார்.

இன்னொருவர் கடவுளும், ஆன்மாவும் வேறு, வேறு என்றார்.

இன்னொருவர் ஆன்மா, கடவுள் தன்மையை நெருங்கி அதன் அருட்பார்வையிலே இருக்கக் கூடியது என்றார்.

அப்படிப்பட்ட தத்துவ விளக்கங்களைக் கேட்டுப் பழகிய எங்களுக்கு ஆன்மாவும் தெரியாது, கடவுளும் புரியாது என்றால் ஏன் கோபித்துக் கொள்கிறீர்கள்?

அந்த வேதாந்திகளே, ஒரே தத்துவத்தைச் சொல்ல முடிய வில்லை; அதற்கு முன்னாலே வேதகாலத்திலே தத்துவங் களைச் சொன்னார்களே, அவர்களாவது ஒரே தத்துவத்தைச் சொன்னார்களா?

அகச் சமயங்கள் ஆறு என்றனர். ஆறு சமயமும் ஆறுவகைப் பட்ட தத்துவத்தைக் கூறுபவை. 'பிராமண' நண்பர்களே! தத்துவஞானிகளே! சர்வபள்ளி ராதாகிருஷ்ணனுடைய பெருமையைப் பேசுபவர்களே! உங்களை நான் கேட்கிறேன்; உங்களுக்குள்ளே ஒரே வகையான கடவுள் கொள்கை உண்டா? கடவுளைப் பற்றி ஒரே விதமான விளக்கம் சொல்வீர்களா?

எது உங்களுடைய கொள்கை? ரிக், யஜுர், சாம, அதர்வண வேதத்திலேகூட எங்காவது இதுதான் கடவுள் என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றதா?

வேதத்திலே இடம்பெறாத, ஒப்புக்கொள்ளாத கருத்துக் களையெல்லாம் தென்னாட்டு மக்களிடத்திலே, திராவிட மக்களிடத்திலேயிருந்து கடன் வாங்கி உபநிடதத்திலே — ஆகமத்திலே எழுதி வைத்துக்கொண்டீர்களே! அவை ஆரியத் தால் புதிதாகப் பெற்ற கருத்துக்கள் அல்ல என்று மறுக்க உங்களால் முடியுமா?

பெரியாரும், அறிஞர் அண்ணாவும், மறைமலையடிகளும், கா.சு. பிள்ளையும், திரு.வி.கவும் ஒத்துக் கொண்டிருக்கக்கூடிய தன்மையுள்ள கடவுளைக் குறித்த விளக்கம் உங்களிடத்திலே உண்டா?

நீங்கள் கண்டதெல்லாம் — தேவர்கள்.

நீங்கள் பூசிப்பதெல்லாம் — தெய்வங்கள்.

நீங்கள் போற்றுவதெல்லாம் — மும்மூர்த்திகள்.

நீங்கள் ஒப்புவதெல்லாம் — ஆறு சமயங்கள்.

நீங்கள் ஏற்றுக்கொண்டதெல்லாம் — புராணக் கதைகள்.

நீங்கள் போற்றியதெல்லாம் — மூடத்தனம்.

நீங்கள் நம்பியதெல்லாம் — யாகப்பலியாக உயிர்ப்பலி கொடுத்து, வேள்வி செய்து தெய்வங்களைக் கூப்பிட்டால், அவை வந்து அருள் புரியுமென்பது.

நீங்கள் நடத்திய வேள்வியிலே பசு உட்பட பல்வேறு உயிர்களைக் கொன்றிருக்கிறீர்கள்! அவிப்பலி எனத் தின்று மிருக்கிறீர்கள்! பசுவதை கூடாது என்று இப்போது பெரிய பிரச்சாரம், இந்து மதத்தின் பெயரால் நடத்தி வருகிறீர்கள்.

காட்டு மிராண்டிகள்:

அந்த இந்துமதம் என்னும் சனாதான தருமம் தோன்று வதற்குக் காரணமாயிருந்த வேதகாலத்தில் பசுவை நீங்கள் சாப்பிடவில்லையா? சோமபானம் அருந்தவில்லையா?

இந்த உயிர்க்கொலை நியாயமா என்று கேட்டவர்கட்கு அது ஆண்டவனுக்கு அவிர்ப்பாகம் செய்த படையல் என்று சொல்லவில்லையா?

நீங்கள் அழைத்தால் அவிர்ப்பாகம் பெற வரும் உங்கள் தெய்வத்திற்குப் பெயர் இந்திரன்தானே! அந்த இந்திரன் என்பவன் உங்களுடைய பழைய மன்னர் களிலே ஒருவன் என்று வரலாறு சொல்கிறதே!

அதற்காக நாங்கள் குறை சொல்லவில்லை. காட்டு மிராண்டித்தனம் எல்லோருக்கும் பொதுவானது. எங்களுக்கும் கூட அதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் சொந்த மானதுதான். ஆனால் எங்களுடைய காட்டுமிராண்டித்தனம் நாகரிக மான வளர்ச்சிக்கு இடம் கொடுத்தது.

உங்களுடைய காட்டுமிராண்டித்தனத்தைவிடப் பழங்காலத் தமிழனுடைய காட்டுமிராண்டித்தனம் பன்னூறு மடங்கு உயர்ந்தது பண்பால், ஒழுக்கத்தால்.

தமிழன் குறிஞ்சி நிலத்திலே பிறந்தான், முல்லை நிலத்திலே தவழ்ந்தான், மருதநில நாகரிகத்திலே வாழ்ந்தான், நெய்தல் நில நாகரிகத்திலே உயர்ந்தான்;

இப்படிப் படிப்படியாகக் காட்டுமிராண்டி நிலையினின்று விடுபட்டு அவ்வகை நிலத்தினிலும் நாகரிகத்தோடு வாழ்ந்தான் என்ற நிலைமை ஏற்பட்டு இன்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது.

'பிராமண' நண்பர்களே! உங்களுக்குக் குறிஞ்சி நில இலக்கணம் தெரியுமா? இன்றைக்கு இருக்கின்ற பார்ப்பனர் களைக் கேட்கவில்லை? உங்களுடைய மூதாதையர்களுக்குத் தெரியுமா?

நாகரீகமுண்டா?

உங்களுடைய வேதகாலத்திலே அடிப்படையான நாகரிக மான கருத்து பேசப்பட்டிருக்கின்றதா?

நான் அதற்குக்கூட உங்களைக் குறைவுபடுத்த விரும்ப வில்லை! அப்படி இருந்து கொண்டு வருணாசிரம தர்மத்துக்காக வாதாடுகின்றீர்களே; அதை நியாயப்படுத்த முடியுமா?

இன்றைக்குப் 'பிராமண' நண்பர்கள் — நாங்கள் சாதி வேற்றுமையை ஏற்றுப் பேசமாட்டோம் என்று தீர்மானம் போடட்டுமே பார்க்கலாம்!

நானும், நண்பர் வீரமணியும் அவர்களைப் பாராட்டி ஊர் ஊராகக் கூட்டம் போட்டுப் பேசுகிறோம்.

ஜாதி வேற்றுமையை ஒழிப்பதற்கு முதலில் ஒப்புக் கொள்ளுங்கள்!

உயர்ந்தவன், தாழ்ந்தவன் — இல்லை என்ற நிலையை ஒத்துக்கொள்ளுங்கள்! அதைக்கூட ஒத்துக்கொள்ள முன்வராத நீங்கள் சாதி வேற்றுமைகள் ஒழிவதற்காகப் போராடிய பெரியாரை நிந்திப்பதா?

பெரியாரவர்கள் கடவுளைப்பற்றி என்னென்ன விதமாகப் பேசினார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவர் சாதி வேற்றுமை கூடாது என்றார். 'பிராமண' நண்பர்கள், அவர் கட்சாக வாதாடுபவர்கள், சில வைதிகர்கள், கிருபானந்த வாரியார் போன்றவர்கள் சொன்னார்கள்:

''நால்வகை சாதியென்பது நாமே படைத்ததல்ல — யார் படைத்தது? என்றால் பிர்மா படைத்தது'' என்றார்கள்.

பிர்மா ஏன் படைத்தார்? யாருக்கும் தெரியாது.

உலகத்தைப் படைக்கின்றபோதே படைத்தாராம்.

பிர்மாவினுடைய முகத்திலிருந்து உதித்தவன் 'பிராமணன்'. தோளிலிருந்து உதித்தவன் சத்திரியன்; தொடையிலிருந்து பிறந்தவன் வைசியன், பாதத்திலிருந்து உதிர்ந்தவன் சூத்திரன் என்றார்கள்.

பஞ்சமன் என்பவன் எங்கே இருந்து உதித்தான் என்று கேட்டோம். பிர்மா மறந்துவிட்டார் என்றார்கள்.

பிர்மா எப்படி?

இந்த நாலு வருணத்தையும் நாலு இடத்திலிருந்து பிர்மா உதிர்த்தார் என்று சொல்கிறீர்களே; உங்கள் பிர்மா ஆணா? பெண்ணா? என்று கேட்டோம்; பதில் இல்லை.

ஆணா — பெண்ணா பிர்மா? என்பதோடு நாங்கள் நிறுத்தவில்லை.

அந்த நான்கு இடத்திலேயும் பிள்ளை பிறக்கும்படியான உறுப்புகள் இருந்திருக்குமேயானால் உடம்பெல்லாம் அடையாளங் கொண்ட இந்திரனைவிட அசிங்கமான நிலையிலே கடவுள் இருந்திருக்கமாட்டாரா? என்று கூடக் கேட்டோம்.

இதையெல்லாம் கேட்கிறபோதுதான் பிர்மாவைக் கடவுளென்று நம்ப இடமில்லையே; அந்தப் பிர்மாவை நாங்கள் எப்படி ஏற்பது என்றார் பெரியார்.

மனிதன் தோன்றியது பற்றி விஞ்ஞான அடிப்படையில் பார்த்தால் குரங்கின் இனத்திலிருந்து மனிதன் தோன்றினான். அப்படி முதல் மனிதன் தோன்றிய இடம் குமரிக் கண்டம். அதுதான் லெமூரியாக் கண்டம் என்று மேனாட்டறிஞர்கள் எழுதுகிறார்கள். அதைக் கூட ஒத்துக்கொள்ள வேண்டாம்.

மனிதன் பிறக்கிறபோதே 'பிராமணன்' என்று பிறந்தானா? ஆரியர்கள் எழுதிவைத்த சாத்திரத்திலேயே ஒன்று ஒருவிதமாகவும், மற்றொன்று வேறு விதமாகவும் கூறுகின்றது.

'பிராமண' நண்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

உபநிடதங்களிலே சாதியைப்பற்றிக் கூறியுள்ள கருத்து:

''ஜென்மானா ஜெயதே சூத்ரா'' என்பதாகும்.

அதாவது பிறவியினால் எல்லோரும் சூத்திரர்கள். பிறக்கும்போது எல்லோரும் சூத்திரர் ஆகவே பிறக்கின்றனர்.

உபநிடதம் 'பிராமணர்'களாலே போற்றப்படுகின்ற ஒன்று.

நீங்களே சொல்கிறீர்கள் பிர்மாவின் நான்கு இடத்திலே பிறந்தவன் நான்கு வகை சாதி என்று.

காலிலே பிறந்தவன் — உழைப்பதற்குப் பிறந்தவன் — சூத்திரன் என்பது ஒரு கருத்து. ஆனால் பிறவியினாலே எல்லோரும் சூத்திரர்களாகத்தான் பிறக்கிறார்கள். அதையும் சொல்வது நீங்கள்.

எப்பொழுது ஒருவன் பூணூல் அணிகிறானோ — அப்பொழுதுதான் 'பிராமணன்' ஆகிறான். எப்பொழுது ஒருவன் பூணூல் அணிகிறானோ அப்பொழுது தான் சத்திரியன் ஆகிறான். அதே போலத்தான் வைசியனும் ஆகிறான். ஆனால் பூணூல் அணிவிக்கின்ற உரிமை 'பிராமணனு'க்குத்தான் உண்டு.

பார்ப்பான் பூணூல் அணியும்போதுதான் 'பிராமணன்' ஆகிறான். அந்த இரு பிறப்பாளன் என்கின்ற தகுதி சூத்திரனுக்குக் கிடையாது. 'பிராமணனால்' ஏற்றுக் கொள்ளப்பட்டவனே சத்திரியனாகலாம், வைசியனாகலாம். அப்படியானால் பிர்மா முகத்திலிருந்து நேராகவே 'பிராமணன்' பிறந்தான் என்பது எப்படி உண்மையாகும்?

பிரம்மன் படைத்தானா?

பிர்மா முகத்திலிருந்து 'பிராமணன்' பிறந்தால், அதற்குப் பின்னாலே பூணூல் அணிய வேண்டிய அவசியம் என்ன? அப்படியானால் பிரம்மன் படைத்தது என்பது பொய்யல்லவா?

பிரம்மனுக்குப் படைக்கிற தகுதி இருந்து படைத்திருப்பானே யானால் பின்னர் இரு பிறப்பாளரைப் பூணூல் போட்டு உருவாக்குவது என்பது ஏன்?

எனவே, பிறவியினாலேயே பிராமணன், சுத்தப் பிராமணன் இல்லை என்பது தெளிவாகிறது.

வள்ளுவன் கூறும் அந்தணன் ஆக, எந்த வகுப்பினரிலும் ஒருவர் இருவர் இருக்கலாம். ஆனால் பிராமணன் இல்லை!

எனவே, 'பிராமணர் மாநாடு' என்ற பேராலே கூட்டினால் — போலி பிராமணர்கள்தானே மாநாடு நடத்துகிறார்கள். உண்மையான பிராமணன் வேதந்தானே ஓதுவான்? வேள்வி — யாகம்தானே செய்வான்? மாநாடா நடத்துவான்? என்று கேட்கமாட்டோமா?

ஆனால் ஆரிய இன உணர்வு, அப்படிப்பட்ட கட்டுப் பாடான ஒற்றுமையை அவர்களிடையே உருவாக்கும் வல்லமை பெற்றிருக்கிறது.

துரோகிகளை உருவாக்குவது ஆரியம்:

தமிழ் இன உணர்வும் — எப்படியோ சீரழிந்திருக்கிறது. புராண காலம் முதலாகவே இந்த இனத்திலேதான் காட்டிக் கொடுப்பவர்கள் தோன்றியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இராவணனுடைய காலத்திலேயே ஒரு விபீடணன் இருக்கத் தான் செய்தான்.

நாட்டிலுள்ள இராமாயண ஏடுகளை நாம் படித்துப் பார்த்தால் இராமனுடைய கதைகளாக — எத்தனையோ வேறுபட்ட கதைகள், இருக்கின்றன என்பதை உணர முடியும்.

இராமனுக்கும் சீதைக்கும் உள்ள உறவைக்கூட வேறுபடுத்திச் சொல்லக்கூடிய புத்த இராமாயணமும் இருக்கிறது.

வடமாநிலங்களிலே வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்கின்ற இராமாயணங்கள் இருக்கின்றன.

ஆனால் இராமன், இலக்குமணன்; பரதன், சத்ருக்கன், ஆகிய நால்வரிலே எவனும் தன் இனத்தைக் காட்டிக் கொடுக்கவில்லை.

ஆனால், இராவணன் குடும்பத்திலேதான் ஒரு விபீடணன் தோன்றினான். ஆரியம் துரோகிகளை உருவாக்கியுள்ளது.

இராமனுடைய அண்ணன் தம்பிகளிலே யாரும் வேறுபட்டுப் பகைத்துக் கொள்ளவில்லை.

வாலியினுடைய குடும்பத்திலேதான் ஒரு சுக்ரீவன் தோன்றினான். ஆகவே நம்முடைய திராவிட இனத்திலேதான் காட்டிக் கொடுக்கிற ஒருவன், குடும்பத்திலேயே உருவாக முடிகிறது. அப்படி அவர்களை உருவாக்கும் வல்லமை ஆரியத்துக்கு எப்படியோ அமைந்திருக்கிறது.

அதற்கும் ஒரு காரணம் உண்டு.

நீண்ட நெடுங்காலமாக ஒரே நாட்டில் நிலைத்து நிற்கிற ஒரு சமுதாயத்தினரிடையே இனப்பற்று குறைந்து கொண்டே வரும்.

நாம் நீண்ட காலமாக ஒரே நிலத்தில் நிலைத்து வாழ்ந்து வருகின்ற பலப்பல தலைமுறைகளைக் கொண்ட இனம். ஆகவே நம்முடைய சித்தப்பனுக்கும் பெரியப்பனுக்கும் ஏற்பட்ட சண்டைகள் தொடர்ந்து தீராமலேயே வந்திருக்கும்.

நம்முடைய அண்ணன் தம்பிகள் சண்டையினாலே நீதிமன்றம் வரையிலே போய்ச் சொத்துக்களை எல்லாம் விற்றுவிட்டுத் திருவோடு எடுத்துக்கொண்டு நிற்பார்கள்.

அது நம்முடைய இனத்துடன் சேர்ந்து வளர்ந்துவிட்ட இயல்பு!

ஆகவே, இப்படிப்பட்ட குறைபாடுள்ள நம்முடைய மக்கள் இன்றைக்கு இருக்கின்ற பார்ப்பனீயத்தை மதிக்கின்ற உணர்வுகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டார்களே யானால் அதுவே சமுதாயத்துக்கு மிகப்பெரிய நன்மை.

மேலும், தந்தை பெரியாரவர்கள் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்து வாதாடுகிறபோதுதான் சொன்னார்; ''நீங்கள் எதற்காகக் கதைகளையும் புராணங்களையும் நம்புகிறீர்கள்; அவைகளெல்லாம் தமிழிலே மூல நூல்களைக் கொண்டவை அல்ல, தமிழ் மரபுக்கும் — நாகரிகத்துக்கும் உடன்பாடல்ல. கந்தபுராணக் கதையும் தமிழ்நாட்டு முருகன் கதை அல்ல. நீங்கள் சொல்லும் பாரதக் கதையும் தமிழனுக்குச் சொந்தமல்ல என்று.

பெரியாரவர்களைத் தூக்கத்திலே எழுப்பிக் கேட்டாலும் அந்தப் பாரத இராமாயண மூடக் கருத்துக்களையெல்லாம் நம்பக்கூடாது என்று எடுத்துச் சொல்லித் தமிழனுடைய நாகரிகம் அந்நாட்களில் இருந்ததை நினைவூட்டித் தன்மானத் தமிழ்ச் சமுதாயமாக இருப்பதற்குத்தான் பெரியாரவர்கள் வாதாடுவார்கள். அப்படி வாதாடுகிறபோதுதான் இப்படி ஆரியர்கள் உருவாக்கிய புராண இதிகாசக் கதைகளையெல் லாம் நம்புவதற்கு நியாயம் இல்லை என்றார்.

மதம், கடவுள், சாதி, சாத்திர நம்பிக்கை என்று ஆரியர் விரித்த வலையிலே தமிழன் அகப்பட்டுக் கொண்டான்.

அடிமைத்தனம் அழித்தல்:

ஆரியச் சூழ்ச்சி வலையினின்று விடுவிக்கத் தந்தை பெரியார் அவர்கள் பாடுபட்டார்கள். இங்கிலாந்து நாட்டிலே தோன்றிய புரட்சிக் கவிஞன் ஷெல்லி இங்கிலாந்து நாட்டு அடித்தட்டு உழைப்பாளி மக்களைக் கூவி அழைத்துக் கூறியது இது:

''உரத்த குரலில் முழங்குங்கள்!
ஊழல் கொடுமை வளர்க்கும் அரியாசனத்தின் கீழ்
சிக்குண்டு நலியும் அடிமை ஒவ்வொருவனும்
மனிதனாகத் தலை நிமிரட்டும்!

பூட்டப்பட்டுள்ள தளைகளையும் விலங்குகளையும்
துன்பத்தின் முனகல் ஒலி இன்றியே
துணிச்சலுடன் உடைத்தெறியட்டும்!''

மேலும் ஷெல்லி சொன்னான்.

''சுதந்திரம் எதுவென்பதும் அறியீர்!
அடிமை நிலை பற்றியே அறிவீர்!
அந்நிலையிலேயே நெடுநாள் ஊறினீர்
அன்றோ!
அடிமைப் பெயரே உந்தம் பெயரோடு
ஒன்றாக உறவாடி எதிரொலிப் பதன்றோ!''

ஆம், இவ்வாறுதான் கேட்டான்!

இங்கிலாந்து நாட்டுக் குடிமகனே!

உன் பெற்றோர்களும் — பிள்ளைகளும், நாளும் வறுமையில் வாடிச் செத்திட விட்டு ஏங்கித் தவிப்பதா உரிமை வாழ்வு? அடிமைத்தளையை உடைத்தெரிய நீ தலைநிமிர மாட்டாயா? என்றான் அவன்.

வறுமை நிலை கண்டே கொதித்தான் அவன். ஆனால் சமுதாய நிலையே — அடிமை நிலையாக ஆக்கப்பட்டுள்ள இங்கோ — பெரியார் அவர்கள் அந்த அளவு ஆத்திரப் படவில்லை. நியாயத்தை உணர்த்துவதற்குத்தான் வாழ் நாளெல்லாம் வாதாடினார்.

அதைப்போலவே, பிரஞ்சுநாட்டு ரூசோ கூறினான்: மனிதன் பிறக்கின்றபோது சுதந்திரமாகத்தான் பிறக்கிறான். ஆனால் உலகில் எங்கெங்கு காணினும் அவன் கைகள் விலங்கு பூட்டப்பட்டுக் கிடக்கிறான் என்று.

மனிதன் பிறக்கின்றபோது சுதந்தரமாகத்தான் பிறந்தான். எண்ணங்களாலே விலங்கு பூட்டப்பட்டான். அந்த எண்ணங் களைப் பற்றியெல்லாம் தந்தை பெரியாரவர்கள் கேள்வி கேட்க ஆரம்பித்தார். எனவே பருவம் பார்ப்பதும், மடி செய்வதும் தமிழன் குடிசெய்வதற்கு இடையூறு என்று வள்ளுவர் கூறிய குறள் கருத்து அடிப்படையில் — தமிழர்கள் முன்னேற மூடநம்பிக்கைகளைத் தகர்க்க வேண்டும் என்று தந்தை பெரியாரவர்கள் பருவம் பாராது, காலம் நோக்காது, கருமமே கண்ணாகப் பணியாற்றினார்கள்.

பார்ப்பனருக்கும் உதவியவர் பெரியார்:

நான் இன்னும் கூடச் சொல்ல விருப்புகிறேன்; தந்தை பெரியாருக்குப் பார்ப்பனரல்லாதார் மட்டுமே கடமைப் பட்டவர்களல்ல; பார்ப்பனர்களும் கடமைப்பட்டவர்கள்.

பார்ப்பனர்களே திருந்தக் கூடிய அளவுக்கு — அவர்களே சீர்திருத்தவாதிகளாகவும், பொதுவுடமையாளராகவும் ஆகின்ற அளவுக்குச் சீர்திருத்தியவர் பெரியார்தான்.

நாளைப் பற்றியும், கோளைப் பற்றியும் சொல்லிக் கொண்டிருந்த ஒரு இனம் இப்போது முற்போக்காகச் சிந்திக்க முற்பட்டதென்றால், அது தந்தை பெரியார் அவர்களின் சீரிய சிந்தனையின் விளைவுதான் — பணியின் பயன்தான்.

கடவுள் மறுப்பு ஏன்?

முதன் முதலாகக் கடவுளைப் பற்றித் தந்தை பெரியா ரவர்கள் விளக்கம் சொன்னபோது எப்படிப்பட்ட விளக்கம் சொன்னார் தெரியுமா? கடவுளின் பெயரால் வீண் செலவு செய்யாதே.

நீ கடவுளை நம்புவதற்காக மனிதனைப் பிரிக்காதே! கடவுளை நம்புவதற்காக நீ முட்டாளாகாதே. கடவுளை நம்புவதற்காகப் பார்ப்பானை உயர்வென்று நீ எண்ணிக் கொள்ளாதே; கடவுள் நம்பிக்கை என்பதை நீ அறிவோடு எண்ணிப் பார்த்து ஏற்றுக்கொள்.

இப்படித்தான் ஒரு காலத்திலே பெரியார் சொன்னார்.

அதுமட்டுமல்ல பெரியாரைப் பார்த்துச் சிலர் கேட்டிருக் கிறார்கள்; நீங்கள் இராமனைச் செருப்பால் அடிப்பவராயிற்றே; உங்கள் பெயர் இராமசாமி என்று இருக்கிறதே! அது ஏன்? என்று கேட்டார்கள்.

பெரியார் சொன்னார்: ஆமாம். எங்கள் அம்மா — அப்பா அப்போதே தெரிந்துதான் வைத்துள்ளார்கள்; இராமனுக்கே நான் சாமி என்று தெரிந்துதான் வைத்திருக்கிறார்கள் என்றார்.

அப்படி உடன்பாட்டு முறையாகவும், நகைச்சுவையாகவும் பேசியே, பெரியார் இந்த நாட்டு மக்களைத் திருத்தினார்.

ஆனால் கடவுளை நம்பு என்கிறவன், கடவுளைக் காட்டுவதாகச் சொல்கிறவன், கடவுள் பெயராலே கோவில் கட்டுகிறவன், கடவுள் பெயராலே மந்திரம் சொல்கிறவன், இவ்வளவு பேரும் நாட்டு மக்களை ஏமாற்றுகிறார்கள் என்று எண்ணிய காரணத்தினாலே தான் கடவுள் மறுப்பு என்னும் ஒரு எல்லைக்கும் தந்தை பெரியாரவர்கள் சென்றார்கள்.

ஆனால், அறிஞர் அண்ணா அவர்கள் — சித்தர்களில் ஒருவரான திருமூலர் மொழியை மேற்கொண்டு 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று சொன்னார்களென்றால் ஏன் சொன்னார்கள்? ஆண்டவனுக்கும் எங்களுக்கும் ஏதோ தகராறு என்கிற எண்ணம் ஊட்டப்பட்டு, அதன் காரணமாக மக்கள் எங்களின் நியாய உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் வாய்ப் பிழந்து விடுகிற காரணத்தால், ஆண்டவனை — தெய்வத்தை நீங்கள் போற்றுவதிலே — வழிபடுவதிலே எங்களுக்கு மாறுபாடில்லை என்னும் வகையில் ஒரு பொது நோக்கில் சொன்னார். கடவுள் என்பது ஒன்றாக இருந்தால் நல்லது.

கடவுள் ஒன்றுதான் என்று சொல்லுகின்ற — அந்த உணர்வு இருந்தால் நல்லது.

எங்கள் கடவுள் வேறு; அவர்கள் கடவுள் வேறு என்ற தகராறு இல்லாமல் இருந்தாலே போதுமானது.

அரியும் அரனும் ஒண்ணு — அறியாதவன் வாயிலே மண்ணு என்று அந்தக் காலத்திலே கூடப் பாடியுள்ளனர்.

அந்த அடிப்படையிலே கடவுள் என்பதை விவரித்து விளக்கினாலே பயன் ஏற்படும் என்று அண்ணா கருதினார்.

தெய்வத்தின் பெயரால் வேற்றுமை பாராட்டாதே! மத வழிச் சடங்குகளிலே ஈடுபடாதே, வீணாகச் செலவிடாதே என்ற கருத்தை வலியுறுத்த அறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றே குலம்; ஒருவனே தேவன் என்ற அடிப்படையைப் புரிய வைத்தாலே போதும் என்றார்.

அதிலேகூட அதிகமாக வலியுறுத்தியது ஒன்றே குலம் என்பதுதான்! நமக்குள்ளே வேற்றுமை கூடாது; எல்லாரும் ஓரினம். நாமெல்லோரும் தமிழர்கள், திராவிட இனத்தைச் சார்ந்தவர்கள், என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் அண்ணா அவர்கள் அந்த முறையில் வாதாடினார்கள்.

நம்மைச் சிந்திக்க வைத்தவர் :

தந்தை பெரியாரவர்கள்தான் எங்களையெல்லாம் சிந்திக்க வைத்தார்.

நான் ஒருவகையிலே சிந்திக்கின்றேன்.

வீரமணி ஒருவகையிலே சிந்திக்கின்றார்.

அடிகளார் ஒருவகையிலே சிந்திக்கின்றார்கள்.

பெருஞ்சித்திரனார் ஒருவகையிலே சிந்திக்கின்றார்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் ஒருவகையில் சிந்திக்கின்றார்.

எழுத்தாளர் பலரும் ஒவ்வொரு வகையிலே சிந்திக்கின்றார்கள்.

இந்த உரிமையைத் தந்தை பெரியாரவர்கள் எங்களுக்கு வழங்கியிருக்கிறார். அடிகளார் சிந்திக்கின்ற முறையும் தவறல்ல.

நண்பர் வீரமணி சிந்திக்கின்ற முறையும் தவறல்ல. நாங்கள் சிந்திக்கின்ற முறையும் தவறல்ல. சிந்தனைக்குப் பின்னாலே ஒரு தெளிவு ஏற்பட்டால்தான் தமிழன் காப்பாற்றப்படுவான்.

அடிகளாருடைய கருத்துக்கள் விமானப்படையைப்போல.

நண்பர் வீரமணியினுடைய கருத்துக்கள் கடற்படையைப் போல.

கலைஞர் கருணாநிதியினுடைய கருத்துக்கள் தரைப் படையைப்போல. எனவே பகுத்தறிவு அடிப்படையில் வெவ்வேறு இடத்திலிருந்து பல்வேறு வகையில் வைதீக மூட நம்பிக்கைகள் மீது தாக்குதல் நடக்கிறதென்று சொன்னால் மக்களின் கருத்துக்களிலே தெளிவு ஏற்படுத்துவதற்காகத்தான்.

எனவே, 'பிராமண' நண்பர்கள் இந்தக் கருத்துக்களைக் கண்டு அஞ்சுகிறார்கள் என்றால் வேதத்தினுடைய பெருமை என்னாவது?

நாங்கள் என்றைக்கும் பலாத்காரத்திலே நம்பிக்கை உள்ளவர்களல்ல. நாங்கள் அறிவை நம்புகிறவர்கள்.

எங்களுக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவைத் தீட்டு; அரிவாளைத் தீட்டாதே என்று அறிவுரை வழங்கி இருக்கிறார்கள்.

மக்கள் மத்தியில்:

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் —

''கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயலறவே''

என்று உணர்ச்சி பொங்குமாறு பாடியதைப் போல — தந்தை பெரியாரவர்கள் சட்டத்திற்குட்பட்ட ஒரு கத்தியை வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார். அப்போதாவது தமிழன் உணர்ச்சி பெற்று நிமிர்ந்து உலவமாட்டானா என்ற ஆர்வத்தினாலே சொன்னார்கள். அப்போதாவது தமிழன் தலை நிமிர்ந்து நிற்கிற தன்னம்பிக்கை கொண்டு வீர நடைபோட மாட்டானா என்று சொன்னார்களே தவிர வேறு அல்ல.

எண்ணத்தால், உள்ளத்தால், உடல் வலிவால் தமிழனிடத்திலே உறுதி பிறக்க வேண்டுமென்றுதான் சொன்னார்கள்.

வன்முறையிலே எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

ஆனால் நாங்கள் பேசுகிற இந்தக் கருத்துக்களுக்கு எதிரான உங்கள் கருத்து வலிவுடையதாக, ஆதாரமுடையதாக இருக்குமேயானால் தாராளமாக மக்கள் மத்தியிலே வாதாடலாம்.

பெரியாரவர்கள் சமூக அமைப்பின் மொத்த வடிவத்தையும் கண்டுணர்ந்து பேசியவர். பகுத்தறிவின் மொத்த வடிவம்.

அறிஞர் அண்ணா தோற்றுவித்த அரசியல் மறுமலர்ச்சிக்கும் குன்றக்குடி அடிகளார் போன்றவர்களும், அதற்கு முன்னாலே திரு.வி.க., மறைமலை அடிகள், பல்கலைப் புலவர்

கா.சு. பிள்ளை, நாவலர் பாரதியார் போன்றவர்களும் ஏற்படுத்திய மறுமலர்ச்சிக்கும் சேர்த்து ஒரு பேரரணாக விளங்குபவர் தந்தை பெரியாரவர்கள்.

தமிழ் ஆற்றல் மிக்க மொழி:

நம்முடைய உள்ளத்துக்குள்ளே இருக்கக்கூடிய நம்பிக்கைகள் எதுவாக இருந்தாலும், வழிபடுவதற்கோ, எண்ணுவதற்கோ நமக்கு நம்முடைய தாய்மொழி தமிழ் தவிர வேறுமொழி தேவையில்லை.

தமிழுக்குப் பதிலாக வடமொழியைக் ஏற்பவன் தமிழ் மொழியைக் கேவலப்படுத்துபவனாகிறான்.

தமிழைவிட வடமொழி ஆற்றல்மிக்க மொழியுமல்ல; சமஸ்கிருதம் பேசப்படாத மொழி.

எழுதி வைக்கப்படுவதற்கு மட்டுமே பயன்பட்ட மொழி.

தமிழ் இன்றைக்கும் பேசப்படுகின்ற மொழி. எழுத்தில் இலக்கிய இலக்கணம் கண்ட மொழி.

எனவே, தமிழ் மொழியின் உயர்வையும் சிறப்பையும் எண்ணுகிறபோது வடமொழி ஆதிக்கத்திற்கு ஆட்பட்டு அம்மொழியில் வழிபாடு நடத்துவதற்கு இடங்கொடுப்பது தமிழ் மொழியை இழிவுபடுத்துவதாகும்.

தமிழ்மொழியின் உரிமை:

யாரோ ஒரு அமைச்சர் சொன்னாராம்; தமிழில் வழிபாடு இருக்கவேண்டும் என்று கேட்க திராவிடக் கழகத்துக்காரர் களுக்கு என்ன உரிமை இருக்கிறது என்று கேட்டாராம்.

திராவிடக் கழகத் தோழர்கள் கேட்பது திருக்கோயிலுக்கு அவர்களே வந்து வழிபடுவதற்கல்ல.

தமிழன் வாழுகின்ற இடத்திலே எல்லாம் தமிழ் மொழியில் வழிபாடு நடக்கவேண்டும் என்னும் உரிமையை வலியுறுத்தக் கேட்டார்களே தவிர வேறல்ல! கேட்கக் கூடாதா?

தமிழ்மொழியில்தான் வழிபாடு நடக்கவேண்டும் என்று கேட்பதிலே என்ன தவறு இருக்கிறது?

அது ஆண்டவனுடைய உரிமை அல்ல; வழிபடும் மக்களின் தாய்மொழியாம் தமிழ்மொழியினுடைய உரிமை, அதைக் கேட்கக் கூடாதா?

ஆண்டவன் நம்முடையவன் எனில் அவனை வழிபட அந்நியமொழி ஏன்? நாம் அறியாத மொழி ஏன்? அந்நிய மொழிதான் அந்த ஆண்டவனுக்கு விளங்குமெனில் அவன் நம்முடைய ஆண்டவன் ஆவது எப்படி?

தமிழ்நாட்டார் தொன்னாளில் வழிபட்டதெல்லாம் வடமொழியிலா? நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமிழிலேயே பாடி வழிபட்டு இறைநிலை எய்தியதாகக் கூறுகின்றார்களே — அது பொய்யா? தமிழில் பாடி வழிபட்டவர்களெல்லாம், ஆரிய அகராதியில் நாத்திகர்களா?

எப்படி யாரால் வடமொழி வழிபாட்டு மொழியாக அருச்சனை மொழியாகப் புகுத்தப்பட்டது என்பதற்கு ஒரு விளக்கம்.

தமிழின் உரிமைப் பறிப்பு வரலாறு:

முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் மதுரையிலே நாயக்கர்கள் ஆண்ட காலத்தில் திருமலை நாயக்கர் ஆட்சியிலே ஒரு பார்ப்பனர், இராமப்பையன் என்பவர் தளவ்ாயாக இருந்தார். அவர் பழனி கோயிலுக்குப் போனார், முருகனுக்கு வழிபாடு நடக்கின்ற இடத்திலே போய் நின்றார்.

அங்கிருந்த பண்டாரங்கள் (பண்டாரம் என்றால் பிராமணர்கள் அல்ல; படித்த — கல்வி நிறைந்த களஞ்சியம் என்றும் பொருள்) வழிபாடு நடக்கிற இடத்திலே நின்று கொண்டிருந்த அந்தத் தளவாய்க்கு வழிபாடு முடித்துத் திருநீறு கொண்டு வந்தனர்.

தளவாய் கேட்டாராம் — நீங்கள் எல்லாம் யார் என்று.

நாங்கள் பண்டாரம் என்றனர்.

நீங்கள் எவ்வளவு நாளாக இங்கு அருச்சனை செய்கிறீர்கள்? என்றார்.

இந்தக் கோயில் தோன்றிய காலத்திலிருந்து என்று பதில் கூறினர்.

என்றைக்கு இங்கு முருகன் பேரால் ஆலயம் உருவானதோ அன்றையிலிருந்து பண்டாரங்கள்தான் வழிபாடு நடத்துகின்றோம் என்றனர்.

தளவாய் இராமப்பையன் சொன்னார்; தாழ்ந்த சாதியினராகிய நீங்கள் வழிபாடு நடத்திய காரணத்தால் உங்களிடமிருந்து நான் திருநீறு வாங்கிக் கொள்ள முடியாது என்று.

அவர் பிராமணர்.

அடுத்து அவர் ஆணை பிறப்பித்தார். இன்றுமுதல் இந்தக் கோயிலில் வழிபாடு நடத்துவதற்கு உங்களுக்கு உரிமை இல்லை என்று. அடுத்து, கொடுமுடியிலிருந்து இரண்டு பார்ப்பனர்களை அவர்கள் குடும்பத்துடன் அழைத்துவந்து குடியேற்றி அவர்களே வழிபாடு நடத்துவதற்குரிய பட்டயம் வழங்கினான். அன்றுமுதல் அந்தப் பிராமணர்கள்தான் வழிபாடு நடத்த வேண்டும் என்றும் அந்தப் பண்டாரங்கள் அருகிலிருக்கின்ற சித்தர் சமாதியில் போய் வழிபாடு நடத்திக் கொள்ளட்டும் என்றும் உத்தரவிட்டார்.

இன்னும் அந்த உத்தரவு மாற்றப்படவில்லை.

அந்த உத்தரவு தான் இன்றைக்கும் நடைமுறையில் இருக்கிறது.

இன்றைக்கும் 'பிராமணர்'கள்தான் அந்த உரிமை பெற்றவர்கள்! தமிழர்கள் கட்டி, வழிபட்ட முருகன் கோயில் வழிபாட்டு உரிமையைக்கூட பிராமணீயம் கைப்பற்றிக் கொண்டது என்னும் வரலாற்றை யார் மறுக்க முடியும்?

நாவலர் சோமசுந்தர பாரதியார் சொன்னார்; நான் சைவன்; சைவனாயிருக்கின்ற காரணத்தினாலே பார்ப்பனப் புரோகிதர்களை வைத்துத் திருமணத்தைச் செய்து கொள்ள மாட்டேன் என்று. அவர் தமது திருமண ஏற்பாட்டின்போது கூறிய கருத்து இது.

சைவ நெறியினுடைய கொள்கைக்கு மாறான 'ஸ்மார்த்தப் பிராமணர்'களை அழைத்துத் திருமணம் நடத்துவது பாவமான காரியம் என்றார்.

பார்ப்பனர்களுக்குச் சிவனிடத்திலே மதிப்புக் கிடையாது. ஸ்மார்த்த மதத்தில் விஷ்ணுவே அவர்கட்கு மேலான கடவுள். எனவே சிவனை மதிப்பவர்கள் பார்ப்பனர்களை அழைக்கக்

கூடாது என்று வாதாடியதுடன் — சைவநெறி போற்றும் தமிழறிஞர்களான ஓதுவார்களைக் கொண்டு நாவலர் சோம சுந்தர பாரதியார் தன் திருமணத்தை நடத்திக் கொண்டுள்ளார். இதைச் சோமசுந்தர பாரதியார் எழுதியிருக்கிறார்.

தீண்டுவதில்லை அந்தச் சாம்பலை:

பல்கலைப் புலவர் கா.சு. பிள்ளை அவர்கள் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்திலே பேராசிரியராக இருந்தபோது உடல்நலக் குறைவாக இருந்ததால் — எங்கேயாவது சொற் பொழிவாற்றப் போனால் அவருடைய மாணவனாக இருந்த என்னையும் அழைத்துப் போவார்.

நான் அவருடைய மாணவன். அவருடைய கருத்துக்களை, உரையாடல்களை அருகிலிருந்து கேட்டவன்.

ஒரு முறை தில்லை கோயிலுக்குப் போனார்கள்.

ஒரு 'தீட்சிதர்' அதாவது அங்கே இருந்த அர்ச்சகர் திருநீறு கொண்டு வந்தார். அதை வாங்கிக்கொண்டார், என்னிடமும் கொடுத்தார்கள். நான் தயக்கத்தோடு மறுத்துவிட்டேன்.

பக்கத்திலே இருந்த கா.சு. பிள்ளை அவர்கள் கேட்டார்கள், ஏம்பா! நீ வாங்கிக்கொள்ளவில்லையா என்று.

'பிராமணன்' கையிலே வாங்க விரும்பவில்லை என்றேன்.

அவர் சொன்னார்: பிராமணன் அந்நியன் தான், தமிழன் அல்ல. ஆனால் திருநீறு உயர்ந்தது. எனவே அதை வாங்கிக் கொண்டாலும் அதற்காகப் பிராமணனை உயர்வாக மதிக்க வேண்டியதில்லை என்று.

சைவரான அவருடைய கருத்துப்படியே 'பிராமணீய' ஆதிக்கம் என்பது மதத்துறையிலே புகுந்துவிட்டதன் விளைவாக இன்றையத் தினம் தமிழ்மொழி தாழ்ந்துவிட்டது.

அதைப் போலத்தான் பெரியாரவர்கள் இந்து சமயத்தை அதன் வைதீகக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்து என்பதன் — உண்மையென்ன?

ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்னாலே மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சீக்கியர்களெல்லாம் இந்துக்கள் என்றே பதிவு செய்யப்பட்டார்கள்.

அதைப்போல அறுபது ஆண்டுகளுக்கு முன்னாலே புத்த மதத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் இந்துக்கள் என்று எழுதி வைக்கப்பட்டார்கள்.

'ஹிந்து' என்ற வார்த்தை எப்போது ஏற்பட்டது என்றால் — ஆரியர்கள் சிந்து நதிக்கரையிலே வந்து குடியேறிய அந்தக் காலத்தில்.

அப்போது ஆற்றல் மிக்க திராவிட இனத்தவர் மொஹஞ்சோ தாராவிலும், ஹாரப்பாவிலும், மற்றும் பல நகரமைப்பு களிலும் வாழ்ந்துகொண்டு இருந்தனர்.

சிந்து நதிக்கரையில் வாழ்ந்த மக்களைப் பெர்சிய நாட்டுக்காரர்கள் குறிப்பிடுகின்றபொழுது 'ஸிந்து' என்று குறிப்பிட்டு வழங்கி அது 'இந்து' என்று பெர்சியன் அகராதியிலே இன்றும் இடம் பெற்றுள்ளது.

ரிக், யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதத்திலேயும் 'இந்து' என்ற வார்த்தையே கிடையாது.

இப்போது இருக்கிற கருத்தில் 'இந்து' அப்போது இருக்க வில்லை. நான் 'இந்து' என்ற வார்த்தையைத்தான் சொல்கிறேன்.

அந்த 'இந்து' என்ற சொல்லுக்கு அவர்களின் அகராதி யிலே என்ன பொருள் எழுதியிருக்கின்றார்கள் என்றால் — கருப்பு நிறத்தவன், விகாரமாக இருப்பவன் என்று.

ஏன் என்றால், பெர்சியாக்காரனைவிட இவன் கொஞ்சம் கருப்பு நிறமுடையவனாக இருந்திருப்பான்.

அடுத்து அதிலே சொல்லப்படுகிற இன்னொரு கருத்து, திருடுகிறவன். கொள்ளைக் கூட்டத்தை நடத்துகிறவன் என்பது.

வேண்டுமானால் படித்துக் காட்டவும் முடியும்.

அந்த வார்த்தை சமஸ்கிருதம் அல்ல. 'இந்து' என்ற வார்த்தை வேதங்களிலே கிடையாது.

இதற்கு ஆதாரம் — 'இந்தி சப்தசாகர்' எனப்படும் அவர்களின் அகராதி; அதன் வெளியீட்டாளர் யார் என்றால் நாகரிணி பிரச்சாரசபா — வாரணாசி என்னும் அமைப்பு.

அதன் ஆசிரியர் இராமச்சந்திர சுக்லா, இராமச்சந்திர வர்மா, ஷியாம் சுந்தர தாஸ் ஆகியோர். அவர்களெல்லாம் பெரிய அறிஞர்கள். இவர்கள் 'இந்து' என்ற வார்த்தைக்குப் பெர்சியனிலே தருகிற அந்த பொருளைத்தான் தருகிறார்கள்.

அது என்னவென்றால்,

1. Black and ugly.
2. An uncultured Broot.
3. A Dacoit.
4. Anything Belonging to India.

இதுதான் Hind என்னும் 'இந்து' என்பதன் வேர்ச்சொல் லுக்குப் பொருள்.

ஏதோ பழக்க வழக்கத்தாலே நாங்கள் இந்து என்ற பெயருக்கு ஆட்பட்டாலுங்கூட, இந்த அர்த்தத்தோடு கூடிய 'இந்து'வாக இருக்க நாங்கள் விரும்பவில்லை.

நாங்கள் காவிரிக்கரைத் தமிழர்களாக வாழ விரும்பு கிறோம்.

வைகைக்கரைத் திராவிடர்களாக வாழ விரும்புகிறோம்.

தென்னாட்டுப் பண்பாளர்களாக நாங்கள் வாழ விரும்பு கிறோம்.

எங்களுக்கு வழிகாட்டிய தந்தை பெரியாருக்கு வணக்கும் செலுத்துகிறோம்.

வாழ்க பெரியார் புகழ்!

5. விழிப்படையச் செய்த வித்தகர்!

உயிர் அச்சம்:

நமது நாட்டு மக்கள் எவ்வளவு தொன்மையான நாகரிகமும் வாழ்க்கை முறையும் கொண்டவர்களோ — அந்த அளவு பழமையில் ஊறிய மனத்தினராகவும் புதுமையைக் காணவும் உணரவும் திறமற்றவர்களாகவுமே உள்ளனர். முன்னோர் வாழ்ந்த முறை எதுவெனினும் — அதுபற்றிச் சிந்திக்கவோ, ஆராயவோ, சக்தியற்ற ஒரு நிலையில் — பல்வேறு நம்பிக்கை களுக்கிடையிலே நசுங்கிக் கிடந்தனர், கிடக்கின்றனர்.

எதை நம்புவதற்குப் பழகிவிட்டார்களோ அது உண்மை. எது பெற்றோர்களும், பெரியோர்களும் கைக் கொண்டிருந்த முறையோ அது தவிர பிறவற்றைப் பிறர் கூறினாலும் அதைக் கேட்குமளவு பொறுமைகூடக் காட்ட முடியாத நிலையினர்.

சிந்தனையைத் தோற்றுவிக்கும் சங்க இலக்கியங்களும், வாழ்வின் வழியை விளக்கித் தெளிவடையத் துணையாகும் திருக்குறளும் — மேலும் பலப்பல இலக்கியக் கருவூலங்களும் உள்ளன. எனினும் அவை பொது மக்களில் பெரும்பாலோர்க்கு எட்டாத செல்வங்களாகவும் — எட்டிய சிலருக்கும், அவர்தம் உளப்பான்மை காரணமாக அதன் கருத்துக்கள் கொள்கைகள் நடைமுறைக்கு ஆளாகாதவையாகவுமே இருந்தன. மிகச் சிலரே — அவற்றைக் கற்றுத் தெளிந்து, சிந்தித்து, ஆராய்ந்து சமுதாய நல்வாழ்வுக்கும் காலத்துக்கும் ஏற்புடைய கருத்துக்களை உணர்ந்தவராயினர். அவர்களுங்கூடக் காலத்துக்கு ஒவ்வாத கருத்துக்களையும், மக்கள் முன்னேற்றத்தையும் நல்லுறவையும் கெடுக்கும் கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் மறுக்கவோ, கண்டிக்கவோ முன்வருவது அரிதாகவே அமைந்தது.

பழமைப் பற்றுடன் கூடிய சமூகத்தில், வேரூன்றிய சாதி எண்ணமும், மக்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்த சமய மூட நம்பிக்கைகளும், வாழ்வைப் பற்றிய கவலையும், உயிரைப் பற்றிய அச்சமும் அன்றாட வாழ்வை ஓட்டினாலே போதும்

என்ற நினைப்பும், நாட்டு மக்களை இறவாமலே இறந்தவர் களாக ஆக்கி வைத்திருந்தது. எதற்கும் — எல்லாவற்றுக்கும் அஞ்சி அஞ்சிச் சாவாராக இருந்தனர். பகல் ஒளியைக் காணவும் கூசும் அறிவுக் கண்ணினராக, 'இருட்டறையில் உள்ளதடா உலகம்!' என்று புரட்சிக் கவிஞர் கூறும் நிலையில் மங்கியும், மயங்கியும், மயக்கறுப்பார் யாரும் துணிந்து வராத நிலையில், விழிப்பற்றுக் கிடந்தனர், இன்றும் கிடப்பவர் பலர்.

இருளில் எழுந்த ஒளி:

அந்நிலையிலேதான், தாமாகவே எதைப் பற்றியும் துருவிப் பார்க்கும் அறிவும், தமது அறிவுக்குச் சரி என்று தோன்றாத எதையும் ஒப்புக் கொள்ளாத மனமும், தமக்குச் சரியென்று பட்ட எதையும் பிறர் என்ன நினைப்பார்கள் என்ற கவலைக்குத் தம்மை ஆளாக்கிக் கொள்ளாத நெஞ்சுரமும் பெற்ற ஒருவர் — தாம் எண்ணுவதை வெளியிட — மக்களிடம் எடுத்துச் சொல்ல முன்வந்தார். தம்மை மதிப்பார்களா? போற்றுவார்களா? எதிர்ப்பார்களா? ஏளனம் செய்வார்களா? — என்று அவர் கவலைப்படவில்லை.

ஊத வேண்டிய சங்கை ஊதினால், விடிகிறபோது விடி யட்டும், இல்லாவிடினும் மக்களுக்கு விழிப்பேனும் ஏற்படட்டுமே என்று தொடங்கினார் தமது பணியை! வாழ்க்கை என்பது — பிறர் பாராட்டுவதற்காகவே நடத்தப்பட வேண்டியதல்ல! ஒப்புக்கும் உறவுக்கும் அஞ்சி ஒடுங்கிய கருத்தோடு முடங்குவதைவிட, உண்மை எதுவென்று காட்டிட, வெட்டு ஒன்று, துண்டு இரண்டு பேசியேனும், தமது கேள்விக்கு விடைகாணச் செய்வோம் என்று முனைந்தார் அவர்.

சாதிப் பித்தத்தில் ஆழ்ந்த மக்களையும், சமய பக்தியில் மூழ்கிக் கண்மூடிக் கிடந்த சமுதாயத்தையும், மூடநம்பிக்கை ஆட்கொண்டிருந்த நிலையில், அவர்தம் நிலையிலிருந்து கண் திறக்கச் செய்வது எளிதல்ல! எதிர்ப்பும் தாக்குதலும் இருக்கத்தான் செய்யும் என்று நன்கு அறிந்திருந்துங்கூட, ஆவது ஆகட்டும்! என்று பலன் எதிர்பாராத துணிச்சலுடன் கருத்து எதிர்நீச்சலில் அவர் ஈடுபட்டார்.

'அயர்ந்து தூங்குகிறவர்களை எழுப்புவதே கடினம்! அதிலும் அறிவு செயற்படாத நிலையில், மத மூட நம்பிக்கை களால் மூடப்பட்டு, தன்னறிவை இழந்து, மீளாத தூக்கத்தில்

ஆழ்ந்திருந்த மக்களை — சமுதாயத்தை எழுப்புவது எளிதாமோ? ஆயினும் அந்தப் பெரும் பணியை — தொல்லை மிகுந்த கடமையை — அவர் மேற்கொண்டார். 'என் கடன் பகுத்தறிவுப் பணி செய்து கிடப்பதே' என்ற முடிவுடன், ஒரு இயக்கத்தையே உருவாக்கினார்.

பல புதுமைக் கருத்துக்களையும் — பகுத்தறிவு வாதத்தையும் தாம் நினைத்த வண்ணமாகவே மிகவும் எளிய முறையில் எவருக்கும் விளங்குமாறு — பேசவும் எழுதவும் முனைந்தார்.

கொள்கை உறுதி:

தமது கருத்தை ஏற்போரும் ஆதரிப்போரும் மிகச் சிலரே எனினும் — அவர்தம் கொள்கை உறுதியே தமது வெற்றிக்கு அறிகுறி என்று கொண்டார். தமது எழுத்தை எவரும் படிக்க வில்லை என்றாலும், தாமே அச்சடித்து, தாமே படித்து 'என் கடமையைச் செய்ததை எண்ணி மகிழ்ச்சியடைவேன்' என்று ஓர் உறுதியை உலகுக்கு அறிவித்துச் செயலாற்றலானார். **'கொள்கையுடையான் எதிர்ப்புக்கு அஞ்சான்'** என்னும் மொழிக்கு இலக்கானார்.

தமது கருத்தும் கொள்கையும் அடிப்படையான சமுதாய சீர்திருத்தத்துக்கு வழிகோலும் என்னும் நம்பிக்கையுடன் நாடெங்கும் பட்டி தொட்டியெல்லாம் அதைப் பரப்புவதே தமது தொழில் என்றார். கல்லடியும் சொல்லடியும், கலவரமும், கடும் தாக்குதலும் நிகழ்ந்தபோதும் — சோர்வடையாமலும், இலட்சியத்தைக் கைவிடாமலும் 'மக்களுக்காகத்தான் தாம் வாழ்கிறோம்', 'இழிவுக்கும் பழிக்கும் ஆளான தாழ்ந்த நிலைபெற்ற மக்களுக்கு வாழ்வளிப்பதை விட தமக்கேது வேறு வாழ்வு' என்ற எண்ணத்துடன் — 'தியாகத்திரு நாட்களாக'த் தமது வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொண்டார்.

அதிர்ச்சி வைத்தியம் செய்தவர்:

இன்றுள்ள சூழ்நிலையில் அதன் அருமையும் பெருமையும் உணராதோர், இன்றைக்கு 65 ஆண்டுகட்கு முன்னரே (1925) அந்தப் பயணம் தொடங்கப்பட்டபோதிருந்த நாட்டின் நிலைமையை எண்ணிப் பார்த்தால் விளங்காமல் போகாது.

சுதந்திர வேட்கை வளராத மக்கள், நாட்டு விடுதலை என்பது எதுவென அறியாத காலம்!

படிப்பறிவு இடம்பெறாத சமூகம்!

தாய்மொழிப்பற்று அறியாத நிலை!

எந்த ஆதிக்கத்தையும் எதிர்க்கத் தெரியாத மக்கள்!

கையும் காலும் தளைகள் பூட்டப்பட்டு — கண்கள் கட்டி வைக்கப்பட்டு, காது அடைக்கப்பட்டு, வாயில்லாப் பூச்சிகளாக — இருட்டறையில் தள்ளப்பட்டுக் கிடந்த மக்களிடையே பகுத்தறிவுச் சுடர் கையிலேந்திச் சுயமரியாதை உணர்வு என்னும் தளையறுக்கும் வாளேந்தி — 'தன்மான இயக்கத் தோழர்கள்' என்னும் வீர உணர்வு கொண்ட இளைஞர்களுடன் சென்று, அவர்களையெல்லாம் விடுவிக்க முற்பட்டார்கள் என்றால் அது வியப்பன்றோ! அவர் தோற்றுவித்த அந்த அறிவுப்படை எத்தனை வைதீகப் பித்தர்களை, சமயச் சழக்கர் களை எதிர்த்துப் போரிட்டு, எப்படியோ தன்னைக் காத்துக்கொண்டு தன் கடமையைச் செய்தது என்பதை அறிந்தாருக்கு இன்றும் வியப்பே ஏற்படும்.

'சாதி என்பது ஏதடா? பிறப்பால் உயர்ந்தவன் எவனடா? தாழ்வுதான் பிறவியிலேயே நமக்கு வருமோடா' என்று கேட்க முற்பட்டு, 'சமய வாதங்கள் ஒருசிறு கூட்டத்தின் சுய நலமல்லவோ! அதை மறைக்கவே வெளி வேடம்' என்று முழங்கி, 'கடவுள் நம்பிக்கையின் பேரால் கண்மூடிக் கிடப்பதேனோ! சிறிதும் பசித்தறியாத ஆண்டவனுக்கு ஆறுகால பூசைதான் ஏனோ? என்றெல்லாம் மக்கள் செவிப்பறை கிழியச் சங்கநாதம் செய்து விழித்தெழ வைத்தவர் அவர். ஆம்; அவர் நடத்தியது 'அதிர்ச்சி வைத்தியம்' தான்! அது தவிர வேறு வழியில்லை அவருக்கு! நாட்டு மக்களுக்கும் அவரைவிட்டால், விழிப்புற வேறு கதியில்லை! இப்படி — மக்களை விழிப்படையச் செய்த வித்தகரே, தமிழகத்தின் தனிப்பெருந் தலைவர், திராவிடத் தந்தை, பகுத்தறிவுச் செம்மல் பெரியார் அவர்கள்! அவரது பாசறையில் படித்தவன் என்பதில் பெருமையடைபவன் நான்! என் போன்றார் ஏராளம் இந்நாட்டில்!

அவர் நமக்குத் தந்த பெருவாழ்வை, புதுவாழ்வை, புதிய சமுதாயத்தை யார்தான் மறக்க முடியும்! தம்மை 'மனிதன்'

ஆக்கியவரை — 'மனிதனாக' உணர்ந்த யார்தான் மறப்பர்! அவர் வாழ்ந்ததால் நாம் வாழ்கிறோம்! என்னும் நினைவுடன் தொடர்ந்து பணியாற்றுவோம் என, உறுதிகொள்வீர் இளைஞர்களே!

பகுத்தறிவுத் திறன் இழந்ததேன்:

உலகத்தில் வளர்ச்சியும் வாழ்வும் பெற்றுள்ள மேல்நாட்டு மக்களும், சீன, சப்பானியரும் நாகரிகத்தின் முகப்பில் அடி எடுத்து வைக்கும் முன்னரே, நாகரிக வாழ்வு கண்டு, நானில வகை கண்டு, நாடாளும் முறை கண்டு, ஒரு தனித் தன்மையுடன் வாழ்வாங்கு வாழ்ந்த தமிழர்கள் — தென்னாட்டுத் திராவிட மக்கள் — கடந்த சில நூற்றாண்டுகளாகவே வாழ்விழந்து, வளமிழந்து, உரிமை மறந்து, தலைதாழ்ந்து கிடக்கின்றனர்.

பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்னரே ஒரு மொழி கண்டு, எட்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே கூடி வாழும் வாழ்க்கைக்கு முறை கண்டு, அய்யாயிரம் ஆண்டுகட்கு முன்னரே கோனாட்சிக்கு வழிகண்டு, இயற்கையில் முத்தமிழாய் முகிழ்த்த தமிழின் திறன்கண்டு, சிந்தனையைச் செய்யுள் வடிவத்தில் கண்டு, மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இலக்கியங்கட்கு இலக்கணங் கண்டு, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் உலகம் வியக்கும் 'திருக்குறள்' என்னும் பொது அறம் விளக்கும் நூல் வடிவு பெறக்கண்டு, பண்பாட்டின் உயர் கோபுரத்தின் உச்சியில் ஏறி நின்று உலகு கண்டு, தென்னகத்தின் கிழக்கிலும், மேற்கிலும், அலைகடலுக்கு அப்பால் உள்ள நாடுகளின் துறைமுகங்களில் தமிழர்தம் வணிகக் கலங்களின் கொடிகள் பறக்கக் கண்டு, இணயின்றி வாழ்ந்த இனந்தான், படிப்படியாய்ச் சரிந்து, பகுத்தறிவைப் பயன்படுத்தும் திறன் இழந்து அல்லலுற்று நிற்கின்றது இடைக்காலம் முதலாக.

வைதிக சூழ்ச்சி:

உலகியல் தெளிந்து, உழைப்பினில் வாரா உறுதிகள் இல்லை என்னும் முடிவுடன், உழவினைப் போற்றி, வேளாண்மை வழிப்பட்ட நாகரிகம் வளர்த்து, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் பொது நோக்குடன்' — சமய நெறி — மதவழிகள் — பற்றிய எண்ணங்களில் பிணைப்புண்டு, தம்மை இழந்துவிடாது, முயற்சியுடையராய், நாடு காக்கும்

ஆற்றல் மறவராய் வாழ்ந்த மக்கள்தாம், பின்னர் வைதிக மறையவர், மன்னர் அவையைத் தமது களமாகக் கொண்டு, செல்வாக்குப்பெற்ற கால கட்டத்தில், மக்கள் அவர்தம் செல்வாக்குக்கு ஆட்பட்டு, மெல்ல மெல்ல வைதிகத்தின் சூழ்ச்சி வலையில் சிக்குண்டவராயினர். வைதிகம் செல்வாக்குப் பெறுவதற்கு முற்பட்ட காலத்தில் தமிழகத்தில் பரப்பப்பட்ட, சமண புத்த மதங்களின் கோட்பாடுகள் கற்றவர்களின் சிந்தனைக்கு ஒரு வகையில் விருந்தாகி, மற்றவர்களால் ஓரளவே பின்பற்றப்பட்டன. சில கொள்கைகள் பொதுவில் பரவலாக இடம்பெற்றன எனினும், மக்கள் குடும்பம் குடும்பமாக ஒரு மதச்சார்புடையவராகும் நிலை அன்று இல்லை; 'மதம்' இன்றேல் மனித வாழ்வு இல்லை — என்னும் நிலை அந்நாளில் இல்லை.

மேலும், சமணமும், பவுத்தமும் வைதிகரின் வேதங்களை யும் அவற்றில் பேசப்படும் தெய்வங்களையும் யாகங்களையும் மறுப்பவை. சமய வழிகாட்டிகளையே தெய்வமாகப் போற்று வதன்றித் தனியாக 'ஒரு கடவுள்' உண்டென்று ஏற்றுப் போற்ற உடன்படாதவை. ஆயினும், அந்த மதங்கள் மூலம் - பாவம், புண்ணியம், நிலையாமை, பிறவிகள், முற்பிறப்பு, மறுபிறப்பு, கருமம், தலைவிதி முதலான கருத்துக்கள் மக்களிடையே பரவ லாக இடம்பெறலாயின. எனினும், மதம் - அதற்கெனப் புறப் பட்ட துறவிகளுடைய கவலையாக இருந்ததன்றி, மக்களின் அன்றாட வாழ்வைக் குலைக்கவில்லை எனலாம்.

அக்காலத்தில் மக்கள் குறிப்பிட்ட ஒரு சமயம் - மதம் என்று போற்றிப் பின்பற்றும் நிலை இல்லையாயினும், பல காலமாக நிலவி வந்த மரபுடன் ஒட்டிய பலப்பல தெய்வங்களை வழி பட்டதுடன், பலி முதலான பல சடங்குகளையும் செய்து வந்தனர். குலதெய்வம் — குடும்பத் தெய்வம் — ஊர்க்காவல் தெய்வம் — முதலான பலவும் நடுகல் வழிபாட்டிலிருந்து கிளைத்துப் பெயர் பெற்றிருக்கலாம். அப்படிப்பட்ட மக்களைத்தான் வைதிகம் வளைத்தது. வேத வழியினரான ஆரியர்கள் மும்மூர்த்தி முதலாக இந்திரன், எமன், வருணன், அக்கினி முதலான பல தெய்வ வழிபாட்டினராயினும், 'கடவுள்' என்னும் பொதுப்பெயரைக் குறிக்கக்கூட அறியாத வராயினும், தமது தெய்வங்கள் எல்லாம் ஆற்றல் மிக்கவை என்றும், அவர்களுள்ளும் மும்மூர்த்திகளே மூலவர் என்றும்

பரப்பத் தொடங்கிய காலத்தில், அதை மறுக்குமளவு மக்களுக்குத் தெளிவு பிறக்கவில்லை. ''எங்கள் சாமி - பெரிய சாமி எல்லா சாமிக்கும் எசமான் சாமி'' என்னும் எண்ணத்தைப் பரப்பியே செல்வாக்குப் பெற்றனர்.

நெடுங்காலமாகச் சிவனை (லிங்கத்தை) வழிபட்டு வந்த மரபினர் - சிவன் ஒன்றே தெய்வம் — என்னும் கொள்கை வழிபட்டவராயினும் வேத வைதிக ருத்திரனும்-சிவனும் ஒன்றென எண்ணுமாறு கற்பனைக் கதைகள் வளர்ந்ததால், சிவத்தின் தனித்தன்மையைக் காப்பாற்றிக்கொள்ளத் தவறிவிட்டனர்.

தனித்தன்மைகள் மறைந்தன:

பல காலமாகக் கண்ணனை வழிபட்டு வந்தோர், அவனே திருமால் என்றும் — கண்ணனே - கிருஷ்ணன் என்றும் — புராணங்கள் பெருகியதால் — கண்ணன் வழிபாடும் தனித்தன்மையை இழந்தது.

அதேபோன்று, குறிஞ்சி நிலத்து வேட்டுவத் தலைவன் முருகன் — சுப்பிரமணியனாகவும், கார்த்திகேயனாகவும் கதைகளால் பிணைக்கப்பட்டதால், தென்னாட்டு முருகனின் தனித்தன்மையும் மறைந்தது. மேலும் பழந்தமிழ் மக்கள் வழிபட்ட தெய்வங்கள் பலவற்றைக் குறித்தும் (அவைகள் முன்னர் வாழ்ந்து மறைந்த தமிழரின் முன்னோர் என்பது மறைக்கப்பட்டு) புராணப் பின்னணி உருவாக்கப்பட்டது. கற்பனையான தலபுராணங்கள் வரையப்பட்டு, வழிபட்ட தெய்வங்களின் பெயர்களும், ஊர்ப்பெயர்களுங்கூட வடமொழிப் பெயர்களாகத் திரிக்கப்பட்டன.

தமிழ் மக்களிடம் ஊறி இருந்த — தெய்வ நம்பிக்கையே இவை பற்றிய உண்மைகளைத் தெளியும் அறிவை இழக்கச் செய்தது. மக்கள் தெய்வங்களை நம்பினர். தெய்வப் பெயர்களும், செய்திகளும் திரிபடைந்தாலும் அவற்றையும் நம்பினர். தெய்வங்களின் பெயரால் அவதாரம் என்றும், அற்புதம் என்றும், அதனை நம்பாவிடில் பாவம் என்றும் பேசிய சூதினையும் நம்பினர். இவைகளின் மூலம், வேதம், வேதமொழி, சமஸ்கிருதம், அது தேவ பாஷை, அதுவும் பூதேவர்க்கே சொந்தம் என்பதையும் நம்பினர். அந்த வடமொழியில் உள்ளது யாவுமே 'மந்திரம்', அவை ஆற்றல்

மிக்கவை, ஆண்டவனை அழைக்க வல்லவை, அது நம்மவர் படிக்கவும் கேட்கவும் கூடாதது; கேட்டால் நரகம் சேருவர் என்பதையும் நம்பினர். 'வேதங்கட்குத் தெய்வங்கள் கட்டுப் பட்டவை, வேதங்கள் பிராமணருக்குக் கட்டுப்பட்டவை, என்பதை நம்பத் தலைப்பட்ட மக்களுக்கு, பிராமணர்கள் — பூதேவர் ஆயினர். பூதேவர்கள் — கண்கண்ட தெய்வ்மாக, தெய்வங்களிலும் மேம்பட்டவராக எண்ணப்பட்டதுடன், பூதேவர் அல்லாதாரின் வழிபாட்டுக்கும் உரியராயினர்.

ஆரியம் வளர்த்த தீண்டாமை:

ஓரினம் — மற்றொரு இனத்தை அடிமை கொண்ட வரலாறுகளிலேகூட இதைப்போன்ற சூழ்ச்சி வேறு எங்கும் நிகழவில்லை.

கூட்டம் கூட்டமாக வாழும் இயல்பால், பல்வேறு கால கட்டங்களில் வடிவு கொண்ட குலப் பெயர்களால் — தனித் தனிப் பிரிவாக வாழ்ந்த மக்களை — மனு நீதி தருமத்தின் படி நாட்டப்பட்ட வருணாசிரமத்தின் சாதிப்பிரிவுக்கு உரியவராக நம்பச் செய்தனர். அதன் பயனாக, வேறு வேறு பிரிவாக இருந்த மக்கள் அனைவரும் 'பிராமணர்களுக்கு'த் தொண்டு செய்யப் பிறப்பிக்கப்பட்ட 'சூத்திரர்' என்ற எண்ணத்திற்கு ஆட்படுத்தப்பட்டனர். தமிழ் மக்களிடையே தாழ்ந்தநிலையில் இருந்த உழைப்பாளிகளான ஆதிதிராவிடர்களை, தீண்டப் படாதவர்கள் — பஞ்சமர்கள் எனவும் வகைப்படுத்தினர்.

பிராமணர்களுக்குச் சூத்திரர்களும் தீண்டப்படாதவர்களே! சூத்திரர்கட்கும் தீண்டப்படாதவர் பஞ்சமர்! வடநாட்டில் — ஆரிய கலாச்சார ஆதிக்கம் வளர்ச்சியுற்றத் துவக்க காலத்தில் வடிவு கொண்ட பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் நால்வகைச் சாதி முறையும் — அதன் உயர்வு தாழ்வும் தென்னகத்தில் அதேபோன்று இடம் பெறவில்லை. இங்கே ஆரியம் — மதகுருமார் வடிவம் கொண்ட பிராமணர்கள் பெற்ற செல்வாக்கின் பயனாக நாட்டு மக்கள் அனைவரையும் சூத்திரர் எனப் பறைசாற்றியது.

மீளா அடிமைகளான வரலாறு:

பிராமணியச் செல்வாக்கு முதலில் பல்லவர் ஆட்சியிலும் —

பின்னர் இடைக்காலச் சோழர் ஆட்சியிலும் — வேரூன்றி, ஏராளமான சதுர்வேதி மங்கலச் சாசனக் கட்டளைகளுடன் வளர்ந்து ஆதிக்கம் செலுத்தலாயிற்று. அதன் தொடர் விளைவாக — குறுநில மன்னர், நிலவுடைமையாளர், செல்வர், வணிகர் முதலானோர் பிராமணியத்தை ஏற்கும் நிலை வளர்ந்து, வருணாசிரமக்கேடு கால்கொண்டு, மற்ற மக்கள் (உழைப்பாளிகளும், உழவர்களும்) அதனை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அதன் சூதான விளைவை அறியாமலே அதனை ஏற்கும் சூழ்நிலை ஏற்பட்டது.

மக்களின் தெய்வ நம்பிக்கையையே ஏதுவாகக் கொண்டு — அந்த மக்களின் தெய்வங்களின் வரலாற்றையே திரித்து, பெயரையும், வழிபாட்டு முறையையும் மாற்றி, தாமே அர்ச்சகருமாகி, மதக் குருமார்களுமாகி, அந்த மக்களின் தன்னிகரற்ற மொழியையும் தாழ்த்தி ஒதுக்கி இழிவுபடுத்தி — தமது இனமொழியான வடமொழியை உயர்வாகக் கற்பித்து, ஆதிக்க மொழியாக்கி, மற்ற மக்களையும் இழிபிறவிகளே என்று நம்ப வைத்து, தெய்வபக்தியில் தம்மை மறந்த தம்மினம் அறியாத ஏமாளிக் கூட்டமாக ஆக்கி, ஒருவகை அடிமை மனப் பான்மையில் ஊறியவர்களாக மாற்றிவிட்ட வரலாறுதான், ஆரிய-திராவிடக் கலாச்சார உறவு விளைவித்த வரலாறு என்பது. உயர்ந்த பண்பாட்டில் நிலை பெற்றிருந்த தமிழர்கள் கற்பனையாகப் பிறவி இழிமக்கள் ஆக்கப்பட்டு — மீளா அடிமைகளாயினர்.

அதனால்தான் பிறிதொரு இனத்துடன் கலைப் பண்பாட்டுத் தொடர்பு ஏற்படும் காலத்திலும் — அதைத் தொடர்ந்தும் வளர்ந்திருக்க வேண்டிய தாய்மொழிப்பற்றும், இன உணர்வும் மங்கி, மறைந்து போயிருப்பதைக் காண்கிறோம்.

வேற்றுமை வளர்ந்தது:

''வைதிக மதவழிப்பற்று'' — ஆரியத்தைப் பிரித்துக் காணும் ஆற்றலை (சிந்தனையை) இழக்கச் செய்தது.

''வருணாசிரம — மனுதர்ம நெறி'' தமிழர்களை ஒன்றுபட முடியாத அளவுக்குப் பிரித்து வைத்ததுடன், குலத்தையே சாதியாக நம்பி பேதம் வளர்க்கச் செய்ததுடன், 'இழிபிறவி' என்னும் நிலைக்குத் தள்ளப்பட்டவர்களையே — தம்மினும் இழி

பிறவியாகப் பஞ்சமர்களைக் கருதச் செய்தது. வரலாற்று அடிப்படையில் கூறப்படும் ஒரு செய்தி — ஆரிய மதச் சாத்திர சாதி எண்ணங்களை அடியோடு ஏற்க மறுத்தவர்களே, தீண்டப் படாதவராக ஒதுக்கப்பட்ட ஆதிதிராவிடர் என்பதாகும்.

வரலாற்று அடிப்படையில் — ஒரு தனி இனமாக, தனி நாட்டுக்குரியவராக, தனி ஆட்சி நடத்துபவராக, தனி மொழி, கலை, நாகரிகம், இலக்கியம், இலக்கணம், வாழ்க்கை நெறி, (அறம்) கொண்டவராக, வேற்று இனமொழி, மத ஆதிக்கத் திற்கு இடமில்லாமலே ஆயிரத்து அய்ந்நூறு ஆண்டுகட்கு முன்புவரை வாழ்ந்த தமிழ் மக்கள்தாம், இன்று தமிழ்மொழி வழிப்பட்ட அடையாளம் ஒன்றைத் தவிர — வேறு அடை யாளங்களை வெளிப்படையாகக் காண முடியாத நிலையில் உருக்குலைந்துள்ளனர். மக்களின் தெய்வ நம்பிக்கையை மூலமாகக் கொண்டு, வைதிக மத தெய்வ வழிபாட்டை வட மொழி மூலம் புரோகிதர் நடத்தும் நிலையை உருவாக்கினர்.

ஆதிதிராவிடர் யார்?

பல்வேறுபட்ட குல (கூட்ட) மக்களாக வாழ்ந்த நிலையை ஏதுவாக்கி வருணாசிரமக் கொள்கையைப் புகுத்தி — தமிழர் களைச் சூத்திரர்களாகவும், பஞ்சமர்களாகவும் ஏற்றிடும் நிலையை உருவாக்கினர்.

ஆரியக் கலாச்சாரத்தினைப் பரப்பியவர் ‘எசமானர்’ நிலை பெற்றனர். வழிவழி வந்த தமிழ்மொழியும் மக்களும் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டனர். வடமொழிக்குத் தரப்பட்ட ஏற்றமும், அதைத் தமிழர்கள் ஏற்றுக் கொண்டதும், தமிழ் மொழியைத் தாழ்த்தியதால் — அம்மொழிக்குரிய மக்கள், தமது அடிமை நிலையை இயல்பானதாகக் கருதி, அதற்கு உடன் பட்டு வாழ வழிசெய்தது, அதனால் தன்னம்பிக்கை இழந்த தமிழர்கள் தலைநிமிர முடியாத நிலையில் தள்ளிவிடப்பட்டனர்

தமிழர்களிடையே அறநெறியை வலியுறுத்தி, அன்புடைமை, பண்புடைமை, நன்றியுணர்வு, ஒப்புரவு, பிறவிச் சமன்மை, தோழமை, ஆன்ம நேயம், சமரச சன்மார்க்கம் ஆகியவை குறித்து ஆன்றோரும் சான்றோரும் அறிவுறுத்தி வந்த போதிலும், அவற்றை ஏற்றுப் பின்பற்றுவதற்கான உறுதியும் தெளிவும் இன்மையால் வைதிகத்தில் மயங்கிக் கிடக்கின்றனர்.

தன் அழிவை உணராத தமிழன்:

சங்கப்புலவர்களும், திருவள்ளுவரும், சித்தர்களும், வள்ளலாரும், விளக்கிய மனித இன மாண்புகள், சமுதாய வாழ்வில் இடம் பெறவோ, வெற்றி பெறவோ இயலவில்லை. வடலூர் வள்ளலார், 'கடைவிரித்தேன், கொள்வாரில்லை — விடை கொண்டேன்' என்று கூறி மறைந்துவிட்டார் என்றால், அதுகாறும் கூறப்பட்ட அவரது அறிவுரைகள் எடுபடவில்லை என்றுதானே பொருள்?

இந்நிலை ஏன், எதனால் விளைந்தது? தமிழர்கள் அறிவற்றவர்களா? பண்பற்றவர்களா? இரக்கமற்றவர்களா? பிறர் நலனை மதிக்காதவர்களா? கடவுள் பற்று அற்றவர்களா? இருந்தும் ஏன் சாதி வேற்றுமையும், சமயப்பற்றின் வழி எழும் பகையும் வளர்ந்தன? நியாய உணர்வு, பொது நீதி, ஏன் வெற்றி பெறவில்லை?

தமிழன் தனது தனி மரபு காக்கும் இலக்கியங்களில் பற்று கொள்ளாது, வடமொழி வழிப்பட்ட இதிகாச புராணங்களிலும், வைதிகச் சடங்குகளிலும், பக்தி வளர்க்கும் வழியிலும் பற்றுடையவனானதால் — தன் தனித் தன்மையைக் காத்துக் கொள்ளாதவனாயினான். நாளடைவில் அவற்றை அறியாதவனும் ஆயினான். அவற்றை அறிந்தாலும் வைதிக மத-புராணக் கற்பனைகளிலிருந்து பிரித்துக் காண முடியாதவனாயினான்.

'கலையுரைத்த கற்பனை எல்லாம் நிலையெனக் கொண்டாடும், கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போக வேண்டும்' என்னும் வள்ளலார் வாக்கினைப் புரிந்து கொள்ளவும் இயலாதவனானான். ஏன்? தன்னை ஒரு இனத்தவன் என்றும், தனக்கென ஒரு மொழி — இலக்கியம் — மரபு — நாகரிகம் உண்டெனவும், அதற்கு மாறானவற்றை, எந்த வடிவில் வந்தாலும் ஏற்பது தனது இன அழிவுக்கு வழி செய்வது எனவும் உணராதவனாகவே ஆகிவிட்டான்.

ஆரியச் செல்வாக்கின் வழிவந்த கலாச்சாரம் ஒரு வகையிலும், மத நம்பிக்கைகளின் வழிப்பட்ட பகுத்தறிவுக்கு இடமற்ற சூழல் ஒரு வகையிலும் — தமிழனைத் தன் இனத்தை எண்ணிப்பாராத நிலைமைக்கு ஆளாக்கின.

எண்ணத்திற்கு மாட்டப்பட்ட தளைகள்:

நீண்ட பல்லாயிரம் ஆண்டுகளாக ஒரே நிலத்தில் வாழ்ந் திருந்த பழமையும் — மூவேந்தர் ஆட்சிக் காலத்தில் இன உணர்வு கொள்ளுதற்கான தேவையும் வாய்ப்பும் இன்மையும் அதன் விளைவாய்த் தமிழ் மண்ணில் தமிழன் ஆட்சிக்கு மாறாக வேற்றின ஆட்சி ஏற்படலாகாது என்னும் எண்ணம் வேரூன்றாமையும் தமிழினத்தை உணர்வு மங்க வைத்திருந்த நிலையில், வைதிக மதவழியால் தனித்தன்மை இழந்ததும் — நாளும் வலுப்பெற்ற சாதி முரண்பாடுகளால் ஒற்றுமை கொள்ள முடியாநிலை உற்றதும், மூட நம்பிக்கைகள் இறுகிப் போனதால், மறுவுலக வாழ்வையே எண்ணும் மனப்பழக்கத் தால் இவ்வுலக வாழ்வில் இழக்கும் உரிமைகளை உணர முடியாமையும் 'தமிழனை' மாற்றாரின் ஆதிக்கத்தை உணராமலே அதனை ஏற்று, மண்டியிடச் செய்துவிட்டன.

தமிழன் — இன்னொரு இனத்தவன் இவனைப் பிரித்து அடையாளம் காட்டி — கொடுமைப்படுத்தத் தலைப்படும் போதுதான் கொடுமையிலிருந்து மீள்வதற்கு வேறு வழியற்ற, துணையற்ற நிலையில், 'ஓகோ, நாம் தமிழர்' என்று எண்ண முற்படுகிறான். அதுவரையில் அவன் பல மனிதரிடையே ஒரு மனிதன். அந்த மனிதத் தன்மையைக் காத்துக்கொள்ள இடமில்லாத சூழ்நிலையாயினும் அதனை உணரமாட்டாதவன். உரிமை வாழ்வின் பயனை அவனால் மதித்தறிய முடிவதில்லை.

ஒரு வகையில் அடிமைகளாய் விலைக்கு வாங்கப்பட்ட ஏவலர்கள் — அந்த அடிமை நிலையை உணர்ந்து உள்ளங் குமுறுவதற்கு ஏதுவாக இருந்த அந்தத் 'தெளிவுங்கூடத் தமிழனுக்கு இல்லை.

கையில் விலங்கு — கால்களில் தளை — அடைபட்டிருக்கும் இடமோ கொட்டடி, ஆண்டையின் கையிலோ சவுக்கு, அடிக்கும்போது எதிர்த்தாலோ உயிரும் பறிக்கப்படும் என்னும் நிலைக்கு ஆட்பட்டிருந்த 'கருப்புநிற மக்கள்' எல்லாம், எத்தனையோ போராட்டங்களில் ஈடுபட்டுப் பெரும்பகுதி யினர் விடுதலை பெற்றுவிட்டனர்.

அப்படிப்பட்ட விலங்கும் — தளையும் கண்ணுக்குத் தெரி யும்படிப் பூட்டப்படவில்லையே தவிர, தமிழனின் எண்ணத் தில் — கருத்தில் — சிந்தனையில் மாட்டப்பட்டுள்ள தளைகளே

— சாதி உயர்வு தாழ்வு, வைதிகச் சடங்கு, வடமொழி ஆதிக்க நிலை, அதன்வழி வளர்ந்த மூடநம்பிக்கைகள். அதனால்தான் தமிழனுக்குத் தன்னையே அடையாளம் காணமுடியாத கருத்துக் குருடாகும் நிலை ஏற்பட்டது. அந்த நிலை இன்றும் மாறவில்லை.

தந்தை பெரியார் வந்தார்!

இவைகளையெல்லாம் — பல்வேறு வகையில் — பல்லாண்டு காலம் எண்ணிப்பார்த்து, தாமறிந்த உண்மைகளை மற்றவர்களும் அறிந்தாக வேண்டும் என்று தீர்மானித்து, அந்தப் பணியைவிடத் தமது வாழ்நாளில் தாம் செய்ய வேண்டிய பணி வேறு இல்லை என்னும் முடிவுக்கு வந்து, 'தீண்டாமைக் கொடுமை', 'சாதி', 'வருணதருமம்', 'வைதிகம்', 'வடமொழி ஆதிக்கம்', 'புராணங்கள்', 'மூடநம்பிக்கைகள்', ஆகியவற்றை நொறுக்குவதற்கான சம்மட்டியாகச் 'சுயமரியாதை இயக்கத்தை'த் தொடங்கிப் பகுத்தறிவு பரப்பும் பணியில் ஈடுபட்டார் தந்தை பெரியார் அவர்கள். அந்த நோக்கம் நிறைவேற பலமுனைத் தாக்குதலும், பல்வேறு கோணத்திலான விளக்கங்களும் தேவை என்று தெளிந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் — தமது சிந்தனைத் திறன் மிக்க பேச்சாலும் — எழுத்தாலும் — கலைப்பணியாலும் துணைநின்றார்கள்.

இருபது நூற்றாண்டுகளாகவே மெல்ல மெல்ல உருக் குலைந்து, உள்ளமும் கெட்டுப்போன தமிழினத்தைத் 'தன்மானம்' கொள்ளச் செய்வதும் — 'பகுத்தறிவு'தனைப் பயன்படுத்தச் செய்வதுமே — இழந்த மனிதத் தன்மையை உணரச்செய்யும் வழி என்றும், அப்படிப் பெறும் விழிப் புணர்ச்சியால் அவன் தமிழன் (திராவிடன்) என்னும் உணர்வு பெறலாகுமென்றும் தெளிந்தவர் சிந்தனைச் சிற்பி தந்தை பெரியார் அவர்களே ஆவர்.

கடுங் காய்ச்சல் தீரும் மருந்து கொடுத்தால் — வாய் உளறுதலும் நிற்கும் — வாய்க் கசப்பும் மாறும், நிதானம் வந்தபின் எதிரிலுள்ளோர் புலனாவர் என்பதற்கிணங்கத் — தமிழினத்தின் வைதிக வழிப்பட்ட காய்ச்சல் நீங்கும் கடுமையான மருந்தாகத்தான், சுயமரியாதை — பகுத்தறிவு இயக்கம் தந்தை பெரியாரால் காணப்பட்டது. அந்த

மருந்தினை இனிப்பில் வைத்து விழுங்கச் செய்யும் முறையை மேற்கொண்டவரே அறிஞர் அண்ணா அவர்கள்.

எனவே தமிழினத்தின் வரலாற்றில் காணப்படும் அடிப் படை வீழ்ச்சியை — தாழ்நிலையை — அடிமை மனப்பான்மையை மாற்ற விரும்பும் எவரும், தன்மானப் பகுத்தறிவுச் சிந்தனையைப் பரப்புவதன் மூலம் தமிழர்களைத் தம்மை உணர்ந்தவர்களாக ஆக்கிடும் பணியையே தலையான பணி யாக உணர்ந்து மேற்கொண்டாக வேண்டும். எதிர்ப்புகள் எத்தனை வந்தாலும், எப்பக்கமிருந்து வந்தாலும், எதற்கும் அஞ்சாது, ஏன்? எப்படி? எதற்காக? என்னும் கேள்வியை எழுப்பி விடைகாணும் ஆற்றலை — நம்மினத்தார் பலரிடமும் உருவாக்கிய தந்தை பெரியாரின் தொண்டே — தமிழர்களை விழிப்புறச் செய்யும் வழி கண்ட தலையான தொண்டாகும்!

நூறாண்டு வாழ்ந்தவர்:

தன்மானத் தந்தை, சுயமரியாதைச் சுடர் பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவை இன்று அவர் பாசறையிலே பயிற்சிபெற்ற நமது இயக்கத்தவர் மட்டுமேயன்றி அவரால் வாழ்வு பெற்ற நாடும் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. ஏறத்தாழ நூறாண்டு வாழ்ந்தவர்தான் பெரியார். ஆனால், மற்றவர்களைப் போலன்றித் தான் வாழ்ந்த காலத்தையே தனது முத்திரை பதித்துச் சமுதாயத்தின் வாழ்வில் பதியவைத்து விட்டவர் பெரியார்.

அவர் வாழ்ந்தார் என்பது ஒரு செய்தி அல்ல; இலக்கியம் — காவியம் — வரலாறு, அவரது வாழ்வு, ஒரு தனி மனிதரது வாழ்வாக எண்ணப்படுவது அல்ல — நம்முடைய வாழ்வாக — சமுதாயத்தின் புதுவாழ்வாக மதிக்கப்படுவது.

மனிதராக்கியவர்:

நம்மிடையே ஒரு பெரிய மனமாற்றத்தை, விழிப்புணர்ச் சியைப் புதிய சிந்தனையைத் தலைநிமிர்ந்து நிற்கும் ஒரு தன்மதிப்புத் தகுதியை, ஏற்படுத்தியவர் பெரியார். சுருங்கக் கூறின் நம்மை 'மனிதன்' ஆக வாழச் செய்தவர் — வாழும் வழி காட்டியவர் பெரியார்.

ஆம்! பெரியார் வாழ்ந்தார்! அவர் வாழ்ந்ததால் நாம் 'மனிதன்' ஆனோம்! தமிழர் ஆனோம்! திராவிடர் ஆனோம்! வரலாற்றுப் பெருமை உள்ள ஒரு நாட்டவர் ஆனோம்!

பெரியார் பிறக்காவிடில், ஆம், அவர் வழிப் பிறந்த எண்ணங்களும், கேள்விகளும், கண்டனங்களும் பிறக்கா திருந்தால் — இன்றும் நாமெல்லாம்;

பொட்டுப் பூச்சிகளாய்,
புன்மைத் தேரைகளாய்,
பொது அறிவு பெறாத புல்லர்களாய்ப்,
பகுத்தறிவைப் பயன்படுத்தாத பதர்களாய்,
நம்மை நாமே உணராத ஒரு 'கும்பலாக',
அடிமை உணர்வகலாத தொழும்பர்களாய்,
'சாமி' என்றும், 'அய்யர்' என்றும்
யார் யாரையோ வணங்கிக் கிடக்கும்
செயலற்றுப்போன எலும்புக் கூடாக,
சமுதாயத்திற்குப் பயன்படாத ஒதிகையாக
உதவாக் கரையாக, அறிவுக் குருடர்களாய்
தீண்டப்படாத பிறவிகளாக —
ஆளடிமைகளாக, அவமானச் சின்னங்களாகத்தான்
நாம் இருந்திருப்போம் இருட்டறையில்!

நாட்டிற்கே 'சுதந்திரம்' வந்தாலும் நம் சிந்தனைக்குச் 'சுதந்திரம்' கிடைத்திருக்காது. ''இருட்டறையிலே உள்ளதடா உலகம் — சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே'' என்னும் புரட்சிக் கவிஞர் கூற்றுப்படிதான் இருட்டறையில் இருந்திருப்போம்!

''இருட்டறையில் ஏதில் பிணம் தழீஇயற்று'' என்று வள்ளுவர் காட்டிய உவமைக்கு ஒப்ப, பொருளுக்காகவே புரோகிதர் ஆற்றக்கூடிய சடங்குகட்கெல்லாம் நாம் ஆட்பட்டவராகவே இருந்திருப்போம்!

ஏதில் பிணம் எனலாகும் வடமொழி தழுவலில் இருந்து தமிழர்கள் யாரும் விடுபட்டிருக்கவும் மாட்டோம்!

துணிவு பிறந்திருக்காது:

வருணாசிரம உயர்வு தாழ்வு; பிறப்பினில் வேற்றுமை; தீண்டாமை; வைதீகப் பிடிப்பு; மத ஆதிக்கம்; சாத்திரச் சம்பிரதாய வழக்குகள்; இதிகாச புராண நம்பிக்கைகள்; பெண்ணடிமை; உழைப்புக்கு இழுக்கு; தலைவிதி தத்துவம் முதலான எத்தனையோ வைதீக உணர்வுகளை எண்ணிப் பார்க்கும் துணிவுகூடத் தமிழ் மக்களிடையே பிறந்திருக்காது.

நமது எண்ணங்கள், நம்பிக்கைகள், நடைமுறைகள், சடங்குகள், முதலான எதைப் பற்றியுங் கூட எண்ணிப் பார்ப்பதற்கான தூண்டுதல் ஏற்பட்டிருக்காது — துணிவு பிறந்திருக்காது.

எதைக் கண்டும் அஞ்சிய கோழையாக, மோழையாக, எதைக் கேட்டும் அடங்கிய ஆமையாக, ஊமையாக இருந்தவர்கள் தமது கண்களை விரித்து உண்மையைத் தேடிக் காணும் முயற்சி உடையோரானது பெரியாரால் அன்றோ!

உள்ள உரந்தந்தார்!

பேய் பூதம் பிசாசு எனக் கேட்டு அஞ்சும் சிறுவரைப் போன்று, கடவுள், மதம், படைப்பு, விதி என்பதைக் கேட்டு அஞ்சிய பெரியவர்களையும் சிந்திக்க வைத்தவர் பெரியார்.

எலியாக, முயலாக இருந்த மக்கள் புலியாகச் செயல் செயப் புறப்படுவதற்கு ஏதுவான உள்ள உரந்தந்தவர் பெரியார். மனிதன் உயர்ந்தவன்; மற்ற உயிர்களினும் மேலான அறிவாம் — பகுத்தறிவைப் பெற்றதால் உயர்ந்தவன், எனினும் அந்த அறிவைத் தான் ஏற்கும் எண்ணம் அனைத்திலும் பயன்படுத்தாதபோது மனிதன் — தன்னையே இழப்பவன் ஆவான் என்னும் தெளிவை நம்மவர்க்குத் தந்தவர் பெரியார்.

காலமெல்லாம் உழைத்துப் பாடுபட்டு இந்த உலகை — நாம் வாழத்தக்கதாக உருவாக்கியவன் மனிதன். அதில் ஏய்த்துப் பிழைப்போருக்கு இடமின்றி — அறிவால் முயற்சியோடு முன்னேறுவதே நமது கடமை என்று உணர்த்தியவர் பெரியார். உடலுக்கு ஒவ்வாத உணவை ஒதுக்குவது போன்று, உலக வாழ்வுக்குப் பயன்படாத எண்ணங்களை — அவற்றின் பிடிப்பை உதறி எறிய அறிவுறுத்தியவர் பெரியார்.

இயற்கை அறிவால் தெளிவு பெறல்:

அப்படிப்பட்ட இயற்கை அறிவால் உலகைத் தெளிந்து, புதிய பாதை வகுத்த பெரியார் அவர்கள் பிறந்த குடும்பமோ — பழமையில் ஆழ்ந்த பற்றுக் கொண்டது. வணிகத்தில் பொருள் ஈட்டி, வைதீகச் சடங்குகளில் செலவிட்டு, மத நம்பிக்கைகளில் ஊறி, சாதி ஆசாரத்தில் திளைத்து, தரும காரியங்களில் ஈடுபட்டிருந்த பெருமைக்குரியது.

சிறுவயதிலேயே பெரியவர்கள் சொல்லிலும் செயலிலும் பெரியாருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. மாறாக இது ஏன்? அது எதற்காக? இப்படிச் செய்யாவிட்டால் என்ன? இதனால் என்ன பலன்? என்னும் கேள்விகள் அவரிடம் பிறக்கலாயின, ஏன்? எப்படி? எதனால்? என்னும் கேள்விகள் அவரைச் சிந்திக்க வைத்தன.

பெரியவர்கள் பழக்கத்தால்தான் எதையும் நம்புகிறார்கள். அப்படி நம்புவதற்கு ஆதாரம் அவர்களுக்கு முன்னாலே அவர்களுடைய பெரியவர்கள் நம்பினார்கள் என்பதுதான். அதுவேயன்றி அவர்கள் தாமாக எதையும் சிந்தித்து — ஆராய்ந்து முடிவிற்கு வருவதில்லை என்று அவர் கண்டார். அவர் தம் கேள்விகட்குத் தகுந்த பதிலையும் அவர்களிடமிருந்து பெரியார் பெற முடியவில்லை.

எதிர்மறை வினாக்கள் எழுப்பினார்:

உலகத்தில் மேற்கு நாடுகள் பலவும் விஞ்ஞானப் புதுமை களைக் கண்டு, மக்கள் வாழ்க்கையை வளப்படுத்தி நாளும் முன்னேறி வருகிறதே; நாம் மட்டும் முன்னேறவில்லையே? என்ன காரணம் என்று எண்ணிப் பார்க்கலானார். நம்மிடையே நிலவிய விஞ்ஞானக் கரு, புதுமை காணும் முயற்சி — ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே நின்றுபோய் விட்டது. அப்படி நின்றுபோகும் வண்ணம் மனித முயற்சியைக் குலைக்கவும் — குன்றவும் செய்யக்கூடிய எண்ணங்கள் அவர்தம் உள்ளத்தில் நிரப்பப்பட்டன வைதீக ஆரியத்தால் — என்பதையும் தெளியலானார்.

மனித வாழ்க்கையைக் குறித்து — அன்றாட வாழ்க்கை யாயினும் — சிறப்பு நிகழ்ச்சிகளாயினும் வேறு எவையாயினும் அவருடைய எதிர்மறை கேள்விகளுக்கு இலக்காயின.

குளிப்பது, உடுப்பது, உண்பது, உறங்குவது முதல் — தொழுவது, விழா எடுப்பது கோயில் கட்டுவது, கொண்டாட்டம் நடத்துவது ஆகிய அனைத்தும் — அவரது ஆய்வுக்கு ஆட்பட்டன. குளிப்பது அழுக்குப் போகத்தானே? குளிப்பவர் எல்லாம் அழுக்குப் போகவா குளிக்கிறார்கள்? நாளும் குளிக்காவிட்டால்தான் என்ன? துணி உடுத்துவது — ஒரு நாகரிகம் ஆகி ஆடம்பரம் ஆகத்தானே ஆகிவிட்டது! பலருக்கு எளிய உடை உடுத்தினால் போதாதா? பெண்கள் பதினெட்டு முழப் புடவையைச் சுற்றுவது எதற்காக? குறைத்து உடுத்தினால் அவர்கட்கு நன்மையல்லவா? பெண்கள் அழகுபடுத்திக் கொள்வது அவர்களை அடிமைப்படுத்தத்தானே பயன்படுகிறது? ஒரு நாளைக்கு வீட்டுக்கு வீடு எத்தனை முறை உணவு தயாரிப்பது? இது பெண்கள் சுதந்திரத்தையே கெடுக்கிறதல்லவா? 'பண்டிகை' என்பது வகை வகையாக உண்பதற்குத் தானே? அதற்கேன் இவ்வளவு உழைப்பு, முயற்சி வீண்செலவு?

'திருவிழாக்கள்' என்பது சிலபேர் பிழைக்க — பலபேர் ஏமாற்றப்பட வழி செய்வதுதானே? 'கோயில்' என்பது குருமார்கள் வாழ; மற்றவர்கள் அவர்களுக்கு அடங்கி ஒடுங்கி கிடக்கத்தானே? ஆண்-பெண் இரு இனத்தில் பெண்ணினம் கருவுற்றுப் பிள்ளை பெற்றெடுக்கும் இயற்கை உடையது. அதற்காகப் பிள்ளை பெற்றெடுத்துக் கொண்டே இருக்க வேண்டுமா? அதை நிறுத்திக் கொள்ளும் வழியும் உரிமையும் அவர்கட்கு ஏன் இல்லை? என்று எண்ணிச் சிந்திக்கலானார்.

அநீதி கண்டு கொதித்தார்:

மனிதரில் மேல்சாதி — கீழ்சாதி என்பதற்கு என்ன நியாயம் இருக்கிறது? ஏன் பிறந்தது? எப்படி நிலைத்தது?

மனிதரில் ஒரு சாரார் — நகத்தில் அழுக்குப் படாமல், உழைக்காமல் உண்டு களிக்க, இன்னொரு சாரார், கடின உழைப்பை ஏற்றும், சமுதாயத்துக்கு இன்றியமையாத இழி தொழில் செய்தும் — கஞ்சிக்கும் வழியின்றிப் பரம்பரை - பரம்பரையாக நொந்து போவது ஏன்? இந்த அநீதி இன்னுமா நீடிக்க வேண்டும்? என்று கொதிக்கலானார். இவைகளை

நிலைநிறுத்துவது மத நம்பிக்கையல்லவா? அந்த மத நம்பிக்கைகளை மாற்றினால்தானே இவை மாறும்! அநீதியைத் துடைக்க மத — சாதி நம்பிக்கைகளை அகற்ற வேண்டுமெனில் — அவற்றை எதிர்ப்பது தவிர வேறு வழி என்ன? என்ற எண்ணத்தை மேற்கொண்டார்.

பிறப்பால் பேதம் கற்பித்தல்,
மதத்தால் மூட நம்பிக்கை வளர்த்தல்,
வைதீகத்தால் சடங்குகளைச் செய்தல்,
இதிகாச புராண சாத்திரங்களை நம்புதல்,
புரோகிதத்தின் செல்வாக்குக்குப் பணிதல்,
வடமொழிக்குத் தனி மகிமை அளித்தல்,

இப்படிப்பட்ட ஒவ்வொன்றையும் அதன் வேரோடும் வேரடி மண்ணோடும் கல்லி எடுத்து ஒழிப்பதிலே — அதற்கான மனமாற்றத்தை மக்களிடையே ஏற்படுத்துவதிலே பெரியார் ஆர்வங்கொண்டார்.

எதிரம்புகளை நிலைகுலையச் செய்தார்:

மதத்தைக் குறித்துப் பெரியார் எப்படி எண்ணலானார் என்பதை அவரது — துவக்க காலப் பேச்சிலே நாம் காணலாம்.

''மதம் என்பது நாட்டிற்கோ, ஒரு சமூகத்திற்கோ, ஒரு மனிதனுக்கோ, எதற்காக இருக்க வேண்டியது? ஒரு தேசத்தையோ, சமூகத்தையோ கட்டுப்படுத்தி ஒற்றுமைப் படுத்துவதற்காகவா? பிரித்து வைப்பதற்காகவா? அது ஒரு மனிதனின் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டதா? அல்லது ஒரு மனிதனின் மனசாட்சியைக் கட்டுப்படுத்தக் கூடியதா? மனிதனுக்காக மதமா? மதத்துக்காக மனிதனா? என்பதைத் தயவு செய்து யோசித்துப் பாருங்கள்.

''மதம் என்பது மனிதனின் (சமூக) கூட்டு வாழ்க்கைக்கும், அதற்கேற்ற ஒழுக்கத்திற்கும் ஏற்ற விதிகளைக் கொண்டதே யாகும் என்று சொல்லப்படுமானால், அம்மாதிரி மதங்களைப் பற்றிச் சுயமரியாதை இயக்கம் (எதிர்ப்புக் காட்ட வேண்டும் என்று) அதிகம் கவலைப்படுவது கிடையாது. அதற்கு, இயக்கம் அவசியமானால் உதவியும் செய்யும். மற்றும் மனிதனின் ஆத்மா என்பது கடவுள் என்பதை அடைவதற்காக மதம்

ஏற்பட்டது என்றால், அதைப்பற்றிச் சுயமரியாதை இயக்கம் கவலைப்படுவதில்லை. அப்படிப்பட்ட எண்ணமுடையவனும், அவனுடைய மதமும் இப்போது எப்படியோ போகட்டும் என்று விட்டுவிடுவோம். ஏனெனில், அது தனிப்பட்ட மனிதனைப் பற்றிய காரியம். ஆனால், மனித சமூகத்தின் அறிவைப் பாழ்படுத்தவும், தன்மான உணர்ச்சி அறவே இல்லாமல் செய்யவும், மக்களைப் பிரித்து வைத்து, உயர்வு தாழ்வு கற்பித்து, மனித சமூக ஒற்றுமையைக் கெடுத்துப் பொது முன்னேற்றத்தையும் சுதந்திரத்தையும் தடுக்கும்படியான மதம் எதுவானாலும் அதை ஒழிக்கச் சுயமரியாதை இயக்கம் பாடுபட்டுத்தான் வந்திருக்கிறது?

இவ்வாறு, சமுதாயப்போக்கு என்னும் வலிவான வெள்ளத்தினை எதிர்த்து, எதிர் நீச்சலிலே ஈடுபட்டவர்தான் பெரியார். அஞ்சாமல், சளைக்காமல், அலுக்காமல், அயராமல், எதிர் நீச்சல் போட்டவர் — ஒரு அறுபது ஆண்டுகட்கு மேலாக எதிர் நீச்சல் போட்டவர் பெரியார், ஒருவர்தான்.

அதனால்தான், ஆதிக்கவாதிகள், வைதீகர்கள், பழமை விரும்பிகள் எல்லோரும் பெரியாரை எதிர்த்தனர், ஏளனம் பேசினர். கண்டனஞ் செய்தனர். பெரியாரின் பேச்சும் எழுத்தும் நாட்டிலே இடம்பெறவே கூடாது என்று திட்டமிட்டனர். அறியாமைக்கு ஆட்பட்ட மக்களும் அவர்களுக்குத் துணை நின்றனர். ஆனால் — எதிர்ப்பு வளர வளரப் பெரியாரின் ஆர்வமும், உறுதியும் துணிச்சலுமே வளர்ந்தன.

மாற்றார் மருட்சி:

வகை வகையான எதிர்ப்பு வந்தபோதெல்லாம் பெரியார் அவர்கள், தமது பணி பயன்படத் தொடங்கிவிட்டது; அதனால் தான், மாற்றார் மருண்டு, தமது சுயநலம் பறிபோய் விடுமே என்று கூச்சலிடுகின்றனர் என்று கணக்கிடலானார். எனவே எதிர்ப்பு — ஒரு வகையில் அவரை ஊக்கப்படுத்தியது எனலாம்.

பெரியார் அவர்கள் மற்றொரு வகையாலும் தனது இலட்சியப் பணிக்குத் தன்னைத் தயார் செய்துகொண்டார். படித்தவர்கள் பாராட்டு, அறிவாளிகள் ஆதரவு, பெரும் பாலோர் ஒத்துழைப்பு, எல்லோரும் பாராட்டும் புகழ்

இவைகளை அவர் பொருட்படுத்தினால் — தமது நோக்கம் சீர்குலையும் என்று தீர்மானித்துக் கொண்டு தன் கருத்தை ஏற்போர் ஏற்கட்டும், ஏற்காதவர்கள் யாரானால் நமக்கென்ன? என்ற எண்ணத்துடன் நடைபோட்டார்.

புதுவழி கண்டவர்:

அவரைப் பொறுத்த வரையில் இது அவருடைய கடமை; வாழ்க்கைக் குறிக்கோள்; விளைவு பற்றிக் கவலை இல்லை. இதிலேதான் அவருக்கு மகிழ்ச்சி; மன நிறைவு. அவரே கூறியது போன்று ''மயிரைக் கொண்டு கட்டி மலையை இழுக்கிறோம்; மலை வந்தாலும் சரி; மயிர் போனாலும் சரி'', — என்ற மனப்பான்மையோடுதான், இவ்வளவு பெரிய எண்ணப் புரட்சியில் தன்னை ஒப்படைத்துக் கொண்டார்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் — தமிழ் மக்களின் எண்ணத்தில் புதுமையைக் கலந்தவர் உண்டு; புதுப்புது இலக்கிய விருந்துகளைப் படைத்தவர் உண்டு; சீர்திருத்தத்தைச் செப்பியவர் உண்டு; சமரச சன்மார்க்கத்தை விளக்கியவர் உண்டு; நாத்திக விளக்கம் புரிந்தவர் உண்டு; வைதீகச் சடங்குகளைச் சாடியவர் உண்டு — ஆனால் பெரியாரைப் போன்று — பாமரர் உட்படத் தமிழர்களின் எண்ண ஓட்டத்திலேயே ஒரு திருப்பத்தை — மாற்றத்தை — மறுமலர்ச்சியை — பழைமையை ஒடுக்கும் ஆற்றலை — எதனையும் ஆராய்ந்து பார்க்கும் மனத்துணிவை உருவாக்கிய இன்னொருவர் பிறந்ததில்லை. அறம் உணர்த்தியவர்கள், நீதி, நியாயம் புலப்படுத்தியவர்கள், பொது நோக்கைப் போற்றியவர்கள், நல்லெண்ணம் வளர்த்தவர்கள் பலர். ஆனால், 'அநீதியை' எடுத்துக்காட்டி, அக்கிரமத்தை எதிர்த்து வாதாடி, பழைய மதிப்பீடுகளையே மாற்றிப் புதிய மதிப்பீடுகள் பிறக்க வழி செய்தவர் பெரியார் ஒருவரே.

உலகைப் பார்க்க வைத்தவர்:

பழைய எண்ணங்களாகிய பொன் நகைகளின் அழுக்குப் போக்கியவரும் மெருகேற்றியவரும் பலர். அதனை அழித்துப்

புதுநகையாகச் செய்தவர் சிலர்; ஆனால் அந்தப் பழைய எண்ணங்களாகிய நகைகளே இல்லாவிட்டால்தான் என்ன? என்று எண்ணிப் பார்க்க வைத்தவர் பெரியார்.

"என் பாட்டன் கப்பல் ஓட்டினார்" என்பது போன்ற பழம்பெருமை மட்டும் பேசி — ஓடம் ஓட்டவும் வழி தேடாது அதனாலேயே தாம் மேலான நிலையினர்போல் எண்ணிக் கொள்ளும், பாலைமணலில் தலை புதைக்கும் நெருப்புக் கோழி மனப்பான்மையை மாற்றித் தலையைத் தூக்கி உலகத்தை எட்டிப் பார்க்கச் செய்தவர் பெரியார்.

"உன்னையே நீ உணர்ந்து பார்" (Know thyself) என்றார் சிந்தனைச் சிற்பி சாக்ரடீசு. தமிழன் — தன்னை உணர, தன்னைச் சூழ்ந்துள்ள நிலையை உணர, தன்னைப் பிடித்துள்ள நோயை உணர, தன்னைப் பிணித்துள்ள தளையை உணர, தன்னை முன்னேற ஒட்டாது தடுக்கும் சக்தியை உணர — ஏன், விதியையே உணர வழி செய்தவர் பெரியார்.

அறிவுழவு செய்த முதல்வர்:

ஆம்! அப்படிப்பட்ட பெரியாரின் தொண்டு, தமிழகத்தில் பூட்டப்பட்ட 'முதல் ஏர்' ஆக அமைந்த காரணத்தால்தான், பேரறிஞர் அண்ணாவின் 'வழி ஏர்' — இரண்டாவது 'ஏர்' முன்னேற முடிந்தது. முன்னேற்றங் காணவும் முடிந்தது. எனவேதான், பெரியார் அவர்கள், அண்ணா அவர்களால், 'என்வாழ்நாளில் நான் மதித்து ஏற்றுக்கொண்ட எனது ஒரே தலைவர் பெரியார்' என்று போற்றப்பட்டார்.

"அறிவில் வயதில் முதியாரவர், என்றும் வாய்மைப் போருக்கு இளையார்" என்னும் புரட்சிக் கவிஞரின் போற்றுதலுக்கும் பெரியார் உரியரானார். எனவே, பெரியார் அவர்களாலேதான் இன்றையத் 'தமிழன்' உருவாகியிருக்கிறான். தமிழனாக உருவாகாத, உணர்ச்சி பெறாத தமிழர்களும் இருக்கிறார்கள் எனினும், பெரியார் இல்லையேல், உணர்ச்சியுள்ள தமிழனே இருந்திருக்கமாட்டான் எனலாம்.

எனவேதான் —
தமிழர் சமுதாய வாழ்வில் ஒரு
விடிவெள்ளியாக,
தமிழர் வரலாற்றில் ஒரு சகாப்தமாக,
ஒரு நூற்றாண்டாக,
தமிழர் எண்ணத்தில் ஒரு சிந்தனைச்
சிற்பியாக,
தமிழர் வாழ்வில் — ஒரு
சீர்திருத்த வாதியாக,
தமிழர் இனத்தின் — ஒப்பற்றதொரு
தன்மானக் காவலராக,
தமிழர் உணர்ச்சியில் — ஒரு பெரும்
புரட்சித் தீயாக,
தமிழர்தம் அடிமை மனப்பான்மையை
அகற்றிய 'விடுதலை' வீரராக

நம்முடைய வாழ்வும், வளமும் சிறந்திட வழிகாட்டிய இணையற்ற தலைவராகப் 'பெரியார்' விளங்குகிறார்!

வாழ்க பெரியார் புகழ்!
வளர்க அவர்தம் இலட்சியம்!

6. இணையற்ற சுய சிந்தனையாளர்

சமுதாய அறிவியல் அறிஞர்:

ஏன்? எப்படி? எதனால்? என்னும் மூலக் கேள்விகள் மூலம் எதையும், எப்படிப்பட்ட செல்வாக்குடைய கருத்தையும், துருவி ஆராய்ந்து உண்மை தெளியும் பகுத்தறிவுப் பாதையில், அயராது நடைபோட்ட ஒப்பற்ற சுயசிந்தனையாளர் — சுதந்தரச் சிந்தனையாளர் தந்தை பெரியார் அவர்கள்.

அவ்வாறு கண்ட உண்மைகளை, தனது அறிவுக்குச் சரி என்று பட்டவற்றை, யார் என்ன கருதுவார்கள் என்பது பற்றிக் கவலைப்படாமலும், அதைப் பொருட்படுத்தாமலும், தொடர்ந்து எடுத்துரைத்து வந்த கொள்கைத் துணிவு கொண்டவர் தந்தை பெரியார்.

அறியாமையும், மூடநம்பிக்கையும் வைதிகப் பிடிப்பும், வருண தரும ஆதிக்கமும் கோலோச்சிய சமுதாயத்தில், தமது கொள்கையைப் பரப்புவதே வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டு, தம்மை நோக்கிக் கல்லடியும் சொல்லடியும் செருப்புவீச்சும் நிகழ்ந்த காலத்திலும், சலிக்காது பாடுபட்டதன் மூலம், மாந்தநேய உணர்வில் உயர்ந்து விளங்கியவர் தந்தை பெரியார்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளருள் ஒருவரான பெரியார் அவர்கள், மக்கள் ஒவ்வொருவரிடத்திலும் அவரவர் கண்டு கேட்டு அறிந்தவை, படித்தறிந்த பொருள், அதன் வழிவளர்ந்த எண்ணம், பழக்கப் பட்டுவிட்ட கருத்து, அதன் வழி வளர்ந்த நம்பிக்கைகள், நம்பிக்கை வழிப்பட்ட சடங்குகள், சடங்குகளை வளர்த்த சமயம் முதலான ஒவ்வொன்றையும் குறித்துத் துருவித் துருவி ஆராய்ந்தவர். அறிவியல் அறிஞர் ஒருவர் தாம் மேற்கொண்ட ஆராய்ச்சியில், தம்மை எப்படி முழுவதும் ஒப்படைத்தவராக அந்தச் சிந்தனையிலேயே மூழ்குவாரோ, அப்படியே மூழ்கி நின்றவர் பெரியார். எத்தகைய பெரியவர் உரைத்ததாயினும் தமது அறிவுக்குச் சரியென்று படாததை, சரி என்று கூறுவதற்குத் தகுந்த காரணம் இல்லாததை, அவை எவையெனினும் ஏற்கத் தேவையில்லை என்று மற்றவர்களை உணரச் செய்வதே அவரது குறிக்கோள் ஆயிற்று.

பழமைத் துருப்பிடித்த சமுதாயம்:

ஒரு சமுதாயம் அதனுடைய பழமையின் தொன்மைக்கு ஏற்பவும், அதனிடத்தில் காலத்தால் படிந்துவிட்ட பழக்க வழக்கங்களுக்கு ஏற்பவும், அதனிடம் வந்து புகுந்த வேற்றார் தொடர்பு நிலை, தாக்குறவு, ஆதிக்கம் ஆகியவற்றிற்கேற்பவும், பலவகையான எண்ணங்கட்கும் நம்பிக்கைகட்கும் ஆட்படுவது சமுதாய வழக்கும் போக்குமாகும். அந்த எண்ணப் போக்கும், நம்பிக்கைகளும் ஒரு சமுதாயம் முன்னேறுவதற்கும், தன் னம்பிக்கையுடன் செயற்படுவதற்கும், வாழ்வதற்குமேகூடப் பலவகையில் தடையாவது, மலை ஏறவேண்டிய மனிதன் முதுகில் கட்டப்பட்ட சுமையாவது. அவற்றைப் பற்றி எண்ணிப் பார்க்கவே மனிதன் துணிச்சல் பெறுவதில்லை. அதிலும் நம்பிக்கை வழிப்பட்ட பழக்கமானால், அது அவனது அறிவின் தெளிவுக்கு இடமளிக்காததால், அவன் கை, கால்களில், விலங்காக அவனது சுதந்திர நடமாட்டத்தையே தடைசெய்யும். மனிதன் அறிவு நிலையில் முடமாவான்.

இனஉணர்வு இல்லாத தமிழகம்:

தமிழ் மக்கள் ஒரு தொன்மை மிக்க இனத்தார் என்பதும், பழமை படிந்த மனத்தராதலின் புதிய சிந்தனையை உருவாக்கிக் கொள்ள இயலாதவரானவர் என்பதும், அந்தப் பழமையைப் பயன்படுத்தி ஆரிய வருண தருமமும், புரோகிதப் புரட்டும் சமயத்தின் நிழலில் ஆதிக்கம் பெற்றது என்பதும் வரலாறு உணர்த்தும் உண்மை. தமிழர்கள், முத்தமிழ் மன்னர்கள் ஆண்ட காலத்தில், தமது மேலோங்கிய நிலையாலும், பிற நாடுகளுடனான வணிகத்தில் தம் கை ஓங்கி இருந்த நிலை யாலும், பிற இனத்தாருடன் உற்ற தொடர்பை வரவேற்கும் மனத்தினர் ஆயினர் எனலாம். அந்நாளிலேயே வேற்றினத் தாரும் வேற்று மொழியும் புகுந்தநிலை உண்டெனினும் வேற்றார் ஆதிக்க முயற்சி வளராமையாலும், தமிழ் நிலத்திலேயே முடிசூடிய மன்னர் மூவராகவும் குறுநில மன்னரும் வேளிரும் மிகப்பலராகவும் இருந்தமையாலும், ஒரு மொழி வழியினர் என்பதையோ, ஓரினத்தினர் என்பதையோ அவர்கள் உணர்ந்தவர்களாக இல்லை. புலவர்களும், மன்னர்களை எதிர்நோக்கி வாழும் வழியினர் ஆயினமையின், மன்னரின் வெற்றிப் புகழைப் போற்றிப் பாடினரேனும், தமிழ்

இனத்தின் காவலராக அவர்களை எண்ணிப் பார்த்துப் பாடவே வாய்ப்பில்லை. காவிரிப்பூம்பட்டினமும், மதுரை மூதூரும், உறையூரும், கொற்கையும், காவிரியும், வைகையும், பொதிகையும், வேங்கடமும் புலவர்களால் பாடப்படும் பொருள்களாக இடம் பெற்ற சிறப்படைந்தனவே அன்றி, இனமொழி எண்ணங்களையோ, தமிழரின் உரிமையான நாட்டு எல்லையைப் பற்றிய சிந்தனையையோ ஏற்படுத்தக் காரணமாகவில்லை. தமிழ்மொழி வழங்கிய நிலத்தின் எல்லை குறிக்கப்பட்டவிடத்தும் தமிழர் ஆட்சிஉரிமை கருதப்பட்டுப் பேசப்படவில்லை. தமிழ் மாநிலப் பரப்பு முற்றும் ஒரே ஆட்சியில் அமையாததும் அதற்குக் காரணமாகலாம். அக் காலச் சூழலில் பல்லாற்றானும் ஏற்றமுற்றோர் ஆக வாழ்ந்த தால் 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்பதை நடைமுறையில் ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை கொண்டவராயினர்.

ஒற்றுமையின்மையும் சமயமும்:

அடுத்து உருக்கொண்ட, வேற்றினத்தவரான களப்பிரர் களின் ஆட்சிக்காலம், களப்பிரர் படை எடுப்பாலும் — ஆட்சி அமைத்தபோது ஏற்பட்ட எதிர்ப்புக் கலகங்களாலும் தமிழ் நாட்டார் நிலைகுலைந்த காலமாகும். மூவேந்தர் ஆட்சி ஒய்ந்தது. ஒரு நிலையான பேரரசும் உருவாகவில்லை. மக்கள் ஒன்றுபட்டு எழுச்சிகொள்ளும் சூழலும் இல்லை. மறுபடியும் பாண்டியரும் சோழர் வழியினரும் தலைதூக்கினர் என்றாலும், தமிழர்கள் என்னும் அடிப்படையில் அல்லாமல் மன்னர் முடியுரிமையை நாட்டும் முறையிலேயே ஆட்சி பெற்றனர்.

சங்ககாலச் சூழலில் சமயநெறிகள் அறிஞர்களின் சிந்தனைப் பொருளாகவும், வழிவழிவந்த வழிபாட்டுப் பழக்கங்கள் மக்கள் வாழ்க்கையில் இழையோடியிருந்த சமய முறையாகவும், இருந்த நிலை மாறத்தலைப்பட்டது. சமய வேற்றுமைகள் முக்கியத்துவம் பெற்றன. சமண, புத்தக் கொள்கைகளை இலக்கியத் துணைகொண்டும், அதற்கான பள்ளிகள் மடங்கள் அமைத்தும், சீடர்களை உருவாக்கியும் பரப்புவாராயினர்.

அவர்தம் கொள்கைகள் பல உயர்ந்தனவாயினும், துறவு நெறிக்கு அவை தந்த முதன்மையால், மக்களைப் பேரளவில் கவர்ந்திடவில்லை எனலாம். மேலும் களப்பிரர், துவக்கத்தில்

சமண-புத்த சார்புடையோராகக் காணப்பட்டதாலும், அவர்கள் காலத்துக் குழப்பத்தாலும் மக்கள் அச்சமயங்களில் கொண்டிருந்த ஆர்வமும் மங்கியது என்று கொள்ளலாம். அதனைத் தொடர்ந்து தமிழ்இசை வல்ல அடியார் பலர் தாம் ஏற்றிருந்த சிவநெறியைப் போற்றி வளர்ப்பதில் முனைந்தனர். மக்கள் பழக்கவழக்கத்தோடு நெருங்கிய தொடர்புடைமை யாலும், 'துறவறம்' முதன்மை பெறாமையாலும் 'நால்வர்' வழியில் சிவநெறி தழைத்தது. அதைத் தொடர்ந்து மக்களின் இன்ப வாழ்வுக்குரிய எண்ணம் வளர்த்த திருமாலியமும் ஆழ்வார்களால் செல்வாக்குப் பெற்றது. நாடாண்ட மன்னர் களும் இவற்றுள் ஒன்றைத் தமது மதமாகக் கொண்டனர். சிவநெறியும் திருமாலியமும் போற்றியோர், தத்தம் மதங்கட்குப் பெருமை சேர்க்கவும், தத்தம் கடவுளரின், ஆற்றலைப் பெருக்கிக் காட்டவும், வேதசாத்திர இதிகாச புராணச் சார்புடைய கற்பனைகளை எல்லாம் மேற்கொள்வராயினர். தேவார திருவாசக நாலாயிரப் பிரபந்தம் முதலான எல்லாம் அச்சார்பு மேலோங்கியனவே.

புரோகித இன வளர்ச்சி:

சமண-புத்த மதங்கள் குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்குப் பெற்றிருந்த நூற்றாண்டுகளில், அவர்தம் பாலி மொழிக்கோ வடபுல மொழிக்கோ ஏற்படாத செல்வாக்கு, சைவ, வைணவ மதங்கள் செல்வாக்குப் பெற்ற காலத்தில் அவற்றின் மூலம் வடமொழியான சமக்கிருதத்திற்கு ஏற்பட்டது. சமக்கிருதம் அறிந்தவர் மிகச்சிலரே ஆயினும், அதை அறிந்தவர்களை மதிப்பவர்கள் பலராயினர். அதன் தொடர் விளைவே துவக்கத்தில் இல்லாத வழக்காக, பிராமணர்கள் கொள்கை வழியில் சுமார்த்த மதத்தினர் ஆயினும், சைவர்க்கும், வைணவர்க்கும் அவர்களே குருமார்களாயினர். புரோகிதம் செய்வதன் மூலமும், அர்ச்சகர் ஆனது மூலமும் அவர்கள் பிறவியாலேயே தமிழர் சமுதாயத்தின் குருமார்களாயினர். சிவநெறிக் காவலர்களும், திருமாலிய நெறி உணர்ந்தவர்களும் ''பிறவியை ஒட்டிய சாதி வேற்றுமைக்கு எம்மதத்தில் இடமில்லை; நாயன்மார்களைக் காணுங்கள்! ஆழ்வார்களை நோக்குங்கள்! அவர்களுள் தீண்டப்படாதவரும் உளர்'' என்றெல்லாம் தத்தம் சமயச் சார்பில் உணர்த்த முற்பட்டாலுங்

கூட, அனைவருக்கும் குருமார்களாகும் நிலையைப் பிறப்பு வழிசாதி அடிப்படையிலேயே புரோகித வகுப்பார் நிலை நாட்டிக் கொண்டனர்.

புரோகித ஆதிக்கம்:

அவர்கள், முதல் காலகட்டத்தில் பிராமண வகுப்பாருக்கு மட்டும் சடங்கு செய்யவே, தமது சாத்திரம் அனுமதி வழங்கியுள்ளதாகக் கூறிவந்தனரேனும் பிற மாநிலங்களில் இருந்து வந்து குடியேறிய புரோகித — வகுப்பார் எண்ணிக்கை பெருகப் பெருக, அவர்களுக்கெல்லாம், அர்ச்சகர் ஆகும் வாய்ப்பின்மையைக் கண்டு, பிராமணர் அல்லாத பிற வகுப்பாருக்கெல்லாம் புரோகிதம் செய்யத் தீர்மானித்து, அவ்வாறே செய்யத் தலைப்பட்டனர் என்பது வரலாறு. எப்படியோ சைவ-வைணவச் சமயங்களின் வளர்ச்சியில் ஏற்பட்ட முறைகேடு, புரோகிதமுறை புகுத்தலுக்கும் வடமொழி ஆதிக்கத்துக்கும் ஏதுவாகி நின்றது. இராசராச சோழன் காலம் முதலாக மன்னர்களால் கட்டப்பட்ட பெரும் பெருங்கோயில்களில் எல்லாம், வேதம் பயின்றோரே அர்ச்சகராக்கப்பட்டதும், வடமொழி, அருச்சனை மொழியானதும், புரோகிதர்கள் பிற மக்களால் உயர்த்திப் போற்றப்படும் நிலையை ஏற்படுத்தியது. சைவ, வைணவத்துடன் வைதிகம் இரண்டறக் கலந்து, அந்தச் சமயங்களில், தம் பழக்கத்தாலேயே பற்றுக் கொண்டிருந்த மக்களை எல்லாம், புதிய வழக்கமாகப் புகுத்தப்பட்ட வைதிக முறைக்கு ஆட்படச் செய்தது எனலாம். அதன் பயனே குல வேற்றுமை அடிப்படையில் தனித்தனிக் கூட்டமாகவோ, தொழில் வழிப்பட்ட பல்வேறு சமூகமாகவோ தம்மை எண்ணிக் கிடந்த மக்கள், பிறவி உயர்வு தாழ்வு நிலைநாட்டும் வருண தருமத்தை ஏற்பவர்களாகவும் நம்புபவர்களாகவும் ஆயினர். மேலும் அதுவே தெய்வ ஏற்பாடு என்னும் கூற்றினை நம்பத் தலைப்பட்டதால், தம்மைச் சூத்திரர் என்று இழிவுபடுத்தினும் அதை வெறுக்கவும் இயலாதவர்களாக ஏற்றனர். எந்த அளவு வைதிக ஆதிக்கத்திற்கு அடிமைப் பட்டனர் என்பது தம்மைச் சற்சூத்திரர் என்று கூறிக் கொள்வதிலேயே பெரும் மதிப்புப் பெற்றுவிட்டதாகக் கருதிக் கொண்டனர் என்பதிலிருந்து விளங்கும்.

ஒவ்வொரு குலத்தாரும் தம்மை ஏதேனும் ஒரு வகுப்பாரை விட உயர்ந்தவர் (பிறவியால்) என்று சொல்லிக் கொள்வதிலேயே, தமது பெருமை காப்பாற்றப்படுவதாக எண்ணி, மற்ற மக்களை எல்லாம் தம்மினின்றும் வேறுபடுத்திடவே முனைந்தனர், மற்றவர்களை ஒதுக்கி, தாம் விலகி நிற்பதே 'சாதிப் பெருமை' ஆயிற்று. 'குலம்', 'கோத்திரம்' என்னும் சொற்கள் குடிவழியையே குறிப்பன. மாறாகப் பிறவியால் உறும் உயர்வு தாழ்வு காட்டும் குறியீடான 'சாதி' என்னும் சொல், நாளடைவில் வழக்குப் பெற்றுப் பரவலாயிற்று. தமிழ்நாட்டில் மன்னர்களாக வந்தவர் பலர், அர்ச்சகர்களையே தமது குருமார்களாக ஏற்கத் தலைப்பட்ட நிலையில், அவர்களிடமே ஆலோசனை பெற்றதால், அவர்கள் 'மனு தர்மத்தையே' நடைமுறைப்படுத்தியதன் பயனாகச் 'சாதி' எண்ணம் தடித்திட ஏதுவாயிற்று.

தமிழர் உரிமை உணர்த்த எழுந்தவர்:

தமிழர் மொழிக்கோ, பண்பாட்டுக்கோ, நாகரிகத்துக்கோ ஒவ்வாத நேர்முரணான 'மனுநீதி', திருவள்ளுவர் தோன்றிய மண்ணிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டதென்றால், தமிழ் மக்கள் எந்த அளவு ஒரு கண்மூடித்தனத்திற்கும், அடிமை மனப்பான்மைக்கும் ஆட்பட்டிருந்தனர் என்பதைச் சிந்திப்போர் தெளியலாம்.

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகவே ஆரிய வைதிகம் தமிழ் மண்ணில் இடம்பெற்றது எனினும், ஆயிரத்து அய்ந்நூறு ஆண்டுகளாகவே வைதிக எண்ணங்கள் மக்களிடம் பரவி மனுதர்மக் கொள்கை வேரூன்றச் செய்து, ஆயிரம் ஆண்டுகளாகவே புரோகித மேலாதிக்கத்தை நிலைநிறுத்தினர் எனலாம். அதன் பயனாக மதவழி வேற்றுமையும், உரம்பெற்றுத் தமிழர்கள் ஒன்றுபட முடியாதவர்களாக ஆயினர். ஒவ்வொரு மதத்திலும் பல உட்பிரிவு, ஒவ்வொரு சாதியின் பெயரிலும் பலநூறு பிரிவு. இவை தமிழன் ஒவ்வொருவனையும் ஒரு குறுகிய வட்டத்திற்கு உட்பட்டனவாக ஆக்கி, சிறு கூட்டத்துடன் அவன் உறவை முடித்து, எல்லை கட்டியது. வெறும் பாரம்பரியப் பட்டப் பெயர்களையும், குடிவழிக்குலப் பெயர்களையும், தனிச்சாதிப் பெயராகக் கருதத் தலைப்பட்டனர் தமிழர் எனில், வேறென்ன இழிவு வேண்டும்?

எனவேதான் தமிழர் நலனைக் காக்கவும், உரிமையை நிலை நாட்டவும் முனைந்த சிந்தனையாளர் பெரியார் அவர்கட்கு, சாதி ஒழிப்பும், தீண்டாமை ஒழிப்பும் முக்கியமான குறிக்கோள் ஆயிற்று. அவற்றிற்காகவே வகுப்புவாரி உரிமை நாட்டல், வைதிக, மனுநீதி எதிர்ப்பு, புரோகிதச் சடங்கு எதிர்ப்பு, வடமொழி மேலாண்மை எதிர்ப்பு, புராணக் கண்டனம், இதிகாச மறுப்பு மகளிருக்கு உரிமை நிலை முதலான கொள்கைகளைப் பரப்புவது இன்றியமையாத கடமையாயிற்று. இவைகளின் பிடிப்பைத் தகர்த்திட, தமிழர்களிடம் இடம் பெற்ற மூடநம்பிக்கைகளை அலசி ஆராய வேண்டியதாயிற்று.

சாதி உணர்வின் தடிப்பு:

''மனிதன் எல்லோரும் ஓர் சமம்!'' என்று கூறிவிட்டால் மட்டும் சமத்துவம் தழைத்துவிடாது. தாழ்த்தப்பட்டவன் மனதில் தன்னம்பிக்கை துளிர்க்கவும், ஆதிக்க நிலையினர் மனதில் தாம் இழைக்கும் அநீதி விளங்கவும், பல படிநிலை களுக்காளானோர் மனதில் தெளிவு பிறக்கவும் வழி காணப்பட வேண்டும். அதுதான் பெரியாரின் தன்மான இயக்கம், மேற் கொண்ட பகுத்தறிவு விளக்கப்பணி. இது தமிழ் மக்களின் வாழ்வுக்காக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமையை நிலைநாட்டுவதற்காக என்றாலும், அதனை அம்மக்கள் தெளிவதும், துணிந்து துணையாவதும், அவர்தம் அறியாமை யால் எளிதாகவில்லை. மற்றொருபுறம் ஆதிக்கபுரியினரின் எதிர்ப்பு எல்லா வகையிலும் வடிவெடுத்தது.

இன்றுங்கூட வகுப்புவாரி உரிமை அடிப்படையில், பிற் படுத்தப்பட்டோர்கட்கான இடஒதுக்கீடு, மாநிலத்தில் பல ஆண்டுகளாகவே நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னும், அண்மை யில் மத்திய அரசு மண்டல் கமிஷன் அறிக்கையை ஏற்றுப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு என்று அறிவித்தவுடன், எத்தனை எதிர்ப்பு, எங்கெங்கிருந்து கிளம்புகிறது என்பதைக் காண்போர் 'சாதி' உணர்வு எந்த அளவு தடித்துப்போயுள்ளது என்பதைத் தெளியலாம். அரசுப் பணிகள் எவையானாலும், அவை தம் பாட்டன் வீட்டுச் சொத்து என்று உரிமை கொண்டாடும் நினைப்பு, எவ்வளவு

உரம் ஏறி இருந்தால், இந்த எதிர்ப்பு உருவாகும்? அந்நிய ஆதிபத்தியம் என்று சுட்டப்பட்ட வெள்ளையர் ஆட்சிக் காலத்திலேயே, அவர்களிடம் பதவிப்பங்கு கேட்டுப் பெற்று, வெள்ளை இனத்தவருடன் உறவாடி ஆதிக்கம் பெற்ற மேல் வகுப்பார், இத்தனை ஆண்டுகள் அப்பதவிகளை ஏகபோகமாக அனுபவித்த பின்பும், மத்திய அரசில் மற்ற வகுப்பார் ஓரளவு நியாயமான பங்கு பெறுவதைக் கூடத் தாங்கிக்கொள்ள முடியவில்லையே? ஏன்? இவர்கள்தான் இந்தியாவை ஆண்ட வெள்ளை நிறத்தாருக்கு வாரிசுரிமை பூண்டவர்கள் என்று கருதுகிறார்களோ? அன்றி ஆளப்பிறந்த இனம் என்னும் நினைப்போ? மற்ற மக்கள் இழந்திருந்த உரிமையைப் பெறுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் கூவுகின்றனர்.

இளைய தலைமுறை நினைத்துப் பார்க்க:

இருபதாம் நூற்றாண்டில், நம் நாட்டின் வரலாறு தெரிந்த பின்னும், 'இனம்' விளங்கிய பின்னும், 'உரிமை' உணர்வு வளர்ந்த பின்னும், 'நியாயம்' விளக்கப்பட்டபின்னும், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, டாக்டர் அம்பேத்கர், இராம் மனோகர் லோகியா போன்றவர்கள் தோன்றி உரிமைப் போராட்டங்கள் நடத்திய பின்னரும், பிற்படுத்தப்பட்ட வகுப்புக்கு இடஒதுக்கீட்டுக்கு எதிர்ப்புக்காட்ட, வடபுலத்தில் மாணவர்களையே தூண்டிவிட்டு ஒரு கிளர்ச்சி நடத்தும் நிலையும், ஏடுகளில் எழுதக்கூடிய பேனாக்கள் பலவும் எதிர்த்து எழுதும் நிலையும் உள்ளது எனில், 1925ல் பெரியார் இந்த இயக்கத்தைத் தொடங்கியபோது, என்ன நிலை இருந்திருக்கும் என்பதை இளைய தலைமுறையினர் எண்ணிப் பார்த்திட வேண்டும்! ஆம், அன்று சுற்றுமுற்றும், எப்பக்கத்தில் திரும்பினாலும் எதிர்ப்புத்தான். சனாதனம் சல்லடம் கட்ட, வைதிகம் வசைமொழி பாட, சைவம் சாபமிட, வைணவம் கண்டனம் பொழிய, மடங்கள் ஆர்ப்பரிக்க, மிட்டாமிராசு மிரட்டல்களில் ஈடுபட, தமிழ்ப்புலவர்கள் வக்கணை பேச, 'ஆரிய மாயை' ஆதிக்கம் செலுத்திய சூழலில், பெரியாரின் பணி எப்படிப்பட்ட எதிர்ப்பைத் தாங்கியிருக்கும்? 'ஆரிய

மாயை', தேசியத்தைத் துணைக்கழைத்து எதிர்ப்பு அணியைப் பலப்படுத்திக் கொண்டது. ஆகவேதான் தேசியத்தையும் சேர்த்து எதிர்த்து நிற்பதைத் தனது கடமையாக மேற்கொண்டார் பெரியார்!

ஒரு நூற்றாண்டுக்கால வரலாற்றை உருவாக்கும் பெரும் பணியை, ஓர் ஆயிரம் ஆண்டுக்காலப் பழமைப் பிடிப்பை விலக்கும் தொண்டினை, அய்யாயிரம் ஆண்டு வளர்ந்த மொழியான தமிழின் உரிமையை நிலைநாட்டும் குறிக்கோளை, தொன்மை மிகுந்ததால் தன்னை மறந்து இழிந்த தமிழனை மனிதனாக்கும் கடமையை ஒன்றாகவே மேற்கொண்டார் பெரியார்!

அவரது சுயசிந்தனைத் திறன் பலநூறு ஆயிரம் இளைஞர்களைத் தன்மான உணர்வு கொண்டவர்களாக, பகுத்தறிவைப் பயன்படுத்தும் ஆற்றல் மறவர்களாக உயர்த்தியது. ஒரு மாமனிதராக ஒப்பற்ற பேரறிஞர் அண்ணாவை நாட்டுக்கு வழங்கியது. ஒரு பாவேந்தரான புரட்சிக் கவிஞரைத் தமிழ்மொழிக்கு வழங்கியது. ஒரு முத்தமிழ் அறிஞராகக் கலைஞரைத் தமிழினத்துக்கு வழங்கியது. அந்தச் சிந்தனை ஓட்டம் எந்நாளும் தடைப்படாமல் தொடர்ந்து செயற்பட, இன்றைய இளைய தலைமுறையினர் சிந்திக்கும் ஆற்றலை — திறனை — செம்மையாக வளர்த்துக் கொள்வார்களாக! இழந்த உரிமையைப் பெற்றிட! உலக வாழ்வில் வென்றிட!

வாழ்க பெரியாரின் சிந்தனை!

7. மனிதம் வளர்த்த மாமனிதர்!

மனித வாழ்வும் அறிவும்:

தமிழ்நாட்டின் வரலாற்றில் யாருக்கும் உரித்தாகாத ஒரு தனி இடத்தைப் பெற்ற பெருமைக்குரியவர் நமது அருமைத் தந்தை பெரியார் அவர்கள்.

துள்ளிக் குதிக்கும் இளமைப் பருவம் முதல் எழுந்து நடக்கவே தள்ளாடும் முதுமை வரை, தாம் கண்டதையும் கேட்டதையும் கருத்தில் கொண்டு, ஆராய்ந்து நோக்கி அவற்றின் நியாய — அநியாயங்களைப் பகுத்தறிந்து உணர்ந்து, உண்மை கண்டு, அதனை உலகோர்க்கு உணர்த்துவதையே தமது கடமையாகக் கொண்டார்.

அவர் இளமையில் பயின்ற ஏட்டுக் கல்வி குறைவுதான் எனினும் — தாமாகப் படிக்கக் கூடிய ஏடுகள் பலவற்றையும் படித்து, அவற்றையும் தமது அறிவு கொண்டு ஆராய்ந்து, அவற்றின் நன்மையும் தீமையும் தெளிந்து மக்களுக்கு விளக்கி உரைத்தார்.

எப்படிப்பட்ட பெருமைக்குரியவர் கூறியதாயினும் — எவ்வளவு போற்றப்படும் ஏட்டில் கண்டதாயினும் — தமது அறிவுக்குச் சரியென்று தோன்றாத எதனையும் ஏற்க மறுத்தார் என்பது மட்டுமன்றி, எதிர்க்கவும் — கண்டிக்கவும் பின்வாங்கவில்லை.

எதுவானாலும் — அது ஏன்? எதற்காக? எப்படி? என்ன பயன்? என்னும் கேள்விகட்கு அவற்றை இலக்காக்கினார்.

மனித வாழ்வு — அறிவை அடிப்படையாகக் கொண்டே நாளும் வளர்ச்சி பெறுவது. ஆதி நாட்களில் மனிதன் எத்தனையோ துன்பங்களுக்கிடையில், உயிர்க் கேடுகளுக்கிடையில், தனது அறிவைப் பயன்படுத்தி, உயிரைக் காத்துக் கொண்டு முன்னேற்றம் கண்டான். அந்த அறிவு வளர்ந்து — விரிந்து பலதுறைகளில் பயின்று, ஆழ்ந்து நுணுகி ஆராயும் திறம் பெற்று, மனித வாழ்வை மேலும் மேலும் மேம்பாடு அடையச் செய்து வந்துள்ளது.

அறிவே வளர்ச்சிக்கு அடிப்படை:

குகைகளிலும், மரக்கிளைகளிலும் தங்கி இருந்து — மரப் பட்டையும் தழையும் உடுத்து — வனவிலங்குகளை வேட்டையாடி — சக்கிமுக்கிக் கல்லைக்கொண்டு கனல்மூட்டி — வெந்ததைத் தின்று வாழ்ந்த மனிதன் — பேச்சுமொழி வளர்த்து, குடும்ப வாழ்க்கையும், சமுதாயக் கூட்டு வாழ்க்கையும் கண்டு, வேளாண்மையில் தேர்ந்து, வணிகத்தில் வளர்ந்து, ஆட்சி முறை கண்டு, விஞ்ஞான வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள இன்றளவும் பெற்றுள்ள வளர்ச்சிக்கு அடிப்படை அவனது அறிவே.

குகையில் வாழ்ந்த மனிதன் வழி வந்தவன்தான் விண்வெளியில் வலம் வருகிறான். சக்கிமுக்கிக் கல்லைத் தேடியவன் வழியினன்தான் சந்திர மண்டலத்தில் இறங்கி ஆராய்ச்சி நடத்துகிறான். இந்த ஆற்றலைத் தந்தது அவனது விஞ்ஞான அறிவே. ஆனால், அந்த அறிவினைப் பயன்படுத்தாதவர்களாக — அதனைக் கைக்கொண்டு செயல்படாதவர்களாக — மாறாகப் பழைய நிலையில் விளைந்த எண்ணங்கள் — கருத்துக்கள் — இவைகளினின்றும் விடுவித்துக் கொள்ளாதவர்களாக வாழுகின்ற மக்கள் மிகப் பலர். அவருள்ளும் நம் நாட்டவர்களே பெருந்தொகையினர். இந்த நிலையை — இழிநிலையைக் கண்டறிந்த பெரியார் அவர்கள், — அந்த நிலையை மாற்றிடும் பெரும் முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

சாதி ஒரு சூழ்ச்சிப் பொறி:

''மனிதனை மனிதன் நெருங்கக் கூடாது — காணக்கூடாது — தீண்டக்கூடாது'' — என்கிறார்களே. யார் அவர்கள்? என்றார் பெரியார்.

'மேல் சாதிக்காரர்கள்' என்ற பதில் வந்தது.

அப்படி மனிதனை மனிதன் இழிவுபடுத்த ஒரு மேல்சாதியா? அந்த மேல்சாதிக்காரன் வளர்க்கும் மாடுகளிலும் கீழோ மனிதன்? நாயினும் இழிந்தவனோ மனிதன்? அந்த மேல்சாதி ஒழிக என்றார். அவர்கள் மற்ற மனிதர்களை இழிவுப்படுத்தும் அநீதியைக் கண்டித்தார்.

இது வருணாசிரம தருமம் அல்லவோ? நால்வகை சாதி முறையைத்தானே நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம்? அதுவும் தவறா? என்றனர், வர்ணாசிரம மனப்பான்மையினர்.

அது எப்படி உண்மையாகும்? பிறப்பிலே உயர்வும் தாழ்வும் இயற்கையில் எப்படி இருக்க முடியும்? அது செயற்கையாகக் கற்பிக்கப் பட்டதுதானே! சாதிப் பாகுபாடே ஒரு சூழ்ச்சிப் பொறி, முறைகேடு, அநீதி என்றார் பெரியார்.

அதுவே, வேதமும் ஆகமங்களும் கீதையும் உணர்த்திடும் உண்மை, — கண்ணன் படைப்பு நால்வகைச் சாதி என்றனர்.

அந்த வேதமும் கீதையும் அறிவுக்கு ஒத்தனவல்லவே? அவை உரைக்கும் கருத்து ஆரியத்தைக் காக்க வகுக்கப்பட்ட சதித் திட்டம். அதை ஏற்பது மடமை — எதிர்ப்பதே என் கடமை என்றார் பெரியார்.

இதிகாசங்கள் முதற்கொண்டு மனுநீதி சாத்திரம் வரையில் வற்புறுத்தும் முறையாயிற்றே வர்ணாசிரமம் என்றனர். அதனால்தானே தமிழர்கள் அடிமைகளாக, தாசர்களாக ஆக்கப்பட்டனர். எனவே அவற்றை ஒழித்தால்தான் — தமிழன் தலைநிமிர முடியும் என்றார் பெரியார்.

இவையெல்லாம் கடவுளின் ஏற்பாடு — தெய்வக் கட்டளை, மீறுவது பாபம் என்றனர் வைதீகர்.

அப்படி ஏற்பாடு செய்தவன் கடவுளாகமாட்டான். இப்படிப் பட்ட கட்டளை இடுவது தெய்வம் ஆகாது. இதை மீறுவது பாபம் என்றால் நான் அதனை ஏற்கத் தயார்! என்றார் பெரியார்.

இதுதான் நாத்திகம், கடவுளை நம்பாதவர் பேச்சு என்றனர், ஆத்திகர்.

இப்படிப்பட்ட பேதங்களை வளர்க்கும் கடவுளை நம்புவதை விட, நாத்திகனாக இருப்பதே மேல்; நான் நயவஞ்சக ஆத்திகனாக இருக்க விரும்பவில்லை — என்றார் பெரியார்.

இப்படியெல்லாம் கடவுள் நிந்தனை செய்பவர்கட்கு ரவுரவாதி நரகம் தான் சம்பவிக்கும் என்றனர் வைதீகர்கள்.

சாதி வேற்றமையை ஒப்புக்கொண்டு, பிறப்பிலே இழிவை ஏற்றுக்கொண்டு கண்ணுக்குத் தெரிந்த இவ்வுலகில் கருத் தறிந்தும் அநீதியை ஏற்றுக்கொண்டு, தலைமுறை தலைமுறை யாக அழிவதைவிடக் கண்ணுக்குத் தெரியாத — யாருங்காட்டாத ரவுரவாதி நரகம் எவ்வளவோ மேல் என்று சுடச்சுட பதில் அளித்தார் பெரியார்.

எதிர்ப்புகளே — எரு ஆயிற்று!

தந்தை பெரியாரின் 'அறிவு' இப்படித் தான் நீதி — நியாயத்துக்குத் துணிச்சலுடன் வாதாடியது. அதைக் கண்ட வைதீகர்கள் அவரை — பிராமணத் துவேஷி, மத நிந்தகர் சாத்திர விரோதி, நாத்திகர் என்றெல்லாம் கடுமையாகக் கண்டனம் செய்தனர்.

தீண்டாமையை எதிர்த்த தீரர்,
சாதி வேற்றுமையைச் சாடிய வீரர்,
மத மூடநம்பிக்கையைத் தகர்த்த அறிஞர்,
சமத்துவ சகோதரத்துவவாதி —
மனித இன உரிமைக் காவலர் —
நீதிக்காகக் கடவுள் தத்துவத்தையே ஆராய்ந்தவர்

என்று பாராட்ட வேண்டிய தகுதியுடையவரை, தமது ஆதிக்கம் பறிபோகிறதே என்னும் ஆத்திரத்தில், அவரது கருத்துக்களைப் பரவ விடாமல் தடுக்க — அவரைக் குறித்து எப்படிச் சொன் னால் மக்கள் அஞ்சுவார்களோ, அப்படியெல்லாம் தூற்றி உரைக்கலாயினர்.

பெரியார் அவர்களைப் பேய் — பூதம் — பிசாசு என்றுதான் அவர்கள் அர்ச்சிக்கவில்லை. ஆனாலும், அவைகளைப் பற்றி எண்ணிடும்போது மக்கள் அஞ்சுவது போன்று இவரைப்பற்றி எண்ணும்போதே அஞ்ச வேண்டும் என்று கருதினர். ஆனால் பெரியார், 'மக்கள் அறியாமையில் வளர்த்த எண்ணமே, பேய்-பூதம்-பிசாசு' எனும் கற்பனைகள், என்று அவை குறித்தும் மக்களுக்கு விளக்கமளிக்கத் தவறவில்லை.

பெரியார் அவர்கள் அந்தக் கண்டனங்களைக் கண்டு அஞ்சிக் கலங்கவில்லை; மாறாக அதனையே உண்மையைத்

தெளிவுபடுத்தும் தமது பணிக்குக் கிடைத்த பாராட்டாகக் கொண்டார். தமது கொள்கைப் பயிர் வளர அதையே — எருவாகப் பயன்படுத்தினார்.

பெரும்பான்மையான நாட்டு மக்கள் வைதீகர் எதை வெறுக்கின்றார்களோ அதுதான் தமது உரிமை காப்பது என்றும், அவர்கள் கருத்துக்கு மாறானதே உண்மை — நியாயம் — நீதி என்றும் உணர்ந்து கொள்ளவேண்டும் என்றும் விளக்கம் அளித்தார்.

ஆரிய இன — மத — சாதி ஆச்சார அடிப்படைகள் யாவும் தகர்க்கப்பட்டாலன்றித் — தமிழன் — திராவிடன் அறிவு வழிப்பட்ட உரிமை உள்ள சமத்துவ வாழ்வு பெறமுடியாது என்பதைப் பெரியார் தெளிவுபடுத்தினார்.

மேலும் பழையனவோ, புதியனவோ எவையாயினும் அறிவுக்கு ஒவ்வாத — பயன் இல்லாத அத்தனையையும் பெரியார் எதிர்த்தார். அப்படி அவர் எதிர்ப்பதை — ஏற்காதவர்கள் பற்றி அவர் கவலைப்பட்டதில்லை. தாம் அவற்றை எதிர்ப்பதனால் அவற்றைப் பற்றிப் பலர் சிந்திக்க முற்படும் அந்த அளவிற்கு அது பயன்தரும் என்றே கருதினார்.

பெண்ணுரிமைக்கு ஒரு குரல்:

பெண்ணடிமை தீர்ந்தால்தான் — மக்கள் அடிமை மனப்பான்மை நீங்கும் என்று கண்ட பெரியார் — பெண்களுக்கு மட்டும் என அவர்களை அடக்கி — ஒடுக்கிக் கட்டுப்படுத்தி வைப்பதற்காகக் கூறப்பட்ட கருத்துக்களை — அதனோடு கலந்த கற்பனைகளை எல்லாம் கண்டிக்கலானார்.

பெண்கள் பாபப் பிறவிகள் என்பதாகக் கருதி அவர்களைத் தேவதாசிகளாக — விற்பனைப் பண்டமாக — பிள்ளை பெறும் இயந்திரமாக — தொண்டு செய்யும் தகுதியன்றி வேறு தகுதியற்றவராக — விதவையாகி விட்டால், மறுமண உரிமையற்றவராக — சொத்துரிமை இல்லாதவராக அடிமைப்படுத்தப் பட்டிருந்த நிலையை மாற்றுவதற்கான புதிய சிந்தனையை வளரச் செய்தார்.

புரோகிதச் சடங்குகள் நீக்கிய திருமணம்,
சாதி வேற்றுமை ஒழிக்கும் கலப்புத் திருமணம்,
விதவைப் பெண்ணின் மறுமணம்

முதலாக மனித வாழ்வில் இடம்பெறும் தலையான திருமண நிகழ்ச்சியைச் சமுதாய மாற்றத்துக்கான உரிமை உணர்வு தழைக்கும் முறையில் நடத்தும் புதுமை வழிகண்டார்.

நீத்தார் நினைவு நாளாயினும், அந்நிகழ்ச்சியிலும் பகுத் தறிவுச் சிந்தனை இடம்பெறும் வழிகண்டார்.

மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளிலும், அனைத்து நிகழ்ச்சிகளிலும், மதத்தின் பிடிப்பும், அதனால் ஏற்படும் மனப்பான்மையும் தகர்க்கப்படுவதற்கு வழி காணும் பணியே அவரது பணியாயிற்று.

ஒழுக்கம் — நேர்மை — உண்மை — கடமை — தருமம் — புண்ணியம் — கல்வி — கற்பு — திருமணம் முதலான பல்வேறு பொருள் குறித்தும் — அவற்றின் அடிப்படையை — அவை பயன்படும் வகையைப் பெரியார் ஆராய்ந்தார். அவற்றின் பழைய மதிப்பீட்டை அப்படியே ஒப்புக் கொள்ளத் தேவையில்லை என்பதும், மனிதனின் அறிவு தெளிவடைய அவையெல்லாம் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும் என்பதுமே அவரது நோக்கமாயிற்று.

பெரியாரின் குறிக்கோள், எல்லோரும் ஓர்குலம் — ஓர் சமம் — ஓர் நிறை என ஒக்கலாக வாழ்வதற்குத் தடையாக — இடையூறாக உள்ள எதனையும், அறிவு வழியில் தகர்த்து எறிந்து சமத்துவ — சுயமரியாதை வாழ்வை அனைவருக்கும் உரித்தாக்குவதே எனலாம்.

முழு மனிதர் பெரியார்!

அவரது அறிவும், ஆற்றலும்; கொள்கையும், குறிக்கோளும்; கருத்தும், விளக்கமும்; தெளிவும், நுட்பமும்; எழுத்தும், பேச்சும்;

தொண்டும், தியாகமும் — அவர் மட்டும் வேறு ஓர் இனத்தில் பிறந்திருந்தால் இன்றைக்குள்ள மக்களிடையே வளரும் மனக் கசப்பையும், வகுப்புப் போராட்டங்களையும், தொல்லை களையும் — துயர விளைவுகளையும் மாற்ற வந்த ஒரு 'சகத்குரு' வாகக் கூடப் போற்றப்பட்டிருப்பார். போற்றப்பட்டிருந்தாலும் — பெரியார் அதையும் கண்டித்துக் காரணத்துடன் விளக்கி யிருப்பார். ஆம்! அவர் 'தான் ஒரு மனிதன்' — எல்லோரையும் போல ஒருவன் — என்று விளக்கியுரைத்து, அதிலே 'மனிதனை மனிதனாகக் காத்திடும் அறிவு'க்குத்தான் தலைமை என்று அறிவுறுத்துவார்.

ஆம்! பெரியார் ஒரு மனிதன் — முழு மனிதன் — நிறை வுடைய மனிதன் — அறிவைப் பயன்படுத்தி வாழ்ந்த மனிதன் — மனிதர்களை எல்லாம் தமக்குச் சமமாக மதித்த மனிதன் என்று அவரை மதித்துப் போற்றுவதையும் அந்த அறிவு நெறியைப் பின்பற்றுவதையுமே அவர் விரும்பினார் என்பதை நாம் மறத்தலாகாது.

வாழ்க பெரியார்!

வளர்க மனிதநலம்!

8. தமிழ்வானின் விடிவெள்ளி!

இனஉணர்வுப் புரட்சியாளர் தந்தை பெரியார் அவர்களின்
பிறந்த நாள்,
வீழ்ச்சியுற்ற தமிழரின் வாழ்வில் எழுச்சி பிறந்த நாள்!
'இனமான முள்ள தமிழன்' பிறப்பெடுத்த நாள்!
'தன்மான முழக்கம்' ஒலித்த நாள்!
'பகுத்தறிவு ஒளி' பரவிய நன்னாள்!
'அடிமை மனப்பான்மை' ஒழித்திட்ட நாள்!
'பிறமொழி ஆதிக்க எதிர்ப்பு' முழங்கிய நாள்!
'தீண்டாமை ஒழிப்பு' உருக்கொண்ட நாள்!
'பெண்ணடிமை மறுப்பு' அரும்பிய நாள்!
'மூடநம்பிக்கைகள்' முறியடிக்கப்பட்ட நாள்!
'சமத்துவச் சமுதாய வாழ்வு' அரும்பச் செய்த நாள்!
'தமிழரின் எண்ணத்தில்' ஏற்றம் கண்ட நாள்!
ஆம்! தமிழரின் வாழ்வில் வைதிகத்தின்
ஆதிக்கத்தினால் மண்டிக்கிடந்த, கெடுமதிகளை
அழித்தொழித்திடத் துவங்கிய நாள்!
'தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின்
உரிமை வாழ்வுக்குக் கொடியுயர்த்திய திருநாள்!'
ஆம்! உணர்விழந்து, உயிரிழந்து, செயலிழந்து
சீந்துவாரற்றுக் கிடந்த இனமக்கள், உரிமை
உணர்வு பெற வழிகண்ட நாள்!
ஒரு நூற்றாண்டுக்கால மாற்றத்திற்கு வித்திட்ட
ஒரு பேரியக்கமே பிறந்த நாள்!

மக்கள் எல்லோரும் எளிதில் ஏற்கக் கூடிய விடுதலை இயக்கமான இந்திய தேசியக் காங்கிரசில் ஈடுபட்டு, தொண் டாற்றி, முரசுகொட்டி, மறியல் நடத்தி, சிறைப்பட்டு வதைப்பட்ட காலத்திலேயே சமுதாயக் கேடுகளையும், காங்கிர சாரின் அதிகார வேட்கையையும் எண்ணிப் பார்த்து, அப்படிப் பட்டவர்களின் இயக்க வெற்றி, உயர்வகுப்பாரின் ஆதிக்க நிலையை நீடிக்குமேயன்றிப் பெரும்பான்மை இன மக்களுக்கு

வாழ்வளிக்க வழி செய்யாது என்று உணர்ந்து, வேறு வழி காண வேண்டும் என்னும் முடிவுடனேயே காங்கிரசை விட்டு 1925-ஆம் ஆண்டில் வெளியேறினார் தந்தை பெரியார்!

எதிர்த்தவரே பின்னர் ஏற்றனர்!

தந்தை பெரியார் படித்துப் பட்டம் பெற்றவரல்லவராதலின், அறிஞர்களில் ஒருவராக மதிக்கப்படாத காலம். காங்கிரசு கட்சியில் வழக்கறிஞர்கள், டாக்டர்கள், பெருந்தனக்காரர், உயர் வகுப்பார், பலராக இருந்தமையின் பெரியார் (ஈ.வெ.ரா.) அவர்களின் இயற்கை அறிவாற்றலையோ, சிந்தனைத் திறனையோ, மதி நுட்பத்தையோ, மற்றவர்கள் புரிந்து கொள்ளவில்லை. எனினும் அவரது அயராத உழைப்பு, அஞ்சாமை, தியாக மனப்பான்மை, கொள்கை உறுதி ஆகியவற்றை உணர்ந்து மதித்து வந்தனர்.

பெரியாரின் சுயசிந்தனையில் பிறந்த எண்ணங்களையும், அவர் நாடிய சமுதாய மாற்றத்தையும் காங்கிரசு கட்சி அன்று ஏற்றிடும் நிலையில் இல்லை. ஏற்றிடுவதற்கு எண்ணிப் பார்த்திடும் நிலையிலும் இல்லை. அதன் விளைவுதான், நெல்லை மாவட்டம், சேரன்மாதேவியில் வா.வே.சு. அய்யர் பொறுப்பில் நடைபெற்ற குருகுலத்தில் பயின்ற இளம் மாணவர்கட்கு — சாதி ஆச்சாரப்படி வெவ்வேறு இடத்தில் தனித்தனியாக உணவளித்து வந்த முறையை எதிர்த்துப் பெரியார் வாதாடியதாகும். பெரியாரின் சாதி வேற்றுமை எதிர்ப்பு உணர்வு, இளஞ்சிறாரிடையே வர்ணாசிரமம் நாட்டப்படுவதை எதிர்த்துப் போராடச் செய்தது.

கேரளத்தின் வைக்கத்தில் தீண்டாமை நிகழ்த்திய கோரத் தாண்டவத்தை எதிர்ப்பதிலும் போராடுவதிலும் அதே உணர்வு தான் அவரை உந்தியது.

அந்த நிகழ்ச்சிகளும், நாட்டு நடப்புக்களும் அவரது உள்ளத்தில் ஒரு கேள்வியை எழுப்பி வந்தது. இந்த நாடே சுதந்திரம் பெற்றாலும், வெள்ளையரே வெளியேறிவிட்டாலும், அந்தச் சுதந்திரம் எல்லா மக்களுக்கும் சுதந்திர வாழ்வு அளிக்குமா? மாறாக வருணாசிரம தருமப் பிடியில் சிக்குண்டு, ஆதிக்க சாதியினர் மற்ற மக்களை அடிமைப்படுத்திச் சுரண்டும் நிலையே நீடிக்குமா? என்பதே அந்தக் கேள்வி. அவர் கண்டறிந்த பதிலோ, அரசியல் சுதந்திரத்தால் மட்டும் எல்லோரும்

உரிமை வாழ்வுபெறும் நிலை ஏற்படாது. சாதிமத ஆதிக்கம் ஒழிந்தால் தவிர — மக்கள் எல்லோரும் சுதந்திரமாக வாழும் நிலை பிறக்காது என்பதே.

தன்மான உணர்வு:

அந்தக் கருத்தை மெய்ப்பிக்கும் சான்றாகவே, தந்தை பெரியாரின் வகுப்புரிமைப் பங்கீட்டுத் தீர்மானம் காஞ்சிபுரம் காங்கிரசு மாநாட்டில் தோற்கடிக்கப்பட்டது. ஈ.வெ.ரா. அவர்கள், காங்கிரசை விட்டுத் தமது தோழர்களுடன் வெளியேற அது காரணமாயிற்று.

அன்று அவர் வெளியேறாதிருந்தால்? அந்தக் கருத்தும், கொள்கையும், துணிச்சலும் தோன்றாமலிருந்தால்? அப்படி ஒரு துணிச்சல் மிக்க மனிதர் ஒரு அய்ம்பதாண்டுக் காலத் தமிழ்நாட்டு வரலாற்றில் இடம் பெறாமலிருந்தால்? என்ன கதிக்கு நாடும் நாமும் தள்ளப்பட்டிருப்போம் என்பதை எண்ணிப் பார்க்க நெஞ்சம் நடுங்குகின்றது.

செல்வாக்கும், புகழும், விளம்பரமும், பெற்றவர்களுடன் ஏற்பட்டிருந்த நட்பு, தொடர்பு, பழக்கம் ஆகியவற்றைப் பற்றிப் பொருட்படுத்தாமல் உதறிவிட்டு, ஒரு பெரிய கட்சியின் தலைவராக இருக்கும் மதிப்பையும் புறக்கணித்துவிட்டு, தன்னையே நம்பி, தன் முயற்சி, உழைப்பு இவற்றையே துணைகொண்டு, இலட்சிய வாதியின் பயணத்தில் வெற்றியும், தோல்வியும் ஒன்றே என்ற தெளிவுடன், விளைவுகளைப்பற்றிக் கவலைப்படாமல், தனித்து நின்றே தன் கொள்கையை வெளியிட முற்பட்டார். அவரது துணிச்சலில் பிறந்த சுயமரியாதை இயக்கத்தினால்தான் **தமிழ்வானில் விடிவெள்ளி முளைத்தது.**

இல்லையெனில் காங்கிரசு கட்சியினர் பரப்பிய சுதந்திர வேட்கை — வேறு எந்த மனித உரிமையையும், நியாய உணர்வையும் வெளிப்படுத்தவே இடமளிக்காமல் — மக்களிடையே மண்டிக்கிடந்த மூட நம்பிக்கை என்னும் இருளையே போர்வையாகக் கொண்டு மக்களை உறக்கத்தில் ஆழ்த்தி இருக்கும்; மக்கள் விழிப்படைய வாய்ப்பே ஏற்பட்டிருக்காது; அப்படியே விழிப்புறினும் — உரிமை நாட்டும் உணர்வு வளர்ந்திருக்காது. தந்தை பெரியார் ஊட்டிய தன்மானப் பகுத்தறிவுக் கொள்கை

விளக்கமே தமிழனை உறங்கவிடாமல் தடுத்துத் தனது உண்மை நிலையை உணரவைத்தது.

சொல்ல நினைத்ததைச் சொன்னார்!

பெரியார் முனைமழுங்காத இயற்கைஅறிவைப் பயன் படுத்தும் சிந்தனையாளராகவும், படிப்பறிவில் ஊறிச் சுய சிந்தனையை இழந்திடாதவராகவும், படித்தவர்கள், பண்டிதர் கள், பட்டதாரிகள் என்போர்தம் செல்வாக்கை எண்ணி அவர்தம் ஆதிக்கத்திற்குள் அகப்படாதவராகவும், தமக்கு ஏற்படக்கூடிய இழப்பு, அவமதிப்பு, பழி, அவமானம் ஆகிய வற்றைப் பற்றிக் கவலைப்படாதவராகவும், தனது இலட்சியத் தின் உயர்வை — பயனை — நல்விளைவைத் தம் வாழ்விலும் மேலாக மதிப்பவராகவும் இருந்ததாலேயே அந்தக்காலச் சூழ்நிலையிலும், அந்தப் பணியினை முழுமனத்துடன் அவர் மேற்கொண்டார்.

தனது அறிவுக்குச் சரி என்றும், நியாயம் என்றும், உண்மை என்றும் பட்டதைத் தனக்குத் தெரிந்த முறையிலும், தான் விளங்கிக்கொண்ட வகையிலும் ஊருக்கு உரைப்பதே தனது கடமை என்று தீர்மானித்துக் கொண்டார் அதை எல்லோரும் ஏற்பார்களா? என்று அவர் கவலைப்படவில்லை. சிலரே ஏற்பர், பலர் வெறுப்பர் என்பதும் அவர் அறிந்ததே!

தாம் சொல்ல வேண்டியதைச் சொன்னால், கேட்பவர்கள் அவரவர் அறிவிற்கேற்ப ஏற்றுக்கொள்வதை ஏற்கட்டும் என்னும் முடிவு கொண்டவராகவும், முயற்சிப்போம் — முயற்சி வெற்றிபெறும் அளவுக்கு மகிழ்ச்சி — இல்லையேல் இழப்பது ஒன்றுமில்லை என்று தெளிந்த பகுத்தறிவாளராகவும் அவர் விளங்கினார்.

பகுத்தறிவால் மாற்றியவர்:

நீண்ட பல ஆண்டுகளாக மனிதன் உள்ளத்தில் தொடர்ந்து பதிந்துள்ள, பழக்கமாகிவிட்ட நம்பிக்கைகள் — நினைப்புகள், சமயவழி எண்ணங்கள், சாத்திர புராணக் கருத்துக்கள் அத்தனையும் ஒரு மனிதனைச் சிலந்தி வலையில் சிக்கிய சிறுபூச்சியின் நிலையிலேயே சிக்கிச் செயலற வைத்திருக்கும் என்பதும், அதிலிருந்து அவனை மீட்பது எளிதல்ல என்பதும்

அவருக்குத் தெளிவாகத் தெரியும். இதுகாறும் ஒரு வகைச் சமய நம்பிக்கையை — இன்னொரு வகைச் சமய நம்பிக்கையால், மதப்பற்றால் மாற்றியவர்கள் சிலர் உண்டு என்பதன்றி, மத நம்பிக்கை அடிப்படையில் வளர்ந்திட்ட சமுதாய வாழ்வை, பகுத்தறிவு அடிப்படையில் — மூட நம்பிக்கையின் சாயலின்றி மாற்றியமைத்தவர்கள் இல்லை என்பதையும் அவர் உணர்ந்திருந்தார்.

புத்தர் போன்று ஓரிருவர் பகுத்தறிவைப் பயன்படுத்திப் பல உண்மைகளை நிலை நாட்டினர் எனினும், அவர்தம் கொள்கையைப் பரப்பிடும் பணியும் சமய வடிவம் கொண்டபோது — சில நம்பிக்கைகளைக் கொண்டதாகவே நிலைபெற்றுள்ளதை அவர் அறிந்திருந்தார்.

ஆயினும் மத நம்பிக்கைகள் — நல்லறிவுக்கும் — தெளிவுக்கும் முட்டுக்கட்டை ஆவதை எண்ணி அவற்றை அடியுடன் தகர்த்திடும் நெறியில் தமது அறிவைப் பயன்படுத்தினார்.

இந்த முயற்சி — கால வெள்ளத்தால் ஏற்பட்ட பழமைப் பிடிப்பிலிருந்து, மனித உள்ளத்தை — அறிவின் துணை கொண்டு விடுவிப்பதாகும். அது எளிதல்ல. பனிமலையில் ஏறுவது போன்றும், கடும்காட்டு வெள்ளத்தில் எதிர்நீச்சல் போடுவது போன்றும் கடுமையான சோர்வினைத்தரும் அறிவுப் பணியாகும். எனினும் பெரியார் தம்மை அந்த எதிர் நீச்சல் பணிக்கே ஒப்படைத்துக் கொண்டார்.

அதன் இயல்பை அறிந்திருந்த காரணத்தாலேயே — அவர் எதிர்ப்பைக் கண்டு அஞ்சவில்லை. கண்டனம் கண்டு மயங்கவில்லை, தடைகள் கண்டு துவளவில்லை, பயன்குறைவு கண்டு வெகுளவில்லை.

கல்லாமையால், விளையும் இழப்பு பலவென்றாலும் அதனால் வாய்த்ததொரு தனிப்பெரும் நன்மை, பெரியாரின் இயற்கை மதி நுட்பம், பயிற்சி முறைக் கல்வியால் மழுங்கிடும் நிலைக்கு ஆளாகாததும், தத்தம் அறிவையும், அதன் தெளிவையும், நம்பாது, ஏட்டில் கற்றதை மட்டுமே நம்பி ஏற்று, அதை உரைப்பதிலேயே பெருமை தேடும் மனப்பான்மைக்கு அவர் ஆளாகாததும் ஆகும்.

ஆம்! கற்றறிந்த மேதைகள் எடுத்தியம்பவும், பரப்பவும் முன்வராத, முன்வரத் துணியாத, கொள்கைகளுக்காக, வாதாடவும், போராடவும், பரப்பவும் பெரியார் முன்வந்தார். அதையும் பாமர மக்களுக்கு விளங்கும்படிப் பரப்ப முன் வந்தார். அதுவும் அனைத்துத் தரப்பினரும் எதிர்ப்பு வளையம் கட்டியபோதும் தொடர்ந்து அஞ்சாது பணிசெய்ய முன்வந்தார்.

எதிர்ப்பு — கண்டனம் — தாக்குதல் — கல்வீச்சு — செருப்பு வீச்சு — முதலியவற்றைச் சந்திப்பது அவருக்குப் பழக்க மாயிற்று. அதனால் மக்களின் அறியாமையே அவருக்குப் புலனாயிற்று. அதுவே அவருக்கு, அவரது பகுத்தறிவுப் பணி எவ்வளவு முக்கியமானது என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தி, அவரை மேலும் ஊக்கப்படுத்தியது. எதிர்ப்பு — பால் பாயசம் பருகுவது போன்று அவரது ஆர்வத்தை வளர்த்தது.

ஏடுகளின் ஆதரவு கிடையாது:

பெரியாரின் மணிக்கணக்கான சொற்பொழிவு அவரே நடத்திய 'குடிஅரசு' ஏட்டில் அன்றி வேறு எந்த ஏட்டிலும் வெளிவராது. அப்படியே வெளியிடப்படும் ஒருசில வேளை களிலும், அவரது கருத்தையும், நோக்கத்தையும், திரித்தும், மாற்றியும், வேறுநோக்கம் கற்பித்தும் வெளியிடுவர். அவரது சொற்பொழிவு பாலையில் பெய்த மழையாயினும், தன்னைக் குறித்தே பேய், பூதம், பிசாசு என்பது போல மக்களிடையே மயக்க உணர்வு பரப்பப்பட்டாலும், தான் கண்டறிந்த ஒவ்வொரு பொய்மையையும், புரட்டையும் குறித்து அது எவ்வளவுதான் மக்களால் நம்பப்படுவதாயினும், அவற்றின் ஆதாரமற்ற பொய்மையை விளக்க நாள் தவறாது நாடெங்கும் புயலாய்ச் சுற்றி வந்தார். ஒரு பெருங்கூட்டத்தினால் — தாக்குவதற்காக வளைத்துக் கொள்ளப்பட்டவன் கம்பு சுற்றித் தப்புவதை ஒத்த நிலையில் அவர் செயல்பட்டார். அவரது அஞ்சாமையும், அயராமையுமே — அவரைச் செயற்கரிய செய்த பெரியார் ஆக்கியது எனலாம்.

அவ்வாறு அவர் மக்களின் எண்ணத்தில் மாற்றங்காண — தன்னம்பிக்கை வளர்ந்திட, முயற்சி ஓங்கிட, மூடநம்பிக்கை தகர்ந்திட, தலைவிதி தத்துவம், கருமபலன், அவனவன் வந்தவழி — என்னும் மயக்க உணர்வு ஒழிந்திடப் பாடுபட்டது

ஓராண்டா, இரண்டாண்டா, அரை நூற்றாண்டுக்கு மேல். இந்த இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றில் படிந் துள்ள பெரிய சுவடே பெரியாரின் அடிச்சுவடுதான்.

எண்ணக் கிளர்ச்சி செய்தவர்:

ஆம்! இன்றைய பாமரரும், படித்தவரும் பக்தரும், பண் டிதரும், மதவாதியும், அரசியல்வாதியும், பெரியாரின் இயக் கத்தையும் கொள்கையையும் ஏற்க மறுப்பவர்களே என்றாலும், அவர்களே கூடப் பெரியாரின் ஒரு சில எண்ணங்களை ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு ஆளாகியுள்ளனர். பெரியார் தம் பெருந்தொண்டால் எண்ணக்கிளர்ச்சியால், எந்தவித மாறுதலுக்கும் ஆளாகாதவர் என்று கூறக்கூடியவர் தமிழகத்தில் யாரும் இருக்க முடியாது. எந்த வகையில், எந்த அளவு, எப்படி என்பதெல்லாம் அவரவர் எண்ணங்களை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால்தான் தெளிவாகும்.

கிரேக்க நாட்டின் சிந்தனைச் சிற்பி சாக்ரடீசு இளைஞரிடம் பரப்பிய சிந்தனையைத் தூண்டும் கேள்விகட்காகக் கொடிய நஞ்சினை அருந்தி — உயிரினைத் துறக்கும் தண்டனைக்கு ஆளானார். அறியாமையின் ஆட்சியில், அறிவுக்குத் தரப்பட்ட தண்டனை அது.

மனிதனின் சிந்திக்கும் உரிமையை நிலைநிறுத்த விரும்பிய சாக்ரடீசு உயிர் தப்பி வாழ வாய்ப்பு இருந்தும், நாட்டையும், சட்டத்தையும் தான் மதிப்பதை உலகிற்கு உணர்த்தவும், தான் உணர்த்திய அறிவு வழி, தன் உயிரினும் மேலானது என்று தான் கருதுவதை உலகுக்கு அறிவிக்கவும் — அந்தத் தண்டனையை ஏற்றுத் தம் இன்னுயிரைத் துறந்தார்.

அந்த நஞ்சு அவரது உயிரைத்தான் மாய்க்க முடிந்ததே யன்றி, அவரது கொள்கையையோ, உறுதியையோ அல்ல. மாறாக அவரது கொள்கையின் உயர்வை, உலகம் அறியச் செய்து — அவரைப்பற்றிக் கட்டப்பட்ட பொய்யான குற்றச் சாட்டைச் சாகடித்து, அவரது சுயசிந்தனை வளர்க்கும் இலட் சியம் நிலைபெற்று வளர்ந்தது என்பதுதான் — கிரேக்கத்தின் வரலாறு.

அதேபோன்று தந்தை பெரியாரின் கொள்கை, எதிர்ப்பைக் காண்பதே இயல்பாயினும், நாளடைவில் அது வெவ்வேறு வண்ணத்திலும், வடிவத்திலும், கலையிலும், துறையிலும் புகுந்து மக்களின் மனத்தில் இடம் பெற்றுக் கொண்டுதான் வருகிறது. தூங்கிக் கிடந்த மக்களைத் துயில் எழுப்பினார் பெரியார். துயில் நீங்கிய மக்கள் எழுந்தும் நிலை தடுமாறும் காட்சி இன்றும் நீடித்தாலும், அந்தத் தடுமாறும் நிலையிலிருந்து நிலையான நடையுடன் நிமிர்ந்து நிற்பர் என்பதில் அய்யமில்லை.

தமிழ் வானின் விடிவெள்ளி!

எண்ணிப் பார்க்கும் சிந்தனை ஆற்றலும் — துணிச்சலும் இல்லாத மக்கள் ஏற்றிட முடியாத உண்மைகளைப் பெரியார் கூறிச் சென்றாலும் காலத்தினால் விளையும் மாற்றங்களால், விஞ்ஞான வளர்ச்சியால், புதுமைக் கண்டுபிடிப்புக்களால், சூழ்நிலைகளால் எண்ணங்களிலும் வாழ்க்கை முறையிலும் ஏற்றிட வேண்டியதாகும் மாறுதல்களையே அவர் பகுத்தறிந்து உரைத்தார் என்பதால் அவற்றில் பலவற்றைச் சிந்தித்து ஏற்காதவரும் நடைமுறையில் ஏற்கும் காலம் வரத்தான் செய்யும்.

காலத்தின் கண்ணாடியாக அவரது உள்ளமும், காலத்தின் முன்னோடியாக அவரது உரையும், காலத்தின் தேவையாக அவரது உழைப்பும் அமைந்திருந்தன. எனவே வருங்காலம் அவர் பக்கமே! அவர் பரப்பிய பகுத்தறிவின் பக்கமே!

ஆனால் இடையில் எத்தனையோ சோதனைகளும், வீழ்ச்சிகளும் ஏற்படுகின்றனவே எனில் — அதுதான் உலகத்து இயற்கை. அவற்றை வென்றிடும் முயற்சியில்தான் பகுத்தறிவே உரம் பெறுகின்றது, இயக்கம் வளருகின்றது.

காலத்திற்கேற்ப பணியாற்றல்:

அந்த நாளில் அஞ்சாமை இன்றேல் எவரும் இந்தப் பணியில் ஈடுபடவியலாது. இன்றோ, அறிவுத் தெளிவும் — தொண்டு ஆர்வமும், பொதுநலப் பற்றும் உள்ளவர் எவரும் அந்தப் பணியைத் தொடரமுடியும். எனவே, இனி எந்நாளும் வீழ்ச்சி நமக்கில்லை! தந்தை பெரியாரின் நோக்கத்திற்கு இனி அழிவும் இல்லை!

இனம் உணராது, பொய்யான சாதியை நம்பிப் பிரிந்து கிடந்து பகைத்து வீழ்ந்த தமிழர்களை ஓரினமாக அடையாளம் காட்டிய தந்தையின் இலட்சியம் விரைவில் வெற்றி காண, அவரைப் போன்று அயராது பாடுபட உறுதி கொள்ள வேண்டும். பெரியாரின் கொள்கையில் பற்றுகொண்ட இளைஞர்கள் அவர்தம் பெரும்படையில், பேரியக்கத்தில் சேர முன்வருவது கண்டு நான் மகிழ்கின்றேன். அடுத்த தலைமுறையினரான இந்த இளைஞர்கள், பணியாற்றிட முன்வந்த பின்னர் பெரியார் ஏற்றிய அறிவுச்சுடர் ஒருபோதும் அணையாது, அதன் ஒளி பரவும்! இருள் ஒழியும்! என்பதில் சிறிதும் அய்யமில்லை.

ஆம்! வருங்காலம் வழிவழி வரும் பழமைக்குச் சொந்தமல்ல, புத்தறிவு தரும் பகுத்தறிவுக்கே சொந்தம்! நம்பிக்கையினால் படரும் மதத்துக்குச் சொந்தமல்ல, ஆராய்ச்சியினால் வளரும் விஞ்ஞானத்துக்கே சொந்தம்.

The future belongs not to tradition, but to reason;
not to religion, but to science.
— என்றார் ஓர் அறிஞர்.

நாமும் நம்மொழியும் ஏற்ற இழிநிலை:

இன்றைக்கு அறுபது ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகத்தில், தமிழ் பிறந்து வளர்ந்து வழங்கும் தமிழ்த்திரு நாட்டில், தாய் மொழி தமிழுக்கும் மதிப்பில்லை, தமிழனுக்கும் மதிப்பில்லை. நாம் பேசி வாழ்ந்த மொழிக்கும், நமக்கும் மதிப்பில்லை என்பதுகூடச் சரியல்ல, நம் மொழியும் மக்களும் இழிவாகத் தான் எண்ணப்பட்டனர்.

இரண்டு தலைமுறைகளுக்கு முன்னர், தமிழ் நீசபாஷை, சூத்திரர் மொழி, ஏறத்தாழ அடிமைமொழி, வடமொழியாம் சமக்கிருதம் தேவபாஷை, பூதேவர் மொழி. தமிழன் சூத்திரன், தாழ்ந்த பிறவி, உழைக்கப் பிறந்தவன்; பிராமணன் ஆரிய குலத்தினன், உயர்ந்த பிறவி, அனைத்துச் சாதியினருக்கும் குருவாகும் நிலை.

பிறப்பிலேயே ஒரு சாதி உயர்ந்தது. மற்றவர்கட்கெல்லாம் ஆணையிடும் அந்த உயர்நிலை அதற்கு. பிறப்பாலேயே பல சாதிகள் தாழ்ந்தவை. உயர்ந்த சாதி என்னும் பிராமணர் ஆணை கேட்டு அதன்படித் தொழுது நடக்கும் அடிமை சாதிகள் அவை.

ஆண்டையாக உள்ள சாதிக்கு, உண்டு களித்து உறங்கி வாழ்வதற்கு வாய்ப்பான கடின உழைப்பில்லாத கடமைகள். அடிமை போன்ற தாழ்ந்த சாதிக்கோ, நெற்றி வியர்வை நிலத்தில் சொட்ட, வெயிலும் மழையும் வருத்தினும், பனியும் குளிரும் தாக்கினும் ஆற்ற வேண்டிய கடின உழைப்புக்கள், இழிவான தொழில்கள். என்னதான் உழைத்தாலும் வயிரார உண்ணவோ, பட்டினிக் கொடுமையின்றி வாழவோ முடியாத நிலை.

சுருங்கச் சொன்னால் — உழைக்க ஒரு கூட்டம், உழைக்காமலே உண்ண ஒரு கூட்டம், பாடுபட்டுத் தேட ஒரு கூட்டம், அதனைத் தேட்டை போட ஒரு கூட்டம்.

உழைப்பவர், பரிதாபத்துக்குரிய பாட்டாளிகளாய், ஓட்டாண்[illegible]கும் நிலை.

உழைக்காதவர், பிறப்பாலேயே மேன்மக்களாய், உண்டு களித்துச் செல்வாக்குடன் வாழ்ந்த காலம். மானம், மரியாதை என்பதும், உயர்வு, பெருமை என்பதும் உயர்ந்த சாதியினருக்கே உண்டு எனவும், சாதியால் தாழ்ந்தவர்கட்கோ, மானமும் மரியாதையும் இல்லை எனவும், அவை இருக்க இடமில்லை எனவும், இருக்கக்கூடாது எனவும் கருதப்பட்ட காலம்.

மேல்சாதிப் பிறவி, எந்த இழிவான காரியத்தில் ஈடுபட்டாலும் அது குற்றமாகிவிடாது. குற்றம் என்று கூறி அவர்களைத் தாழ்த்திவிட முடியாது. மற்ற சாதியினரோ ஒரு சிறு குற்றம் செய்தாலும் அவர்கள் கேவலமாக நடத்தப்படுவர். கொடுமைக்கும் ஆட்படுத்தப்படுவர். ஆம்! அவர்கட்கு 'மானம்' இருத்தல் ஆகாது. அவர்தம் உணர்விலே மான உணர்ச்சி ஏற்பட்டாலும் அதைக் காட்டிக்கொள்ளலாகாது. காட்டிக் கொண்டாலும், ஊரார் ஒப்புக்கொள்ளமாட்டார் என்னும் நிலையே இருந்தது.

பிறப்புக் காரணமாகப் பேதம்!

மக்களிலேயே பிறப்பு ஒன்றே காரணமாகத் தேவராகச் சிலர் உயர்ந்தார், விலங்குகளாகப் பலர் தாழ்ந்தார். ஏனிந்த நிலை? என்ன நியாயம்? இது நீடிக்கத்தான் வேண்டுமா, என்று கேட்டவர் இல்லை அன்று.

இது நியாயமல்ல என்று உணர்ந்த சிலரும் உரைக்கத் துணியார்; ஊரறிய உரைத்தாலோ, மேல் சாதியினர் பகைக்குவது அன்றி, மற்ற சாதியாருங்கூட எதிர்ப்பே காட்டுவர். உண்மை உரைத்தவர் ஊராரிடமிருந்து தப்ப முடியாது.

உன்மத்தன் என்றோ, ஊரைக் கெடுப்பவன் என்றோ, இவன்தான் நியாயத்தைக் கண்டுவிட்டானோ? என்றோதான் ஊரார் தூற்றுவர்.

சாதி வேற்றுமையும், உயர்வு தாழ்வும் ஒரு சதி, அதை நாம் ஏற்கலாகாது, என்று எவரேனும் சொன்னால், அது உண்மை என்று உணர்பவரும் ''வாயை மூடு, நமக்கேன் ஊர்வம்பு'' என்றுதான் அறிவுரை கூறுவர்.

''உனக்குத்தானா உலகத்தைப் பற்றி அக்கறை — மற்றவர்களுக்கு இல்லாத பொறுப்பு உனக்கேனப்பா?'' என்றுதான் நல்லெண்ணம் கொண்டவரும் உரைப்பர்.

சாதி ஆசாரத்திலே நம்பிக்கை வைத்திருப்பவருக்கோ — ஆத்திரம் பொங்கும்! தாக்கவும் தயங்கார்!

தெய்வம் படைத்ததே சாதி!

இது என்ன நாம் ஏற்படுத்திய முறையா? நாம் மாற்றிவிட! என்றோ ஏற்பட்ட முறையைப் பாட்டன் பூட்டன் எல்லாம் ஏற்றிருந்த முறையை, இன்று மாற்றுவதாமே? பைத்தியக்காரத் தனம்! என்பர்.

வைதீகத்துக்காக வாதாடுகின்றவர்களோ — இதெல்லாம் மனிதன் ஏற்பாடா? தெய்வ சங்கல்பம்! பிரம்மாவின் படைப்பு — கண்ணன் சொன்ன நீதி! இதை எதிர்ப்பதா? எதிர்ப்பது பாபம் அல்லவா! இதை எதிர்ப்பதும் கடவுளை எதிர்ப்பதும், எல்லாம் ஒன்றுதான். என்ன செய்வது! 'கலிகாலம்' இப்படித் தான் பேசச் சொல்லும்! பேசியவன் — ரௌரவாதி நரகத் திற்குத்தான் போவான் என்று அச்சமூட்டி ஒடுக்கப் பார்ப்பர்.

வருணாசிரம தருமத்தால், பெரிய சாதியாகத் திகழ்பவர்களோ, ''இப்படிப்பட்ட நால்வகை சாதியும் அவனவன் செய்த பாப புண்ணியத்துக்கு ஏற்ப அமைந்தது. ஏன் ஒருவன் மேல் சாதியில் பிறக்கிறான்? ஒருவன் கீழ் சாதியில் பிறக்கிறான்? மாறிப் பிறப்பது தானே? அது முடியக்கூடிய காரியமோ? அது தான் அப்பா — அவனவன் தலை எழுத்து! அதை மாற்றி எழுத யாரால் முடியும்? ஆண்டவனால்கூட முடியாதே! அதைச் சந்தேகிப்பதே கடவுள் நிந்தனை, நாத்திகம். இப்படிப் பட்டவர்களின் பேச்சைக் கேட்பதே பாபம்! இதைக் கடவுள் பக்தியுடையவர்கள் காதிலேகூடப் போட்டுக்கொள்ளக் கூடாது என்பர். அப்படிப்பட்ட சூழ்நிலைதான் அந்த நாளில் நிலவியது.

தமிழ் இலக்கியமும், அறநூற்களும் பயின்ற சிலர் அன்றிருந்தனர் என்பது உண்மை. அவர்களிலே சிலர் தாம் படித்தறிந்ததைச் சொல்ல முன்வந்தாலும், எதிர்ப்பும் ஏளனமும் பிறக்காமல் இருக்காது. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்று திருமூலரே கூறியுள்ளாரே என்றாலோ, அதெல்லாம் பெரியவர்களுக்கு, உலகைத் துறந்த பற்றற்ற ஞானிகளுக்குச் சொன்னது; நாமெல்லாம் ஞானி ஆக முடியுமா? திருமூலர் ஆக முடியுமோ? அவர்கள் சொன்னதெல்லாம் நாம் கண்டோமா? அவர்கள் சொன்னதையெல்லாம் உலக வாழ்வில் நாம் பின்பற்ற முடியுமோ? என்று சமாளிப்பர்.

> ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்.

என்று திருவள்ளுவர் கூறியுள்ளாரே. அதையாவது ஒப்புக் கொள்கிறீர்களா? என்றாலோ,

''அவர் சொன்னால் மட்டும் என்ன? சாதி முறைப்படித் தானே தொழில் செய்ய வேண்டும்? அதை மாற்றிக் கொள்ள முடியுமா? தொழிலின்படி ஏற்றத்தாழ்வு வரும் அல்லவா? அதுதான் பிறப்பிலேயே அந்த ஏற்றத்தாழ்வாக அமைந்திருக் கிறது. அப்படியே வள்ளுவர் சொன்னாலும், வள்ளுவனை விடப் பெரியவர்கள் இல்லையா? மனு இயற்றிய மனுஸ்மிருதி இல்லையா? அவர்கள் எல்லாம் 'சாதி' இல்லை என்றா சொன்னார்கள். பகவத் கீதையில் கண்ணபிரானே சொல்லி

யிருக்கிறாரே.... ''வருணங்களை எல்லாம் நான்தான் படைத்தேன்'' என்று. வள்ளுவன் சொன்னதுதான் உண்மை என்றால் இவ்வளவு காலம் 'சாதி' எப்படி இருக்கும்? இனிதானா, சாதியை அழிக்க முடியும்? ஒருக்காலும் முடியாது!'' என்று வாதாடுவர்.

''சாதி இரண்டொழிய வேறில்லை, சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் — மேதினியில்
இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங் கிலுள்ள படி''. — நல்வழி, 2.

என்னும் பழம்பாட்டை எடுத்துக்காட்டி, ஈவோர் பெரியோர் — இரப்போர் தாழ்ந்தோர் என்பது தவிர, வேறு உயர்வு தாழ்வுக்கு இடமேது என்று எவரேனும் கேட்டாலோ, வைதீகர் கூறுவர், ஈவதன் பெருமையும், இரப்பதன் சிறுமையும் கூறத்தான் அப்படிப் பாடினார். அவர் பாடியதால் சாதிதான் இல்லாமற் போயிற்றா? அல்லது தானம் வாங்கும் பிராமணன் தான் தாழ்ந்துவிட்டானா? தானம் வாங்கினாலும் அவன் உயர்ந்துதானே நிற்கிறான், கொடுப்பவன்தானே தாழ்ந்து பணிந்து மண்டியிட்டு வணங்கிக் கொடுக்கிறான், என்று பதில் கூறி இறுமாப்பர்.

கபிலரும் கூறினார்!

''நால்வகைச் சாதியை இந்நாட்டினில்
நீர் நாட்டினீர்'' என

ஆரியரைப் பார்த்து, கபிலரகவல் கண்டித்து உரைக்கின்றதே என்றாலோ, ''யார் கண்டித்தால் என்ன — சாதி ஆசாரத்தால் தான் இந்து மதமே உயர்ந்து நிற்கிறது. இந்த நாடே மகாத்மியம் பெற்றுத் திகழ்கிறது. இதை நம்பாதவர்கள் எக்கேடாவது கெட்டுப் போங்கள்!'' என்று கண்டனம் பொழிவர்.

''சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே, கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே''

என்று திருவருட்பாவில், வடலூர் வள்ளலார் பாடியுள்ளதை யேனும் ஒப்புக்கொள்ள மாட்டீரோ என்றாலோ,

''ஆம், அதையும் சொல்ல வந்துவிட்டீரோ! ஏதோ பாடினார் அவருக்குத் தோன்றியதை! அது அருட்பாவா?

மருட்பா? அருட்பா என்று ஒப்புக்கொள்ளவே மறுத்துள்ளனரே பல பெரியவர்கள், தெரியுமா உங்களுக்கு?'' என்று கேட்பர்.

இப்படிப்பட்ட ஒருகாலம் அது. வடமொழியே தெய்வத் துக்கு உகந்தமொழி; வேத — ஆகம — சாத்திர — இதிகாச புராணங்களையும் — இராமாயண பாரதத்தையும் முதலில் பெற்ற மொழி; கடவுள் வழிபாட்டுக்கு மட்டுமன்றித் திருமணம் முதலான அனைத்துக் குடும்ப நிகழ்ச்சிகட்கும், சடங்குகள் செய்யக் கைக்கொள்ளப்படும் மொழி என்னும் நிலையால், தமிழையே, தாழ்வாக மதித்த காலம் அது. அதனால் தான் தமிழ்நாட்டு ஞானியாயினும், அறவோராயினும், வள்ளு வராயினும், வள்ளலாராயினும், அவருடைய கருத்துக்களை ஏற்கக்கூட மனம் இல்லாது மறுப்புரைக்கும் நிலையிருந்தது. தமிழிலே உள்ளது என்பதாலேயே அவை தகுதி குறைந்தன என்று எண்ணும் அடிமை மனப்பான்மை, அழுத்தமாக இடம் பெற்றிருந்த காலம் அது.

வைதீகக் குடும்பத்தில் பிறந்த ஒருவர்!

அப்படிப்பட்ட காலத்தில்தான், வருணாசிரம முறையைக் கைவிடாத வைதீகப் பற்றுடைய, சமய ஆச்சாரங்களைப் பின்பற்றி வந்த ஒரு வணிகக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஈ.வெ.ரா. அவர்கள், தமக்கே ஏற்பட்ட எதிர்நீச்சல் மனப்பான்மையால், எதையும் தயக்கமின்றி ஆராயும் எண்ணப்போக்கால், இயற்கை மதிநுட்பத்தால், சிந்தனை ஆற்றலால், தம்மைச் சுற்றிலும் சமுதாயத்தில் நடைபெறும் ஒவ்வொன்றையும் எடைபோடும் திறத்தால், பகுத்தறிந்து வாதிடும் முயற்சியில் ஈடுபட்டார். அப்படி அவர் பகுத் தறிந்ததன் பயன்தான், புரோகித எதிர்ப்பு, வைதீகக் கண்டனம், சாதி ஆசார எதிர்ப்பு, தீண்டாமை ஒழிப்பு, சடங்குகள் ஒழிப்பு, பெண்ணடிமை எதிர்ப்பு, இதிகாச புராண எதிர்ப்பு, கடவுள் கற்பனைவாத எதிர்ப்பு ஆகிய பலப்பல துறையிலும், அவர் புரட்சிகரமான எண்ணங்களை வெளி யிடத் தலைப்பட்டதாகும்.

தமிழ்ச் சமுதாயத்தின் பிறவி இழிவையும், பழியையும் துடைக்க நினைத்ததன் விளைவே அவர் துவங்கிய சுயமரியாதை இயக்கம் — திராவிடர் கழகத் துவக்கம் ஆகியவை. எதிர்ப்பு,

ஏசல், ஏளனம், இழிமொழி, கண்டனம், தாக்குதல், அவமானப் படுத்தல், அச்சுறுத்தல், பழிசாற்றல் இவை எவற்றையும் பொருட்படுத்தாமல், தொடர்ந்தது அவரது பணி. அதனால் தான் தன்மான இயக்கம் நிலைத்தது என்பது மட்டுமின்றி, இன்றையத் தினம் அந்தக் கருத்துக்கள் — தமிழ் அறிஞர்கள் பலர் முன்னரே கூறிய கருத்துக்களும் மறுக்கப்படாமல் ஏற்கப்படும் நிலை பிறந்து உள்ளது எனலாம். தந்தை பெரியார் இல்லை என்றால் — நமக்கெல்லாம் தன்மானமும் இருக்காது, தமிழ் மொழிக்கோ, தமிழ் அறிஞர்கட்கோ மதிப்புமிருக்காது இன்று. ஆம், அறுபது ஆண்டுகட்கு முன்பிருந்த மக்களின் மனப் போக்கையும் இன்று மக்களிடம் விளைந்துள்ள மனப்பான்மை யையும் ஒப்பிட்டுப் பார்ப்பவரே, பெரியாரின் ஒப்புயர்வற்ற தொண்டின் பயனைப் — பகுத்தறிவுப் பணியின் பயனை உணரலாகும்.

தந்தை பெரியாரின் தொண்டு இல்லாதிருப்பின் நமது ஒப்பற்ற தலைவர் அறிஞர் அண்ணாவும் நமக்குக் கிடைத் திருப்பது அரிது. வள்ளுவரும் — வள்ளலாருங்கூட நமது வழி காட்டிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பார்களா? என்பதும் கேள்விக்குரியது.

புத்துணர்ச்சி கொண்ட ஒரு சமுதாயத்தை உருவாக்கப் பகுத்தறிவைப் பயன்படுத்தும் ஒரு கூட்டம், ஒரு கட்சி, ஒரு பாசறை வடிவு பெற்றது தந்தை பெரியாரால் ஏற்பட்ட கருத்துப் புரட்சியால்தான்.

தமிழகத்தின் விடிவெள்ளி:

தமிழ் உயர்ந்தது என்னும் உண்மையை உணராதவரும் அது உயர்ந்தது என்று உணரும் ஆற்றல் பெற்றனர் இன்று. எல்லா வகையிலும் தமிழன் விழிப்புற்றான்! சாதி இருக்கிறதென் பானும், இருக்கின்றானே; இருட்டறையில் தானே உலகம் உள்ளது என்றாலும், சாதி ஏற்றத்தாழ்வு நியாயமற்றது என்பதை மறுப்போரும், மத மூடநம்பிக்கைகளைத் தாங்கி நிற்போரும், வைதீக வருணாசிரமத்துக்காக நேரடியாக வாதாடு வோரும், இன்று குறைந்து வருகின்றனர். ஆம், தமிழ்நாட்டின் விடிவெள்ளியாகத் தோன்றினார் பெரியார்! கருக்கல் வெளுத்தது, ஒளிபரவத் தொடங்கியது! அதுவே நாம் பெற்ற பேறு!

9. மனிதனின் அடிமை எண்ணம் மாற்றிய ஏந்தல்

தமிழ் மக்களின் தாழ்ந்த நிலைக்கான காரணங்களைத் தமது அறிவைக் கொண்டு இடைவிடாது சிந்தித்துச் சிந்தித்துக் கண்ட உண்மைகளை, அயராது எடுத்துச் சொல்லி, விளக்கி எழுதி, நம்முடைய இனத்தை, சமுதாய மக்களை எண்ணிப் பார்த்திடத் தூண்டி, சிந்திக்கும் ஆற்றல் பெறவைத்து மனிதனை மனிதனாகத் தலைநிமிர்ந்து வாழ வழிசெய்தவர் தந்தை பெரியார். பெரியாரின் சிந்தனையும் தொண்டும் வாய்த்திராவிடில், தமிழ்மக்கள் இன்றுள்ள நிலையினும் இழிந்த — தாழ்ந்த நிலையிலேதான் தள்ளப்பட்டிருப்பர்.

சாதிப் பூசலில் சாய்க்கப்பட்டு, மதவெறி மயக்கத்தில் வீழ்த்தப்பட்டு, தீண்டாமைத் தீயில் தள்ளப்பட்டு, மூட நம்பிக்கைகளில் முடக்கப்பட்டு, வைதீகச் சடங்குகளில் ஆழ்த்தப்பட்டு, புரோகித ஆதிக்கத்தால் ஒடுக்கப்பட்டு, திருக்கோவில் வழிபாட்டில் ஒதுக்கப்பட்டு, எண்ணம்-சொல்-செயல் அத்தனையிலும், வைதிக எசமானரின் ஆணைவழி நிற்கும் அறிவிலிகளாக — எடுபிடிகளாக — ஏவலர்களாக — சூத்திரர்கள் என்னும் இழிமொழியை ஏற்கும் பேதையராக அடிமையாக்கப்பட்டு நெடுமரமென நடைபோட்ட தமிழர்கள், சூடு, சொரணையுள்ள மனிதர்களாக ஆவதற்கு வழிகண்டவர் பெரியார்.

எண்ணமும் செயலும்:

மனிதனின் எண்ணமே மனிதனை — அவனது சொல்லையும், செயலையும் ஆள்கிறது. அவனவன் எண்ணத்திற்கு ஏற்பவே ஒருவனது முயற்சி வெற்றிபெறும் வாய்ப்பும், தகுதி உயரும் வாய்ப்பும் அமைகின்றன. மனிதனது எண்ணத்தில், நினைவில் அவன் எதற்கும் தகுதியற்றவன் என்றோ, அடிமைப் பணிக்கே உரியவன் என்றோ, அவனால் ஆவது எதுவும் இல்லை, எதுவும் அவனால் முடியாது என்றோ ஒரு கருத்து நிலைத்து விடுமானால், அவன் மற்றவர்களால் இயக்கப் படுபவன் ஆகி, சுயஅறிவுக்கு வேலை தராதவன் ஆகி, ஓர்

அடிமையாக இருப்பதையே அவன் விரும்பி ஏற்றுக் கொண்டவன் ஆகிவிடுவான்.

இழிவை ஏற்கும் இயல்பு:

அடிமையாகத் தொழுது நிற்கும் நிலை அவனுக்குப் பழக்க மான வகையால், அதனை இயல்பாக ஏற்றவனாகலின், அதன் இழுக்கு அவனுக்குத் தோன்றாமற் போய்விடும். ஆண்டையை வணங்கி, அடிமைப்பணியே செய்து பழகிவிட்ட மனத்திற்கு — அதனை மாற்றிடும் வாய்ப்பே நேரினும், அதை ஏற்றுக் கொள்ளும் துணிவு வராது.

தாழ்நிலையில் தள்ளப்பட்ட ஒருவன், அதுவே தனக்கு உரிய வாழ்வு என்று தனது மனத்தாலும் ஒப்பி — உணர்வினில் அதை ஏற்றிடும் உடன்பாடு நிலைத்துவிடுமானால், விடுதலை வாழ்வு மூலம் உரிமைநிலை பெறலாம் என்பதற்காகக் கூடத் தனது தாழ்நிலையிலிருந்து வெளிவருவதை விரும்பமாட்டான்.

பலப்பல ஆண்டுகள் — பாஸ்டிலி, திகார் போன்றதொரு கொடிய சிறைச்சாலையின் இருட்டறையில் தள்ளப்பட்டிருந்த ஒருவனை — ஒருநாள் விடுதலை செய்து வெளியே செல்ல அனுமதித்தாலும், புற உலக வெளிச்சத்தைக் காணவே அவன் கண் கூசுவதாலும் எங்குச் செல்வது, என்ன செய்வது என்ற திகைப்பாலும், திரும்பவும் சிறைக்குள்ளேயே ஓடிவிட முயற்சிப்பது போன்றதொரு நிலையே, பலவகையிலும் அடிமை மனப்பான்மையில் உழன்றவருக்கும் ஏற்படும்.

பல ஆண்டுகள் தொடர்ந்து கெஞ்சியும் குழைந்தும் பிச்சை ஏற்றுப் பிழைப்பு நடத்திப் பழகிவிட்ட ஒருவனுக்கு, ஒருநாள் திடீரென்று சில லட்சம் மதிப்புடைய செல்வம் கிடைப்பினும், தனது மனிதத் தன்மையை அவன் மதித்திடும் மனப்பான்மையை இழந்தவனாதலின், பின்னரும் பிச்சை ஏற்கும் முறையினை ஒரு தொழில்போல் கருதிக்கொண்டு அதைக் கைவிடக் கலங்குவான்.

இழிதொழில் — ஈனச்செயல் — திருட்டு — விபச்சாரம் முதலானவற்றில் ஈடுபட நேரிட்டோர் முதலில் அவற்றை வெறுப்பவராகவும் விரும்பாதவராகவும், சூழ்நிலையின் தாக்கத்தால் அதற்கு ஆட்பட்டவராகவும் இருப்பினும், சில பல

ஆண்டுகட்குப்பின், அது பழக்கமாகி மனத்தின் இயல்பாகப் பதிந்த பின்னர், அதனை விட்டு விடும் வாய்ப்பு நேர்ந்தாலும், விடமனமின்றி அதில் ஈடுபடுவதை இன்றும் காணலாம்.

குறிப்பாகத் ‘தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்’ என்னும் பழமொழி, பழக்கத்தினை விடமுடியாத நிலையை உணர்த்தும். செந்தமிழும் நாப்பழக்கம், சித்திரமும் கைப்பழக்கம் என்பது, பழக்கம் ஒரு பயிற்சியாகி உதவுவதை உணர்த்தும். ‘குலக்கல்வி கல்லாமற் பாகம்படும்’ என்பது குடும்பத்தில் பெரியவர்கள் மேற்கொண்டுள்ள தொழில் இளைஞர்களுக்கு மனத்தில் எளிதாகப் பதியும் என்பதற்குச் சான்று.

எண்ணப் பழக்கம்:

பழக்கம், கைப்பழக்கம் — தொழிற்பழக்கம் — கல்விப் பழக்கம் — எண்ணப்பழக்கம் என விரியும். அதில் எண்ணப் பழக்கம் — ஒரு எண்ணத்தை — கருத்தைத் திரும்பத் திரும்ப அவ்வாறே எண்ணும் பழக்கம். அதில் அய்யமோ, கேள்வியோ எழ இடமில்லாதும், இடமளிக்காதும் நம்பும் பழக்கம் வளர்வதால் அது எளிதில் மாற்ற முடியாததாகும். பழக்கமாகி விட்ட எண்ணம் அதற்குரிய சொல், தொடர் அதன் வழியாகும் சிந்தனை ஆகியவையாலமைந்த அந்தப் பாதையிலேயே இயங்கும். அவரவர் நிலைக்கேற்ப அந்த வகையில், அந்த மூல எண்ணத்தின் கிளைகள், கற்பனைகளாகவும் வடிவு கொள் ளும். எண்ணும் எழுத்தும், இலக்கியமும் கவிதையும் கற்றுத் தேரினும், ‘அவரவர் எண்ணம்’ என்னும் அந்த மையத்திலிருந்து — அதை எந்த விரிந்த அளவிலும் சுற்றிவரலாமேயன்றி, விலகிச் சென்றிடல் எளிதல்ல.

‘வழக்கத்தால் மாடுகளும் செக்கைச் சுற்றும்’ என்னும் கவிமொழி சுட்டுவது போன்று, மனிதனின் எண்ணங்களும் பழக்கம் என்னும் தாம்பில் பிணைக்கப்பட்டு, வழக்கம் என்னும் முளையில் கட்டப்பட்டு உள்ளதால் — அதனின்றும் பெரிதும் விலகிச் செல்வதோ, சுய சிந்தனை ஆற்றல் பெறுவதோ எவர்க்கும் எளிதன்று.

அந்த வகையில், ஒரு சமுதாயத்தில் இடம்பெற்று, ஊன்றப் பட்டு, நெடிது நிலைத்துவிட்ட எண்ணங்கள், கொள்கைகள், கருத்துக்கள் யாவும் பின்னப்பட்ட சிலந்தியின் வலை, அதில்

சிக்கிவிட்ட சிறுபூச்சிகளை மீளவிடாமல், மேலும் பின்னிப் பிணைத்துச் செயலற்றிடச் செய்து உணவாக்கிக் கொள்வது போன்று, மனிதன் தனது பழைய சிந்தனையில் சற்று விலகிச் செல்ல முற்படும்போது, அதனைப் பழக்கப்பட்ட எண்ணத் திற்கு அப்பாற் செல்ல ஒட்டாது தடுத்து நிறுத்திவிடும்.

மனிதனின் அறிவும் — பயின்றதன் பயனாய் வடிவு கொள்வதே. பயின்றன பலவும் (பெரிதும்) — முன்னோரின் பழகிய சிந்தனை வழிப்பட்டதே. புதிய சிந்தனையை — கருத்தை விளக்கிடும் ஓர் நூலைப் படிப்பினும், பின்னரும் பழகிய பழைய எண்ணங்களே தலைதூக்கி நிற்பதைக் காணலாம்.

அதிலும் ஒருவன் பிறந்து வளரும் இனத்தில் — சமுதாயத் தில் பல தலைமுறையாக நிலவி வரும் கருத்துகள் — சமய உணர்வு அடிப்படையில், மதமாக நிலவுமானாலும், பிற வியைப் பற்றிய எண்ணமாக இடம்பெற்றுத் தலைவிதியாக, கருமமாக, வினைப்பயனாக, மறுபிறவி நோக்குடையதாக நிலவுமானாலும், அவற்றில் ஒரு நம்பிக்கையைக் கொண்டவர் களாக ஆகிவிடுவதால் அவற்றைக் குறித்து உண்மை அறிதற்கு வேண்டிய மனவலிவு அவர்களிடம் ஏற்படுவதில்லை. மேலும் வழிவழிவந்த இலக்கியங்கள், கவிதைகள், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலான பக்தி வளர்க்கும் பாடல்கள், காவியங்கள் முதலானவையும் அவர்தம் எண்ணங் களைப் பக்திவயப்பட்டுப் பயந்து நின்று, ஏற்ற எண்ணங்களாக அவர்தம் மனத்தில் ஊன்றச் செய்கின்றன.

பழமையின் பிடிப்பு! புதுமைக்கு எதிர்ப்பு!!

சிறந்த இலக்கியங்களை இயற்றிய புலவர்களும், கவிஞர் களும் கற்பனை வழியான எண்ண ஓட்டம் பெறினும், எதையும் நுணுகிக் காணும் ஆற்றல் பெறினும், அவர் தமது நம்பிக்கை களாக வளர்ந்து நிற்கும் எண்ணங்களை ஆராய்ந்து நோக்கும் ஆற்றல் பெறுவதில்லை. ஒருவர் இருவரே விதிவிலக்காக ஒவ்வோரளவில் சிந்தையைச் செலுத்தியோராவர். ஒருவகை யில், வழிவழி வரும் கல்வியும், புலமையுங்கூட, முற்றும் காரணகாரிய அடிப்படையிலான புதிய சிந்தனை வளர்ச்சி ஏற்படத் தடங்கலாகவே உள்ளன.

மனிதனின் எண்ணம் பலவும் பழமையில் வேர்விட்டு, வளர்ந்து உரம் பெற்றதாகி — அது அவரவர்க்கு நன்மை பயப்பது என்னும் நம்பிக்கையையும் வளர்த்து விடுவதால் — பழமையினின்றும் மனிதனைப் பிரித்துப் புதிய சிந்தனை ஆற்றல்பெறச் செய்வது எளிதாக முடிவதன்று.

மேலும், மனிதனின் நம்பிக்கைகள் அனைத்தும் அவனவன் கொண்டுள்ள 'கடவுள்' — தெய்வ நம்பிக்கைகளையே மூல மாகக் கொண்டுள்ளன. அவன் ஒவ்வொரு நாளும், வேளையும் — 'கடவுள்' பற்றி அவன் கொண்ட நம்பிக்கை வழியில் பிறக்கின்ற எண்ணத்தின்படி எண்ணுவதற்கு முற்படும் பழக்கத் திற்கு ஆளாகியுள்ளதால் — 'புதிய சிந்தனை' அவனிடம் தோன்ற மறுக்கிறது. தெய்வம் குறித்து எத்தனையோ வகையில் விளக்கங்கள் விரிவடைந்து, சத்தியமே கடவுள், அறிவே தெய்வம், அன்பே கடவுள் எனவும், அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்தது, இத் திறத்தது, இவ் வண்ணத்தது என்று இயம்ப முடியாதது — கடவுள் எனவும், அருட்பெருஞ்சோதியாய் உள்ளத்து ஊறும் கருணை ஒளியே கடவுள் எனவும், அனைத்துக்கும் அப்பாற்பட்ட பாழே — பெருவெளியே கடவுள் எனவும், ஏதுமற்றது, எதுவும் வேண்டாதது, எதையும் செய்யாதது கடவுள் எனவும், நீயே — உன் உள்ளமே கடவுள் எனவும் உரைத்தார் பலர் உளரெனினும், மக்கள் உணர்வில் மாற்றம் ஏதும் இன்றி, அவரவர் வழிவந்த பழக்கப்படியே நம்பிக்கை வழியில் நினைவுடையவராவதை நாம் காணலாம்.

எனவேதான் — மனிதன் 'பழமையில்' ஊறிய எண்ணங் களிலிருந்து விடுபட்டுப் புதியதோர் சமுதாயத்தை உருவாக்கிடும் ஆற்றலை எளிதில் பெறுவதில்லை.

மூட நம்பிக்கையின் மாற்றமே புதிய மதங்கள்:

மேலும் ஒரு வகை மத நம்பிக்கையை — மற்றொரு வகை நம்பிக்கையால், மாற்றிடும் முயற்சியில் ஈடுபட்டவர்களே உலகில் தோன்றிய மதத் தலைவர்கள் பலரும்.

வைதீகப் பிராமணிய ஆதிக்கத்தை மாற்றிடும் வழியில் — பிறந்ததே புத்தரின் மதம். ஆரிய வேள்வி முறை மறுப்புடன்

உயிர்க்கொலையை எதிர்த்து உருவானதே சமண சமயம். ஆயினும் அவையும், அவை போன்ற பிற மதங்கள் பலவும், அவை தோன்றிய கால கட்டத்தில் — மக்களின் எண்ணத்தில் சிற்சில — மாற்றம் விளைவிப்பினும், மக்கள் மறுபடியும் பல்வேறு மூட நம்பிக்கைகட்கு ஆளாவதைத் தடுக்கவும் இல்லை, மாறாக வளர்க்கவும் ஏதுவாயின. மனிதனின் ஒருவகை நம்பிக்கையை — மற்றொரு வகை நம்பிக்கையால் மாற்ற முயற்சித்த மதங்களினால் விளைந்த பயன் எதுவாயினும், அது தொடர வழியில்லை. மக்கள் அறிவு வழியில் விழிப்புணர்வுடன் வாழ அவை வழி செய்யவில்லை. மாறாக வெவ்வேறு வகையான மூட நம்பிக்கைகளையே வளர்த்து வந்துள்ளன.

ஒவ்வொரு மதமும்-சமயமும் ஒவ்வொரு வழிகாட்டியையோ, ஒரு சில பழைய சாத்திர ஏடுகளையோ, ஒரு தெய்வ வழி பாட்டையோ மூலமாகக் கொண்டு உருவாகியுள்ளன. ஒவ் வொரு மதத்திலும், வழிபடு தெய்வம் அல்லது சித்தியடைந்த குரு, கடவுள் பற்றிய தத்துவம், ஞான விளக்கம், சாத்திர விளக்கம், சடங்கு பற்றிய கட்டளை, இறப்புக்குப்பின் மனிதனின் நிலை யாதாகும் என்னும் கருத்து, மேல் உலகம், பரமண்டலம், துறவு, ஆண் பெண் உறவு முறை, அரசாட்சி, நீதி, ஈகை, தொழில், வணிகம், போர் முதலான பலவற்றைப் பற்றியும் — சில மதங்கள் சிலவற்றைப் பற்றிக் கூறாவிடினும் — பெரும்பாலும் தெரிவித்துள்ளன. ‘கடவுள்’ தான் அனைத் துக்கும் மூலமென்று உரைப்பது போன்றே, ‘கடவுள்’ என்னும் ஒரு மூலம் உண்மையாகாது என்று உரைத்த மதங்களும் உண்டு.

எந்த ஒரு மதத்தின் கருத்துக்களும், மற்றொரு மதத்திற்கு முற்றும் உடன்பாடல்ல. அடிப்படையிலேயே மாறுபடும் முரண்பட்ட கருத்துக்களும் பல. ஒருவகையில் நெருக்கமுள்ளது போன்று தோற்றமளிக்கும் மதங்களான —

சைவமும் — வைணவமும்
சமணமும் — பவுத்தமும்
இசுலாமும் — கிறித்தவமும்

கூடத் தம்முள்ளே பல வகையில் வேறுபடுவன. சில கால கட்டத்தில் அவை ஒன்றுடன் ஒன்று போரிட்டு நின்றன.

ஒரு மதத்திற்குள்ளேயே முரண்பாடுகள்:

தென்னகத்தில் தோன்றிய ஆச்சாரியர்கள் எனப்படும் ஆதி சங்கராச்சாரியார், இராமனுசாச்சாரியார், மத்துவாச்சாரியார் ஆகிய மூவருமே — வேதாந்த விசாரத்திலும், விளக்கத்திலும் ஈடுபட்டவர்கள் என்றாலும், அவர்கள் விளக்கிய 'தத்துவம்' மூன்றும், ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. ஒன்றை ஒன்று மறுப்பவை, எதிர்ப்பவை. நடைமுறை வழிகளிலும் வேறு வேறானவை. சைவமும் - வைணவமும், இன்றும் பலப்பல பிரிவுகள் கொண்டுதான் உள்ளன. சமணமும் - பவுத்தமும், கிறித்துவமும் - இசுலாமும் கூடப் பலப்பல பிரிவுகட்கு ஆட் பட்டுள்ளன. எனவே, சமய ஞானிகள் எனப்பட்டவர்களில் எவருடைய ஞானத் தெளிவையும் அல்லது கடவுள் தத்துவ விளக்கத்தையும் — இன்னொரு சமய ஞானி உடன்பட்டு, ஏற்றுக் கொண்டதாக வரலாறில்லை. அப்படிப்பட்ட இறை அருள் பெற்றவர்களாகக் கூறப்படும் மத வழிகாட்டிகளே ஒருவருக்கொருவர் மாறுபட்ட கருத்துடையராவதைக் கூட அறிந்து கொண்டு, சிந்திக்க முன்வராத அளவில்தான் — மனிதன் குறிப்பாகத் தமிழன் சுய சிந்தனையற்றவனாக, அந்தத் துணிவும் தெளிவும் அற்றனவாக உள்ளான்.

'வேறுபட்ட சமயங்கள் யாவும் போற்றும் இறைவா' — எனவும் 'தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' எனவும், சைவர்கள் சிவனைப் போற்றுவதை ஒப்ப — அவரவரும் தமது மத வழியில் வழிபடும் தெய்வத்தை அனைத்து மதத்தவரும் உலகோரும் போற்றும் இறைவன் எனக் கூறிக்கொள்வர். எனினும், அந்த மதவாதிகள் அனைவரும் ஒப்பியதொரு கடவுளை — கடவுள் தத்துவத்தை இன்றுவரை உலகம் அறியவில்லை. எனவே அவரவர் உள்ளத்தில் பதிந்து உரம் பெற்ற நினைவொன்றே, அப்படிப்பட்ட 'தெய்வ' சிந்தனையாவதை யாரும் மறுக்கொணாது. அது குறித்து உண்மை காண, தாமே பகுத்தறிந்து தெளிவதற்கு — மக்கள் முன்வரவில்லை. தமது மனத்தில் பதிக்கப்பட்டுவிட்ட எண்ணத்திற்கு ஆட்பட்டுவிட்ட மக்கள், தமது அறிவைப் பயன் படுத்தவே அஞ்சுகின்றார்கள். ஆண்டவனை மலைபோல நம்பி இருக்கிறார்கள் என்பதினும். அவரது பழமை வழிவந்து, நிலைத்துவிட்ட நம்பிக்கை மலைபோன்று — கருங்கற்பாறையாய் உயர்ந்து நிற்கிறது. தந்தை பெரியாரோ — இரும்புக் கடப்பாறை கொண்டு தகர்க்கவியலாத கற்பாறையையும் சிற்றுளிகொண்டு

சிறுசிறு கல்லாக உடைத்து எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு, அது ஒரு நீண்டகாலப்பணி என்றும் அறிவித்து, தமது வாழ் நாளையே அதற்கு ஒப்படைத்து ஓயாது பாடுபட்டார்கள். மக்கள் சிந்தித்து அடையும் தெளிவு எதுவாயினும், மனிதனைச் சிந்திப்பதற்குத் தூண்டி, ஒவ்வோரளவிலேனும் மனிதனாக உணரச் செய்த ஒப்பற்ற பெருமை பெரியாருக்கு உண்டு.

வள்ளலாராலேயே முடியவில்லை!

'கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப்போக வேண்டும்' என்றும், சாதி, மத, புராண இதிகாச மூடத்தனமெல்லாம் ஒழிந்து மக்கள் சன்மார்க்க நெறியினர் ஆகவேண்டும் என்றும், வடலூர் வள்ளலார் பலவாறு உரைத்தவை, ஏற்கப்பட வேண்டியன எனினும், அவை மக்களின் நம்பிக்கை வழிபட்டு வளர்ந்த பழக்கச் சிந்தனையை மாற்றும் ஆற்றலைப் பெற முடியவில்லை.

வள்ளலாரே தமது வாழ்நாளில் பெரும்பகுதியைப் பழக்கப் பட்ட சிந்தனையின் பக்தி வழியிலேதான் செலுத்தினார். இறுதிக்கட்டத்தில்தான் — பழகிய வழிச் சிந்தனையில் கற்பனை யான — பொய்யான எண்ணங்கள் மேலிட்டு, உண்மை ஒளி காணத் தடையாகின்றன என்று உரைக்கலானார். எனவே அவரது பாடல்களில் ஒருசில மட்டுமே புதிய சிந்தனைக்கு வழி செய்கின்றன. அவையுங்கூடப் பக்தி நிலைப்பட்ட வழியில் அமைந்திருத்தலின் — ஒரு புதிய சிந்திக்கும் ஆற்றலை மக்களிடம் உருவாக்க இயலவில்லை. ஒரு சில புதிய — பொதுநல நோக்குடைய நியாயங்களை மட்டுமே வழங்கு கின்றன. அவையும் ஓர் இயக்கமாக மக்களிடம் பரவவில்லை. அங்கும் நம்பிக்கையே தடைக்கல்லாயிற்று.

பெரியாரின் பணியின் அருமை!

இந்த உண்மையை எண்ணிப் பார்ப்பவர்களே, தந்தை பெரியாரின் சிந்தனையில் பிறந்த, பகுத்தறிவு — தன்மான இயக்கம் எப்படிப்பட்டதொரு எதிர்நீச்சல் பணியில் ஈடுபட்டது என்று உணரவல்லவராவர்.

பலநூறு தலைமுறையாக வழிவழி வளர்ந்த நம்பிக்கைகளைக் கொண்டு, சமுதாய (இன) வழக்கமாக இடம்பெற்று, மக்கள்

பழக்கத்தில் நிலைத்து, பக்தி உணர்வால் உரம் பெற்று, பரம்பரைப் பெருமை எண்ணத்தால் வலிவுபெற்று, இன்றைய ஆதிக்க சக்திகளுக்கு ஆதரவாக நிலவுதலால் அவர்தம் வலிமையைத் துணைக்கொண்டு, பொருளாதார முறையையே காக்கும் வாயிலாகி, ஏற்றத் தாழ்வுகளான இன்றைய சமூக நிலையை நிலைப்படுத்தும் கருவியாகி, கற்றறிந்தார் எனப்படும் கூட்டத்திற்கு, அவர்தம் வாழ்வுக்கு வாய்ப்பாகி, மற்ற மக்கட்கோ அதுதவிர வேறு வழிச் சிந்தனை ஏற்பட இடமளிக்காத அரணாகி உள்ள வைதீக வருணாசிரமதருமக் கோட்டையைத் தகர்ப்பது என்னும் தந்தை பெரியாரின் பகுத்தறிவு வாதம், எப்படிப்பட்ட எதிர்ப்பைச் சந்தித்தது — சந்திக்கிறது என்பதை ஆழ்ந்து எண்ணிப் பார்த்தால்தான் அதன் அருமை விளங்கும்.

பெரியாரின் பணி எத்தகையது?

இயமப் பனிமலையின் உயர்முடியான எவரெஸ்டில் ஏறும் முயற்சியிலும் கடுமையானதொரு முயற்சியில், புயல்வீசிட அலை கொந்தளிக்கும் கடலில் மரக்கலம் செலுத்துவதினும் துன்பமானதொரு முயற்சியில், நன்றி கூறவோ, பாராட்டவோ வரவேற்கவோ செல்வாக்கு மிக்கவர் எவரும் முன்வராத சூழ்நிலையில், காலகட்டத்தில் —

★ அறிவுவழிச் சிந்தனையை அரும்ப வைக்கும் பெரும்போரில்,

★ மனிதத் தன்மையை நிலைநாட்டும் புதிய சமுதாயம் காணும் போர்க்களத்தில்,

★ தமிழனின் பிறவி இழிவுப் பொய்மையைப் பொசுக்கும் பெரும்பணியில் — ஈடுபட்டவர் தந்தை பெரியார்.

கடவுள் எதிர்ப்பு ஏன்?

அவர் எடுத்துவைத்த பகுத்தறிவு வாதங்களை, உண்மை விளக்கத்தை, இந்தச் சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தியோர் ஏற்றிட இசையாது, எதிர்ப்புக்கிளப்பி, அவரையும், அவரைச் சார்ந்தவர்களையும், 'நாத்திகர்' என்று பறைசாற்றி, மக்களின் வெறுப்புக்கு ஆளாக்கிவிடலாம் என்று அவர்கள் முனைந்ததாலேயே, ''நாத்திகம் என்றால் என்ன? அதில் என்ன தவறு? அதனால் யாருக்கு என்ன கேடு? என்னும் கேள்விகளை எழுப்பிக் 'கடவுள்' பெயராலும், நினைவாலும் வளர்க்கப்பட்ட மூட நம்பிக்கைகளையும், பொய்மைப் புரட்டுகளையும், பயனற்ற கற்பனைகளையும் விளக்கிக் கடிந்துரைக்கலானார்.

கடவுள் பெயரால் — சாதி — மதச் சடங்கு முறைகளும் வைதிகப், புரோகிதம் ஆதிக்கம் செலுத்துவதற்கு வழியும் செய்யப்படாதிருக்குமாயின், அப்படிப்பட்ட 'கடவுள்' என்னும் கடந்த பொருள் பற்றிய சிந்தனை குறித்துப் பெரியார் கவலைப்பட்டிருக்கமாட்டார்.

பெரியார் அவர்களே ஒருமுறை பேசும்போது, ''உங்கள் கடவுள் உண்மையிலேயே இருக்குமாயின், நான் இல்லை என்பதாலா அவ்வளவு சக்தி வாய்ந்த கடவுள் இல்லாமற் போய்விடும்? பின் ஏன் பயப்படுகிறீர்கள்?'' என்று கேள்வி எழுப்பி ''இருப்பது எதுவும் ஒருவன் இல்லை என்பதால் மறைந்துவிடாது. இல்லாதது எதுவும் ஒருவன் உண்டு என்பதால் முளைத்துவிடாது'' என்று விளக்கங்கூறி — ''அவனன்றி ஓரணுவும் அசையாது'' என்கிறீர்கள் — அப்படியானால் நான் இப்படிப் பேசுவதைக் கடவுள் தடுத்திருக்கலாமே? எனவே சிந்தித்துப் பாருங்கள் — எது எது உங்கள் பகுத்தறிவுக்குச் சரி என்று படுகிறதோ — அதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று உரையாற்றினார்.

நமது நன்றிக்கடன் என்ன?

எனவே, பழமைப் பிடிப்பிலிருந்து மக்களை மீட்டு மனிதனாகச் சிந்திக்க வைப்பது — பகுத்தறிவு வழியிலான புதிய சமுதாயத்திற்கு ஏற்றவனாக ஆக்குவது — சமத்துவ சமதர்ம வாழ்வுக்கு அவனைக் கொண்டு வழிவகுப்பது என்னும் இலட்சியத்தோடு நமது மக்களின் அறிவுக்கண் திறந்த பெரியாரின் பணி, தொண்டு, தியாகம், துணிச்சல், இடை விடாத சிந்தனை, அத்தனையும் காலத்தால் மதிப்புமிகும் அருஞ்செயலாகும்.

'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்'

என்னும் குறள் காட்டும் பெரியாராய்த் திகழ்பவர் — நமது தந்தை பெரியாரே!

தந்தை பெரியார் பிறந்ததால் — அவரது புதிய சிந்தனை பிறந்ததால் — தன்மான இயக்கம் பிறந்ததால் பகுத்தறிவைப் பயன்படுத்தி, புத்துணர்வு பெற்ற மனிதராகத் தலைநிமிர்ந்தவர்கள் நாம். தமிழினமும் அவ்வழியில் தலைநிமிரும் நாளை எதிர்நோக்கி, நமது பணியை நாளும் தொடர்வதே தந்தை பெரியாரைப் போற்றுவோர் ஆற்ற வேண்டிய நன்றிக் கடனாகும்.

வாழ்க தந்தை பெரியாரின் பகுத்தறிவு வழி!
வளர்க மனித சுய சிந்தனை ஆற்றல்!!

10. இனவுணர்வைக் காப்போம்!

நீதிக்கட்சியின் தோற்றம்:

தமிழகத்தினுடைய தென்கோடியிலே இருக்கிற குமரிமுனையிலே நின்று மூன்று பக்கமும் திரும்பிப்பார்த்தால் முப்புறமும் அலை வீசுகிற அந்தக் கடலினுடைய அழகான காட்சியைக் காணலாம். அந்தக் காட்சிக்கு ஈடாக இந்த மேடையிலே இருந்து மூன்று பக்கத்திலேயும் பார்க்கிற போதும் கடலெனத் திரண்டிருக்கிற மக்கள் வெள்ளத்தின் காட்சியை நான் காண்கிறேன்.

கடலென நீங்கள் திரண்டிருந்தாலும் கூடத் தமிழர்கள் கடமையினைச் செய்யத் தவறிய அந்த நிலைமையையும் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

எண்ணிக்கையிலே கடலாக இருக்கிறோம்; ஏமாறுவதிலே மிகப்பெரிய சமுத்திரமாக இருக்கிறோம் என்பதைத் தமிழ்ச் சமுதாயத்திலே உள்ள நாம் இன்றைக்காவது ஆழ்ந்து எண்ணிப் பார்த்து, நமக்கு நாமே ஒரு முடிவு எடுத்துக் கொண்டால் தவிர — நம்முடைய வாழ்க்கை லட்சியமாகச் சிலகருத்துக்களை ஏற்றுக்கொண்டால் தவிர எதிர்காலத்திலே ஒரு தமிழகம் இருக்குமா? என்று நான் சந்தேகப்படுகிறேன்.

தமிழன், பெற்ற உரிமை, அவன் பெற வேண்டிய உரிமையைப் பெறுவதற்குப் பெரியார் 50 ஆண்டுக்காலம் போராடினார். தமிழனுடைய உரிமையை, தாழ்த்தப்பட்டவனுடைய உரிமையை, அடித்தட்டுக் குடிமகனுடைய உரிமையை நிலைநாட்டுவதற்குத்தான் நீதிக் கட்சியே பிறந்தது.

வெள்ளுடை வேந்தர் சர். பி.டி. தியாகராயர் இலட்சாதிபதி குடும்பத்திலே அந்த நாளிலே பிறந்தவர். இலட்சாதிபதி குடும்பத்திலே பிறந்து லண்டன் நகரத்தில் தோற் சந்தையில் அவர் ஏற்றுமதி செய்த தோல் விற்பனையான காரணத்தாலே அவருடைய நாணயத்தைக் கண்டு, நேர்மையைக் கண்டு அவருடைய தொழில் நாணயத்திற்காக வெள்ளைக்காரனே பாராட்டுகிற தகுதி பெற்றிருந்தவர் சர். பி.டி. தியாகராயர். அவர் வீட்டுத் தாழ்வாரத்தில் மிகப்பெரிய ஜமீன்தாரெல்லாம் வந்து காத்துக்கிடக்கிற அளவுக்குச் செல்வாக்குப் பெற்றிருந்த

தியாகராயர்தான் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, வெளிப் படையாகச் சொன்னால், பார்ப்பனரல்லாத மக்களுக்காக, பார்ப்பனரிடத்திலே பகை இருந்த காரணத்தாலே அல்ல — பார்ப்பனரல்லாதாரும் வாழ்ந்தாக வேண்டுமே என்ற ஏக்கத் தால் — அந்த இயக்கத்தை 1917-வது ஆண்டு தொடங்கினார். நான் பிறப்பதற்கு ஐந்து ஆண்டுக்கு முன்னாலே.

அன்றைக்குத் துவக்கப்பட்ட அந்த இயக்கம் வடிவெடுத்து, வளர்ந்து, ஆட்சி நடத்தி, கம்யூனல் ஜி.ஓ. கொண்டு வந்து, எல்லா மக்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடிய முறையைக் கல்வித் துறையிலே, அரசுத் துறையிலே உருவாக் கிற்று. பத்து பன்னிரண்டு ஆண்டுக்காலம் நீதிக் கட்சி ஆட்சியிலே அரசின் அலுவலர்களாக மெல்ல மெல்ல நம்மவர் கள் இடம் பெற்றார்கள். அப்படி இடம் பெற்றாலும்கூட நம்மவர்கள் தம்மை யார் என்று சொல்லிக் கொள்கிற மனவலிமையைப் பெறவில்லை. நீதிக்கட்சி இருந்தது நியாயம் வழங்க. ஆனால் அது எங்களுடைய உரிமை என்று பேசுகிற, குரல் எழுப்பும் உணர்வு மக்களிடம் ஏற்படவில்லை.

கழக ஆட்சி மலர்ச்சி:

தந்தை பெரியாரோடு பேரறிஞர் அண்ணா அவர்கள் சேர்ந்து திராவிடர் இயக்கத்தை நடத்தி, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தி, ஓர் உணர்வை, மொழி அடிப்படை யிலே பிறந்த ஓர் உணர்வை, நாமெல்லாம் தமிழர்கள் என்ற உணர்வை, தமிழன் எதற்கு மற்றவனுக்குத் தாழ வேண்டும் என்ற உணர்வை, தமிழைத் தாழ்த்தத் தாழ்த்த தமிழன் அல்லவா தாழ்வான், அதற்கு நீ என்றைக்கும் இடம்தரக் கூடாது என்ற உணர்வை வளர்த்ததனுடைய விளைவாக, பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் தந்தை பெரியார் அவர்களோடு கலந்து பேசி சேலத்திலே நடைபெற்ற மாநாட்டில் நீதிக் கட்சிக்குத் திராவிடர் கழகம் என்று பெயரிட்டு, இனி இந்த இயக்கம் — நீதிக்கட்சி, எந்த மக்களுக்காகப் பிறந்ததோ அந்த மக்கள் பெயராலே இந்த இயக்கம் நடைபெறும் என்று அறிவித்தார்கள்.

அந்தத் திராவிடர் கழகந்தான் — அதே அடிப்படை இலட்சியந்தான் — அரசியல் உலகத்திலே அடியெடுத்து

வைக்காவிட்டால் — ஆட்சிப்பீடத்திலே நம்முடைய இனத்தினுடைய பிரதிநிதி அமராவிட்டால் எதிர்காலத்திலே, ஜனநாயகத்திலே நம்மவர்கள் ஏமாற்றப்படுவார்கள் என்ற காரணத்திற்காக அறிஞர் அண்ணா அவர்களால் **திராவிட முன்னேற்றக் கழகமாக** உருவாக்கப்பட்டது.

அந்தத் திராவிட முன்னேற்றக் கழகம் 17 ஆண்டுக் காலம் போராடியது. எத்தனையோ போராட்டங்கள்! இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி ஏற்றக் கண்டனப் போராட்டம், பல்வேறு ஆதிக்கங்களை எதிர்த்துப் போராட்டம், நம்முடைய கலைஞர் தலைமையில் கல்லக்குடி போராட்டம், நங்கவரம் போராட்டம், தஞ்சையிலே பஸ் முதலாளி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட்டம், இப்படி எத்தனையோ போராட்டங்களை நடத்தி அதற்குப் பின்னர் மக்களுடைய பேராதரவைப் பெற்றுத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தது.

இனஉணர்வு ஆட்சியே தி.மு.க. ஆட்சி:

இன்றைக்கு உங்களைக் கேட்கிறேன். பேரறிஞர் அண்ணா உருவாக்கிய ஆட்சி, பேரறிஞர் அண்ணா அவர்களாலே எதற்காக உருவாக்கப்பட்டது என்று ஒருகணம் எண்ணிப் பாருங்கள். அண்ணா முதலமைச்சர் ஆவதற்கா? அந்த முதலமைச்சர் பதவி அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பெருமை சேர்த்ததா? முதலமைச்சர் பதவிக்கு ஆசைப்படக் கூடியவரா அறிஞர் அண்ணா? அந்தப் பதவி எவ்வளவு நாள் என்று அவருக்குத் தெரியாதா? பிறகு எதற்காக?

தமிழனுடைய இனத்தைப் பாதுகாக்கக் கூடிய உணர்வுடையவனுடைய ஆட்சி தமிழ் நாட்டிற்குத் தேவை என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினார். 'தமிழாய்ந்த தமிழ் மகன்தான் தமிழகத்தின் முதலமைச்சாய் வருதல் வேண்டும்' என்று புரட்சிக் கவிஞர் பாடினாரே அந்தப் பாட்டு, தமிழாய்ந்த தமிழ் மகனுக்கு வாழ்வு கிடைப்பதற்காக அல்ல. தமிழருக்கு வாழ்வு கிடைப்பதற்காக, தமிழினத்திற்கு வாழ்வு கிடைப்பதற்காக, தமிழினத்தினுடைய பெருமையை டெல்லியிடம் உணர்த்துவதற்காக, தமிழினம் என்ற தங்கத்தை ஆரியம் என்ற செப்பிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக, இன உரிமைக்காக; அநியாயத்திற்காக அல்ல. நியாயத்திற்காக; வாழ்ந்தவர்களுக்காக

அல்ல — வாழ வேண்டியவர்களுக்காக; உழைக்காதவர்களுக்காக அல்ல — தங்களுடைய உள்ளங்கால் எலும்பு தேய்கிற அளவிற்கு உழைப்பவர்களுக்காக; பாடுபட்ட பரம்பரைக்காக.

இன்னும் நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன். நாமெல்லாம் ஓர் குலம், நாமெல்லாம் ஓர் இனம்; நம்மிலே எவனும் உயர்ந்தவன் அல்ல! அதுவும் பதவியினால் உயர்ந்தவன் அல்ல, தொண்டிலே உயர்ந்தவனாக இருக்கலாம் — பிறவியிலே உயர்ந்தவன் அல்ல, நம்முடைய சாதிகள் உண்மை அல்ல. நாம் எந்தச் சாதியென்று கருதினாலும் அந்தச் சாதிக்கென்று ஒரு வரலாறு இருந்தாலும், அந்தச் சாதி இன்னொரு சாதியைவிட இன்ன வகையிலே உயர்ந்தது என்பதற்கான ஆதாரமில்லை.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் - மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்லுபவர், — என்று வள்ளுவன் சொன்னானே அந்த அடிப்படையில் பாட்டாளிக்கு மதிப்பே தவிர படாடோபத்தை விரும்பிகிறவனுக்கு, உழைக்காமல் வாழ்கிறவனுக்கு, பிறரைச் சுரண்டுகிறவனுக்கு, உலுத்தனுக்கு, உயர்வு தரத் தேவையில்லை என்ற தத்துவத்தின் அடிப்படையில் நாமெல்லாம் ஓர் குலம், ''ஒன்றே குலம் — ஒருவனே தேவன்'' — அந்தத் தேவன் யார் என்பது பகுத்தறிவு அடிப்படையிலே சிந்திப்பதற்கு விடப்பட்டாலுங் கூட நாமெல்லாம் ஓரினம் என்ற உணர்வை உண்டாக்குவதற்குத்தான் அறிஞர் அண்ணா அவர்கள், திராவிடர் கழகம் தோற்றுவித்த நாளிலே இருந்து தொடர்ந்து பாடுபட்டுத் தமிழகத்திலே ஒரு ஆட்சியை உருவாக்கினார்கள். அந்த ஆட்சி இந்த நாட்டிலே பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்புத் தந்த ஆட்சி.

தமிழ் உணர்விலார் ஆட்சி விளைவு:

அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள் அறிஞர் அண்ணா பெயரைச் சொல்லி — அவர் சொல்லுகிற அழகே ஒரு தனி அழகு — 'அறிஞர் அண்ணாவின் நாமம் வாழ்க!' என்பார் — அறிஞர் அண்ணா நாமம் போட்டதும் இல்லை. வேறு எவனுக்கும் சாத்தியதும் இல்லை. 'அறிஞர் அண்ணா நாமம் வாழ்க!' — என்பதில் நாமம் என்பது தமிழே அல்ல. 'நாமம் என்பது' அச்சம் என்று பொருள் தரும் தமிழ்ச்சொல். 'பெயர்' என்று பொருள் தருவதில்லை தமிழில். 'அண்ணா நாமம்' வாழ்க என்று கூறுவதற்குத் தமிழில் —

அண்ணா அச்சம் வாழ்க என்றுதான் பொருள்படும். இந்த வழக்குத்தான் ஏனோ? அச்சமே ஏற்படுத்தாத அண்ணாவுக்கு இது பெருமை சேர்ப்பதாமா? பொருள் அறியார் — அண்ணாவின் கொள்கை தெளியார் — எந்த வகையிலும் அவர் பெயரைப் பயன்படுத்திக் கொள்வார் — அப்படிக் கூறுவதில் வியப்பில்லை!. தமிழ் தெரியாதவர் தமிழகத்தில் முதலமைச்சரானால், தலைவரானால் அண்ணாவின் நாமம் வாழுமே தவிர கொள்கை வாழாது. தந்தை பெரியாருடைய நூற்றாண்டுவிழா கொண்டாடினாலும்கூடப் பெரியாருடைய கொள்கை வாழக் கூடாது — பெரியார் சொன்ன கருத்துக்கள் வாழக் கூடாது; பெரியார் பெயர் மட்டும் வாழ்க என்று வாழ்த்துகிற ஒரு கூட்டம் தமிழகத்தில் ஆட்சிக்கு வந்ததனுடைய விளைவு, இன்றையதினம் தமிழ்ச் சமுதாயத்தினுடைய முன்னேற்றம் — ஏறத்தாழ ஐந்து ஆண்டுக் காலத்தில் 20 ஆணடுகள் பின்னோக்கிப் போயிருக்கிறது. நான் சொல்வதில் என்னுடைய மனச்சான்றுக்கு மாறுபட்ட எதையும் சொல்லவில்லை, மனச்சான்று அடிப்படையிலே சொல்கிறேன். இருபது ஆண்டுக் காலம் பின்னோக்கிப் போயிருக்கிறது. 1967-க்குப் பின்னர் 1975-சனவரி வரை பெற்ற வளர்ச்சியை இன்றைய தினம் இழந்து 1967-க்கு எட்டாண்டுக் காலம் முன்னாலே இருந்த நிலைமைக்கு நாம் போய்க் கொண்டிருக்கிறோம்.

தொழில் வளர்ச்சியில், வேலையில்லாத் திண்டாட்டத்தில், வறுமையைப் போக்குவதில் அந்த நிலைமை அரசாங்கத்திலே நம்மவர் பெற்றிருந்த செல்வாக்கில் வீழ்ச்சி. இப்படி அத்தனையிலேயும் வீழ்ச்சியடைகிறோம். இந்த வீழ்ச்சிகளுக்ெல்லாம் காரணம் — ஆட்சி — அந்த ஆட்சியை நடத்திய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர் இந்தச் செல்வாக்கைப் பெறுவதற்குக் காரணமாக இருந்த மக்களிடத்திலே தெளிவு ஏற்படுத்தினால் தவிர, நாமெல்லாம் தமிழர்கள் என்றோ திராவிடர்கள் என்றோ, ஒரு இயக்கத்தை நடத்துகிறவர்கள் என்றோ இனிப் பெருமைப்பட முடியாது.

எனவே அந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதுதான் நாம் நடத்துகிற போராட்டத்தினுடைய மிக முக்கியமான நோக்கம். நாம் நடத்துகிற கண்டனக் கூட்டங்களாக இருந்தாலும் இந்த மாதம் முதல் இரண்டு தினங்கள் நடத்திய நிகழ்ச்சிகளாக இருந்தாலும் இன்றைய தினம் நடைபெற்ற மகளிர் மாநாடாக

இருந்தாலும், பொதுக் கூட்டமாக இருந்தாலும், மிகப்பெரிய கண்டனப் பேரணி — கருஞ்சட்டையணிந்து கருங்கொடி பிடித்து வந்த பேரணி — எம்.ஜி.ஆர். ஆட்சி தமிழ்நாட்டிற்குக் கேடு என்று அறிவிக்கிற நிகழ்ச்சியாக இருந்தாலும், இவையெல்லாம் தமிழ்நாட்டு மக்களுடைய கண்ணைத் திறப்பதற்காகத் தான். எனவே, நான் உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். **தமிழ்நாட்டிலே தமிழரல்லாதாருடைய ஆட்சி தமிழ் நாட்டை எப்படி வாழவைக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்.**

கலைஞரோ நானோ அரசியலிலே வெற்றி பெற்றாலும் — தோற்றாலும், எங்கள் வார்த்தை எடுபட்டாலும் — எடுபடா விட்டாலும் நாங்கள் சொல்வதை நீங்கள் ஒப்புக் கொண்டாலும் — ஒப்புக் கொள்ளாவிட்டாலும், நாங்கள் மதிக்கப்பட்டாலும் — மதிக்கப்படாமலே போனாலும் நாங்கள் வாழ்வது இந்த மண்ணிலேதான். நாங்கள் பிறந்ததும் இந்த மண்; வாழ்வதும் இந்த மண்; நாங்கள் சாவதற்கு நினைத்துக் கொண்டிருப்பதும் இந்த மண்தான்.

நாடு உற்ற கேடு:

எம்.ஜி.ஆரைப் பொறுத்த வரையில் அவர் இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர் என்ற நினைப்பு அவருக்கு இல்லை.

எம்.ஜி.ஆர். சொல்கிறார் — என்னுடைய தாயினுடைய பாஷை மலையாளம்தான்: நான் என்னுடைய வாழ்க்கையிலே தொழிலுக்காகப் பயின்றுகொண்ட மொழி தமிழ்மொழி என்று. தொழிலுக்காக எம்.ஜி.ஆர். தமிழைப் பயின்று கொண்டவர். தி.மு. கழக அரசியலிலே ஈடுபட்டுத் தனிக் கட்சி பிரித்தார் ஒரு தொழிலாக ஆக்குவதற்காக. தமிழ்நாட்டு மக்களிடத்திலே உறுதி கொடுத்தார் வெறும் தேர்தலுக்காக! ஆட்சிக்கு வந்தார் அதிலே கிடைக்கக்கூடிய லாபத்திற்காக.

எம்.ஜி.ஆர். ஆட்சியில் அடி முதல் நுனி வரை — காவல் நிலையம் முதல் — அரசுத் தலைமைச் செயலகம் வரை, கலெக்டர் அலுவலகத்திலிருந்து சாதாரண ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அலுவலகம் வரையில் அத்தனையிலும் ஊழல்.

எண்ணம் புதுப்பிக்கும் நாள்:

இந்த நிலைமைகளை மாற்ற வேண்டுமானால் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கூட்டத்திற்கு வந்திருக்கிற உங்களிலே பலர் திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும், நீங்களும் உங்களுடைய உணர்வைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். முன்னேற்றக் கழகத்துக்காரன் என்ற காரணத்திற்காக இந்த உணர்வுகளெல்லாம் எப்பொழுதும் நம்மிடம் இருக்கிறது என்று நான் கருதவில்லை. நாம் எப்பொழுதும் விழித்துக் கொண்டே இருந்தாக வேண்டும். எப்பொழுதும் எச்சரிக்கையாக இருந்தாக வேண்டும். எப்பொழுதும் நம்முடைய எண்ணங்கள் இந்த ஆட்சியிலே நடைபெறுகிற அக்கிரமங்களை அலசிக் கொண்டேயிருக்க வேண்டும்.

அதே போல திராவிட முன்னேற்றக் கழகத்திலே இல்லாத பொதுமக்கள் கழகத்திலே சேர்ந்தவர்கள், தங்களை ஏற்கெனவே இணைத்துக் கொள்ளாதவர்கள் பல்லாயிரக் கணக்கிலே இருக்கின்றனர். உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டைக் காப்பாற்ற நீங்கள் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். எதிர்காலத் தமிழகம் காப்பாற்றப்பட வேண்டுமா? அல்லவா? என்று எண்ணிப் பார்த்து எதிர்காலத் தமிழகத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் இன்றைக்கு இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர வேறு எந்தக் கட்சி இருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எம்.ஜி.ஆர். கட்சியிலே ஏற்கனவே சேர்ந்த தோழர்களை நான் கேட்டுக் கொள்வேன். 'நீங்கள் அறியாமலே அந்தக் கட்சியில் சேர்ந்திருக்கலாம். உண்மை புரியாமல் சேர்ந்திருக்கலாம். எம்.ஜி.ஆர். மீது வைத்த நம்பிக்கையிலே சேர்ந்திருக்கலாம். எப்படியோ, ஒரு சூழ்நிலையின் காரணத்தினாலே உங்களைச் சேர்ந்த ஒரு நாலு பேர் போன காரணத்தாலே ஐந்தாவது பேராக நீங்கள் போயிருக்கலாம். ஒரு காரணமில்லாமலே கூட உங்களில் சிலர் போயிருக்கலாம். உங்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். உங்களுக்காகவே நீங்கள் வாழ்வது என்று கருதினால்கூட, இனி எம்.ஜி.ஆர். ஆட்சி நீண்ட நாள் நீடிக்காது என்பது மட்டுமல்ல; எம்.ஜி.ஆர்

மாயையும் நீடிக்காது. எனவே நாட்டை எண்ணிப் பார்த்து எங்களை நீங்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலுங்கூடத் தந்தை பெரியாரை, அறிஞர் அண்ணாவை எண்ணிப் பார்த்து அவர்கள் ஆற்றிய தொண்டு தொடர உங்களை நீங்களே புதுப்பித்துக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்திலே சேர்ந்து பணியாற்ற முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தை மீட்போம் வாரீர்:

உங்களுடைய தலைவரைக் கேட்டுக்கொள்ள நான் விரும்ப வில்லை. உங்களுடைய அமைச்சர்களைக் கேட்டுக் கொள்ள அவசியமில்லை. உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. உங்களிலே ஆளுங்கட்சி யிலே இருக்கிற மிகப் பெரிய கள்ளச்சாராய வியாபாரிகளைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஏமாளிகளாக இருக்கிற — அடிமட்டத் தொண்டனாக, உழைப்பாளியாக இருக்கிற, பாட்டாளியாக இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களையெல்லாம், இளைஞர்களையெல்லம் நான் இன்றையத் தினம் வரவேற்கின்றேன். உங்களுடைய தாய்க் கழகத்திலே சேர வாருங்கள் — தமிழகத்தை மீட்க வாருங்கள் — எதிர்காலத் தமிழகத்தில் தமிழ் உணர்வு தழைக்க வழி செய்ய வாருங்கள் என்று கேட்டுக் கொண்டு, இன்று இரவு திரும்பிச் செல்கிற நீங்கள், எதிர்காலத் தமிழகத்திற்கு எந்த வகையிலாவது ஆக்கப் பணிபுரிய உறுதி கொள்ளுங்கள் என்று வேண்டிக் கொள்கின்றேன்.

போலிகளை இனங்காட்டுவோம்!

நமது மாபெரும் கடமை:

பெரியார் பெயரைச் சொல்லி அவர் வழி வந்தவர்கள் போலக் கூறிக்கொண்டு விழா எடுப்போரும், பெரியாரைப் போற்றி அவர் கொள்கையை ஏற்றுக் கொண்டவர் போன்று நடிப்போரும் — மக்களை ஏமாற்றித் திரியும் இந்த நாட்களில், உண்மையை உலகுக்கு உணர்த்திக் கொண்டிருப்பதே ஒரு மாபெரும் கடமையாகும்.

தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய அருந்தொண்டு, சாதாரணமானதல்ல என்பது மட்டுமன்றி வேறு எவராலும்

ஆற்ற முடியாத சிறப்புடையதாகும். அப்படிப்பட்ட ஒப்பற்ற தியாகவுணர்வுடன் கூடிய தொண்டாற்றியவரின் பேரால் — மயக்க உணர்வை வளர்ப்பதும், மக்கள் மனதைக் குழப்புவதும், அதன் மூலமாக அவர்கள் ஆதரவைப் பெற்று அரசியல் ஆதிக்கம் தேடுவதும் மன்னிக்க முடியாத குற்றமாகும்.

தொண்டு கிழவராக 94-வயது ஆனபோதும், நடமாடு வதும் கடினமாகி, எழுந்திருப்பதும் அமர்வதும் ஒருவர் துணை யின்றி இயலாமற் போனபோதும் — அல்லும் பகலும், நாடும் நகரமும் ஓர் ஊர்தியின் மூலம் வலம் வந்து, தமது எண் ணத்தை, கொள்கையைப் பாமர மக்களும் விளங்கிக் கொள் ளுமாறு, விரிவாகவும், தெளிவாகவும் மணிக்கணக்கில் பேசினாரே, பெரியார், என்ன காரணம்? எதற்காக?

அப்படி ஊர் ஊராகச் சென்று பேசித்தான் வாழ்க்கை நடத்த வேண்டும் என்னும் வறுமை நிலையில் இருந்தவரா? பேசுவதால் கிடைத்த வருமானத்திற்காக அப்படிப் பாடு பட்டாரா? அல்லது அதனால் அவருக்குக் கிடைக்க முடியாத பெரும் புகழாவது கிடைத்ததா? விளம்பரம் கிடைத்ததா? அரசியல் செல்வாக்காவது கிடைத்ததா? இவ்வளவும் கிடைப்ப தாயினும் அதை அவர் பெரிதாகக் கருதக்கூடிய மனங் கொண்ட வரா? இல்லை என்பது தெளிவு அன்றோ! அப்படியானால் பெரியாரின் தொண்டுக்கு, உழைப்புக்கு, ஒய்வற்ற சுற்றுப்பயணத்துக்குத் தியாகத்துக்கு — எது காரணம்?

அவர் பார்த்துப் பழகிய மக்களிடத்திலே இயல்பாக ஏற்பட்ட பற்றும், அவர்களுடைய இழிநிலையைத் தாழ்வை, அடிமைத்தனத்தை மாற்றி அவர்களைத் தலைநிமிர்ந்து வாழச் செய்திட வேண்டும் என்பதிலே அவர் கொண்ட உறுதியும், அந்தத் தொண்டு ஆற்றுவதிலே அவருக்கு ஏற்பட்ட நிறைவான மகிழ்ச்சியும், அதில் பிறந்த ஊக்கமுமே காரணமாயின எனலாம்.

அஞ்சிக் கிடந்தனர்:

நாட்டில் வாழும் பல கோடி மக்கள், மதத்தின் பெயரால், வளர்க்கப்பட்ட நம்பிக்கைகளை — மூடத்தனமாகவும் மூர்க்கத் தனமாகவும் பற்றிக்கொண்டு, அதனால் விளையும் கேடு களையும், இழிவுகளையும், அடிமை நிலையையும் எண்ணிப்

பார்க்கவும் முடியாதவர்களாகவும், எவரேனும் எடுத்துச் சொன்னாலும், ஏற்றிடக் கூடிய தெளிவு அற்றவர்களாகவும்; அது உண்மை நியாயம் என்று விளங்கினாலும் பின்பற்றுவதற்கான துணிவு அற்றவர்களாகவும் இருந்த நிலையிலேயே தந்தை பெரியார் அவர்கள் தமது சமுதாயப் பணியைத் தொடங்கினார்கள். சாதி என்பது தமது பிறப்பாலேயே தமக்கு வாய்த்தது எனவும், அதுவே கடவுள் படைப்பு முறை எனவும், அதை மறுப்பதும், மாற்றியமைப்பதும், நாத்திகம் எனவும், அப்படிப்பட்ட எண்ணமும் முயற்சியும் பாவம் எனவும் அஞ்சிக் கிடந்தனர் மக்கள். மதம் என்பது ஒரு கொள்கை — அது காலத்துடன் ஒட்டி மாற்றப்படக் கூடியது. அவ்வாறு மாற்றத்துக்கு இடந்தராத போது, அதுவே சமுதாய வளர்ச்சிக்குத் தடை என்பதைத் தெளிய முடியாத மக்கள், ஏற்கனவே உருவாகி, ஒரு சில தலைமுறைகளே பின்பற்றப் பட்டதாக இருப்பினும், அதுவே ஆதிமுதல், எந்த நாளும் இருந்தது போலவும், அது எவ்வித மாற்றமும் என்றும் பெறாததைப் போன்றும், கடவுளே முன்னின்று அப்படி ஒரு மதத்தைக் கட்டளையிட்டு உருவாக்கியது போன்றும் எண்ணிக் கொண்டும் நம்பிக் கொண்டும் எவ்விதக் கருத்து மாற்றத்தையும் ஏற்றுக்கொள்ள முன்வருவதில்லை.

சாதி கடவுளின் ஏற்பாடா?

எடுத்துக்காட்டாக, சாதி என்னும் வருணாசிரம தருமக் கொள்கையை ஆராய்ந்தாலே அது விளங்கும். இந்து மதத்தின் பேரால், அது தெய்வத்தின் ஏற்பாடாகப் பேசப்படுகிறது. பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் நால்வகைச் சாதிப்பாகுபாடு கடவுள் ஏற்பாடு என்று நம்பவைப்பதற்காக, பிரம்மாவின் முகம், தோள், தொடை, பாதங்களில் அந்த சாதிகள் பிறந்தன என்பர் வைதீகர். ‘பிரம்மா’ என்னும் கடவுள் ‘ஆண்’ என்று கூறுவோர், இந்தப் பிறப்புக்கான இடங்களை எப்படித்தான் அவரிடம் கற்பிக்கத் துணிந்தனரோ? என்று மக்கள் எண்ணிப் பார்க்கவில்லை.

‘பிரம்மா’ உலகைப் படைத்தவர் — மனித குலத்தையும் உயிரினத்தையும் படைத்தவர். எனவே, அவருடைய படைப்பே வருண வேற்றுமை என்றும் உரைப்பர் பலர். இந்த வருண — சாதி வேற்றுமை இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டு

மக்களிடையிலும் — படைக்கவில்லையே ஏன்? இந்து மதத்தைத் தவிர வேறு மதங்களில் இந்த வருண-சாதி வேற்றுமை இடம் பெறவில்லையே ஏன்? எல்லோரையும் எல்லாவற்றையும் படைத்தவ்ராகக் கூறப்படும் பிரம்மாவின் படைப்பில் பத்தில் ஒரு பங்கு மக்களுக்கு மட்டுந்தான் — இந்த சாதி வருண வேற்றுமையைப் படைத்தாரா? என்று கேட்கும் துணிவும் பலருக்கு ஏற்படவில்லை.

உண்மையான சமுதாய நிலை:

எப்படிப் பார்த்தாலும் 'சாதி' என்னும் சொல்லும் தமிழ் அல்ல. தமிழகத்தில் தென்னாட்டில் இந்த 'சாதி' ஈராயிரம் ஆண்டுகட்கு முன்கூட இடம்பெறவில்லை — தமிழகத்தில் இடம் பெற்றிருந்தது, முக்குலத்தோர், முத்தரையர், முதலியார், வன்னியர், நாடார், கொல்லர், வண்ணார், கவுண்டர், நாயுடு, செட்டியார், பிள்ளை, பள்ளர், பறையர், மீனவர் போன்ற பல்வேறு குலப்பெயர்களே. இந்தப் பலவகைப்பட்ட பெயருடைய எவரும் — இனக் குழுப் பெயராகத்தான் அவற்றைக் கொண்டிருந்தனர். அவர்களுள், வருண — சாதி முறைப்படியான பிறவி உயர்வு தாழ்வு கருதப்படவில்லை. இவர்களுள், பெரும்பாலோர் வேளாளர்களே. சில வகுப்பார் நாடாண்ட மன்னர் மரபினராகவும் உள்ளவர். பலர் படைத்தலைவர்களாய் விளங்கிய மரபினர், சில வகுப்பாருள் குருமார்களும், இடம் பெற்றுள்ளனர். பள்ளர், பறையருள், 'வள்ளுவர்' என்பாரும், மற்றுஞ் சில வகுப்பாருள் 'ஓதுவார்', 'குருக்கள்', 'அருமைக்காரர்' என்பாரும் — அவரவர் மரபின்படி சடங்குகள், மணவினைகள் இவற்றை நிறைவேற்றி வந்தனர். எனவே தென்னாட்டு மரபு வழியில், 'பிராமணர்கட்கு', இடமிருக்கவில்லை. 'சத்திரியர்' தோன்றவில்லை; 'வைசியர்க்கு' வேலையில்லை; 'சூத்திரர்கள்' யாருமில்லை; என்பதே உண்மையான சமுதாய நிலை அந்த நாட்களில்.

மத மயக்கம்:

எனவே — வருண சாதி முறை இடம் பெறாத தமிழகத்தில் — இடம் பெற்றது போன்றும், ஏற்கப்பட்டது போன்றும் ஒரு மயக்க நிலையை, ஆரிய ஆதிக்கம் மூலமும் இந்துமதப் புகுத்தல் மூலமும் பரப்பினர் என்பதை மறுப்பதற்கில்லை. நால் வருண

— சாதி முறை மனித குலத்தை வாழ்விக்கவே படைக்கப்பட்டது என்போர் 'பஞ்சமர்' என்னும் தாழ்த்தப்பட்டவர் எப்படி — எங்கிருந்து படைக்கப்பட்டனர் என்பதை விளக்கவில்லையே, ஏன்? அவர்கள் கற்பனை வாதத்தில் விட்டுப்போனதால், விட்டுவிட்டனர். உண்மையில் — 'இந்து மதம்' என்பது — மக்கள் வழக்கத்தில் இடம்பெறச் செய்யப்பட்ட ஒரு பெயரேயன்றி, ஒரு கொள்கை, ஒரு வழிகாட்டி, ஒரு தத்துவம், ஒரு கடவுள், ஒரு குறிப்பிட்ட நூல் என்று குறிப்பிடக் கூடிய ஒன்றை, ஒரு வழியாகக் கொண்ட, இலக்கணம் உடைய மதமாக உருவாகவில்லை.

இந்து மதம் என்பது என்ன?

நான்கு வேதம், உபநிடதங்கள், பலப்பல ஆகமங்கள், சாஸ்திரங்கள் இதிகாச புராணங்கள் என்னும் பல பெயர்களில் பலப்பல காலகட்டத்தில் ஆரிய மக்களிடையே உருவாகி வளர்ந்து இடம் பெற்ற பல்வேறு வகைப்பட்ட கருத்துகளுக்கும்;

பலவகையான ஆற்றல் கொண்டதாகப் பேசப்படும் பல் வேறு வகைப்பட்ட கடவுள்கள், தெய்வங்கள், தேவர்கள் ஆகியோரின் வழிபாட்டிற்கும்;

அகச் சமயங்கள் எனப்படும் அறுவகைப்பட்ட — ஒன்றிற் கொன்று முரண்பட்ட சமயக் கொள்கைகட்கும்;

'கடவுள்' என்னும் பொருள் குறித்த கருத்தே — உருவாகாத நிலையில் இந்திரர் முதலான தேவர்களை மட்டுமே குறித்து வழிபடும் நிலையிலிருந்து, 'கடவுள்', யார் என்றும் — எதுவென்றும், உண்டென்றும், இல்லையென்றும் வாதிட்டு முரண்பட்ட பல கொள்கைகளையும் உள்ளடக்கிய எண்ணங் கட்கும் இருப்பிடமானதே 'இந்து மதம்' எனில் — அதை ஒரு மதம் என்று கருதுவது எப்படி நியாயமாகும்? ஆனாலும் பலகோடி மக்கள் அந்தப் பெயருக்கு உரியவராக மயங்கி யுள்ளனர்.

இந்து மதப்பெயரால் இன்று பேசப்படும் வைதீக — வர்ணா சிரமப் புரோகிதச் சார்பு கொள்கைகளையும் பிராமணீய ஆதிக்கத்தையும் எதிர்த்துச் சமுதாயப் புரட்சி மனப்பான்மையை வளர்த்த — சமணமும், பௌத்தமும்; இந்து முஸ்லீம்

மாறுபாட்டிடையில், ஒரு புதிய சிந்தனையுடன், ஒற்றுமை காணும் சமயமாகப் பிறந்த சீக்கிய மதமுங்கூட, 'இந்து' மதமாகவே, அதன் உட்பிரிவு போன்றே கருதப்பட்டு, தனி மதமாகக் கருதப்படாமல் இந்து என்னும் பெயர் சூட்டிய வளையத்துக்குள் அவற்றை முடங்கச் செய்ய வைதீகப் பார்ப்பனீயம் மேற்கொண்ட சூழ்ச்சி வல்லமை மிக்கதாகும்.

இந்துமதக் குறிக்கோள்:

எண்ணமும், நோக்கமும், கொள்கையும் எந்த அளவு வேறு பட்டாலும், முரண்பட்டாலும் அந்த வேற்றுமையை மறைத்து, அதுவும் இந்துமதத்தின் சார்பானதே என்று மயக்குமொழி பேசி, அந்த மக்கள் மீதும் 'வைதீகப் பிடிப்பை'ப் பிராமணீய ஆதிக்கத்தை இழக்காமல் இருப்பது ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டதே 'இந்து' மதவாதிகளின் வழிமுறை யாகும்.

உண்மையில் மதம், கொள்கை, நெறி, நடைமுறை பற்றி இந்துமதக் காப்பாளர்களான வைதீகப் பிராமணர்கள் கவலைப்படவில்லை. ஆனால் வருணாசிரம சாதி முறையை, அதன் அடிப்படையில் தமக்கு உரித்தான ஆதிக்க நிலையைக் காப்பாற்றிக் கொள்வதிலேதான் — அவர்கள் ஆர்வம் கொண்டிருந்தனர்.

ஆழ்ந்து சிந்தித்தால் — 'இந்து மதம்' என்பது '**வர்ணாசிரம சாதி முறை**' மட்டுமே. அதனால் உயர்வு கற்பிக்கப்படும் பிராமணர்களின் செல்வாக்கு — ஆதிக்கம் மறையாமல் — குன்றாமல் இருப்பது ஒன்றே 'இந்து' மதக் குறிக்கோள். சனாதன தர்மம் — என்று பிராமணர்கள் போற்றும் மனுதர்மம் முதலான அனைத்தும் பிராமணீயத்தின் நலனைப் பாது காக்கவே ஆகும். எனவே இந்து என்பது வைதீகப் பிராமணீ யத்தின் ஆதிக்கத்திற்கு ஆட்பட்ட மக்கள் தொகையைக் குறிக்கும் ஒரு பெயராக உள்ளதேயன்றி — வேறு விளக்கம் எதுவும் காண இடமில்லை.

பகுத்தறிவு அடிப்படையில் எண்ணும் எவரும் 'சாதி' என்பது உண்மையல்ல, எனவே 'வருணாசிரம தருமம்' என்பது பித்தலாட்டம், அதன் அடிப்படையில் மதிக்கப்படும் '**பிராமணீயப் புரோகிதத்தை**' நாம் ஏற்கத் தேவையில்லை —

அந்தப் புரோகிதக் கூட்டத்தின் பொய்யான உயர்வுக்குக் கருவியாக்கப்பட்டுள்ள 'வடமொழிக்கு' நாம் இடந்தரலாகாது, ''வடமொழியில் அர்ச்சனை செய்வதும் நமக்குத் தாழ்வே'', ''நமது தாய்மொழியாம் தமிழுக்கு இழுக்கு'' என்று கூறுவதை 'இந்து மத' எதிர்ப்பாகவே அவர்கள் கூக்குரல் எழுப்பக் காரணம் என்ன? 'இந்து மதம்' என்பது பார்ப்பனீய — வருணாசிரமதரும — வடமொழி ஆதிக்கம் வளர ஆரிய இனம் செய்த ஆதிநாள் ஏற்பாடே தவிர வேறல்ல என்பதனால்தான்!

பார்ப்பனீயப் பித்தலாட்டம்:

பிறப்பினால் உயர்வும் தாழ்வும் பேசுவது பார்ப்பனீயப் பித்தலாட்டம் என்பதை அந்த நாட்களிலேயே அறிந்து உரைத் தவர் பலர். வடநாட்டிலேயே, புத்தர் காலத்திலேயே அதற்கு மறுப்பு எழுந்தது. அதனால்தான் போலும், ''ஜன்மனா ஜாயதே சூத்ரஹா'' (Janmana Jayathe Sudraha) என்று ஒரு சுலோகம் உபநிடதத்தில் இடம் பெற்றுள்ளது. அதன்படி 'பிறவியினால் எல்லோரும் சூத்திரர்களே' என்று பொருள் கூறப்படுகிறது.

அப்படியானால், பூணூல் தரித்தால்தான் பிராமணன், சத்திரியன், வைசியன், ஆகிய மூன்று மேல் சாதியினரும் — அந்தந்த சாதியினராக ஆகும் உரிமையும் தகுதியும் பெறுவர் என்று விளக்கம் கூறுகின்றனர். அந்த மூன்று வகுப்பாரும் இரு பிறப்பாளர் என்பர்! ஆனால் — அந்த முறையில் 'பூணூல்' தரிக்கும் உரிமை யார் யாருக்கு உண்டெனில், பிராமணருக்கும் — க்ஷத்திரியருக்கும் — வைசியருக்கும் பிறந்தவர்கட்குத்தான். சூத்திரருக்குப் பிறந்தவருக்குப் பூணூல் தரிக்கும் உரிமை இல்லை. அவர் பிறவி இழிந்ததாதலின் 'பூணூல்' தரிக்கச் சடங்கு செய்யும் (அணிவிக்கும்) அந்த உரிமை பூசுரர்க்கு மட்டுமே உண்டு.

எனவே — எல்லோரும் பிறவியால் சூத்திரர்களே என்பதுங் கூடப் பூணூல் தரிப்பதின் முக்கியத்துவத்தையும், அதைத் தரிப்பதற்கு உரிய சடங்கு செய்விக்கும் புரோகிதத்தின் உரிமையையும் நிலைநிறுத்தவே பயன்பட்டு, வருண — சாதி முறையை மறக்காமல் பின்பற்றி, பார்ப்பனீயப் பிறவி உயர்வினை மற்ற வகுப்பார் ஏற்றுத் தலைவணங்கி நடந்திடவே

துணை செய்வதாயிற்று. 'பிறவியினால் எல்லோரும் சூத்திரர் களே' என்பது உண்மையில் ஒப்புக் கொள்ளப்பட்டால், பிராமணன் மகனுக்குக் கிடைக்கும் உரிமை — சூத்திரன் மகனுக்கும் கிடைக்க வேண்டுமல்லவோ? ஏன் இல்லை? பிறக்கும்போது எல்லோரும் ஒன்றே எனில் உரிமைகளும் ஒன்றாகத்தானே இருக்க வேண்டும்? ஏன் இல்லை?

வேதம் படிக்கவும், படிப்பிக்கவும் — பிராமணர்கட்கே உரிமை என்றும், சடங்குகள் செய்யவும், தருமங்கள் வகுத் திடவும் பிராமணர்கட்கே உரிமை என்றும் செய்து கொண்ட ஆரியதர்ம ஏற்பாடுகளைக் காப்பாற்றி ஆதிக்கம் செலுத்தவே — அதற்கு வழி செய்யும் ஒரு அமைப்பாகவே — இந்து மதம் என்னும் ஒரு பெயரைப் பயன்படுத்திக் கொண்டனர்.

மனிதனாக வாழச் செய்தவர்:

எனவே மனிதனை மனிதனாக வாழச் செய்திட, எண்ணத் தால் தாழ்ந்து, நம்பிக்கையால் ஏமாந்து, உழைப்பால் மெலிந்து, நாயினும் கீழாய் நடத்தப்பட்ட மக்களைத் தலைநிமிர்ந்திடச் செய்திட — அதற்குரிய வழிகாண முற்பட்ட தந்தை பெரியார் அவர்கள் 'இந்து மதம்' என்னும் பெயரால் உருவாக்கப்பட்ட வஞ்சக வலையை — ஆரிய மாயையை அகற்றிடவும் ஒழித்திடவும் அயராது பாடுபட்டார்கள்.

பகுத்தறிவுக்கண் கொண்டு நோக்கினால் அன்றி, உண்மை ஒளி காணமாட்டார்கள் என்றுதான் அந்தக் கருத்துக்களைப் பரப்பினார்கள்.

'இந்து' என்னும் சொல், ஒரு வட்டாரத்தில் வாழ்ந்த மக்களைக் குறித்திடப் பயன்பட்ட ஒரு சொல்லாக இருந்து, நாளடைவில் (பல நூற்றாண்டுகளில்) இந்தியாவில் வாழும் முசுலீம் அல்லாதாரைக் கிறித்துவர் அல்லாதாரைக் குறிப்பிடும் பெயராக வழங்கத் தலைப்பட்டது.

ஹிந்து - (Hondo) ஹிந்தூய்சம் (Hinduism) என்னும் பெயர்களுக்கு மூலமாக உள்ள ஹிந்த் (Hind) என்னும் பெயர் சிந்த் (Sindh) என்னும் பெயரின் திரிபாகவே உருவானதாகும். இந்த வேர்ச்சொல் பர்சியன் மொழியில் இடம் பெற்றுள்ளது. இதனை இந்தி மொழியின் வல்லுநர்களை ஆசிரியர்களாகக்

கொண்டு, வாரணாசியில் அமைந்துள்ள 'நாகரிக பிரச் சாரிணி சபா'வினால் வெளியிடப்பட்டுள்ள 'இந்தி சப்த சாகர்' என்னும் இந்திமொழி அகராதியில் காணலாம்.

'இந்து' என்னும் சொல்லுக்கு...

'இந்து' (Hind) என்னும் பர்சியன் சொல்லுக்கு இவையே பொருள்களாகத் தரப்பட்டுள்ளன.

1. கருப்பு — விகாரம்.
2. பண்பாடற்ற முரடன்.
3. ஒரு கொள்ளைக்காரன்.
4. இந்தியாவிற்குச் சொந்தமானது.

'இந்து' அல்லது 'சிந்து' என்பது, இந்தியாவிற்குச் சொந்த மான எதற்கும் வழங்கிய பெயர். கொள்ளையடிப்பவரையும் — பண்பாடற்றவரையும் குறிக்கவும் — பர்சியர்களை நோக்க — கறுப்பாகவும் அழகில்லாதவராகவும் இருந்த சிந்து நதிக் கரையில் வாழ்ந்த மக்களைக் குறிக்கவும் பயன்பட்டது அப்பெயர் என்பதை 'இந்திமொழி வல்லுநர்களே' தமது மொழி அகராதியில் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அப்படிப்பட்ட ஒரு கூட்டம் — அநாகரிகமான கூட்டமாக இருந்த காலத்தில் — அதாவது அந்தப் பகுதியில் ஆரியர்கள் குடியேறி வாழத் தலைப்பட்டிருந்த காலத்தில் — பண்பாடு, நாகரிகம் அவர்களிடம் உருவாகாத காலத்தில், அவர்கட்கு அவர்கள் வாழ்ந்த இடத்தால் வழங்கிய பெயரே — பின்னர் இந்தியாவில் வாழ்ந்த பல்வேறு இன, மொழி, நாகரிக மக்களையும் அவர்தம் வேறுபட்ட பழக்க வழக்கங்களையும் சேர்த்துக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்ட சொல்லாக ஆகியுள்ளது.

இந்து மதப்பெயரா?

உண்மையில் 'இந்து' என்பது மதப் பெயரே அல்ல. இடத்தின் வழி வடிவுபெற்ற பெயர். வெவ்வேறு கொள்கை யுடையோரையும், தனித்தனியாகப் பிரித்துக் காணும் தெளிவும் திறமும் இல்லாத அந்நியரால், தொகுத்துச் சுட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டு, அவ்வாறே நம்முடைய நாட்டிலும்

பின்னர் வழங்குவதாயிற்று. எனவே 'இந்து' மதம் என்பதன் பேரால் — வருணாசிரம தருமம் வற்புறுத்தப்படுவது, நமக்குப் பொருந்தாது என்பது மட்டுமன்றி, முறையற்ற அநீதியுமாகும்! தமிழர்கள் — தென்னாட்டார் — திராவிட இனத்தார் — வடநாட்டில் ஆரியர்களின் நாகரிகம் வளரத் தொடங்கிய காலத்தில் வாழ்ந்திருந்த தொல்குடிகள் (முண்டா மக்களும், திராவிட இன மக்களும்) ஆகியோருக்கு — பார்ப்பனீய — வைதீகப் பிராமணங்கள் அடிப்படையிலான மதக்கொள்கைகள் — சாதி ஆச்சார - சடங்குகள் யாவும் அந்நியமானவை. தமது இன எதிரிகளால் வடிவு தரப்பட்டவை. எப்படி நோக்கினும் இவை எல்லாம் அறிவுள்ள மனிதன் ஏற்காதவை. தமிழர் வாழ்வுக்குக் கேடும் — முன்னேற்றத்துக்குத் தடையுமானவை. மானமுள்ள தமிழன் — மானம் உணர்ந்த தமிழன் எவனும் எதிர்த்து ஒழித்திட வேண்டியவை.

அப்படிப்பட்ட அடிப்படையை, வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அறிஞர் பெருமக்களே அறியக் கூடிய உண்மைகளை, நமது நாட்டுப் பாமர மக்களும் உணரக் கூடிய வகையில் தகுந்த விளக்கத்தோடு எடுத்துரைத்து — தன்மான உணர்வும் — பகுத்தறிவுப் பக்குவமும் ஏற்படுத்திய தந்தை பெரியாரின் தொண்டு ஈடு இணையற்ற செயலாகும்.

எதையும் எதிர்பாராது தமிழன் எண்ணத்தில் தெளிவும் எழுச்சியும் பிறந்திட, எண்ணற்ற இன்னல்களை ஏற்றுக்கொண்டு தந்தை பெரியார் ஆற்றிய அரும்பணி ஈடு இணையற்றதாகும்.

தமிழர்களாக வாழ உறுதி கொள்வோம்!

அப்படிப்பட்ட பெரியாரின் நினைவைப் போற்றும் நாளில், வைதிகப் பார்ப்பனீய ஆதிக்கத்தை அகற்றவும், ஆரிய-வடமொழிகளின் ஆதிக்கம் நாட்டும் முறைகளை — சடங்குகளை மாற்றி அமைக்கவும் உறுதி கொள்ள வேண்டும். நாம் 'சாதி' முறையை வெறுத்த 'தமிழர்களாக' — ஒன்றே குலம் என்று உணர்ந்தவர்களாகவும் ஆக வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சீர்திருத்தச் செம்மல்! ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் அந்த அறிவுப் படையின் தொண்டர்களானதன் மூலம் தமிழ்நாட்டில் நிலவிய நச்சுக்காற்று, மூடநம்பிக்கையின் முடைநாற்றம் மாற்றப்பட்டு ஒரு புதிய மூச்சுக்காற்று பரவலாயிற்று. அந்தப் புதிய மூச்சினை நுகரும் நிலைபெற்றதாலேயே தமிழகம் தலை நிமிர்ந்தது என்றால் அது மிகையாகாது. தந்தை பெரியார் அவர்களே தமிழக மக்களின் 'புதிய மூச்சு' ஆனவர். மக்களின் வாழ்வின் உயிர் மூச்சாக நிலைத்தவர்.

நம் ஒவ்வொருவர் மூச்சோடும் கலந்து நம் உடலோடும் அறிவோடும் உணர்வோடும் கலந்துவிட்ட அந்தப் புதிய மூச்சு தான் இனி நம்மை விட்டுப் பிரிவதுண்டோ?

அறிவுச் சுடர்! பகுத்தறிவுப் பரிதி! சுயமரியாதை கண்ட திராவிடத் தந்தை! நாலரைக் கோடி மக்களின் கருத்துக் குருட்டினை நீக்கிய சிந்தனைச் சிற்பி! புத்துலக வழிகாட்டி!

ஆம்! தந்தை பெரியார் இன்றேல் — அறிஞர் அண்ணாவும் இல்லை — திராவிடர் இயக்கமே இல்லை! நமக்கு வழிகாட்டு வதற்கு வேண்டிய துணிவும் தெளிவுமிக்க மற்றொரு தலைவன் இல்லை! நாமும் மானம் உணராத மதிகெட்டதொரு கூட்ட மாகத்தான் திரிந்திருப்போம்! எனவே நம்மை — மனிதராக இனம் உணர்ந்தவராக — வாழ்வித்த வித்தகர் பெரியாரின் குறிக்கோள் மறவாது பணியாற்ற உறுதிகொள்வோம்!

வாழ்க பெரியார்! வளர்க குறிக்கோள்!!

11. விடிவெள்ளியும் எழுஞாயிறும்!

தந்தை பெரியாரும், அண்ணாவும்:

பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களும் தமிழ் இனக் காவலர் பேரறிஞர் அண்ணா அவர்களும் 'இருட்டறையில் உள்ளதடா உலகம்' என்னும் புரட்சிக் கவிஞரின் பாடல் வரிக்கொத்த நிலையில் மூட நம்பிக்கைகளால் இருண்டு கிடந்த தமிழகத்தில் பகுத்தறிவு ஒளி பரப்பும் விடிவெள்ளியாகவும் அறியாமை இருள் அகற்றும் எழுஞாயிறு ஆகவும் தோன்றித் திகழ்ந்தனர்.

தந்தை பெரியார் பிறந்து முப்பது ஆண்டுகட்குப் பின்னரே அண்ணா பிறந்தார். பெரியாரின் வைதீக எதிர்ப்புக் கொள்கையில் இளமை முதற்கொண்டே ஆர்வம் கொண் டிருந்த அண்ணா அவர்கள் — பெரியாரின் அறுபதாவது வயதில் அவரிடம் சேர்ந்து பொதுப்பணி ஆற்றத் தலைப் பட்டார்.

> ''அறிவில் தொண்டில் முதியார், என்றும்
> வாய்மைப் போருக்கே இளையார்''

ஆக விளங்கிய பெரியாரிடம் பெருமதிப்பும் பேரன்பும் கொண்டவரானார்.

பெருமிதமான தோற்றம், அழகான வெண்தாடி, ஊடுருவும் ஒளிபடைத்த கண்கள், அகன்ற நெற்றி, எடுப்பான மூக்கு, கையிலே தடி, இப்படிக் காட்சி தந்த பெரியாரைக் கண்ட அண்ணா அவர்கள் உள்ளம், அவரது தனித் தலைமையை ஏற்றது வியப்பல்ல. இளைஞராகவும், உலகைத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தினராகவும், புத்தறிவு மிகுந்தவரா கவும் தோற்றத்தால் எளியராகவும், சராசரி உயரம் கூட இல்லாத வராகவும் இருந்த அண்ணா அவர்களுக்குச் சார்ந்து நிற்க வலிமைமிக்க ஒரு தலைவர் கிடைத்துவிட்டார் என்னும் நம்பிக்கையும் ஏற்பட்டது எனலாம்.

பெரியார் அதற்கு முன்னரே — ஒரு தலைமுறை காலம் — முப்பது ஆண்டுகள் பொதுப்பணி ஆற்றியவர். அந்தக்

காலத்திலேயே நாட்டு விடுதலைக்காக, தீண்டாமை ஒழிப்புக்காக, மதுவிலக்குக் கொள்கைக்காகத் தியாகங்கள் பலவற்றை ஏற்றிருந்தவர் பெரியார்.

''எனது வாழ்நாளில் நான் கண்டதும் கொண்டதும் எனது ஒரே தலைவராகத் தந்தை பெரியார் அவர்களைத்தான்'' என்று அண்ணா அவர்கள் எந்நாளும் கூறி வந்ததை நாம் அறிவோம்.

''பொது வாழ்க்கையில் ஈடுபடுவோர்களுக்கு ஒரு குறிக்கோளும், பொதுநல நோக்கும் தந்நல மறுப்பும், எளிய வாழ்க்கை முறையும், உழைப்பிலே ஆர்வமும், துன்பங்களையும் தொல்லைகளையும் தாங்கும் மனமும் வேண்டும்'' என்னும் அண்ணாவின் கணிப்பிற்குப் பெரியார் அவர்கள் இலக்கண மாகத் திகழ்ந்தார்கள்.

இருவர்தம் பழக்கம்:

பட்டிதொட்டி எங்கும் சொற்பொழிவாற்றச் செல்வது, மூன்றாவது வகுப்பு ரயில் பயணம், வாய்ப்புள்ளபோது குளிப்பது, கிடைத்த உணவை உண்பது, இரவினிலே கண் விழிப்பது, ஓய்வு கொள்ளும் நிலையிலே சற்று உறங்குவது ஆகியவை பெரியாரின் பழக்கம்.

அதேபோன்று, உணவு, உடை, உறக்கம் இவை பற்றிக் கவலைப்படாமல், தனது வசதி எதையும் பொருட்படுத்தாமல், கருமமே கண்ணாகப் பணியாற்றுவது அண்ணா அவர்கட்கும் இயல்பாகவே அமைந்திருந்தது.

பெரியார் அவர்களிடம், ''நீங்கள் ஏன் தாடி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று சிலர் கேட்டபோது ''தினம் தினம் சவரம் செய்து கொள்ளுகிற வேலையும் மிச்சம், நேரமும் மிச்சம், செலவாகும் காசும் மிச்சம்'', என்று பதில் அளித்தார்.

அண்ணா அவர்களும் நாளும் வெள்ளையாக உடை உடுத்துவதைக் கூட விரும்பமாட்டார். அவர் முதலமைச்சரான பின்னர், நாளும் வெளுத்த ஆடைகள் அணிய வேண்டிய அவசியம் ஏற்பட்டபோது, அதற்கே அவர் அலுத்துக் கொண்டதை நண்பர்கள் அறிவர்.

அண்ணா அவர்கள் பட்டதாரியாக விளங்கியபோதிலும், அக்காலத்தில் வாழ்ந்த பிற தலைவர்களைப் போன்று, கோட்டும்

— சூட்டும் — சரிகைத் தலைப்பாகையும் அணிவதை அவர் என்றும் விரும்பியதில்லை.

ஏழை, எளிய பாட்டாளி இனத்துக்காகப் பாடுபடும் உணர்வு கொண்ட அத்தலைவர்கட்கு, எளிய வாழ்வுதான் இயல்பாகவே விருப்பமானது. மக்களுடன் இரண்டறக் கலந்து நின்று உழைப்பதில் ஆர்வம் கொண்ட அவர்கள், மக்களிட மிருந்து தம்மை வேறுபடுத்திக் காட்டக்கூடிய எதையும் ஏற்கவில்லை.

எழுத்தும் பேச்சும்:

தந்தை பெரியார் அவர்கள் தாம் சிந்தித்ததை எழுதுவதிலும், பேசுவதிலுமே அதிக ஆர்வம் கொண்டவர். மற்றவர்கள் நன்றாகப் பேசினும் அதை நீண்ட நேரம் கேட்டுக் கொண்டிருக்க அவரால் இல்லாது. அவர் சொல்ல வேண்டி யதைச் சொல்ல நேரம் இயலாது போய்விடுமோ என்னும் துடிப்பு அவரிடம் ஏற்படும். அதேபோன்று மற்றவர்கள் எழுதியதைப் படிப்பதிலும் அவருக்கு மகிழ்ச்சி ஏற்படாது. அதிலும் இலக்கிய நடை, இலக்கியச் சான்று, அடுக்குமொழி என்றால் பொதுவாக ஒரு சலிப்பு அடைவார். அந்த நடையில் நேரடியாக உண்மையை விளக்கவில்லை என்றும், அவர்கள் தாமாக எதையும் சிந்தித்து எழுதவில்லை என்றும், இப்படிப் படித்தவர்கட்கு எழுதுவதால் என்ன பயன் என்றும் கேட்பார்.

பொது மக்களுக்குப் பயன்பட வேண்டுமானால் எதையும் நேராக — வெளிப்படையாகக் கூற வேண்டும் — எளிதாக விளங்குமாறு எழுத வேண்டும் என்பது அவரது எண்ணம்.

அண்ணா அவர்களோ, மற்றவர்கள் நன்றாகப் பேசினால், அவர்களை மேலும் பேசச் செய்து கேட்டு மகிழ்ச்சியடைவார். ஒருவேளை மற்றவர்கள் நன்றாகப் பேசாவிட்டாலும் அதை ஒரு நகைச்சுவையாக்கிக் கொண்டு மகிழ்வார். அவரவர் ஆற்றலுக்கேற்ப மக்களிடையே தமது கருத்துக்களைப் பரப்பு கிறார்கள் என்னும் நோக்கத்தோடு அவர்களை ஊக்கப்படுத்து வார். மற்றவர்கள் எழுத்து ஆற்றலையும் பாராட்டி மகிழ்வார். எடுப்பான தமிழ்நடையும், அடுக்குச்சொல் நடையும், பொருள் பொதிந்த இலக்கிய நடையும் தமிழ் நடையை வளமுடைய தாக்கும் என்று உளங்கொண்டு வரவேற்பார்.

பெரியார் அவர்கள் கருத்துக்களையே — முதன்மையாகக் கருதி — வருணனையையோ அழகு நடையையோ, புலமைத் திறனையோ வரவேற்கமாட்டார். இவையெல்லாம் உண்மை யைச் சுற்றிவளைத்துச் சொல்லப் பயன்படுவதாகவே அவர் கருதினார்.

அண்ணா அவர்களோ, சொல்ல வேண்டியதைத் தெளிந்து, சொல்ல வேண்டிய முறையையும் தேர்ந்து அழகான, இலக்கிய வளமுள்ள, நயமான நடையில் சொல்வதும் — எழுதுவதுமே மக்களை ஈர்க்கும் ஆற்றல் மிக்கது எனக் கண்டார்.

பெரியார் அவர்கள் 'சிந்தனையின் வெளிப்பாடு' ஆக இருந்தார். அண்ணா அவர்கள் சிந்தனைக்கு இலக்கிய வடிவம் தந்தார். பெரியார் அவர்கள் தமது எண்ணம், கருத்து, கொள்கை என்பதிலேதான் பெரிதும் நம்பிக்கை கொண்ட வராக இருந்தார். அண்ணா அவர்கள், இது அறிஞர்கள் கண்ட முடிவு, வள்ளுவர் கருத்து, புலவர்கள் பாடியது, லிங்கன் சொற்பொழிவு என்று எடுத்துக்காட்டித் தமது கொள்கைக்கு ஆதரவு தேடுவதிலேதான் ஆர்வங்காட்டினார்.

பிறரது எண்ணங்கள் — கருத்துக்கள் பொருள் உடையவை அல்ல — பயன் தரவில்லை என்பதை எடுத்துக்காட்டி, ஒரு புதிய சிந்தனையை, சிந்திக்கும் ஆற்றலை உருவாக்க வேண்டும் என்பதிலே பெரியாருக்கு நாட்டம்.

அந்தப் புதிய சிந்தனையால் ஏற்க வேண்டிய முடிவை மக்களை எளிதாக ஏற்கச் செய்வதற்கு, உரிய வழியாகச் சான்றோர் பலர் கூறிய கருத்துக்களை எடுத்துக் காட்டுவதிலே அண்ணாவிற்கு நாட்டம்.

''பெரியார் ஒரு சிந்தனைச் சிற்பி
அண்ணா ஒரு பல்கலைச் செல்வர்''

பெரியார் அவர்கள் தமக்குத் தோன்றும் துறைகளிலே எல்லாம் சிந்தனையைச் செலுத்தி, அதை அப்படியே மக்களுக்கு கூறியவர். அண்ணா அவர்கள் மக்கள் சீர்திருந்துவதற்கு வேண்டிய வழியிலேயே சிந்தித்து — மக்களுக்குத் தேவையானவற்றை மட்டுமே கூற முற்பட்டவர்.

பெரியார் தமது கருத்தை எவ்வளவுபேர் ஏற்பர் என்றோ, ஏற்றுக்கொள்ளும் திறமை, ஆற்றல் அவர்களுக்கு இருக்கிறதா?

என்றோ கவலைப்படமாட்டார். தமது கருத்துக்கள் பலருக்கும் உடன்பாடு இல்லாத நிலையில் அதைப் பரப்ப முற்பட்ட பெரியார் அவர்கள் யார் ஏற்றாலும் — ஏற்காவிட்டாலும் அதைப் பற்றிக் கவலைப்படக் கூடாது என்பது, அவர் முடிவு செய்து கொண்டிருந்த ஒன்று. தமது பணி உடனே வெற்றி பெறும் என்றோ, எல்லோரும் ஏற்கும் காலம் விரைந்து வரும் என்றோ பெரியார் கருதவில்லை. அதற்காகக் கலங்கவும் இல்லை.

அண்ணா அவர்களோ — பெரியாரின் கொள்கையை எந்த அளவு பலரும் ஏற்கின்றார்களோ அதைப் பொறுத்துத்தான் பயனும், வெற்றியும் இருக்கிறது என்று தெளிவாக உணர்ந்த தால் பலரையும் ஏற்கச் செய்யும் வகையறிந்து தமது கருத்தை எடுத்து வைப்பார்.

மக்களின் சிந்திக்கும் திறனற்ற நிலையைக் கருதிப் பெரியார் அவர்கள், மக்கள் மடையர்களாக இருப்பதால்தான் முட்டாள் களை எல்லோரும் ஏமாற்றுகிறார்கள் என்று குறிப்பிடுவதுண்டு. மக்களை அவரவர் அறிந்தவற்றைக் கொண்டு மேலும் சிந்திக்க வைக்க முடியும் என்னும் நம்பிக்கையோடு அண்ணா அவர்கள், மக்கள் தமது அறிவாற்றலிலே நம்பிக்கை கொள்ளுமாறு பேசுவார்.

பெரியார் அவர்கட்குத் தாம் பேசுவதிலே தமக்கே ஒரு மனநிறைவு, மகிழ்ச்சி. அதனால் கேட்பவர் மகிழ்கிறார்களா என்று கவலைப்படமாட்டார்.

''நான் சிந்திப்பதற்காகவே நான் பேசுகிறேன், கேட்கின்ற வர்களும் சிந்தித்துப் பாருங்கள், சரியென்று பட்டால் ஏற்றுக் கொள்ளுங்கள், இல்லையென்றால் உங்கள் வழி உங்களுக்கு, என் வழி எனக்கு — என் கருத்தை ஏற்க வேண்டுமென்று கட்டாயமில்லை'' என்பது பெரியார் பேச்சு.

''நான் எழுதுவதை நானே அச்சுக்கோர்த்து, நானே அச்சிட்டு, நான் மட்டுமே படித்துப் பார்த்துக்கொள்ளும் நிலை வந்தாலும் — 'குடியரசு' ஏட்டினை நான் தொடர்ந்து அச் சிட்டுக் கொண்டுதான் இருப்பேன்'' என்று பெரியார் கூறியதை எண்ணிப் பார்த்தால், அவரது உறுதி மட்டுமேயன்றி அவருக்குத் தமது கொள்கையிலே ஏற்பட்டிருந்த ஈடுபாடும் மனநிறைவும் நன்கு விளங்கும்.

அண்ணா அவர்களோ மற்றவர்கள் மகிழ்வதிலே, ஆர்வங் காட்டுவதிலேதான் தமது பேச்சுக்குப் பயன் இருப்பதாகக் கருதுவார். மற்றவர்கள் பக்குவப்படத்தான் நாம் பேசுகிறோம், மற்றவர்களை உடன்படச் செய்யத்தான் நாம் எழுதுகிறோம் என்னும் நோக்கத்தோடுதான் அண்ணா செயல்பட்டார்.

பெரியார் ஒவ்வொரு கருத்திலும் வேற்றுமையைக் கண்டு கொள்ள முனைவார். அண்ணா ஒவ்வொரு கருத்திலும் ஒற்றுமையைக் காட்ட முனைவார். அனைத்தையும் பகுத்தறிவதே பெரியாரின் குறிக்கோள். தேவையானதைப் பகுத்தறிந்து, எடுத்துக் கொள்ளக் கூடியதை ஏற்பதே அண்ணாவின் குறிக்கோள்.

சிந்திக்கும் வகையால், பெரியார் ஒரு சூறாவளி, புயல், காட்டாறு, எரிமலை.

சிந்தனையைப் பயன்படுத்தும் முறையால் அண்ணா ஒரு தென்றல், பருவ மழை, திருக்குற்றால அருவி, பூங்கா, பசுமலை.

பெரியார் எண்ணங்களை வெளியிடுவதில் பருவ காலத்தில் காடு பூத்திருக்கும் காட்சியைத் தருபவர்.

அண்ணா — எண்ணங்களை வெளியிடுவதில் பூந்தோட்டத்தில் பாத்திகளில் அமைக்கப்பட்ட வகைவகையான பூச்செடிகளும் கொடிகளும் பூத்திருக்கும் காட்சியைத் தருபவர்.

பணி:

நிலத்தின் அடியில் ஆழத்தில் மறைந்து கிடக்கும் பொற்கனியை — சுரங்கத்தில் இறங்கிச் சென்று வெட்டிக் கொண்டு வருவதை ஒத்த பணி பெரியாருக்கு அமைந்தது.

அந்தப் பொற்கனியிலிருந்து பொன் துகளைப் பிரித்து எடுத்து, உருக்கி வார்த்துப் பொன் அணியாக்குவதை ஒத்த பணி அண்ணாவுக்கு அமைந்தது.

பெரியார் ஊட்டிய தன்மான உணர்ச்சியை, இன எழுச்சியாக உருவாக்கிய அண்ணாவின் திறம் அப்படிப்பட்டதுதான்.

பெரியார் அவர்கள் எதிர்ப்பிலேயே ஈடுபட்டு எதிர்ப்பிலேயே வளர்ந்ததால், எதிர்நீச்சல் எண்ணமே அவருக்கு இயல்பாயிற்று.

பழமையையும் வைதீகத்தையும் மூடநம்பிக்கைகளையும் உடைத்தெரிவதிலேயே அவருடைய நேரமும் நினைப்பும் செலவிடப்பட்டது.

அண்ணா அவர்கள், ஜனநாயக நெறியிலே நம்பிக்கை மிக்கவராக இருந்ததால் — பெரும்பாலோர் எண்ணத்தையும் நம்பிக்கையையும் உடைத்தெறியும் முறையை மேற்கொள்ளாது, தமது எண்ணத்தை ஏற்க வைப்பதிலும் — மக்களுடைய நம் பிக்கையைத் திருப்பி விடுவதிலும் தமது முயற்சியைச் செலவிட்டார். வெள்ளத்தில் எதிர்நீச்சல் போடுவது எதிர்நீச்சல் மட்டுமே போட்டுக் கொண்டிருப்பதற்காக அல்ல — எதிர்க் கரையில் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேருவதற்காக என்னும் நோக்கத்தோடு செயல்பட்டார்.

மனிதனின் எண்ணங்கள் பலவற்றையும் வேருடன் புரட்டி மாற்றுவதிலே தமது இலட்சியத்தைக் கண்டவர் பெரியார்.

மனிதன் சமுதாய வாழ்வுக்குத் தேவையான, காலத்திற்கு ஏற்ற, கருத்து மாற்றத்திற்குத் தயாராவதற்கு வழிகாட்டுவதையே தமது குறிக்கோளாக அமைத்துக் கொண்டவர் அண்ணா!

ஆம்! பெரியார் — பகுத்தறிவைப் பரப்புவதே நோக்கமாகக் கொண்டவர்.

அண்ணா — சமுதாய சீர்திருத்தத்துக்காகப் பகுத்தறிவைப் பயன்படுத்தியவர்.

பெரியார் — மதவழி நம்பிக்கைகளின் எதிரி.

அண்ணா — சமுதாய மறுமலர்ச்சியின் துணைவன்.

பெரியார் — பழமை அனைத்தையும் மாற்ற நினைத்தவர்.

அண்ணா — பழமையில் பயனுள்ளவற்றை ஏற்றுப் புதுமையை வளர்க்க முனைந்தவர்.

பெரியார் — மூடநம்பிக்கைகளை எரிக்கும் நெருப்பு.

அண்ணா — அறிவுப் பயனை விளக்கிய சுடரொளி.

பெரியார் — தமிழர் வாழ்வின் திருப்புமுனை.

அண்ணா — தமிழர் வாழ்வின் மறுமலர்ச்சி.

பெரியார் — உரிமையை உணர்த்தியவர்! தன்மானம் காத்தவர்!

அண்ணா — உரிமையைக் காக்கும் வழி கண்டவர், இனமானம் வளர்த்தவர்!

பெரியார் — வானுயர் அறிவு மலை!

அண்ணா — அம்மலைமுடி தழுவிய கொண்டல்!

பெரியார் — காட்டாற்று வெள்ளம்!

அண்ணா — அதைத் தேக்கிப் பயன்படுத்தும் பேரணை!

பெரியார் — நம்மை விழித்து எழச் செய்தவர்!

அண்ணா — நம்மை வழி நடத்தியவர்!

ஆம்! பெரியார் — கலங்கரை விளக்கம்!

அண்ணா — துறைமுகம்!

தமிழகமே கப்பல்; நாம் அதன் பயணிகள்!

ஆம்! பெரியாரால்தான் அண்ணா! பெரியார் தொண்டால் தான் அண்ணாவின் பணி வடிவு கொண்டது; விடிவெள்ளிக்குப் பின்னர்தானே எழுஞாயிறும் தோன்றி வலம் வருகிறது!

12. நேர்காணல்

1. தந்தை பெரியார் அவர்களைத் தாங்கள் சந்தித்த முதல் நிகழ்ச்சி யாது?

பெரியார் அவர்களை நான் சந்தித்த முதல் நிகழ்ச்சி என்று கூறுவது பொருத்தமல்ல. நான் ஆறேழு வயதுச் சிறுவனாக மயிலாடுதுறையில் வாழ்ந்தபோது எனது மாமா மாயூரம் நடராசன் — அவர்களுடைய வீட்டில் 1928ல் பெரியார் தங்கியிருந்தபோது என் தந்தையாருடன் சென்று பார்த்திருக்கிறேன்.

அப்போது ஈ.வெ.ரா. என்றுதான் கூறுவர். அவர் தாடி வைத்துக் கொள்ளாத காலம். ஒரு பெரிய தலைவரைப் பார்த்ததாகக் கூற முடியுமே தவிர, எனக்கு அவரது கொள்கை பற்றி அப்போது எதுவும் விளங்காது.

பின்னர் 1931 அல்லது 32ல் மயிலாடுதுறையில் காவிரியாற்றுத் துலாக் கட்டடத்தில் அவர் பேச்சைக் கேட்டிருக்கிறேன். ஒரு மேசை, ஒரு நாற்காலி, ஒரே விளக்கு (கேஸ்லைட்) அவ்வளவுதான். ஒலிபெருக்கி இல்லாத காலம், ஒரு நூறு அல்லது இருநூறு பேர் அளவுதான் கூட்டம்.

அப்போதும் அவருடைய பேச்சிலிருந்து ஒன்றிரண்டு கருத்துக்களைத்தான் நான் விளங்கிக் கொண்டேன். 1938ல் கட்டாய இந்தி எதிர்ப்புப் பற்றி அவர் பேசக் கேட்ட போதுதான் எனக்குக் கருத்து விளக்கம் ஏற்பட்டது என்று நான் கூற முடியும்.

சிதம்பரத்தில் சந்திப்பு:

1939-40ல் அவர் சிதம்பரத்திற்குப் பேச வந்தபோது — எனது தந்தையார் கல்யாணசுந்தரனார் தந்தை பெரியாரை

(தந்தை பெரியார் 105வது ஆண்டுப் பிறந்தநாள் 'விடுதலை' மலருக்காக, தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுடன், அவர்களது இல்லத்தில் இந்த நேர்காணல் நடைபெற்றது. நாள்: 1-9-83, நேர் கண்டவர்: விடுதலை ராசேந்திரன்)

அழைத்திருந்த காரணத்தால் அவரிடத்தில் உரையாடினேன். அதைத்தான் அவரிடத்தில் உரையாடிய சந்திப்பு என்று கூறலாம்.

அப்போதும் அய்யா அவர்கள் என்ன சொல்கிறார்களோ, அதைக் கேட்டுக் கொள்கிற நிலையினனாகத்தான் நான் அவரைக் கண்டேன். அப்போது அண்ணாமலையில் நான் மாணவராக இருந்தேன்.

2. தங்கள் தந்தையார் — பெரியாரை அழைத்ததாகச் சொன்னீர்களே அது எந்த நோக்கத்திற்காக?

என் தந்தையார் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை ஏற்படுத்தி அதற்குச் செயலாளராக இருந்தார். அப்பொழுது தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் சார்பாகப் பெரியாரைச் சிதம்பரத்திற்குப் பேச அழைத்திருந்தார். பொதுக்கூட்டம் நடைபெற்றது. பெரியாரும் மற்றுஞ் சிலரும் பேசினர்.

3. இயக்கத்தின் பால் தாங்கள் ஈர்க்கப்பட்டதற்குக் காரணமான நிகழ்ச்சி என்ன?

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியையோ, ஒரேயொரு காரணத்தையோ கூறுவது இயலாது. எனது தந்தையார் காங்கிரஸ் காரராக மயிலாடுதுறையில் கதர்க்கடை நடத்தி வந்தபோதே பெரியாரின் ‘குடிஅரசு’ ஏட்டையும் வரவழைத்துப் பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பினார். மகாத்மா காந்தியையும் போற்றுவார், பெரியாரையும் ஆதரிப்பார். பெரியார் ஈ.வெ.ரா. படத்தையும் கதர்க்கடையில் வைத்திருப்பார்.

அதை எடுத்துவிட வேண்டுமென்றும், அதை வைத்திருப்பது குற்றமென்றும் உள்ளூர் காங்கிரசுக்காரர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்கள் கூறினார்கள். என் தந்தையார் அது என் விருப்பம் அதை எடுக்க முடியாது என்று மறுத்தார். மேலும், சாதி வேற்றுமை, தீண்டாமை இவற்றைக் கண்டித்து என் தந்தையார் பேசியதோடு ஒரு தாழ்த்தப்பட்ட தோழரைக் (அதாவது எங்கள் கிராமத்து வெட்டியானை) கதர்க் கடையில் அமரச்செய்து ‘குடிஅரசு’ ஏட்டினைப் படிக்கச் செய்வார்.

இதனால் வைதீகப் பார்ப்பனர்கள் என் தந்தையாரைப் பற்றி மாறுபாடு கொண்டு அவ்வப்போது கடையில் வாதம் செய்யத் துவங்கினர்.

என் தந்தையாரும் அவரது மைத்துனர் மாயூரம் நடராசன் முதலானவர்களும் அப்படிப்பட்ட பார்ப்பனர்களுக்குத் தகுந்த பதிலைக் கடுமையான முறையில் சொல்லி அனுப்பி விடுவார்கள். அதனால் காங்கிரஸ்காரர்கள் கட்டுப்பாடாக அந்த ஊரிலிருந்த எங்கள் ஒரே கதர்க் கடையில் கதர்த் துணி வாங்குவதை நிறுத்தி விட்டார்கள். இவைகளை எல்லாம் பார்த்தும் கேட்டும் பெரியாரின் துவக்க காலப் பணிகளைக் கண்டு அதில் ஈர்க்கப்பட்டவன் நான்.

அடுத்து, நான் படித்த மயிலாடுதுறை உயர்நிலைப் பள்ளி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் தமிழ்த் துறையைத் தவிர, மற்றவற்றில் பெரும்பாலும் அனைவருமே பார்ப்பனர்களாக இருந்ததும், ஒருவித ஆதிக்க எதிர்ப்புணர்வு என் உள்ளத்தில் இடம்பெற ஏதுவாயிற்று.

மூன்றாவது இந்திமொழிக் கட்டாயப் படிப்பு எதிர்ப்புப் போராட்டம் துவங்கி நடைபெற்ற போதே தந்தை பெரியார், அண்ணா, பட்டுக்கோட்டை அழகிரிசாமி முதலானோர் பேச்சினால் — காங்கிரஸ், இந்தி, வைதீகம், வடமொழி, பார்ப்பனீயம், தேசீயம் ஆகியவற்றின் கூட்டுச்சக்தி — தமிழனின் மொழி, தனி நாகரிகம், பண்பாடு உரிமைகளுக்குத் தடையாகும் சக்தியாக உள்ளது என்னும் உணர்வு எனக்கு ஏற்பட்டது.

அதனாலும், என் தந்தையாரும் அந்த இயக்கத்தில் ஈடுபட்டிருந்ததாலும் படிப்படியாக வளர்ந்த அந்த உணர்வால் நான் பெரியாரின் கட்சியின் தொண்டனாகவே என்னை ஆக்கிக் கொண்டேன்.

4. தந்தை பெரியார் அவர்களை விட்டு அறிஞர் அண்ணா பிரிந்ததற்கு, அடிப்படையான கருத்து வேற்றுமை குறிப்பிடத்தக்க அளவில் ஏதேனும் உண்டா?

இரட்டைக் குழல் துப்பாக்கி:

அடிப்படையான கருத்து வேற்றுமை இலட்சியத்திலோ, குறிக்கோளிலோ இல்லை எனலாம். அதனால்தான் குறிக்கோளைப்

பொறுத்து 'எனது வாழ்நாளில் நான் கண்ட ஒரே தலைவரும், ஏற்றுக்கொண்ட தலைவரும் தந்தை பெரியார் ஒருவரே' என்று அறிஞர் அண்ணா கூறினார்.

அதே அடிப்படையில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் தனியாகப் பிரிந்து தனிக் கட்சியாக உருவானதற்குப் பின்னரும் — திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கி என்று அறிஞர் அண்ணா அவர்கள் உவமை கூறினார்கள். குறிக்கோள் ஒன்று என்பதைத் தான் அது சுட்டிக்காட்டும்.

கருத்து வேற்றுமை என்பது பெரியாரின் திருமண முடிவினால்தான் வலுத்தது. எந்தப் பிரச்சினையையும் அணுகுவதிலும், விளக்கும் முறையிலும் பெரியாரின் சிந்தனையும் அண்ணாவின் விளக்கமும் வேறுபட்டன என்பதும் உண்மை. பெரியார், திராவிடர் கழகத்தார் அனைவரும் கருஞ்சட்டை அணிய வேண்டும் என்று கட்டளை இட்டதனை அண்ணா ஏற்கவில்லை. கட்டுப்பாடு காக்கக் கூடிய தொண்டர்கள் மட்டுமே அணிவதுதான் நல்லது என்றார்.

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற 1947 ஆகஸ்டின்போது, அதனைத் துக்க நாளாகக் கருதவேண்டும் என்று பெரியார் அறிவித்தார். நாடு — ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகச் சுதந்திரம் பெறும்போது நாம் அதனை எதிர்ப்பதாக ஒரு எண்ணத்தை ஏற்படுத்தக்கூடாது; அதனை வரவேற்கும் முறையில்தான் நாம் கருத்தறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார் அண்ணா.

திராவிடர் கழகக் கொள்கையை விளக்கும் முறையில் — வைதிக வருண தருமத்தைக் கண்டிக்கப் பார்ப்பனர்களைச் சுட்டிக் காட்டிப் பேசுவதே பெரியாரின் வழக்கம். அண்ணா அவர்கள் பார்ப்பனர்களைச் சுட்டும்போது, தனிப்பட்ட முறையில் அவர்களைச் சுட்டுவதாக எண்ண இடமேற்படுவதால் — பார்ப்பனீயம் — ஆரியம் — என்று சுட்டுவதே பொருத்தமாகும் என்று கருதி, அவ்வாறே மேற்கொண்டார்.

எனவே தமிழர்கள் தன்மானங்கொண்டு, தலைநிமிர்ந்து பகுத்தறிவு நெறியில் வைதிகத்தைக் கைவிட்டு, சாதி வேற்றுமையை ஒழித்து ஒன்றுபடவேண்டும் என்பது பொது நோக்கமாயினும் — அணுகும் முறையிலும் விளக்கும் வகையிலும் வேறுபாடு கொண் டிருந்தனர் என்பதும் உண்மை.

5. அரசியலில் நுழைவதன் மூலம் ஒரு பெருமாற்றத்தை ஏற்படுத்திவிடலாம் என்று அறிஞர் அண்ணா அவர்கள் நினைத்து இறங்கியதில் வெற்றி கிடைத்திருப்பதாகத் தாங்கள் கருதுகிறீர்களா?

அரசியலில் நுழையாமல் சமுதாயச் சீர்திருத்தங்களைச் சட்டத்தின் துணை கொண்டு நிறைவேற்றுவது என்பது இயலாத தாகும். தமிழர்களுக்குத் தேவையான ஓர் அரசியல் சக்தியைத் திராவிடப் பாரம்பரியத்தைச் சார்ந்த யாரேனும் வளர்த்தால் தவிர, அரசியலில் தேசிய இயக்கத்தினுடைய செல்வாக்குள்ள காலத்தில், சட்டத்தினைத் துணையாக்கிக் கொள்ள முடியாது என்று அண்ணா அவர்கள் கருதினார்கள்.

தமிழகத்தின் ஆட்சியை அறிஞர் அண்ணா அவர்கள் கைப் பற்றி முதலமைச்சராக வேண்டுமென்று நினைக்காவிட்டாலும், சட்டமன்றத்தில் நம்முடைய குரல் ஒலிக்க வேண்டுமென்று விரும்பினார். அதனால்தான் 1956இல் நடைபெற்ற திருச்சி மாநில மாநாட்டில், பெரும்பான்மையோர் ஆதரவு பெற்று, அதன்படி சட்டமன்றத் தேர்தலில் ஈடுபடத் தி.மு.க. தலைப்பட்டது.

'தமிழ்நாடு' என்ற பெயர்:

அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்ற கழகத்திற்கு ஆட்சி செய்ய வாய்ப்பு கிடைத்ததால் —

1. அதுகாறும் சென்னை மாகாணம் — (மதராஸ்) என்று வழங்கிவந்த இந்த மாநிலத்துக்குத் **'தமிழ்நாடு'** என்று பெயர் சூட்டினார்.
2. இந்தி மொழியை மாணவர்கள் படிக்கத் தேவையில்லை. தமிழும் ஆங்கிலமும் ஆகிய இரு மொழிகளைப் படித்தால் போதும் என்று மாணவர்களுடைய நியாயமான குறை களைப் போக்குகிற வகையில் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினார்.
3. என்.சி.சி. என்னும் தேசிய மாணவர் படைப் பயிற்சிகளில் கூட இந்திச் சொற்களைப் பயன்படுத்தக் கூடாது என்று தீர்மானித்தார். பயிற்சியின்போது, ஆணைக்குப் பயன் படுத்தப்படும் இந்திச் சொற்கள் நீக்கப்படும்வரை — அந்தப் பயிற்சியே தேவையில்லை என்றார்.

சுயமரியாதைத் திருமண சட்டம்:

4. சுயமரியாதைத் திருமணம் செல்லுபடியாகும் என்னும் சட்டத்தைத் தந்தை பெரியாரின் சீர்திருத்த இயக்கத்திற்குத் தான் செலுத்துகிற காணிக்கை என்ற உணர்வோடு நிறைவேற்றி வைத்தார்.

5. தமிழ் ஆர்வம் பல்வேறு வகையில் தழைப்பதற்கு வழி கண்டார். மாநில, மத்திய உறவுகளில் — மாநிலத்தினுடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்கு அடித்தளம் அமைத்தார்.

6. உலகத் தமிழ் மாநாட்டினைப் பெரிய அளவில் நடத்தி — தமிழுக்கு ஏற்றம் உருவாக்கியதுடன், பல்கலைக் கழகங் களில் திருக்குறள் ஆய்வுத் துறைகளை ஏற்படுத்தினார்.

ஆக, அரசியலில் நுழைந்தது மூலமாக அறிஞர் அண்ணா அவர்கள் ஜனநாயகப் பாதையில் சட்டமன்றத்தின் துணை யுடன் மக்களுக்குப் பல சாதனைகளை நிறைவேற்றினார் என்பதில் அய்யமில்லை.

கலைஞர் ஆட்சியின் சாதனை:

தொடர்ந்து அறிஞர் அண்ணாவின் அடியொற்றிச் செயல் படக்கூடிய பயிற்சி பெற்றிருந்த கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சரானதற்குப் பின்னரும் தொடர்ந்து அப்படிப்பட்ட பல காரியங்கள் நிறைவேற்றப்பட்டன என்பதற்கு ஒன்றைக் கூற வேண்டுமெனில் எந்த வகுப்பிலே (சாதியிலே) பிறந்தாலும் அதற்குரிய பயிற்சி பெற்றபின்னர் அர்ச்சகராகலாம் என்பதற்கான சட்டம் — சட்டமன்றத்தில் நிறைவேற்றப் பட்டதைக் குறிக்கலாம். அரசியலில் நுழைந்தது — அண்ணா நினைத்தது போலச் சமுதாயச் சீர்திருத்த நோக்குடன் மக்களுக்குத் தொண்டாற்றக்கூடிய நல்வாய்ப்பு என்பதிலே அய்யமில்லை.

மாநில உரிமைக்குக் குரல்:

6. ***அரசியலில் தி.மு.க. நுழைந்ததன் காரணமாகத் தமிழினத் திற்கு ஏற்பட்ட விளைவு என்ன?***

தேசிய நீரோட்டம் அல்லது மத்திய ஆட்சி இவைகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் மாநிலங்கள் அனைத்து வழியிலும் இயங்க

வேண்டும் என்னும் நிலை இருந்த காலகட்டத்தில், தமிழ்நாடு அந்தச் சூழ்நிலையிலிருந்து விடுபட்டது என்பது கிடைத்தற் கரியதொரு நற்பயனாகும்.

மேலும், மாநில சுயாட்சிக் கொள்கைக்கு வடிவம் தந்து வளர்த்ததன் மூலம் மாநில உரிமைகளை, வலியுறுத்திய வகையிலேயும், மாநில மக்கள் தங்கள் கலாச்சாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வழி காட்டிய முறையிலேயும், திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு பெரும் சாதனையைச் செய்திருக்கிறது.

இப்பொழுது மத்திய, மாநில உறவுகளைப் பற்றிப் பரி சீலிக்கின்ற எவராக இருந்தாலும் அல்லது மாநில உரிமைகளை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்கின்ற, பல்வேறு மாநிலத்தைச் சார்ந்த தலைவர்களாக இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு வழிகாட்டியாக இருந்தது என்பதை ஏற்றுக் கொள்வதிலிருந்தே — தி.மு.க. அரசியலில் நுழைந்த காரணத்தால் அகில இந்தியாவிற்கும் கூட ஒரு மாபெரும் பயன் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

எம்.ஜி.ஆர். கட்சியினர்!

7. எம்.ஜி.ஆர். தலைமையில் இயங்கி வரும் அ.இ.அ.தி.மு.க. அய்யா, அண்ணா கொள்கைகளைத் தாங்கி நடை போடுவதாகக் கூறிக் கொள்கிறார்கள். ஆனால் நடை முறையில் அய்யா — அண்ணா கொள்கைகளுக்கும், அவர் களுக்கும் அடிப்படையில் பெரும் வேறுபாடு இருந்து வருகின்றது. எம்.ஜி.ஆரைப் பின்பற்றக் கூடியவர்களுக்கு இந்த உண்மைகள் தெரியாது என்று நீங்கள் நினைக் கிறீர்களா?

எம்.ஜி.யாரின் கட்சியிலுள்ள தோழர்களில், ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழகத்தில் இடம் பெற்றுப் பணி யாற்றியவர்கள் இந்த வேற்றுமைகளை நன்றாக அறிவார்கள். என்றாலும் கட்சியினால் அடையும் பதவிகளை எண்ணி இவற்றைப் பொருட்படுத்தாதவர்களாக உள்ளனர்.

இரசிகர் மன்றத்திலிருந்து எம்.ஜி.ஆர். கட்சியில் இடம் பெற்றிருப்பவர்கள் எம்.ஜி.ஆருடைய இரசிகர்களாகவே

அந்தக் கட்சியிலும் நடை போடுகிறார்கள். இந்தக் கொள்கை வேற்றுமைகளை அவ்வளவு தெளிவாக உணர்வது என்பது அவர்களுக்கு எளிதல்ல.

இந்த வேற்றுமைகள் தெரிந்தாலும் கூட எம்.ஜி.ஆருடைய கட்சி ஒரு அரசியல் கட்சியாக மட்டுமே மக்களுடைய கண்ணுக்குத் தோற்றமளித்த காரணத்தால், இந்தத் திராவிடர் இயக்கக் கொள்கைகளைப் பற்றி அதிகமாக அவர்கள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

மேலும், ஆட்சியிலிருக்கிற காரணத்தால், அங்கே கிடைக்கின்ற இலாபங்களுக்காக எத்தனையோ பேர் தங்களுடைய உணர்வுகளை மறைத்துக் கொண்டு, அந்தக் கட்சியில் இடம் பெற்றுத் தங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் அந்தக் கட்சி ஆட்சியிலே இல்லை என்று சொன்னால், அது ஒரு கட்சியா? என்ற கேள்வி நாட்டில் எழக்கூடிய நிலைமை உண்டாகலாம்.

8. கொள்கை இல்லாதவர்களுக்கும் மக்களிடத்திலே ஒரு செல்வாக்கு ஏற்பட்டு இருக்கிற இந்த நிலைக்குக் காரணம் இடைக்காலத்தில் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்குப் போதிய முக்கியத்துவம் கொடுக்காமல் போனதை ஒரு முக்கியமான காரணமாகக் கருதலாமா?

பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்குப் போதிய முக்கியத்துவம் இல்லாத ஒரு காரணத்தை நான் காணவில்லை. எல்லாக் காலத்திலும் பகுத்தறிவுப் பிரச்சாரம் இருந்திருக்கிறது. ஆட்சியிலே உள்ளவர்கள், நேரடியாக அந்தப் பிரச்சாரத்தில் அதிகமாக ஈடுபட முடியவில்லை என்றாலும், திராவிடர் கழகத்தினுடைய பிரச்சாரம் நடைபெற்றுக் கொண்டுதான் வந்தது.

ஆனால், இந்தப் பகுத்தறிவுப் பிரச்சாரக் கருத்துக்களை உணராத மக்களும், ஏற்காத் மக்களும், பெரும்பாலோராக

இருக்கின்ற காரணத்தால் — கொள்கை இல்லாதவர்கள் எந்த நேரத்திலும் அந்த மக்களை வேறு கோணத்தில் கவர முடிகின்றது.

அதிலேயும் குறிப்பாகப் பெரியார் பெயரையும், அண்ணா பெயரையும் சொல்லுவதன் காரணமாக, அவர்களின் கொள்கையில் உறுதியில்லாமல் இருந்தாலுங்கூட அந்தக் கொள்கைத் தெளிவு இல்லாத மக்களுடைய ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வரக்கூடிய வாய்ப்பு எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதும் உண்மை.

பெரியார் பார்ப்பனரை எதிர்த்தது ஏன்?

9. நான் மனிதாபிமானியாக இருக்கிற காரணத்தால்தான் பார்ப்பனர்களை எதிர்க்க வேண்டியவனாக இருக்கிறேன் என்று தந்தை பெரியார் சொன்னதைப் பற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?

அது முழு உண்மை. மனித உணர்வுகளை மதிக்கிற எந்தவொரு சிந்தனையாளனாக இருந்தாலும், பார்ப்பனீயத்தையோ, பார்ப்பனர்களையோ அல்லது அவர்களாலே சொல்லப்பட்ட கொள்கைகளையோ என்றைக்கும் எதிர்க்க வேண்டியவர்களாகத்தான் இருப்பார்கள்.

பார்ப்பனர்களிலேயே யார் யார் மனிதாபிமானியாக இருந்தார்களோ அவர்கள் பார்ப்பனீயக் கொள்கையை எதிர்த்தார்கள் என்பதற்குத் தேசியக் கவி பாரதியாருடைய கவிதைகள் பலவும், வ.ரா. போன்ற எழுத்தாளரின் கருத்துக்களும், பொதுவுடமை இயக்கத்தைச் சார்ந்த ஏ.எஸ்.கே. அய்யங்கார் போன்றவர்களுடைய கொள்கை விளக்கமும் தகுந்த சான்றுகளாக விளங்குகின்றன.

மேலும், பிராமணத் தலைவர்களுள் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொண்ட பலர், பார்ப்பனீய வைதீகக் கருத்துக்களை முற்றும் எதிர்த்து வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தகும்.

எனவே, மனிதாபிமானி எவனும் பார்ப்பனீயத்தை என்றைக்கும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதிலே தலைசிறந்த

மனிதாபிமானியாகவும், அடித்தட்டு மக்களிடத்திலேயும், தீண்டப்படாத மக்களிடத்திலேயும், பின்தங்கிய மக்களிடத்திலேயும் — மகளிர் உரிமை வாழ்விலேயும் ஆர்வமும், அக்கறையும் கொண்டு, அவர்கள் சமஉரிமை பெறவேண்டுமென்று விரும்பிய பெரியாரவர்கள் பார்ப்பனீயத்தைக் கண்டிப்பதற்காக, மக்களுக்குப் புரிகிற வகையில் — பார்ப்பனர்களையே சுட்டிக் கண்டித்த வழக்கு தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

தனிப்பட்ட இன வெறுப்பால் தோன்றிய இயக்கமல்ல:

10. பெரியாரின் கருத்துக்கள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மீது ஏற்பட்ட தனித்த வெறுப்பினால் ஏற்பட்ட இயக்கம் என்றும், மார்க்சிசம்தான் முற்போக்குச் சிந்தனையுடைய இயக்கம் என்றும் மார்க்சியவாதிகள் என்று தங்களைச் சொல்லிக் கொள்பவர்கள் கூறி வருவது பற்றித் தங்கள் கருத்தென்ன?

ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மீது ஏற்பட்ட தனித்த வெறுப்பு என்பது தவறு. அந்தக் குறிப்பிட்ட சமூகம் பெரும்பான்மை சமூகத்தை அழுத்துவதாக, ஒடுக்குவதாக, தாழ்த்துவதாக, இழிவுபடுத்துவதாக இருக்கிற காரணத்தால், அந்தச் சமூகத்தினால் ஏற்படுகிற பாதிப்புக் காரணமாகத்தான் பெரியார் அவர்கள் அந்தச் சமூகத்தைக் குறிப்பிட்டுக் கண்டித்தார். மாறாக ஒரு குறிப்பிட்ட சமூகத்தை ஒழிக்க வேண்டும் என்பதற்காக எதிர்த்தார் என்று கூறுவது தவறு. பார்ப்பனர்களின் வைதீகச் சார்புக் கலாச்சாரத்தால் எந்த பாதிப்பும் இல்லையென்றால் அவர்களைக் கண்டிக்க வேண்டிய அவசியமிருந்திருக்காது.

மற்றொன்று, பார்ப்பனீயம் என்பது சமுதாயத்தினுடைய கட்டுக்கோப்பை ஒற்றுமையைப் பாதிக்கக் கூடிய வகையில் வர்ணாசிரமதர்ம அடிப்படையை உருவாக்கியது. மேலும் அவர்தம் மதக் கொள்கை அடிப்படையில் ஆத்மா, மறுபிறவி, பாவ புண்ணியம், கர்மா ஆகியவை, வேறு மதங்களிலே இல்லாத அளவிற்கு வலியுறுத்தப்பட்டு நிலைபெற்றிருக்கிற காரணத்தால் அவற்றைத் தாக்கித் தகர்த்தால் தவிர சமுதாயத்தை மாற்றி அமைக்க முடியாது. அவற்றை நம்புகிற மக்களின்

எண்ணத்தை மாற்றினால் தவிர — பொதுவுடமை சிந்தனை மக்களிடத்திலே வலுப்பெறுவது கடினமென்ற காரணத்தால் — முற்போக்கான சிந்தனை அடிப்படைகளைச் சமுதாயத்திலே உருவாக்கவே, பெரியார் அந்த முறையை மேற்கொண்டார் எனலாம்.

அண்மைக் காலத்தில் பொதுவுடமை வாதிகளில் சிலர், மதவாத குருட்டுத் தனங்கள் மக்களுடைய மனதிலிருந்து மாற்றப்பட்டால் தவிர, பொதுவுடமைக் கொள்கை தமிழகத்திலே அல்லது இந்தியாவில் நிலைபெறுவதும் வெற்றி பெறுவதும் கடினம் என்று உணர்ந்து சில கட்டுரைகள் எழுதியிருப்பதையும் நான் பார்த்திருக்கிறேன்.

எனவே, பொதுவுடமை இயக்கத்தார் கூறி வருபவையே முற்போக்கான சிந்தனை என்றும், பெரியாருடைய கருத்துக்கள் அவ்வளவு முற்போக்கானவை அல்ல என்றும் கூறுவது தவறு.

சமுதாயத்தை முற்போக்குச் சமுதாயமாக மாற்றுவதற்குப் பெரியார் கண்ட பாதைதான், விளக்கங்கள் வேறுபட்டாலும் இந்த நாட்டிற்கு ஏற்றது என்பதில் எந்தவித அய்யமுமில்லை.

11. தமிழகத்தில் இன்றைக்கு நிலவும் அரசியல் சூழ்நிலை, தமிழர்களுக்கு ஈழத்தில் ஏற்பட்டு இருக்கும் கொடுமை இவைகளுக்கெல்லாம் இன்றையக் காலகட்டத்தில் தந்தை பெரியாரின் கருத்துக்கள் எந்த அளவுக்குத் தேவை யானவை என்று கருதுகிறீர்கள்?

தமிழர்களுடைய தன்மானம் ஓங்கினால் தவிர, இனப்பற்றில் ஊன்றி நிற்பது என்பது கடினம். அந்த வகையில் தமிழர்களுக்கு எப்படிப்பட்ட தன்மான உணர்வைத் தந்தை பெரியார் அவர்கள் ஊட்டினார்களோ, அந்தத் தன்மான உணர்வு மிகவும் தேவைப்படுகின்றது — அவர்கள் பிறராலே ஆளப்படுவதற்குப் பிறந்தவர்கள் அல்ல. அவர்களும் ஆளக் கூடியவர்கள், தகுதியுடையவர்கள், எந்தவிதமான இழிவுக்கும் குறைவுக்கும் உரியவர் அல்லர் என்ற எண்ணங்கள் ஏற்படுவதற்குப் பெரியாரின் கருத்துக்கள் அடிப்படையாக அமைகின்றன.

தனித் தமிழ்நாடு பற்றி...

12. தனித் தமிழ்நாடு என்ற இலட்சியத்தை அடையாமல் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய சமூக அரசியல் பொருளாதார உரிமைகள் நியாயமாகக் கிடைக்கும் என்று தாங்கள் நம்புகிறீர்களா?

நியாயமாகக் கிடைக்குமென்று நம்பினாலும், நம்பா விட்டாலும் — இந்திய அரசியலில், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஜனநாயக முறையில் — தமிழின உணர்வுள்ள தமிழர்களின் பேராதரவுள்ள ஒரு ஆட்சியை உருவாக்கினால் தவிர, இந்த உரிமைகளை நாம் அடைவதற்கு ஏற்ற வேறு விதமான வழி எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

தனித் தமிழ்நாடு அடைந்தால்தான் இவைகளையும் அடைய முடியும் என்பது நடைமுறைக்கு ஒவ்வாதது என்பது மட்டுமல்ல — அவசியமற்றது.

தளபதி வீரமணியின் பணி:

13. தந்தை பெரியார் என்ற இமயம் சாய்ந்ததற்குப் பிறகு திராவிடர் கழகம் என்ற அமைப்பு இயங்குவதே கடினம் என்று ஆரூடம் கணித்தவர்கள் உண்டு. தளபதி அவர்கள் தலைமையில் திராவிடர் கழகத்தின் பணி, அவர்களுடைய ஆரூடங்களை முறியடித்திருப்பதாகத் தாங்கள் கருதுகிறீர்களா?

நிச்சயமாக. திராவிடர் கழகத்தினுடைய கொள்கைகளை எடுத்துச் சொல்லுவதற்கும், அதற்காகப் போராடுவதற்கும், தொடர்ந்து மக்களை விழிப்படையச் செய்வதற்கும், திரு. வீரமணி அவர்கள் பெரியார் பாதையில் ஆற்றிவருகிற அந்தக் கடமைகள் பாராட்டத்தக்கனவாக இருக்கின்றன.

பெரியாருடைய இலட்சியம் அணையாத விளக்காக என்றும் காப்பாற்றப்படும் என்பதிலும் அய்யமில்லை!

தமிழ் ஓரின உருவாக்கத்திற்குச் செய்ய வேண்டுவது என்ன?

14. தற்போதுள்ள சாதி, சமயம் இவைகள் எல்லாவற்றையும் கடந்த நிலையில் தமிழர்களை ஓரினமாக உருவாக்கம் செய்ய வேண்டிய காலம் தற்போது கனிந்துள்ளது.

இதனைச் செயல்முறையில் எவ்வாறு உருவாக்கலாம்? இது பற்றி உங்களுடைய கருத்து யாது?

மொத்தமாகத் தன்மான இயக்கத்தினுடைய அடிப்படைக் கருத்துக்கள், தமிழ் இன உரிமையை எந்த அளவிற்கு வளர்க்க முடிகிறதோ, அந்த அளவிற்குத்தான் தமிழ் இன உணர்வை உருவாக்கித் தமிழர்களை ஒன்றுபடுத்த முடியும். தமிழர்களுக்கு அவ்வப்போது ஏற்பட்டு வருகின்ற கேடுகள், இழிவுகள் முதலானவற்றைக் கூர்ந்து கவனிப்பதற்கு நம்முடைய மக்கள் பழக்கப்பட்டு விடுவார்களேயானால் — இன உணர்வுதான் தமக்குப் பாதுகாப்பு என்பதை உணர்ந்து ஒன்றுபடுவார்கள் என்பதிலே அய்யமில்லை.

சாதி வேற்றுமை நீங்க பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் எந்த அளவிற்கு முன்னேறுவதற்கு வாய்ப்பினைப் பெறுகிறார்களோ அந்த அளவிற்குச் சாதி வேற்றுமை மெல்ல மெல்ல நீங்கும். எனவே அந்தக் கடமைகளைத் தொடர்ந்து நிறைவேற்றுவதன் மூலம் தமிழின உணர்வு தழைத்துத் தமிழர்கள் ஓரினமாவர் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

பெரியார் பிறந்த நாளில் சூளுரை:

15. தந்தை பெரியார் பிறந்த நாளையொட்டித் தமிழின மக்களுக்குத் தாங்கள் விடுக்கும் வேண்டுகோள் யாது?

தந்தை பெரியார் பிறந்த இந்த நாளிலாவது தமிழர்கள், பிறவியினாலே ஏற்ற தாழ்வு என்பது எதுவும் கிடையாது என்பதை எண்ணிப் பார்த்து — தாங்கள் எல்லோரும் ஓர் நிறை, ஓர் சமம் என்பதையும் உணர்ந்து — தமிழின மக்கள் பிற இன மக்களைப்போல் இனவுணர்வு கொண்டால்தான் தம்மினத்தை அழியாமல் காப்பாற்ற முடியும் என்பதையும், அதன் மூலமாகத் தான் தமிழ்மொழி, நாகரிகம், பண்பாடு, கலை ஆகியவற்றைப் பாதுகாத்திட முடியும் என்பதையும், தமிழ் மொழியினாலேயும் தமிழர் பண்பாட்டினாலேயும் உலகத்திற்குக் கிடைத்துள்ள பலன்களைக் காப்பாற்ற முடியும் என்பதையும் உணர்ந்து — உண்மைத் தமிழர்களாக வாழ்வதற்கு உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். அதுவே என் வேண்டுகோள்! பெரியார் பிறந்ததால் நாம் பெற்றபேறு அதுவேயாகும்!

வாழ்க பெரியார்! வளர்க பெரியார் சிந்தனை!

பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன்

தமிழகத்தில் தன்மான உணர்வும் தமிழ்மொழி இனப் பண்பாட்டு அமைப்புகளும் அரும்பும் காலக் கட்டத்தில் திருவாரூர் அருகிலுள்ள காட்டூரில், 19.12.1922-ல் தோன்றியவர் **பேராசிரியர் க. அன்பழகன்.** அவருடைய தந்தையார் திரு மு. கலியாணசுந்தரனார். மயிலாடுதுறையில் உயர் கல்வியை முடித்து, 1939-ல் — தமிழ்மொழிப் போர் முருகிய காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மேற்படிப்பைத் தொடங்கி, 1944-ல் தமிழ்மொழி இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்று, 1944 முதல் 1957 மார்ச்சுத் திங்கள் முடிய சென்னை, பச்சையப்பன் கல்லூரி யில் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

1948-ல் 'புதுவாழ்வு' எனும் திங்கள் இதழ் நடத்தியவர்; பல சிறந்த நூல்களைத் தந்தவர். தமிழ்ப் பேச்சாளர் உலகில் தனித்தமிழில் தனித் தன்மையுடன் சொற்பெருக்காற்றும் தமிழருவி.